www.tamilarangam.net

PATRIOTIC VANGUARD'S ORGANIZATION OF THAMILEELAM (PVOT

VANGUAR ... RIOTIC V

ORGANIZ ... RD'S OR

OFTHAMI ... ON OFTH

(PVOT) PA ... AM (PVO

PATRIOTI ... (PVOT

VANGUARD'S ORGANIZATION OF THAMILEELAM (PVOT) PATRIOTIC VAN

# தேச பக்தன்

தமிழீழ மக்களின் புரட்சிகர சனநாயக அரசியல் இதழ் - 15 - 1998

## 1949 - 1998 - மாசி - 4 இலங்கையின் 50-வது சுதந்திர தினம் (?)

## இனவாத மதவாத பாசிச ஆட்சியாளர்களின் 50 ஆண்டு சாதனைகள்!

- ★ 55,000 – தமிழீழ மக்களை அரசு படைகள் படுகொலை செய்துள்ளன...!
- ★ 66,742 – சிறீலங்கா மக்களை அரசு படுகொலை செய்துள்ளது...!
- ★ 2,75,000 – தமிழீழ மக்கள் சொந்த நாட்டிற்குள்ளே அகதிகளாக்கப்பட்டுள்ளனர்...!
- ★ 5,00,000 – தமிழீழ மக்கள் நாட்டுக்கு வெளியே அகதிகளாக விரட்டப்பட்டுள்ளனர்!
- ★ 65,000 – தமிழீழ, சிறீலங்கா மக்கள் மனநோயாளிகளாக உள்ளனர்...!
- ★ 7,000 – தமிழீழ, சிறீலங்கா மக்கள் தற்கொலை செய்துள்ளனர்...!
- ★ 32,300 – தமிழீழ, சிறீலங்கா மக்கள் காணாமல் போனவர்கள் பட்டியலில் உள்ளனர்!
- ★ 9,000 தமிழீழ, சிறீலங்கா தேசபக்த போராளிகளை அரசு படுகொலை செய்துள்ளது!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேசபக்தன்

''சிறு துளி பெரு வெள்ளம்'' அன்பளிப்பு 15 உரூபா / வெளிநாடு 10 டொலர்

மடல் தொடர்புகளுக்கு மட்டும்

A. SHOBA DOSS
67, PARKWOOD
VILLEGE DT
# 308
DONMILLS
ONTARIO
M 34 2x4
CANADA

T. NAZEERATAF
POST BOOKS-10
5125 BOVAGEN
NORWAY

இலக்கம்


* கறுப்பு யூலை 3
* யுத்தமா? சமாதானமா? 5
* சுமைகள் - தேசபக்தன் -ERRO அய்க்கியம் 8
* பிளவு அய்க்கியம் கூட்டு முன்னணி 10
* தமிழ்நாட்டில் தமிழீழ அகதிகள் 12
* BJP அரசு தமிழீழத்துக்கு உதவுமா? 15
* சமாதானப் புறாக்கள் - கவிதை 18
* ஏகாதிபத்தியங்களின் யுத்தக் கெடுபிடி 19
* யார் இந்த போல்பொட்? 21
* தவிக்கும் அகதிகள் - பாலச்சந்திரன் விடுதலை 22
* மே தினம் - 98 - கவிதை 24
* அகதி முகாம்களில் "A" புத்தகங்கள் 25
* அய்ரோப்பிய பயணத்தின் அவலம் 28
* திம்புவில் ஒரு இராணுவ ஆலோசனை 30
* வட அயர்லாந்து ஒப்பந்தம் 31
* தேசபக்த இராணுவம் இல்லாத தேசிய விடுதலையா? 33
* தேசிய விடுதலை யுத்தம் ஒரு பார்வை 36
* நோர்வே தேவாலயத்திலிருந்து ஒரு குரல் 56
* 10-வது சார்க் மாநாடு 57


*அன்பார்ந்த வாசகர்களே!*

சிறீலங்கா அரசினதும் - தமிழீழ அராஜக இயக்கத் தலைமைகளதும் கெடுபிடிகளை மீறி, தேச எல்லைகளைத் தாண்டி, பொருளாதாரம் மற்றும் அச்சுப் பதிப்பு நெருக்கடிகளை சந்தித்த வண்ணம் **''தேசபக்தன்''** உங்கள் கைகளில் நிற்கிறான். தமிழீழ மக்களின் புதிய போராட்ட வீரனாக, ஒடுக்கப்பட்ட தேசங்களின்-மக்களின் தோழனாக **''தேசபக்தன்''** வளர வேண்டும். தேசபக்தனை ஒவ்வொரு முறையும் புதிய புதிய வாசகர்களின் கரங்களுக்கு மாற்றி படிக்க உதவுங்கள். **வாசகர்களே!** உங்கள் ஆலோசனைகள் விமர்சனங்கள் பொருளாதார உதவிகள் குறித்து எங்களுக்கும் ஒரு வரி எழுதுங்கள். மக்கள் மீது, தாய் மண் மீது அக்கறையுள்ள வெளியீட்டாளர்களே! தேசபக்தனை விளம்பரப்படுத்தி உதவுங்கள்.

தமிழீழ தேசபக்த முன்னணியினர் கழகம் (த.தே.மு.க.)

www.tamilarangam.net

# 1983 யூலையில் தொடங்கிய இனப்படுகொலை 1998 யூலையிலும் இன அழிப்பு யுத்தமாக... தொடரும் கறுப்பு யூலைகள்

1983-ல் தெற்கில் (சிறீலங்கா) நடந்த தமிழினப் படுகொலை தமிழீழ மக்களின் போராட்ட வரலாற்றில் துயரம் மிகுந்த மாதம். வெலிக்கடைச் சிறையில் 53 பேர் மிகக் கொடூரமாக சித்திரவதை செய்து கொலை செய்யப்பட்டனர். 600-க்கும் மேலான தமிழர்கள் ஆண் - பெண், சிறுவர் - குழந்தை என்ற பேதம் இன்றி மனித நாகரீகம் வெட்கித் தலை குனியும் விதத்தில் தெருக்களில், வீடுகளில் உயிருடன் எரிக்கப்பட்டனர். 80,000 தமிழர்கள் தெற்கில் இருந்து (சிறீலங்கா) வடக்கு கிழக்குக்கு (தமிழீழம்) அகதிகளாக வந்தனர். இதற்கு காரணமான சிங்கள இன வெறியை, சிறீலங்கா அரசை உலகமே கண்டித்தது. தமிழர்களுக்கு ஆதரவாக குரல் எழுப்பியது. சிங்கள இனவெறியர்களும், பௌத்த மதவெறியர்களும், சிறீலங்கா ஆளும் வர்க்கமும் - அரசும், UNP கட்சியும் கைகோர்த்து நடத்திய கறுப்பு யூலை படுகொலை இலங்கையின் வரலாற்றுப் போக்கில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது.

தமிழீழ மக்கள் தங்களை தற்காத்துக் கொள்ளவும் தமது தேசிய சுயநிர்ணய உரிமையை (தமிழீழம்) வென்றெடுக்கவும் ஆயுதம் ஏந்திய விடுதலைப் போரை நடத்தி வருகின்றனர். போராட்டத்தை முன்னெடுத்த இயக்கத் தலைமைகளின் சந்தர்ப்பவாத மற்றும் துரோக நிலைப்பாடுகளால் 1987 கறுப்பு யூலையில் நடந்த இந்திய - இலங்கை ஒப்பந்தம் இந்திய ஆக்கிரமிப்புடன் தமிழீழ விடுதலைப் போராட்டம் மேலும் ஒரு புதிய திருப்பத்தை பெற்றது. புலிகளின் சமரசம் அடையாத இன்று வரையிலான போராட்டத்தால், பல ஏற்ற - இறக்கம், முன்னேற்றம் - பின்னடைவுடன் போராட்டத்தின் சுடர் அணையாமல் இருக்கிறது.

யுத்த நிறுத்தம் - பேச்சு வார்த்தை - அரசியல் தீர்வு

அமைதி, சமாதானம் என்ற முழக்கங்களுடன் 1994-இல் அதே பழைய சிங்கள இனவாத அரசின் அரசு இயந்திரத்தின் மேல் ஆட்சி அதிகாரத்தை SLFP தலைமையிலான மக்கள் கூட்டணி நிறுவியது. திசைமாறிய தமிழ்த் துரோகத் தலைமைகளும், நடு நிலைபேசும் போலி முற்போக்குகளும், சந்திரிகா அரசு பற்றி பொய்த் தோற்றத்தை மக்களிடம் பிரச்சாரப்படுத்தினர். கறுப்பு யூலைகள் - வெள்ளை யூலைகளாக மாறிவிடும் எனக் கூச்சலிட்டனர்.

UNP அரசு நடத்தி வந்த அதே தமிழின அழிப்புக்கான இன ஒடுக்குமுறை யுத்தத்தை SLFP அரசு சமாதானத்துக்கான யுத்தம் என்ற பெயரில் யாழ்ப்பாணத்தை கைப்பற்றிய சிறீலங்கா இராணுவம் 3 இலட்சம் மக்கள் குடாவை விட்டு அகதிகளாக வெளியேறினர். மூன்றாவது நாட்டின் மத்தியஸ்தத்தை நிராகரித்த வண்ணம் உப்புச் சப்பற்ற ஒரு அரசியல் பொதியை வைத்துக் கொண்டு தமிழீழப் பயங்கரவாதிகளை அழிக்கும் சமாதான யுத்தம் எனப் பிரச்சாரம் செய்கிறது. 'வெற்றி நிச்சயம்' இராணுவ நடவடிக்கையை 15 மாதங்களாக வன்னியில் நடத்தி வருகிறது. வடக்கு கிழக்கு முழுவதும் தமிழின ஒடுக்குமுறை யுத்தவலை விரிக்கப்பட்டுள்ளது.

சந்திரிகா அரசும், தமிழினத் துரோகிகளும், போலி முற்போக்குகளும், NGO களும், 1983 போல் - UNP காலம் போல் இனித் தெற்கில் தமிழினப் படுகொலை நடக்காது. அம்மா அப்படி நடக்கவிடமாட்டார். கண்டி தலதா மாளிகை குண்டு வெடிப்பின் போது தெற்கில் தோன்றிய உணர்வலைகளை கட்டுப்படுத்திவிட்டார் எனப் போற்றுகின்றனர். சனாதிபதி பதவியை இரத்து செய்வதாக கூறி வோட்டு வாங்கிய சந்திரிகா தனது சனாதிபதி பதவியை, அதன் எல்லை மீறிய அதிகாரத்தை UNP ஆட்சிக் காலம் போல் பயன்படுத்தி வருகிறார். சிறீலங்காவில் மாகாண சபைத் தேர்தல், சனாதிபதித் தேர்தல் தொடர்பாக சந்திரிகா அமைச்சரவையின் முன்னுக்கு பின் முரணான பேச்சுக்கள், அவசர கால நிலைச் சட்ட நிறைவேற்றல் இவற்றை அம்பலப்படுத்தி வருகிறது.

www.tamilarangam.net

1983 யூலையில் தெற்கில் நடத்தப்பட்ட தமிழினப் படுகொலை அதற்கு பின்பான கறுப்பு யூலைகளில் எல்லாம் தமிழர்களின் சொந்த மண்ணான வடக்கு கிழக்கிலேயே தமிழினப் படுகொலை சிறீலங்கா அரசின் படைகளால் தினம் தினம் நடத்தப்படுகிறது. படைகளின் சுற்றி வளைப்பும், தேடுதலும், கைதும், பாலியல் பலாத்காரமும், காணாமல் போவதும் படுகொலையும் தொடர்கிறது. யாழை பிடித்தவுடன் இராணுவத்தின் தேடுதல் வேட்டையில், கைதுகளில் காணாமல் போன 600 பேரின் கதை என்னவானது, இன்று கிருஷாந்தி பாலியல் பலாத்காரம் - கொலை வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகள் 5 பேர் இராணுவத்தினர், 1 நபர் பொலிசு, இவர்களில் ஒருவரின் நீதிமன்ற வாக்குமூலம் யாழில் 400 பேருக்கு மேல் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட செய்தியை வெளிப்படுத்தியுள்ளது. சந்திரிகா அரசின் இன வெறி சுயரூபத்தை உலகுக்கு புட்டுக் காட்டியுள்ளது. யாழில் மட்டும் 270 குழந்தைகள் தாய் தந்தையரை இழந்து அனாதைகளாகவுள்ளனர். 87-90-க்கும் இடைப்பட்ட காலத்தில் UNP அரசு 1000-க்கணக்கான JVP ஆதரவாளர்களை பள்ளிச் சிறுவர்களைக் கொலை செய்து புதைத்தது, சந்திரிகா தெற்கில் சூரிய கந்தப் புதைகுழிகளை நேரில் சென்று தோண்டி எடுத்து நியாயம் கோரி ஆட்சிக்கு வந்த சந்திரிகா இன்று வடக்கில் செம்மணியில் 400 பேரின் புதை குழிகளை தோண்டி நியாயம் வழங்க முன்வருவாரா? (மாதம் 10 பேர் காயமடைகின்றனர்). யாழில் மட்டும் 1 இலட்சம் கண்ணி வெடிகள் உள்ளது. யாழுக்குள் மீண்டும் வரவுள்ள 29000 அகதிகளை தங்க வைக்க தெல்லிப்பளையில் ஒரு இடைத்தங்கல் முகாம், 83 யூலையை மீண்டும் ஒருமுறை நினைத்துப் பாருங்கள். வன்னி யுத்தத்தில் இருந்து தங்கள் உயிரைக் காப்பாற்ற 98 யூலை 25-இல் இலுப்பைக் கடவு பகுதியில் இருந்து கிளம்பிய அகதிகள் ஒவ்வொருவருக்கும் ரூபா 8000/- கொடுத்துப் படகில் இந்தியா நோக்கி கடலில் சென்றனர். அளவுக்கு அதிகமான எண்ணிக்கையில் அகதிகளை ஏற்றி கிளம்பிய படகு இராமேசுவரத்துக்கு பக்கமாக செல்கையில் படகின் அடிப்பகுதி வெடித்து, படகு கடலில் மூழ்கியது, 15 பெண்கள் உட்பட 44 தமிழர்களை கடல் காவு கொண்டுள்ளது. 1983 யூலைக்கு பின்வரும் ஒவ்வொரு யூலை மாதமும் பாக்கு நீரிணை பல தமிழர்களைக் காவு கொண்டு வருகிறது. இலட்சம் அதிகள் தமிழ்நாட்டில் உணவு, வேலை, இருப்பிடவசதி, பொலிசு தொந்தரவுகளால் தவிக்கின்றனர். யூலை கடைசி வாரத்தில் நாடு கடக்க முயன்ற 32 தமிழீழ அகதிகளை உகண்டாவில் அரசு கைது செய்துள்ளது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இலட்சோப இலட்சம் தமிழ் அகதிகள், 83 கறுப்பு யூலையை விட 98 கறுப்பு யூலையில் தமிழீழ மக்கள் எதிர் கொண்டுள்ள அவலங்கள் எத்தனை? எத்தனை? இதற்கு எல்லாம் காரணம் சிறீலங்கா இன வாத அரசும், அரசை மாறி மாறி ஆண்டு வரும் UNP, SLFP தலைமையிலான இனவாத அரசியல் கட்சிகளும் தான்.

**15-வது கறுப்பு யூலை** நினைவு என்பது ஒரு கவிதை கட்டுரை, சுவரொட்டியுடன், ஒரு நிமிட மௌன அஞ்சலியுடன் நிறுத்திவிட முடியாது. நிறுத்தவும் கூடாது. அன்று தெற்கில் நடந்த இனப்படுகொலை இன்று வடக்கு கிழக்கில் இன அழிப்பு யுத்தமாக தொடர்ந்து கொண்டிருக்கிறது. தமிழீழ தேசிய விடுதலை போராட்டம் 15 ஆண்டுகளை, 15 கறுப்பு யூலைகளை தாண்டி சென்று கொண்டிருக்கின்றது. போராட்டம் ஒருபுறம் சிறீலங்கா அரசாலும், பிராந்திய விரிவாதிக்க அரசாலும், ஏகாதிபத்தியங்களாலும் நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. மறுபுறம் தமிழ் துரோக இயக்க தலைமைகளால் காட்டிக் கொடுக்கப்படுகிறது. புலிகள் தமது தலைமையில் விடுதலைப் போரை தொடர்ந்து நடத்துகிறார்கள். ஆனால் அவர்களின் முதலாளி வர்க்க அரசியல் வழியும், சுத்த இராணுவவாதப் போராட்டமும், போராட்டத்தில் பின்னடைவுகளையும், தேக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளதும் உண்மை. போராட்டத்திலும், மற்றும் வெளிநாடுகளிலும் உள்ள நேர்மையான தேசபக்த புரட்சிகர சனநாயக சக்திகள், தொழிலாளி வர்க்க அரசியல் வழியில், மக்கள் யுத்தப் போராட்ட பாதையில் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்க உறுதி பூணவேண்டும். அதற்கான தயாரிப்புக்களை நோக்கி முன்னேற வேண்டும்.

- ★ யாழில் புதைக்கப்பட்ட சடலங்களை தோண்டி எடுத்து அதற்கு காரணமானவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும்.
- ★ சிறைகளிலும், இராணுவ முகாம்களிலும் உள்ள அரசியல் கைதிகளை உடனே விடுதலை செய்ய வேண்டும்.
- ★ தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும்.

— ஆசிரியர் குழு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யுத்தமா? சமாதானமா? சமாதானத்துக்கான யுத்தமா?

தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் யுத்தமாக மாறிய பின்னர் 15 ஆண்டுகளில் பலமுறை யுத்தமா? சமாதானமா? என்ற கேள்வி மாறி மாறி எழுந்து வருகின்றது. 1985, 87, 91 மற்றும் 94 களில் யுத்த நிறுத்தம் - பேச்சு வார்த்தை நடந்த போது இந்தக் கேள்வி மிகப் பெரிய கேள்வியாக எழுந்ததுண்டு. 1987 ஒப்பந்தமும் - ஆயுத ஒப்படைப்பும் நடந்த போது எல்லாம் முடிந்து விட்டதாக கருதப்பட்டதுண்டு. U.N.P கட்சியின் தலைமையிலான ஆட்சி அதிகாரம் போய், S.L.F.P. தலைமையிலான மக்கள் கூட்டணி 1994 இல் ஆட்சிக்கு வந்ததிலிருந்து (சந்திரிகாவும், சிறிமாவும் சமாதானத்தை - அமைதியை எந்த விலைக் கொடுத்தும் ஏற்படுத்துவது எனக் கூறி ஆட்சியை பிடித்தனர்) யுத்தம் - சமாதானம் பற்றிய பேச்சும், செய்முறையும் புதிய வடிவம் எடுத்துள்ளதை கவனிக்க முடிகின்றது.

"போர் என்றால் போர்" "சமாதானம் என்றால் சமாதானம்" என்ற U.N.P யின் அணுகுமுறை மாறி "சமாதானத்துக்கான யுத்தம்" என்ற அணுகுமுறையை S.L.F.P. யும், P.A. அரசும் அமுல்படுத்தி வருகின்றன. சந்திரிகா அரசு ஒரு "அரசியல் பொதியை" (அதிகாரப் பரவல் என்ற மோசடித் திட்டத்தை இதைக்கூட பாராளுமன்றத்தில் சட்டமாக்க முடியாத அளவுக்கு எதிர்க்கட்சிகளும், சிங்கள இன மதவாதிகளும் 52 அமைப்புகளின் கூட்டமைப்பும் எதிர்க்கிறது) முன் வைத்துள்ளது. பேச்சு வார்த்தை - சமாதானம் - அமைதி பற்றி பேசுபவர்களின் வாய்க்கு இந்தப் பொதியை அரசு கொடுத்துள்ளது. இந்த அரசியல் பொதியை ஏற்க மறுக்கும், எதிர்த்துப் போராடும் புலிகளை, மக்களை பயங்கரவாதிகள் எனக் கூறி அவர்களை அழிக்கும் "இராணுவத் திட்டப் பொதியை" முன் வைத்து யுத்தத்தையும் நடத்தி வருகின்றது. புலிகளின் கட்டுப்





கொழும்பில் உள்ள பிரித்தானிய தூதுவரகத்தின் முன் 400 புத்தமதத் துறவிகளும் 'பயங்கரவாத எதிர்ப்புத் தேசிய கவுன்சில்' (அரசு பயங்கரவாத ஆதரவு) ஆதரவாளர்கள் 2500 பேரும் புலிகளுக்கு பிரித்தானிய அரசு உதவி செய்வதாகவும் அதை நிறுத்தும் படியும் புலிகளைத் தடை செய்யக் கோரியும் ஆனி - 98 இல் ஆர்ப்பாட்டம் நடாத்தினர்.

www.tamilarangam.net

பாட்டுப் பகுதிகளை இன அழித்தொழிப்பு யுத்தத்தின் மூலம் விடுவிக்கவும் அரசுக் கட்டுப் பாட்டுப் பகுதியாக மாறிய யாழ்ப்பாணத்துக் கும், கிழக்கின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கும் ஒரு ''புனரமைப்பு பொருளாதார பொதியை'' முன் வைத்து நடைமுறைப்படுத்த சிங்கள அரசு தொடங்கியுள்ளது. 16 ஆண்டுகளுக்கு பின் யாழில் ஒரு உள்ளாட்சித் தேர்தலை நடத்தி முடித்திருக்கிறது.

தமிழ்த் தேசிய இனத்தில் மீதான ஒடுக்குமு றைக்கு எல்லா வகையிலும் முற்றுப்புள்ளி வைக் கக்கூடிய, தமிழ்த் தேசிய இனத்தின் அடிப்படை யான அரசியல் கோரிக்கைகளை நிவர்த்திக் கூடிய, ஒரு அரசியல் தீர்வை முன் வைக்காத நிலையில் (சிறீலங்கா அரசு இன சமத்துவத்துக் கான அரசியல் தீர்வை முன் வைத்ததாக வரலாறு இல்லை) தமிழ்ப் பாராளுமன்றத் துரோகிகளை, கட்சிகளை தன் பக்கம் வைத்திருப்பதால் அரசு முன் வைத்துள்ள அரசு அதிகாரப் பரவல் திட்டத்தை அவர்களும் விவாதித்துக் கொண்டி ருப்பதால் (திம்புக் கோரிக்கைகளைக் கைவிட்ட அனைத்துத் தமிழ் கட்சிகளும் துரோகக் கட்சி களே! இவர்கள்தான் 1985-இல் திம்புக் கோரிக் கைகளை முன்னிறுத்தியவர்கள் என்பது குறிப்பி டத்தகுந்தது) சந்திரிகா அரசு, சமாதானத்துக்கு தான் தயார்; அதற்கான அரசியல் பொதி தயார், அரசியல் பொதியை ஏற்காதவர்களை அழிப்பதற் கான யுத்தத்தை நடத்தவும் தயார் என்ற நிலை யில் சிறீலங்கா அரசு ''சமாதானத்துக்கான யுத்தம்'' என்ற பெயரில் தமிழ் இன ஒடுக்குமுறையை யுத்தத்தின் மூலம் தொடர்ந்து நடத்திக் கொண்டி ருக்கின்றது.

புலிகள், அரசின் இன அடக்குமுறை யுத் தத்தை தொடர்ந்தும் எதிர்த்துப் போர் புரிந்து கொண்டிருக்கின்றனர். 97 இல் மாவீரர் நினைவு தினம் வரை புலிகளும், அரசின் அரசியல் பொதியை எதன் அடிப்படையில் நின்று நிராகரிக் கின்றனர் என்பதை வெளிப்படையாக முன் வைக்கத் தவறி வந்தனர். இதனால் புலிகளை ''யுத்த வெறியர்களாக'' சித்தரிப்பதில் அரசின் இராஜதந்திர முயற்சிகள் சர்வதேச அளவில் வெற்றி பெறத் தொடங்கியது. (அண்மையில் லண்டனிலுள்ள சிங்களவர்கள் விடுதலைப் புலி களுக்கெதிராக நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒரு எடுத்துக்காட்டு.) குழுக்களாக, இதழ்களாக, தனி நபர்களாக உலகம் முழுவதும் சிதறியுள்ள தமிழீழ புரட்சிகர தேசபக்த சக்திகள் மட்டுமே தமிழீழ மக்களின் அடிப்படை அரசியல் கோரிக் கைகளாக திம்பு கோரிக்கைகளை முன்னிறுத்தி ருந்தனர். இவ்வரசியல் கோரிக்கைகளை வென் றெடுக்கவே தமிழீழ தேசிய இன விடுதலை யுத்தம் நடத்தப்படுகின்றது. அரசியல் கோரிக்கை கள் தீர்க்கப்படும் வரை தேசிய விடுதலை யுத்தமும் தொடரும் எனப் பிரச்சாரப்படுத்தினர். அரசின் கபடத்தன அரசியல் பொதியை அம்ப லப்படுத்துகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் அரசின் புனரமைப்பு நட வடிக்கைகளையும், உள்ளூராட்சித் தேர்தல் மூல மாக துரோகக் கட்சிகள் கையில் எடுத்துள்ள அரசியல் அதிகாரத்தையும், இராணுவத்தின் வழி நடத்தலில் யாழின் சிவில் சமூக நிறுவனங்கள் மறுசீரமைக்கப்படுவதையும் எவ்வாறு எதிர் கொள்வதென்பது பெரிய சவாலாகி உள்ளது. யாழ் நூலகத்தைப் புதுப்பிக்க 10 கோடி ரூபாய், வடக்கின் தொழில் அபிவிருத்திக்கு ரூ. 16 கோடியே 50 லட்சமும், குருநகர் இறங்கு துறைமுக சீரமைப்புக்கு 10 கோடி ரூபாயும் இதில் 80% UNHCR கொடுக்கின்றது, யாழ் நகருக்கு ரூ. 9 கோடி மற்றும் விவசாய உபகர ணங்களை யப்பான் வழங்குகின்றது. விவசாய அபிவிருத்திக்காக நோர்வே 30,000 டொலர் உதவுகிறது. இலங்கையரசின் வீடமைப்புத்துறை யப்பானுடன் இணைந்து 3800 குடும்பங்களுக்கு யாழில் கூரை வழங்கும் திட்டத்தை தொடங்கி யுள்ளது. அரசு, மலேசியாவுடன் இணைந்து ''வடக்கில் தொழில்ப் பூங்கா'' அமைக்க முடிவா கியுள்ளது. வன்னியில் இருந்த விவசாயப் பல்க லைக் கழகத்தை யாழ் நகருக்கு மாற்றியுள்ளது. அதேவேளை அய்ரோப்பிய, வடஅமெரிக்கா நாடுகளிலுள்ள யாழ்ப்பாண பெரும் பண முத லைகளும் கூட யாழ்நகரில் தொழில் தொடங்கத் தயாராகியுள்ளனர். அதற்காக அரசு ஏற்படுத்தும் சிவில், சமூக புனரமைப்பு நடவடிக்கைகளை ஆதரிக்கின்றனர். ஆனால் புலிகளின் கட்டுப்பாட் டுப் பகுதிகளிலுள்ள மக்களுக்கு உணவும், மருந் தும் கூட கொடுக்கவும், தடையின்றி செல்லவும் சந்திரிகாவின் சமாதான அரசு தடுக்கிறது.

யாழ்ப்பாணத்தில் நடக்கும் இந்த மாற் றத்தை எவ்வாறு எதிர் கொண்டு அரசுக்கும், ஆளும் வர்க்கத்துக்கும் எதிரான போராட்டத்தை கூர்மைப்படுத்துவது என்பதற்கு புலிகள் தமது பாணியில் பதிலளிக்கின்றனர். யாழில் அரசு இராணுவத்தின் மக்கள் தொடர்பு அதிகாரியான பிரிகேடியர் விஜயரத்தினாவை, தற்கொலைத் தாக்குதல் மூலம், யாழ் மேயர் சரோஜினியை எல்லாளன் படையின் பெயரிலும் அழித்தொழித் துள்ளனர், அரசின் கட்டுப்பாட்டுப் பகுதியில் அழித்தொழிப்பு வேண்டுமா? வேண்டாமா? என்பதல்ல பிரச்சனை. மக்களின் மனங்களை வென்றெடுக்கும் அரசியல்வாதிகளை, இராணுவ அதிகாரிகளை அழித்தொழிப்பதற்கு முன்பாக, மக்களின் மனங்களை எதிரிகளுக்கு எதிரான மக்கள் போராட்டங்கள் மூலம் வென்றெடுத்த பின் அவற்றைச் செய்ய வேண்டும். புலிகளின்

www.tamilarangam.net

கடந்த கால அரசியல் இராணுவச் செயல்பாடும், இன்றைய நடவடிக்கைகளும் இந்த வழிமுறையை வெளிப்படுத்தவில்லை. தேச பக்த சக்திகள் இந்த வெற்றிடத்தை நிரப்ப வேண்டும். யாழில் புதிய வழிமுறைகளைக் கண்டுபிடிக்க வேண்டும். போராளிகளின் கட்டுப்பாட்டில் இருந்து இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்கு வந்த பகுதிகளில் அரசின், இராணுவத்தின் அதிகார வர்க்கத்தின் துரோக அரசியல் கட்சிகளின், NGO களின் பொருளாதாரப் புனரமைப்பு, சிவில் சமூக நிறுவன மறுசீரமைப்பு முயற்சிகளை எவ்வாறு மக்களின் பக்கம் நின்று மக்களைத் திரட்டிப் போராடி செழுமைப்படுத்துவது, எதிரிகளை அரசியல் ரீதியாக பலவீனப்படுத்துவது அதற்குப் பக்கபலமாக கொரில்லா இராணுவ நடவடிக்கைகளை எவ்வாறு நடத்துவது பற்றி சிந்திக்க வேண்டும்.

ஓஸ்லோ ஒப்பந்தத்தின் பின்பும் பாலஸ்தீன போராளிகளின் போராட்ட அனுபவங்களை உள்வாங்கி யாழின் குறிப்பான சூழ்நிலைக்குப் பொருத்தலாம்.

அரசின் உயர் இராணுவ அதிகாரிகளும், முதலாளித்துவ அரசியல் தலைவர்களும் யுத்த பகுதிகள், கட்டுப்பாட்டு பகுதிகள் மீதான தமது வழிகாட்டுதலில் தெளிவாக இருக்கின்றார்கள். உதாரணம் இந்தியரசு பஞ்சாப் - காஷ்மீர் மக்களின் ஆயுத எழுச்சியை நசுக்குவதில் வெற்றி பெறத் தொடங்கியதும், காஸ்மீரின் ஆளுநராக "கிறீஸ்சக்சேனா"வை நியமித்தது. (இவர் முன்னாள் இராணுவ உயர் அதிகாரி). யாழில் பிரிகேடியர் விஜயரத்தினா சிறந்த இராணுவ அதிகாரி மட்டுமல்ல. சிறந்த முதலாளித்துவ அரசியல் பார்வையுள்ளவரும் கூட. இவர்களின் தந்திர வழிகாட்டுதல்களை முறியடித்து, அரசின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மக்களின் மனங்களை வெல்லவும் கொரில்லாப் போரை வளர்க்கவும், போராளிகளின் இயக்கத் தலைமைகளிடம் உள்ள குட்டி முதலாளிய சுத்த இராணுவவாதப் பார்வை எப்போதும் மிகப் பெரும் தடையாகவுள்ளன, யுத்தம் நடக்கும் பகுதிகளில் இராணுவமும் - போரும் அரசியல் வழியின் முன்னேற்றத்தை எவ்வாறு தீர்மானிக்கிறது என்பதும், யுத்தம் நடக்காத பகுதிகளில் வெகுசனப் போராட்டங்கள் அரசியல் வழியின் முன்னேற்றத்தை எவ்வாறு தீர்மானிக்கிறது என்பதும், அடிப்படையில் அரசியல் இலட்சியத்துக்கும் - யுத்தத்துக்குமிடையிலான உறவை, அரசியலுக்கும் - யுத்தத்துக்குமிடையிலான உறவை, அரசியலுக்கும் - இராணுவத்துக்கும், வெகுசனப் போராட்டத்துக்கும் இடையிலுள்ள உறவை போராளி இயக்கத் தலைமைகள்; அரசியல் கண்ணோட்டத்துடன் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

தமிழீழப் போராளிகளும், சமாதானத்துக்கான அமைதிக்கான யுத்தத்தையே நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். தமிழீழ மக்களின் அரசியல் கோரிக்கைகளை, மக்களின் போராட்டங்களை உள்நாட்டிலும், உலகளாவிலும் முதன்மைப்படுத்தி முன் தள்ள வேண்டிய தருணம் இது. தேசிய இன ஒடுக்குமுறைக்கும், வர்க்கச் சுரண்டலுக்கும் உள்ளாகியுள்ள தமிழீழ மக்களின் அரசியல் கோரிக்கைகள் தீர்க்கப்படும் போதே நிரந்தர அமைதியும், சமாதானமும் தமிழீழத்தில் ஏற்படும். அந்தக் கொள்கையில் உறுதியாக இருக்கும் வரை நிரந்தர சமாதானத்துக்கான, அமைதிக்கான தமிழீழ தேசிய விடுதலை யுத்தம் தொடரும். எனவே சிறீலங்கா அரசின் வல்லரசுகளின் சமாதானத்துக்கான ஒடுக்குமுறை யுத்தத்தின் அடிப்படையும், தமிழீழ மக்களின் சமாதானத்துக்கான விடுதலை யுத்தத்தின் அடிப்படையும் வேறு வேறு. அது என்றும் சங்கமிக்க முடியாது. இந்தக் கொள்கையில் புலிகளும் புரட்சிகர தேசபக்த சக்திகளும் தெளிவாக, உறுதியாக இருக்கும் வரை சமாதானத்துக்கான தமிழீழ தேசிய விடுதலை யுத்தத்துக்கு தோல்வி என்றுமில்லை.

— தமிழரசன்



## சிறுவர்கள் உரிமை..?

சந்திரிகாவின்
சமாதானம் - யுத்தத்தில்
ஓராயிரம் சிறார்கள்
கையிழந்து...
காலிழந்து...
பெற்றோர் - இழந்து...
அனாதைகளாய்
அகதி முகாம்களிலும்!
ஆதரவு விடுதிகளிலும்..!

யாழ்
ஊராட்சியில்...
12 வயதில் பள்ளிச் சிறார்கள்
வாக்களிப்பு!

INTERNET இல்
இலங்கைச் சிறார்கள்
விபச்சாரத்திற்கு
விளம்பரம் - வேறு!

வன்னிக் காட்டில்
'ஒலறா ஒட்டுண்ணு'
யுத்தத்தில் சிறார்களாம்!
புலிகளிடம்
வாக்குறுதி - வேறு
அய்.நா.வின்
முதலைக் கண்ணீர்...!

— சோபா

www.tamilarangam.net

# சுமைகள் - தேசபக்தன் ERRO அய்க்கியம்

தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை தொழிலாளி வர்க்கப் புரட்சிப் பாதையில் தொடர்ந்து முன்னெடுக்க முயன்று வரும், பிரச்சாரம் செய்துவரும் இதழ்கள், வெளியீடுகள், குழுக்கள் தமக்குள் ஒரு அய்க்கியத்தை ஏற்படுத்த முயற்சித்து வருகிறோம். கடந்த 20 ஆண்டு காலத் தேசிய விடுதலைப் போராட்டத்தை அரசியல் கொள்கை, இராணுவக் கொள்கை, அமைப்பாக்கல் கொள்கை என எல்லாத் துறைகளிலும் முழுமையான மறுபரிசிலனையை செய்து வருகிறோம். மேலும் செழுமைப்படுத்த வேண்டியும் உள்ளது. சில துறைகளில் அல்லது தாங்கள் சம்பந்தப்பட்ட பிரிவுகளில் மாற்றங்களை, நுனிப்புல் மேய்வதால் மட்டும் தாங்களும் சரி, போராட்டமும் சரி ஒரு அடி கூட முன்னோக்கி நகர முடியாது என்பதை சில இதழ்கள் வெளியீடுகள், குழுக்கள் நடைமுறையில் நிரூபித்திருக்கின்றன. இத்தகு சூழ்நிலையில் தவறுகளை களையவும் - சரிகளை செழுமைப்படுத்துவதிலும் உறுதியாக நிற்கும் சக்திகள் தமக்குள் கொள்கை வழி அய்க்கியப்படும் முயற்சியில் முன்னேறி வருகிறார்கள். முதல் கட்டமாக சுமைகளும் - தேசபக்தனும் - ERRO வும் கீழ்க்காணும் 10 கொள்கைகளின் அடிப்படையில் அய்க்கியப்பட்டுள்ளோம்.

### தமிழீழ தேசபக்த புரட்சிகர சனநாயக சக்திகளின் அய்க்கியத்துக்கு 10 அடிப்படைக் கொள்கைகள்

★ நவகாலனிய இலங்கை ஒரு நாடு என்பதை அங்கீகரிப்பது, இலங்கையில் இரண்டு தேசிய இனங்கள் சிங்களத் தேசிய இனம், தமிழ்த் தேசிய இனம் இருப்பதை அங்கீகரிப்பது தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தேசிய அரசு அமைப்பதற்கான உரிமையை அங்கீகரிப்பது, இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு குறிப்பான தீர்வாக தமிழ்த் தேசிய இனம் பிரிந்து சென்று தனியரசு, தமிழீழ புதிய சனநாயக அரசு அமைக்கும் போராட்டத்தை தொழிலாளி வர்க்க அரசியல் சக்திகள் தமது தலைமையில் முன்னெடுப்பது. சிறீலங்காவை சிங்களத் தேசிய இனத்தின் தாய் நிலமாகவும், தமிழீழத்தை தமிழ்த் தேசிய இனத்தின் தாய் நிலமாகவும் அங்கீகரிப்பது.

★ நவகாலனிய இலங்கையில், சிறீலங்கா சிங்கள பௌத்த பேரினவாத அரசின் தேசிய இன ஒடுக்குமுறைக்கும் - யுத்தத்துக்கும் எதிரான தமிழீழ மக்களின் 20 வருட தேசிய விடுதலைப் போராட்டத்தை தொழிலாளி வர்க்க அரசியல் வழியில், தரகு முதலாளித்துவ - நிலப்பிரபுத்துவ ஆளும் வர்க்க அரசை தூக்கி எறிந்து தமிழீழ புதிய சனநாயக அரசு அமைப்பதற்கான போராட்டமாக இறுதி வெற்றிவரை முன்னெடுப்பது.

★ நவகாலனிய இலங்கையில் சிறீலங்கா அரசுக்கு எதிரான சிறீலங்கா (சிங்கள, மலையக) மக்களின் சிறீலங்கா புதிய சனநாயக அரசு நிறுவுவதற்கான போராட்டங்களை நிபந்தனை இன்றி ஆதரிப்பது, தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்கும் சிறீலங்காவின் மக்கள் அமைப்புக்களுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்துவது. அரசு எதிர்ப்பு, விரிவாதிக்க எதிர்ப்பு, வல்லரசு எதிர்ப்பு போராட்டங்களில் கூட்டிணைந்து போராடுவது,

★ காலனிய கட்டத்தை போன்று - நவகாலனிய கட்டத்திய தேசிய விடுதலைப் போராட்டங்களின் உட்சாரத்தை குறிப்பான நாட்டில், குறிப்பாக புரிந்து கொள்வதும், தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை அனைத்து வல்லரசுகளுக்கும் எதிரான போராட்டமாகவும், பிராந்திய விரிவாதிக்கத்துக்கு எதிரான போராட்டமாகவும் முன்னெடுப்பது. I.M.F., W.B., A.D.B., தமிழீழ மக்களின் தலையில் சுமத்தியுள்ள அனைத்துக் கடன்களையும் இரத்து செய்ய வைப்போம். W.T.O., SAARC இன் தேசவிரோத - மக்கள் விரோத ஒப்பந்தங்களை நிராகரிப்போம்.

★ உலகளவில் தேசிய இன விடுதலைக்கான போராட்டங்களையும், புதிய சனநாயகப் புரட்சி மற்றும் சோசலிசப் புரட்சிக்காக மக்கள் நடத்தும் அனைத்துப் போராட்டங்களையும் நிபந்தனை இன்றி ஆதரிப்பது, விரிவாதிக்க எதிர்ப்பு, வல்லரசு எதிர்ப்புக் கொண்ட மக்கள் போராட்டங்களுடன் பொது எதிரிக்கு எதிராக உலகளவில் கூட்டிணைந்து போராடுவது.

★ சிறீலங்காவிலுள்ள மலையகத் தமிழ் மக்கள் சிங்கள பௌத்த பேரினவாத அரசின் இன ஒடுக்குமுறைக்கும், தமிழீழ இயக்கங்களின் சந்தர்ப்பவாத இன அய்க்கியப்படுத்தலுக்கும் எதிரான மலையகத் தமிழ் மக்களின் போராட்டங்களை நிபந்தனை இன்றி ஆதரிப்பது சிறீலங்காவின் தேசியச் சிறுபான்மையினர் என்ற அடிப்படையில் சிறீலங்காவில் மலையக மக்கள் செறிந்து வாழும் பகுதியில் 'சுயாட்சிப்' பகுதிக்கான கோரிக்கையை அங்கீகரிப்பது, தமிழீழப் பேராட்டத்தை அங்கீகரிக்கும் மக்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமைப்புக்களுடன் பொது எதிரிகளுக்கு எதிரான போராட்டத்தில் பரஸ்பர நல் உறவை வளர்த்தெடுப்பது.

★ தமிழீழ மக்களின் தேசிய விடுதலை என்ற இலட்சியத்தில் இருந்து சிறீலங்கா இனவாத அரசுக்கு எதிராகப் போராடும் புலிகள் உட்பட அனைத்து இயக்கங்களையும், எல்லா வர்க்க அரசியல் போராட்ட சக்திகளையும் நமது சகோதர போராட்ட சக்திகளாக அங்கீகரிப்பது. பொது எதிரிகளுக்கு எதிராக எந்த அரங்கிலும் கூட்டிணைந்து போராடத் தயாராக இருப்பது. தமிழீழப் பகுதியில் உள்ள தொழிலாளி வர்க்க தேசபக்த புரட்சிகர சனநாயகக் குழுக்கள், அமைப்புக்கள் எல்லாம் ஒரே அமைப்பாக அய்க்கியப்பட்டு செயற்படுவதற்கு எப்போதும் முன் முயற்சியாளர்களாக இருப்பது.

★ தமிழீழப் பகுதியில் உள்ள இசுலாமிய மக்கள் மீது சிங்கள பௌத்தப் பேரினவாத அரசு நடத்தும் இன ஒடுக்குமுறைக்கும், தமிழ்க் குறுந்தேசியவாத வெறி (புலிகள் உள்ளிட்ட இயக்கங்கள்) நடத்தும் அராஜக ஒடுக்குமுறைக்கும் எதிராகப் போராடுவது, தமிழீழத்தின் மதச் சிறுபான்மையினரான இசுலாமிய மக்கள், செறிந்து வாழும் கிழக்கில் அவர்களுக்கான 'சுயாட்சி' பகுதிக்காக போராடுவது - புலிகளால் வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட இசுலாமிய மக்கள் தங்களின் சொந்த இடங்களுக்கு திரும்பும் உரிமைக்காக போராடுவது, இசுலாமிய மக்களின் மத மற்றும் கலாச்சார தனித்துவங்களை அங்கீகரிப்பதுடன், கிழக்கில் சுயாட்சிப் பகுதிக்கான கோரிக்கையை திம்புக் கோரிக்கை திட்டத்தில் சேர்த்துக் கொள்வது.

★ அரசியல் தீர்வு, யுத்த நிறுத்தம், பேச்சு வார்த்தை, அமைதி - சமாதானம் இவற்றை நாம் உறுதியாக முன்னிறுத்துகிறோம். இந்த 15 ஆண்டு யுத்தத்துக்கு காரணமான இன ஒடுக்குமுறை முடிவுக்கு வரவேண்டும். தமிழீழ மக்களின் அரசியல் கோரிக்கைகளான திம்புக் கோரிக்கைகள் தீர்க்கப்பட வேண்டும், சிறீலங்கா அரசுடனான பேச்சு வார்த்தைக்கு அடிப்படையாக திம்புக் கோரிக்கைகளை முன்னிறுத்துகிறோம். திம்புக் கோரிக்கைகளை முன்னிறுத்தும் அனைத்து தமிழீழ அரசியல் மற்றும் ஆயுதப் போராட்ட சக்திகளையும், உள்நாட்டிலும் - வெளிநாடுகளிலும் "திம்புக் கோரிக்கை முன்னணிக்குள்" ஒன்றுபடுத்த முன் முயற்சி எடுப்பது, திம்புக் கோரிக்கைகளை கூட கைவிட்ட அனைத்து தமிழீழ அரசியல் கட்சிகளையும், ஆயுத இயக்கங்களையும், தேசிய விடுதலைப் போராட்டத்தின் துரோகிகளாக அடையாளம் காண்பது, மக்கள் முன் அம்பலப் படுத்துவது.

★ இலங்கைக்கு (தமிழீழம் - சிறீலங்கா) வெளியே வெளிநாடுகளில் உள்ள தமிழீழ தேசபக்த சனநாயகப் போராளிகள், தாங்கள் வாழும் நாடுகளில் அந்நாடுகளின் சட்ட திட்டங்களுக்கு மதிப்பளித்து - உட்பட்டு நடக்க வேண்டும்; தமிழீழ மக்களின் தேசபக்த போராட்டத்துக்கான அரசியல் ஆதரவுகோரும் நடவடிக்கைகளில், சிறீலங்கா அரசின் இன ஒடுக்குமுறைக்கு - யுத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் அரசியல் நடவடிக்கைகளில், அகதி உரிமை, வேலை வாய்ப்பு உரிமை, சம்பள உயர்வு, தொழில் உரிமைக்கான போராட்டங்களிலும் கட்டாயம் ஈடுபட வேண்டும். அந்நாட்டிலுள்ள தமிழீழ மக்கள் (அகதிகள்) மத்தியிலும், சகோதர நாட்டு மக்கள் மத்தியிலும் செயற்பட வேண்டும், அந்நாடுகளிலுள்ள சட்ட விரோத மற்றும் தடை செய்யப்பட்ட இயக்கங்களுடன் மற்றும் NGO's VA's களுடனும் எத்தகைய உறவும் வைத்துக் கொள்ளக் கூடாது.

தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தின், உலக தேசிய விடுதலைப் போராட்டங்களின் சமகால போக்குகளில் இருந்து எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை வெறும் மண்ணுக்கான, எல்லைக்கான சுதந்திரமாக - தமிழீழ ஆண்டைகளின் விடுதலையாக அன்றி, தமிழீழ மண்ணின் மக்களான விவசாயிகளின், தொழிலாளிகளின், அனைத்து உழைக்கும் மக்களின் விடுதலையை வென்றெடுக்கும் போராட்டமாக புதியதொரு பாதையில் தமிழீழ புதிய சனநாயக அரசு அமைப்பதற்கான மக்கள் போராட்டமாக - மக்கள் யுத்தமாக வளர்க்க வேண்டியுள்ளது. இக்கடமையில் அக்கறை கொண்ட தமிழீழ அரசியல் சக்திகள் தனிநபர்களாக, வெளியீடுகளாக, குழுக்களாக உலகம் முழுவதும் சிதறுண்டுள்ளோம். இத்தகைய நேர்மையான அரசியல் சக்திகள் தமிழீழத் தேசிய விடுதலைப் புரட்சி பற்றிய தொழிலாளி வர்க்க அரசியல் கொள்கை வழியில், 20 ஆண்டுகால போராட்டத்தின் சரியான பக்கங்களை வளர்த்து செழுமைப்படுத்தவும் தவறான பக்கங்களை, தமது பங்களிப்புக்களை சமரசமற்ற சுயவிமர்சனமுறையில் முன்வைத்து, சனநாயக ரீதியான அமைப்பாக்கல் அணுகுமுறையில் அய்க்கியப்பட வேண்டியுள்ளது.

ERRO, தேசபக்தன், சுமைகள் வாசகர்களே! இத்தகைய ஒரு நீண்ட கால முன் முயற்சியின் விளைவே தேசபக்தன் - சுமைகள் - ERRO அய்க்கியமாகும். மூன்று பகுதியும் மேற்கண்ட கொள்கை அடிப்படையில் ஒன்றுபடுகிறோம் - சுமைகள் நிறுத்தப்படுவதுடன், தொடர்ந்து "தமிழீழ தேசபக்த முன்னணியினர் கழகம்" என்ற பெயரில் செயற்படுவதெனவும், தேசபக்தன் வெளியீட்டை காலக் கிரமத்தில் வெளியிடுவது என்றும் மூன்று பகுதியும் உறுதி ஏற்கிறோம்.

| விக்டர் | ஜெயா | தமிழரசன் |
|---|---|---|
| சுமைகள் | ERRO | தேசபக்தன் |

www.tamilarangam.net

# தமிழீழப் போராளி இயக்கங்களில் பிளவு அய்க்கியம், கூட்டு முன்னணி, ஒரு மீள் பார்வை

தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் போராட்டத்தை முன்னெடுத்த விடுதலை இயக்கங்களின் தோற்றம், வளர்ச்சி, பிளவு (உடைவு) பொதுக் கோரிக்கைகளில் 'கூட்டமைப்பு' எனப் பல நிலைகளை (இராணுவத்தின் கீழ்மட்டத்தில் சிறீலங்கா அரசு இராணுவத்தை முகாமை விட்டு வெளியேறுவதை தடுப்பதில் கூட்டு தற்காப்பு நடவடிக்கைகள் கூட உள்ளடங்கும்) போராட்டம் சந்தித்துள்ளது. T,N.T., LTTE, TELO PLOT, ENDLF, எனவும், EROS, EPRLF, EPDP, எனவும், TELA, 7 TELA எனவும் NLFT, PLFT எனவும் ஒன்றில் இருந்து ஒன்றாக உடைந்து பிளந்து பல இயக்கங்களை நாம் கண்டிருக்கிறோம், போராட்டத்தில் சில நேரங்களில் பொதுக் கோரிக்கைகளில் இவ்வியக்கங்களின் பொது முன்னணியை உருவாக்கின. LTTE, TELO, EROS, EPRLF ஈழ தேசிய விடுதலை முன்னணி (ENLF) என்ற பெயரில் கூட்டு முன்னணியை உருவாக்கின, சிறீலங்கா அரசுக்கெதிரான போராட்டத்தில் ஒரு துரும்பைக் கூட அசைக்காமல் இம்முன்னணி L.T.T.E. TELO அழித்தொழிப்பு நடவடிக்கையுடன் கூட்டு முன்னணியும் அழிந்தது. சிறீலங்கா அரசுடன் விடுதலை இயக்கங்கள், இந்தியரசின் முன்னிலையில் நடத்திய பூட்டான் பேச்சு வார்த்தையில் LTTE, PLOT, TELO, EROS, EPRLF எல்லாம் ஒரே நிலைப்பாட்டில் உறுதியாக **திம்புக் கோரிக்கைகளில்** நின்றன. சிறீலங்கா அரசின் பேச்சு வார்த்தை - யுத்த நிறுத்த பொய் முகத்தை கூட்டாக கிழித்தன. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில், இயக்கங்களின் கூட்டு நிலைப்பாடுகளில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி இது, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின் திம்புக் கோரிக்கைகளை கைவிட்டு சமரசம் அடைந்தன. L.T.T.E. மட்டும் இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தத்தை நடத்தியது. இன்றுவரை L.T.T.E. சிறீலங்கா அரசை எதிர்த்து யுத்தம் புரிகிறது. 97 மாவீரர் நினைவு தினத்தில் பிரபாகரன் மீண்டும் திம்புக் கோரிக்கைகளை அரசுடன் பேசுவதற்கு தமிழீழ மக்களின் அடிப்படை அரசியல் கோரிக்கைகளாக முன்னிறுத்தியுள்ளார். LTTEயும் பாலகுமாரன் தலைமையிலான EROSம் ஒன்றுபட்டதாக சொல்லப்படுகிறது எதன் அடிப்படையில் எப்படி ஒன்றுபட்டார்கள் என்பது இதுவரை வெளிப்படையாக யாருக்கும் தெரியாது.

இந்திய ஆக்கிரமிப்பு யுத்தம் நடந்த காலங்களில் புலிகளுக்கு அல்ல போராட்டத்துக்கும், போராளிகளுக்கும் துரோகம் செய்த நிலையில் ENDLF, EPDP, TELO '3 STAR' என்ற பெயரில் இராணுவக் கூட்டு முன்னணியாக செயல்பட்டன. இன்று PLOT, TELO, EPRLF, EROS, EPDP சேர்ந்து ஒரு கூட்டமைப்பு உருவாக்கியுள்ளன. இப்படியாக தமிழீழ விடுதலைப் போராட்டம் இயக்கங்களின் பல உடைவுகளை, கூட்டமைப்புக்களை கண்டிருக்கிறது. இயக்கங்கள் பிளவுபடும்போதும், கூட்டமைப்பு ஏற்படுத்தும் மற்றும் கலையும் - கலைக்கும் வேளையிலும் இயக்க தலைமைகள் எத்தகைய அரசியல் இராணுவக் கொள்கை ரீதியான வேறுபாடுகளால் உடைகின்றன. எத்தகைய அரசியல் கொள்கைகளில் உள்ள ஒற்றுமைகளால் கூட்டமைப்பை கட்டுகின்றன. ஒன்றுபடுகின்றன. எந்த நோக்கம் நிவர்த்தி செய்யப்பட்ட நிலையில் அல்லது முரண்பாடுகளால் கலைக்கப்படுகின்றது என்பதை மக்கள் முன் தெளிவுபடுத்துவதில்லை; ஏன் தங்கள் தங்கள் இயக்கப் போராளிக்கு கூட விளக்கப்படுத்தியாது கிடையாது.

தமிழீழ இயக்கங்களில் நடந்த கூட்டு முயற்சிகள், அய்க்கியத்துக்கான அணுகுமுறைகளில், பிளவுகளில் அரசியல் இராணுவக் கொள்கைளில் உள்ள உடன்பாடு - முரண்பாடு - வேறுபாடு அடையாளம் காணப்பட்டதை - காட்டப்பட்டதை விட வேலை நடைமுறை முரண்பாடு, தலைமையின் நடத்தை, தலைமையிலுள்ள நபர்களின் நடத்தை பற்றிய முரண்பாடுகளில் வெடித்தபிளவுகளே அதிகம். அரசியல் இராணுவக் கொள்கை ரீதியானதும், மூலோபாயம் மற்றும் செயல் தந்திர வழிகளில் ஏற்பட்ட முரண்பாடுகள், இயக்க வேலை நடைமுறைகளில் வேறுபாடுகள் தோன்றிய போது அவை தீர்க்கப்பட்ட முறைகள் ஒன்றில் சர்வாதிகார தனிநபர் தலைமை நோக்கிலான அணுகுமுறை **அல்லது** அதீத சனநாயக சந்தர்ப்பவாத அணுகுமுறைகளிலேயே கூட்டமைப்புக்களும், அய்க்கியத்துக்கான முயற்சிகளும், இயக்க பிளவுகளும் பெரும்பாலும் நடத்தேறியுள்ளன.

பொது எதிரியான சிறீலங்கா அரசுக்கும், விரிவாதிக்க இந்திய அரசுக்கும், உலக ஏகாதிபத்தியங்களுக்கும் எதிரானதும், தமிழீழ மக்களின் தேசத்தின் விடுதலைக்கான அரசியல் கொள்கை உடன்பாடுகள் அல்லது குறிப்பான காலங்களில் குறிப்பான எதிரியின் ஆக்கிரமிப்பு யுத்த நடவடிக்கைகளுக்கு எதிரான அரசியல் இராணுவக் கொள்கை மற்றும் வேலை நடைமுறை உடன்

www.tamilarangam.net

பாடுகளில் இயக்கத்தையும், போராளிகளையும், மக்களின் எழுச்சிகளையும், அய்க்கியப்படுத்துவதில் இத்தலைமைகள் கவனம் செலுத்தியதை பார்க்க முடியவில்லை. பொது எதிரிக்கு எதிரான போராட்டத்தை கூர்மைப்படுத்துவது இயக்கங்களின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை விரிவாக்குவது, மக்களின் போராட்ட உந்து சக்தியை வளர்த்தெடுப்பது, போராடும் இயக்கங்களின் கூட்டுச் சக்தியை பலப்படுத்துவது. நேசமுரண்பாடுகளை கருத்துப் போராட்டத்தின், பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்ப்பது, சிறந்த நடைமுறைப் போராட்ட வேலைகள் மூலம் வென்றெடுப்பது போன்ற கொள்கைப் பார்வை, நடைமுறை அணுகுமுறை இருக்கவில்லை. பதிலாக குறித்த ஒரு இயக்கத்தின், இயக்க தலைமையின், தலைவரின் நலன்களே பிரதிசுடு செய்யப்பட்டது. பொது எதிரியை அழிப்பதை விட சகோதர சக்தியை அழிப்பது, காட்டிக் கொடுப்பதில் இத்தலைமைகள் வல்லவர்களாக விளங்கினர். பகை முரண்பாட்டை, நேச முரண்பாட்டை அரசியல் அரங்கிலும், யுத்தத்திலும் பகுத்து பார்க்கத் தவறினர். இரண்டு வித முரண்பாட்டையும் தீர்க்க இவர்களிடம் ஒரே அணுகுமுறை ஆயுத நடவடிக்கை, சந்தர்ப்பவாதக் கூட்டு, அராஜக அணுகுமுறை இவைதான் போராட்ட தலைமைகளிடம் ஆளுமை செய்தது - செய்கிறது.

மக்களின் நலன் தேசத்தின் எழுச்சி, உயிர் நீத்த போராளிகளின் தியாகங்கள் என அனைத்தும் இயக்கத்தின் தனி இயக்க சர்வாதிகார நடத்தை, தலைமைகளின் குறுகிய நோக்கம் கொண்ட அரசியல் இராணுவக் கொள்கைகளால் நடைமுறைச் செயற்பாடுகளால் 1985-இன் தமிழீழப் போராட்ட எழுச்சிநிலை 1995-இல் எதிர் நிலைக்கு வந்து சேர்ந்துள்ளது.

இவ்இயக்கங்களின் அரசியல் இராணுவக் கொள்கைகளுடன் முரண்பட்டவர்களும், இயக்கங்களின் அன்றாட வேலை நடைமுறைகளுடன் மட்டும் முரண்பட்டவர்களும் ஒரு கட்டத்தின் பின் வெளியேறினர், உடைந்து புதுக்குழு தொடங்கினர், பலர் ஒதுங்கிக் கொண்டனர், இப்படியாக இயக்கங்களுக்கு சென்று பின் இயக்கத்தை விட்டு விலகியவர்களும், இயக்கங்களில் சேராது வெளியில் நின்றவர்களும் கூட தமிழீழப் பகுதியில் நடக்கும் யுத்த சூழ்நிலைமைகளில் இறந்தும், புலம் பெயர்ந்தவர்கள் தாங்கள் வாழும் நாடுகளில் உள்ள சூழ்நிலைமைகளில் இருந்தும் தமக்கு ஒரு "புரட்சிகர தேசபக்த இயக்கதின்" தேவையை உணர்கிறார்கள். இம்முயற்சியில் உணர்வுபூர்வமாக பல தனிநபர்களும், சில வெளியீடுகளும், குழுக்களும் நாட்டுக்குள்ளும் - நாட்டுக்கு வெளியேயும் செயல்பட்டு வருவதை பார்க்க முடிகிறது. எங்களின் சொந்த தேசிய விடுதலைப் போராட்ட படிப்பினைகளில் இருந்தும், நாட்டுக்கு வெளியே குறிப்பாக தாங்கள் வாழும் நாடுகளில் நடக்கும் தேசிய விடுதலைப் போராட்டம் மற்றும் சமூகப் புரட்சி இயக்கங்களின் படிப்பினைகள் செயல்பாடுகளில் இருந்தும் தமிழீழ விடுதலைச் சக்திகள் நிறையவே கற்றுக் கொண்டு வருவதையும் காண முடிகிறது, தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் கண்டுள்ள தேக்கத்தை உடைப்பது என்பதும் ஏதாவது ஒரு துறையில் அதாவது இராணுவத்துறையிலோ அல்லது அமைப்பாக்கல் துறையிலோ, இயக்க தலைமையை உருவாக்குவதிலோ மட்டும் தேக்கத்தை உடைக்க முடியாது. தேசிய ஒடுக்குமுறை - தேசிய இனவிடுதலை, சமூக பொருளாதார பண்பாட்டு ஒடுக்குமுறை - சமூகப்புரட்சி குறித்தும் இவை இரண்டுக்கும் இடையிலான பிரிக்க முடியாத உறவு பற்றிய சித்தாந்தப் பார்வை, தேசிய விடுதலைக்கான அரசியல்வழி, மக்கள் சக்தி, மக்கள் இயக்கம், போராட்ட எழுச்சி - வீழ்ச்சி, தலைமை - போராளிகள், உறவு, மக்கள் இராணுவம், இயக்க அய்க்கியம், இயக்கங்களுக்கு இடையிலான உறவு, கூட்டு முன்னணி என அடிப்படையில் அமைப்பு கட்டுவது குறித்த அரசியல் நோக்குகளில் கடந்தகாலத் தவறுகள் திருத்தப்பட வேண்டும். வெறும் விமர்சனத்துடன் நிறுத்தாது மாற்று வழிமுறை முன்வைக்கப்பட்டு அதன் வழியில் செயற்படும் போதே இன்றைய தேக்கத்தை படிப்படியாக உடைக்க முடியும். தேசபற்று கொண்ட நபர்கள், வெளியீடுகள், குழுக்கள் ஒரே அமைப்பாக மாறமுடியும்.

மேற்கண்ட விவகாரங்களில் கடந்த கால தமிழீழப் பாதையில் ஒவ்வொரு துறையிலும், ஒட்டு மொத்தமாகவும் ஆதிக்கம் செலுத்திய மார்க்கம் முதலாளிய குட்டி முதலாளிய - அராஜகவாத அரசியல் - இராணுவச் சிந்தனையும், நடைமுறையுமே **'புரட்சி மார்க்கம்?'** என நம்முன் காட்டப்பட்டது, இதை நாம் வெறும் சூத்திரங்களாக அன்றி ஒவ்வொரு துறையின் குறிப்பான பார்வை, செயல்பாடுகளில் தெளிவாக புரிந்து கொண்டால்தான் தேசிய விடுதலை இயக்கத்தில் தொழிலாளி வர்க்க புரட்சிகர அரசியல் மார்க்கத்தை நடைமுறைக்கு கொண்டு வர முடியும், தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டமும் - யுத்தமும் எதிர் கொண்டுள்ள தேக்கத்தை சரியான பாதையில் உடைக்க முடியும்.

— தமிழரசன்

CHRISTIAN AID (USA) என்ற சர்வதேச அரசு சாரா நிதி நிறுவனம் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன், அமெரிக்க நாடுகளில் உள்ள NGO'S, UA'S க்களுக்கு நிதி வழங்கி வருகிறது. CHRISTIAN AID தனது பணத்தை பிரிட்டனில் உள்ள ஆயுத உற்பத்தி நிறுவனம் ஒன்றில் முதலீடு செய்து, அதில் இருந்து கிடைக்கும் இலாபத்தையே 3-ம் உலக நாடுகளுக்கு சமூக நல நிதி என்ற பெயரில் அனுப்பி வைக்கின்றது.

www.tamilarangam.net

# தமிழ்நாட்டில் தமிழீழ அகதிகள்

1983-இன் பின்பு இன அழிப்பு யுத்தம் கூர்மை அடைந்த பின் தமிழீழ மக்கள் அகதிகளாகி பெருமள வில் இந்தியாவிற்குள் வரத் தொடங்கினர். புலம் பெயர்வு இன்று வரை தொடர்கின்றது. தமிழக மக்களும் அரசும் மனிதாபிமான உணர்வோடு அகதி களை வரவேற்று தமிழ்நாட்டின் சில மாவட்டங்க ளில் தங்குமிடம், உணவு, மற்றும் ஏனைய வசதிகளை யும் செய்து கொடுத்தது.

மத்திய அரசு போராளி குழுக்களையும் தமிழ் நாட்டிற்குள் வரவழைத்து முகாம்கள் அமைத்து, இராணுவ பயிற்சி கொடுத்து, ஆயுதம் கொடுத்து (தனது நலன்களைக் கவனத்தில் கொண்டு) தமிழ்நாட் டில் தங்க அனுமதி கொடுத்திருந்தது. போராளிகள் மூலம் இரகசியமாக உளவுத் துறையால் கண்காணிக் கப்பட்டும் வந்தது. அகதி முகாம்களுக்கு போராளி கள் சென்று வர மத்திய, மாநில அரசுகளால் அனுமதியும் வழங்கப்பட்டிருந்தது.

1985-இல் திம்புப் பேச்சு வார்த்தையின் போது போராளிக் குழுக்களால் வைக்கப்பட்ட சுய நிர்ணய உரிமைக் கோரிக்கையை இலங்கை அரசு ஏற்க மறுத்தபோது போராளிகள் பேச்சு வார்த்தையை நிராகரித்தனர். போராளிகளை நிர்பந்தப்படுத்திய இந் திய அரசு இலங்கை அரசுக்கு சார்பாக நடக்க தொடங்கியது. போராளிகள் தமது கட்டுப்பாடுகளை மீறத் தொடங்கி விட்டனர் எனப் புரிந்து கொண்டு போராளிகள் குழுத் தலைவர்களை கைது செய்யவும் நாடு கடத்தவும் தொடங்கியது இந்திய அரசு. இதன் வெளிபாடு அகதி முகாம்களிலும் வெளிப்படத் தொடங்கியது. 1987-இல் இந்திய - இலங்கை ஒப்பந்தம் கையெழுத்திட்ட பின்பு இயக்கப் போராளி களை தனது கட்டுப்பாட்டிற்கு கொணடு வந்த இந்திய அரசு அவர்களுக்கு ஆயுதம் கொடுத்து தமிழீழத்திற்கு திருப்பி அனுப்பியது. அதே போல் அகதி மக்களையும் வெளியேற்றுவதற்கு மறைமுக மாக நிர்பந்தம் கொடுத்தது ஒரு கணிசமான பகுதி மக்கள் நாடு திரும்பினர். இக்காலப் பகுதிகளில் தமிழகத்தில் நடந்த பல குண்டு வெடிப்பு சம்பவங்க ளோடும் தொடர்புபடுத்தி பரவலாக போராளிகளை கைது செய்தது உளவுத் துறையும் பொலீசும். அகதி முகாம்களிலும் முகாமிற்கு வெளியிலும் இருந்த பல நூறு தமிழீழத்தின் குடும்பங்களை வெளியேற்ற நிர்ப்பந்தம் கொடுத்தனர் மாநில, மத்திய அரசு காவல் துறையினர்.

மீனம்பாக்கம் விமான நிலைய குண்டு வெடிப்பு, பத்மநாபா கொலை, ராஜீவ் காந்தி கொலைகளில் சில இயக்கங்கள் சம்பந்தப்பட்டமையும் உள்ளூர் சமூக விரோத சக்திகளுடன் சேர்ந்து இயக்கங்களில் இருந்து வெளியேறிய போராளிகள் வழிப்பறி, கொள்ளை, ஆயுத வியாபாரம், கள்ளக் கடத்தல், போதை மருந்து கடத்தல், ஆள் கடத்தலிலும் ஈடுப டத் தொடங்கினர். இது தமிழக மக்கள் மத்தியில் தமிழீழ மக்கள் மேல் வெறுப்புணர்வை ஏற்படுத்தி யது. இந்த சமூக விரோதிகள் தமக்கு பாதுகாப்பான இடமாக அகதிகள் முகாம்களை பயன்படுத்தினர். முகாம்களிலும் மக்கள் மத்தியில் இருந்த சமூக விரோத சக்திகள் இவர்களுடன் கூட்டு சேர்ந்து பல தவறான வழிகளில் பொருளாதாரத்தை பெருக்கி கொள்ள முயன்றனர். இவற்றை சாதகமாக பயன்படுத் திய உளவுத்துறையும் பொலீசும் மொத்த தமிழீழ அகதிகளையும் சமூக விரோத சக்திகளாகவும், குண்டு, ஆயுதக் கலாச்சாரத்தை பரப்புபவர்கள் என வும் முத்திரை குத்தியது. இதற்கு இங்கிருக்கும் பத்திரிகைகளும் ஒத்து ஊதின. இந்த நிலை இன்று வரை தொடர்கின்றது.

அகதிகள் முகாம்களில் உள்ள சமூக விரோத சக்திகளை மக்கள் பிடித்துக் கொடுத்த போதும் பொலீசாரும் கியூபிரிவினரும் அவர்களிடம் பணத்தை வாங்கிக் கொண்டு அவர்களை விட்டு விடுகின்றனர். குறிப்பிட்ட சில உதிரிகளான சமூக விரோத சக்திக ளைவிட 99% வீதமான ஈழ அகதி மக்கள் தமிழகத்தின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நேர்மையாக உழைத் துதான் இன்றுவரை வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

1987-இல் புலிகளுக்கும் மத்திய அரசுக்கும் ஏற்பட்ட மோதலும் ஏனைய துரோக இயக்கங்கள் கூட இலங்கை அரசுக்கு சார்பாக மாறியமையும் இந்தியாவின் விரிவாதிக்க எண்ணம் இலங்கையில் ஈடேற்ற முடியாதுள்ளமையினால் ஏற்பட்டுள்ள காழ்ப்புணர்ச்சியை மத்திய அரசு மாநில அரசினூடாக தமிழகத்தில் உள்ள தமிழீழ அகதிகளின் மேல் காட்டி வருகின்றது. மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் இடையிலான முரண்பாடுகளை தீர்த்துக் கொள்வதற் கும் ஈழத்தமிழர்களே பலியாக வேண்டிய நிலை உள்ளது. தமிழகத்தில் குண்டு வெடித்தால் உடனே அதன் ரகம் என்ன? தன்மை என்ன என்று ஆராயந்து RDX, T.N.T. என்றால் தமிழீழப் போராளிகளும் தமிழீழ அகதிகளுமே குற்றவாளிகளாகவும், ஆயுத கலாச்சா ரத்தை, குண்டு கலாச்சாரத்தைப் பரப்பும் மன நோயாளிகளாக சித்தரிக்கப்படுகின்றனர். இதை இங்கு உள்ள தினமலர் தொடக்கம் இந்தியா டுடே, குமுதம், ஆனந்த விகடன் போன்ற மஞ்சள் பத்திரிகை கள் எல்லாம் ஆராய்ந்து பார்க்காது காவல்துறை என்ன சொல்கின்றதோ அதை அப்படியே வாந்தி எடுத்து வெளியிடுவார்கள். 29.04.98 தினமலர் பத்திரி கையில் தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் மூப்பனாரி டம் நேர் காணலில் கோவை குண்டு வெடிப்பு சம்பவம் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்? என கேட்ட போது குண்டு கலாச்சாரம் ஆயுதக் கலாச்சாரத்திற்கு விடுதலைப் புலிகள் தான் அடிப்படைக் காரணம் என கூறியுள்ளார். ஆனால் மத்திய அரசின் உளவுத் துறையோ, மாநில உளவுத் துறையோ, அரசுகளோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோவை குண்டு வெடிப்பு சம்பவங்களுக்கும் தமிழீழப் போராளிகளுக்கும், மக்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லையென அறிவித்துள்ளது. நடந்த சம்பவங்களை உற்றுப் பார்த்தால் உண்மை தெளிவாகத் தெரியும். சோனியா காங்கிரசுக்கு தலையையும் கருணாநிதிக்கு வாலையும் காட்டும் விலாங்கு மீன் மூப்பனார், மாநில அரசியலில் இருந்து தேசிய நீரோட்டத்தில் கலந்து கொள்வதற்கு புலிகள் மீதும் தமிழீழ அகதிகள் மேலும் சேற்றை வாரி இறைத்துள்ளார்.

கோவை குண்டு வெடிப்புக்குப் பின்னர் தமிழீழ அகதிகளுக்கு தொடர்பு இல்லையென தெரிந்த போதும் பரவலாக அனைத்து முகாம்களும் முகாம்களுக்கு வெளியில் வாழ்பவர்களிடமும் பதிவுகள் எல்லாம் புதுப்பிக்கப்பட்டு வருகின்றது. திருநெல்வேலி மாவட்ட முகாம்களில் கியூபிரிவினர் புதிய முறைகளில் புகைப் படங்கள் எடுத்து கைரேகைகளைப் பதிவு செய்து வருகின்றனர். ராஜீவ், பத்மநாபா கொலைக்குப் பின் போராளிகள் தனி முகாம்களிலும் மக்கள் தனி முகாம்களுக்கும் மாற்றப்பட்டுள்ளனர். தமிழீழ அகதிகள் மத்தியில் உள்ள சில சமூக விரோத சக்திகளும், உள்ளூர் சமூக விரோத சக்திகளும் சேர்ந்து முகாம்களுக்கு உள்ளேயும் வெளியேயும் பல சமூக விரோத செயல்களில் ஈடுபடுகின்றனர். கள்ளச் சாராயம், விபச்சாரம், ஆள் கடத்தல், வழிப்பறி, கொள்ளை போன்றவற்றில் ஈடுபடுகின்றனர். இது முகாம் பொறுப்பாளர்கள், தாசில்தார், மாவட்ட ஆட்சியர், பொலீஸ் எல்லோருக்கும் தெரிந்தே நடைபெறுகின்றது. நேர்மையான அதிகாரிகளால் இதை தடுக்க முடியாது உள்ளது. காரணம் தமிழ்நாட்டில் உள்ள ஆளும் கட்சி அல்லது எதிர்க்கட்சியின் கையாட்களாக உள்ளூர் சமூக விரோத சக்திகள் உள்ளனர்.

இதைவிட தமிழ்நாட்டில் வசிக்கும் தமிழீழ அகதிகள் தங்கள் சொந்த நாட்டிற்கு செல்ல விரும்பினால் உடனடியாக அதற்கு குடியகல்வு அனுமதி வழங்கப்படுவதில்லை. *(EXIT) அகதி முகாமில் இருக்கும் ஒருவர் இலங்கை செல்ல வேண்டுமானால் அவர் தான் வசிக்கும் மாவட்ட ஆட்சியரிடம் விண்ணப்பிக்க வேண்டும். மாவட்ட ஆட்சியர் அந்த மாவட்ட பொலீஸ் அதிகாரிக்கு விண்ணப்பத்தை அனுப்புவர். பொலீஸ் அதிகாரி தமிழீழ அகதிகளுக்கும் பொறுப்பான அந்த மாவட்ட கியூ பிரிவு பொலீஸ் அதிகாரிக்கு அனுப்புவர். மாவட்ட கியூ பிரிவு அதிகாரி மாநில கியூ பிரிவு (அகதிகளுக்குப் பொறுப்பான) தலைமை அலுவலகத்திற்கு (சென்னைக்கு) அனுப்புவார். அந்த விண்ணப்பம் சென்னை மாவட்ட ஆட்சியரிடம் அனுப்பப்பட்டு அங்கிருந்து மாநில அளவிலான குடியகல்வுக்குப் பொறுப்பான பொலீஸ் தலைமை அலுவலகத்திற்கு (சாஸ்திரி பவன் அல்லது பரங்கிமலை) அனுப்பப்படும். அந்த அதிகாரி லஞ்சம் வாங்காத நேர்மையானவராக கடமை உணர்வு உள்ளவராக இருந்தால் விண்ணப்பத்தில் கையெழுத்து இட்டு (Exit) குடியகல்வுக்கான அனுமதியை வழங்குவார். இல்லையெனில் குடியகல்வு அனுமதி வழங்கப்பட மாட்டாது. இத்தனை சடங்குகளும் முடிந்து விண்ணப்பம் எந்த வழியாக சென்றதோ அதே வழியாக மீண்டும் விண்ணப்பித்தவர் கையில் வந்து சேர்வதற்கு கிட்டத்தட்ட 6 மாதங்கள் வரை காத்திருக்க வேண்டும். முகாமிற்கு வெளியே உள்ளவர்களுக்கும் இதே நிலைதான். ஆனால் 1-2 மாதங்களில் அனுமதி கிடைக்கும். ஆனால் இந்த நடைமுறைகள் எதுவும் தற்போது செயல்படுத்தப்படுவதில்லை. எல்லாம் லஞ்சம் கொடுத்து செய்யும் வேலையாகிவிட்டது. (Exit) தேவைப்படும் ஒவ்வொரு நபருக்கும் 1500-2000/- ரூபாய் வரை லஞ்சம் பெற்றுக் கொண்டு கியூ - மற்றும் பொலீசார் இதனை செய்து கொடுக்கின்றார்கள். அகதிகளுக்கும் பொலீசாருக்கும் இடையில் தரகர்களாக முன்னாள் போராளிகள் சிலர் செயற்படுகின்றனர்.

முகாம்களைச் சுற்றியுள்ள உள்ளூர் மக்கள் மத்தியில் அகதிகள் மேல் அனுதாபம் இருந்த போதும் தமிழகத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் எப்படி நடத்தப்படுகின்றனரோ அதே நிலைதான் தமிழீழ அகதிகளுக்கும் உள்ளது. சட்டம் ஒழுங்கிற்கு உட்பட்டு வாழ்ந்தாலும் கூட அகதிகள் மேலான வன்கொடுமைகள் பொலீஸ், தாசில்தார், மா. ஆட்சியரிடம் முறையீடு செய்தால் கவனிக்கப்படுவதில்லை. சென்ற பங்குனி மாதம் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பெருமாள்புரம் அகதிகள் முகாமைச் சேர்ந்த ரங்கநாதன் என்பவரின் மகள் (9 வயது) சசிகலா முகாமிற்கு எதிரே இருந்த 'வெல்டிங்' பட்டறை வைத்திருந்த சிவா என்பவனாலும் அவன் நண்பர் அர்சுணன் என்பவனாலும் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளாள். சேலம் மேட்டூர் அருகே ஒரு முகாமில் குழந்தை பிறந்த 9-வது நாள் 18 வயது பெண் ஒருவர் மலசலம், கழிப்பதற்காக வெளியே சென்றபோது உள்ளூர் காடையர்கள் சிலரால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். உள்ளூர் மக்களுக்கும் அகதிகளுக்கும் இடையே மோதல் ஏற்படும் எனப் பயந்த மாவட்ட அதிகாரிகள் சம்பந்தப்பட்ட நபர்களைக் கைது செய்யாது; அந்த அகதிகள் முகாமையே மேட்டூர் அணைப்பகுதி முகாமிற்கு மாற்றி விட்டுள்ளனர். இரண்டு சம்பவங்களிலும் சரி இதுபோன்ற பல சம்பவங்களில் நபர்கள் யார் என தெரிந்த போதும் பொலீசாரோ, ஆட்சியர்களோ எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. பொலீசாரும் இந்த அதிகாரிகளும் யாரிடம் அதிக பணம் உள்ளதோ அவர்கள் பக்கம் நின்றுதான் நீதி வழங்குவர். அன்றாடக் காச்சிகளான அகதிகளிடம் லஞ்சம் கொடுப்பதற்கு பணம் எங்குள்ளது?

ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம் (Offer) போன்ற ஒரு சில தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் அகதிகள் மத்தியில் வேலை செய்கின்ற போதும் மாநில ,மத்திய அரசியல் வாதிகளுடன் உறவுகள் இருந்தாலும் அகதிகள் மேல் நடைபெறும் கொடுமைகளைக் கண்டு கொள்வதில்லை. சத்துமா கொடுப்பது தான் தமது கடமை என்பதுடன் அவர்களும் அகதிகளின் முதுகில் சவாரி செய்துதான் வாழ்கின்றனர். அகதி முகாம்களிற்குள் மனித உரிமை அமைப்புக்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செல்வதைக் கூட இவர்கள் விரும்புவதில்லை. கியூ பிரிவு பொலீசாரை மறைமுகமாகத் தூண்டிவிட்டு நெருக்கடி கொடுத்து வருகின்றனர்.

இன அழிப்பு யுத்தம் தமிழீழ மக்களை பல்வேறு நாடுகளுக்கும் புலம் பெயரவைத்துள்ள போதும், தமிழ்நாட்டில் வாழும் அகதிகளின் நிலை மிகவும் மோசமானது. உயிர் பாதுகாப்பு ஒன்றைத் தவிர உளவியல் பாதிப்பு மிகவும் அதிகமான நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். வேலை இல்லாப் பிரச்சனை, குறைந்த கூலி, பிள்ளைகளின் கல்வி, எதிர்காலம், கந்துவட்டி, முறையற்ற உணவுப் பங்கீடு, பொலீசாரின் கெடுபிடி, பெண்கள் மேலான பாலியல் வன்கொடுமை எனத் தொடரும் பிரச்சனைகளே அதிகம். இந்தியா போன்ற பின் தங்கிய, சனத் தொகை அதிகமான நாட்டில் இந்நாட்டு மக்களின் தேவைகளையே பூர்த்தி செய்ய முடியாத நிலையில் உள்ள இந்திய மத்திய, மாநில அரசுகளால் தமிழீழ அகதிகளின் தேவைகளை நிறைவு செய்வது என்பது சாத்தியமில்லை. குறைந்த பட்சம் மனித உரிமைகளைக் கூட மதித்து நடத்த முடியாத அரசுடனும் அதிகாரிகளிடமும் வேறு எதை எதிர்பார்க்க முடியும்? தமிழீழ அகதிகள் அனைத்து உரிமைகளுடனும் வாழ வேண்டுமானால் நாடு திரும்புவதே ஒரே வழி. அகதிகள் நாடு திரும்ப யுத்தம் நிறுத்தப்பட்டு, குறைந்த பட்ச உரிமைகளாவது சிறீலங்கா அரசு வழங்க வேண்டும். உள்ளூராட்சியிலும் பாராளுமன்ற தேர்தல்களில் வாக்கு போடுவது மட்டுமல்ல எமது உரிமை. தமிழீழ மக்களுக்கு இறையாண்மையுள்ள சுதந்திரமான வாழ்வுரிமைக்கு உத்தரவாதம் அளிக்கப் பட வேண்டும். இதற்கு சிறீலங்கா அரசை நிர்பந்தப்படுத்த நாம் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் போராட வேண்டும். நாம் வாழும்; நாடுகளிடம் "சிறீலங்கா அரசு யுத்த நிறுத்தம் செய்து பேச்சு வார்த்தை தொடங்க வேண்டும்" என கோரிக்கை வைக்க வேண்டும். தமிழீழ அகதிகள் தாம் வாழும் நாடுகளில் உள்ள பிரச்சனைகளையும் கொடுமைகளையும் திரும்பத் திரும்ப பேசிக் கொண்டிருப்பதனால் எந்த பலனும் இல்லை. தமிழீழத்தில் நாம் அனைத்து உரிமைகளுடனும் வாழ தமிழீழத்திற்கு அப்பால் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் சிறீலங்கா அரசை யுத்த நிறுத்தம் செய்து பேச்சு வார்த்தையை தொடங்க நிர்பந்தப்படுத்துவற்கான போராட்டத்தை பரவலாக முன்னெடுத்தால் மட்டுமே எமது போராட்டமும் வாழ்வும் புது வழி காணும்.

சோபா

*(EXIT) குடியகலவு என்ற வார்த்தைக்காக இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.





தமிழ்நாட்டில் தமிழீழ அகதிகளுக்கு மட்டுமல்ல,
அவர்களின் வீட்டிற்கும் மழை, வெயிலிடம் இருந்து பாதுகாப்பு இல்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்தியரசும், இந்துத்துவப் பெருந்தேசியவாத B.J.P.யும் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு உதவுமா?

இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி, நரசிம்மராவ், தலைமையில் காங்கிரஸ் கட்சியும், வி.பி.சிங், தேவ கௌடா, குஜ்ரால் தலைமையில் அய்க்கிய முன்னணியும், இந்தியாவை ஆட்சி செய்தபோது இலங்கையின் இனப்பிரச்சினையில் எப்படித் தலையிட்டது. தமிழீழப் போராட்டத்துக்கு - இயக்கங்களுக்கு எப்படி உதவி செய்தன, உபத்திரவம் கொடுத்தன, இயக்கங்களை கழுத்தறுத்து இந்திய ஆக்கிரமிப்பு எவ்வாறு நடந்தேறியது என்பது மறந்து விடக் கூடியதா? இந்தியரசின் உள்நாட்டு - வெளிநாட்டு கொள்கைகளில் இருந்து இந்தியரசு பற்றிய கணிப்பீட்டை செய்யாத தமிழீழத் தலைமைகள், ஆளும் வர்க்க கட்சிகளின் - தலைவர்களின் குண இயல்பு - நடத்தைகளில் இருந்து இந்தியரசு உதவும் - உதவாது என்ற பார்வையை போராளிகளுக்கும் - மக்களுக்கும் தலைமைகள் போதித்தன. (இந்திரா காந்தி இருந்திருந்தால் தமிழீழப் பிரச்சினையை தீர்த்திருப்பார் என்ற கண்ணோட்டம் தமிழீழ ஆயுத - அகிம்சா தலைமைகளிடம் இன்னமும் காணப்படுவது நல்ல உ+ம்) 3 ஆண்டு இந்திய ஆக்கிரமிப்பு யுத்தத்தின் பின்பும் கூட இந்தியரசு பற்றிய தவறான பார்வைகளை தமிழீழ மக்களுக்கு உருவாக்குபவர்கள் அகிம்சாவழி தலைமைகள் - ஆயுதப் போராட்ட, தலைமைகள் என எதுவானாலும் அவர்கள் தமிழீழ, தேசிய விடுதலைப் போராட்டத்தின் துரோகிகளாக மட்டுமே இருக்க முடியும்.

ராஜீவ் காந்தி கொலையைத் தொடர்ந்து D.M.K. தலைமையில் இருந்த தமிழ்நாட்டு அரசு (புலிகளுக்கு உதவியது சட்டம் ஒழுங்கு சீர்குலைவைக் காரணம் காட்டி) 91-ல் கலைக்கப்பட்டது; ராஜீவ் கொலை பற்றிய ஜெயின் கொமிசன் அறிக்கை தொடர்பான சர்ச்சையில் D.M.K. அய்க்கிய முன்னணி அரசில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்ற காங்கிரசின் முடிவால் 98-ல் அய்க்கிய முன்னணி ஆட்சி செய்த இந்தியரசு கவிழ்ந்தது. காங்கிரஸ் - அய்க்கிய முன்னணி, இந்த மதச்சார்பற்ற (?) கட்சிகளின் ஆட்சி போய், இந்து மதம், இந்துப் பண்பாடு, இந்தி மொழி ஒரே மதம் - மொழி - பண்பாடு என்ற இந்துத்துவ பெருந்தேசியவாதக் கொள்கை கொண்ட B.J.P. தலைமையில் இந்தியாவின் புதியரசு உருவாகியுள்ளது. தமிழ்நாட்டில் தேர்தல் காலத்தில் நடந்த குண்டு வெடிப்புகளுக்காக "அல்-உம்மா", "ஜீகாத் அமைப்பு" என்ற முசுலீம் இயக்கங்கள் தடை செய்யப்பட்டுள்ளது. (முசுலீம் தீவிரவாதிகளை நசுக்க தவறியது சட்டம் ஒழுங்கு சீர்குலைவைக் காரணம் காட்டி D.M.K. அரசு கலைக்கப்பட வேண்டும் என்கிறது A.D.M.K.) சம்பிரதாயம் போல் சிறீலங்கா அரசு வெளியுறவு அமைச்சர் கதிர்காமரை அனுப்பி அடல் பிகாரி வாஜ்பாய் அரசுக்கு வாழ்த்துக் கூறியதுடன், இந்தியரசின் வெளியுறவுக் கொள்கையில் ஏற்படக்கூடிய தந்திரோபாய மாற்றங்களையும் முகர்ந்து பார்த்தது. இந்தியரசின் வெளியுறவுக் கொள்கையின் வேதவாக்கான 'தலையிடாக் கொள்கை,' அன்டை நாடுகளுடன் அமைதியான உறவு என்பதை காட்டி இலங்கைப் பிரச்சினையில் தொடர்ந்தும் தலையிடக் கொள்கை கடைப் பிடிக்கப்படும் என அறிவித்துள்ளது. மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு புலிகள் இயக்கம் மீதான தடையையும் நிறைவேற்றியுள்ளது B.J.P. அரசு புலிகளும் தமிழ்ப் பகுதியில் முசுலீம் மக்களை வெளியேற்றியவர்கள் இந்துப்பாரம் பரியம் கொண்டவர்கள். B.J.P. பாபர் மசூதியை இடித்து இந்துத்துவத்தை உயர்த்திப் பிடிப்பது எனவே B.J.P. அரசு புலிகளுக்கு ஆதரவான நிலைப்பாடு எக்கும் என நம்பியவர்களுக்கு பெரும் ஏமாற்றம்.

இந்தியாவின் எதிர்க்கட்சிகளை - தலைவர்களை அழைத்து 1985-ல் D.M.K. இன் கலைஞர் கருணாநிதி தமிழீழ ஆதரவுக் கூட்டமைப்பு (TESO) என்ற பெயரில் மதுரையில் ஒரு மாநாடு நடத்தினார். B.J.P. சார்பாக அடல் பிகாரி வாஜ்பாய் அதில் கலந்து கொண்டார். தமிழீழத்தை ஆதரித்து பேசினார். தமிழீழம் வந்து சென்றதற்காக D.M.K. இல் இருந்து வெளியேற்றபட்டதாக கூறப்படும் வீரன் வை. கோபால்சமியும் M.D.M.K. யும், புலிகள் மீதான தடைக்கு எதிர்ப்பு தெரிவித்து வந்த சிங்கம் இராமதாசும் P.M.K.யும், (இருவரும் தமிழீழம்தான் தீர்வு என்றவர்கள்) தமிழீழத்தை, புலிகளை ஆதரித்து நடந்த மாநாடுகளில் பேசிவந்தவரும், 97ல் டெல்லியில் தனது வீட்டிலேயே கூட்டம் நடத்திய சோசலிஸ்ட். ஜார்ஜ் பெர்னான்டசும்,..... பல கட்சிகளும் பங்கொண்டுள்ள இந்திய மத்திய அரசு (அடல் பிகாரி பிரதமர், ஜோர்ச் பெர்ணாண்ட்சு பாதுகாப்பு அமைச்சர்) தமிழீழத்துக்கும், புலிகளுக்கும் ஆதரவு கொடுப்பார்கள் மறைமுகமாகமாவது உதவுவார்கள் என நம்பிய - நம்பும் தமிழீழத்தவர்களே, தமிழ்நாட்டவர்களே, இந்த அரசியல் கட்சிகளின் குறுகிய கால - நீண்ட காலக் கொள்கைகளிலுள்ள ஏமாற்றுத் தனங்களை நீங்கள் புரிய வேண்டிய தருணம் இது. இந்தியரசு அமைப்பை பற்றியும், அதன் வெளியுறவுக் கொள்கையையும் நாம் மீண்டும் புரிந்து கொள்ளத் தவறி தலைவர்களின் - கட்சிகளின் மேடைப்பேச்சு, குணஇயல்புகளில், தனிப்பட்ட சில நடத்தைகளில் மயங்கி விடக்கூடாது. B.J.P. அரசு தனது வெளியுறவுக் கொள்கைத் தந்திரங்களில் இருந்து நேரடியாகவோ - மறைமுகமாகவோ புலிகளுக்கு வேண்டுமானால்

www.tamilarangam.net

உதவலாம், ஆனால் ஒரு போதும் தமிழீழப் போராட்டத்தின் வளர்ச்சிக்கு இந்தியரசு உதவமாட்டாது. நாம் எதிர்பார்க்கவும் கூடாது.

நவ கொலனிய உலகில் அரசுகளின் "தலையிடாக் கொள்கை அறிவிப்புக்குள்" ள்ளடங்கியுள்ள நேரடி மற்றும் மறைமுக தலையீட்டு நடவடிக்கைகளையும், இராஜ தந்திர மற்றும் உளவு அமைப்புகள் மூலமான தலையீட்டு நடவடிக்கைகளையும், 1985-இல் J.R. தமிழீழ பயங்கரவாதிகளுக்கு உதவுவதாக - ஊக்குவிப்பதாக இந்தியரசை காட்டினார். 1985-இல் இருந்து பஞ்சாப், காஷ்மீர் பயங்கரவாதிகளுக்கு உதவுவதாக - ஊக்குவிப்பதாக பாகிஸ்தான் அரசை இந்தியரசு குற்றம் சாட்டுகிறது. தமிழீழப் பிரச்சனையில் இந்திரா காந்தி - ராஜீவ் காந்தி மற்றும் வி.பி. சிங் - குஜ்ரால் காலத்தின் தலையீட்டு நடவடிக்கைகள், பஞ்சாப், காஷ்மீர் பிரச்சினையில், ஜீயா உல்கக் - பெனாசிர் - நவாப் செரிப் கால தலையீட்டு நடவடிக்கைகள், பர்மாவுக்குள் ஆஸ்திரேலிய - பிரிட்டன் உளவாளிகளின் தலையீட்டை, கோசோவே பிரச்சினையில் NATO அமெரிக்காவின், அயர்லாந்தில் - லிபியாவின், குர்திஷ்தானில் ஈரான் - ஈராக்கின், தலையீடுகளை கவனித்தால். இதைப் புரிய முடியும் இவற்றுக்கு அடிப்படையான பொருளாதார நலன் பூகோள - ரீதியான அரசியல் - இராணுவ ஆதிக்க நலன்களை மொத்தத்தில் தலையிடாக் கொள்கை என்ற அறிவிப்புடன் நடக்கும் தலையீட்டுக் கொள்கையின் அரசியல் சூத்திரத்தை புரிந்து கொள்ளாத அல்லது புரிந்து கொண்ட தமிழ்த் தலைமைகள் (அரசியல் பேசும் தலைமைகளும், அரசியலை வெறுப்பதாகக் கூறும் NGO தலைமைகளும்) வேதாளத்தின் கதையை தொடர்கின்றனர்.

தமிழ் அமைப்புக்கள், சைவ சித்தாந்த அமைப்புகள் என் 31 அமைப்புகள் கொழும்பில் கூடி தாங்கள் அரசியல் கட்சிகளோ, குழுக்களோ அல்ல பொதுமக்கள். சமயவாதிகளின் கூட்டு என கூறியுள்ளனர். இவ்அமைப்புகளில் ஒன்றான 'தமிழர் முன்னேற்றக் கழகத்தின்' தலைவர் கூறுகிறார் (சிறீலங்காவில் தமிழர்கள் கைது செய்யப்படுவதை நிறுத்தவும், இனப்பிரச்சனையை தீர்க்கவும் இந்தியாவின் புதிய அரசு தலையிட வேண்டும்" "யுத்த நிறுத்தம் வேண்டும். யுத்தத்துக்கு செலவழிக்கும் பணத்தை பொருளாதார வளர்ச்சிக்கு செலவு செய்தால் நாடு சுபிட்சம் பெறும், இலங்கைத் தமிழர்களின் பாரம்பரிய தாய் நிலம் இந்தியாதான். எனவே இந்தியரசு தலையிட்டு தமிழர்களைக் காக்க வேண்டும்." தமிழ்க் காங்கிரஸ் தமிழரசுக் கடைசி, விடுதலைக் கூட்டணி, பின்னர் சில ஆயுதம் தாங்கிய இயக்கங்களும் இந்தியரசை தலையிடக் கோரியதன், இந்தியரசு நேரடியாக தலையிட்டதன் கோரக் க்காட்சிகள் கண் முன் நிற்கிறது. மீண்டும் தலையிடக் கோருவது எவ்வளவு பெரிய வெட்கக் கேடு - கேவலம் - துரோகம். இந்தியரசை மட்டுமல்ல எந்த மூன்றாவது நாட்டையும், ஏன் அய்க்கிய நாடுகள் சபையைக்கூட தமிழீப் பிரச்சினையில் தலையிடக் கோருவது தமிழீழ விடுதலைக்கு எதிரானது. இது போன்று கோரும் தமிழ்ச் சீர்திருத்தவாத - சமயவாத தலைமைகளை - அமைப்புக்களை, அரசியல் கட்சிகளை ஆயுதம் தாங்கிய இயக்கங்கள் அகிம்சாவழி, மற்றும் அரசுசாரா (NGO) நிறுவனங்களை - தலைவர்களை, இவர்களின் கேடுகெட்ட கொள்கைகளை அன்னியச் சார்பை அம்பலப்படுத்தி மக்களிடம் இருந்து அன்னியப்படுத்த வேண்டியது உண்மையான தமிழீழ தேசபக்த சனநாயக சக்திகளின் கடமையாகும்.

சிறீலங்கா அரசு ஒரு பக்கம் யுத்தத்தை நடத்தி புலிகளை அழிக்கிறது, தமிழீழ மக்களை அகதிகளாக்கிறது. சிறீலங்காவில் உள்ள தமிழர்களை ஆயிரக் கணக்கில் இரவில் இர்வு நேர உடையுடன் கைது செய்கிறது, சித்திரவதை செய்கிறது. பணம் புடுங்கிக் கொண்டு விரட்டுகிறது. மறுபக்கம் தமிழர்களுக்கு அமைதி சமாதானம் ஏற்படுத்த என்று கூறி மோசடியான அதிகாரப் பரவல் திட்டம் ஒன்றை முன்வைத்து ஏமாற்ற முயன்று கொண்டிருக்கிறது. புலிகள் இன அழிப்பு யுத்தத்தை எதிர்த்து போராடிக் கொண்டிருக்கையில், இன்னொரு பக்கம் சிறீலங்காவிலும் இந்தியாவிலும், ஐரோப்பிய நாடுகளிலும் உள்ள தமிழ் அரசியல் கட்சிகள், சீர்திருத்த அமைப்புக்கள், தமிழ் இந்து - கிறிஸ்துவ (NGO) அரசு சாரா நிறுவனங்கள் மொட்டையாக யுத்தத்தை எதிர்ப்பதாக கூறுவதுடன் "தமிழர்களுக்கு அமைதி வேண்டும், சமாதானம் வேண்டும், யுத்த நிறுத்தம் வேண்டும்" என்ற சுலோகங்களின் கீழ் சிறீலங்காவிலுள்ள தமிழர்களையும், இந்தியாவில் உள்ள அகதிகளையும், ஐரோப்பிய நாடுகளில் குடியுரிமை பெறாத - குடியுரிமை பெற்ற தமிழர்களையும் அணி திரட்ட தொடங்கியுள்ளனர். தமிழர்களிடம் கை ஒப்பம் வாங்கி அய்நா சபையும், தாங்கள் வாழும் அன்னிய நாட்டு அரசுகளையும் தலையிடக் கோரத் தொடங்கியுள்ளனர். இதற்கான ஒத்திகைகளும் அதற்கான மேல்மட்ட தயாரிப்புக்களும் கூட்டங்களும் நடந்து கொண்டிருக்கிறது.

இந்த அரசியல் பேசும் - அரசியல் பேசாத, அரசு சார்புள்ள - அரசு சார்பற்ற தமிழ் அமைப்புக்கள், தலைமைகள், தமிழ் மக்களின் சார்பாக பேசுபவர்கள் - இயங்குபவர்கள் எனில் இவர்கள் முன்வைக்கும் 'யுத்த நிறுத்தம், அமைதி, சமாதானம்' உண்மையில் ஏற்பட தமிழர்கள் அரசியல் கோரிக்கை எந்த அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டும் என்பது கூட, இந்த உலக மகா வல்லமை பொருந்திய இராஜ தந்திரம் உள்ளவர்களுக்கா தெரியாது? 'திம்புக் கோரிக்கைகளைக் கூட' புரிந்து கொள்ள முடியாத, அரசியல் அறிவு இல்லாத, அரசியல் பேசாத NGO க்களோ, சீர்திருத்த தலைமைகளோ அல்ல இவர்கள். சிறீலங்கா அரசு கூட ஒரு மோசடித் தீர்வுத் திட்டத்தை முன் வைத்தபடியே இவர்கள் கூறும் மூன்று மந்திரங்களை கூறுகிறது. கூடவே யுத்தத்தையும் நடத்துகிறது. ஆனால் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் சார்பாக இயங்கும் - பேசும் இத்தமிழ்த் தலைமைகள், தமிழீழ மக்களின் சார்பாக முன்வைக்கப்பட்ட திம்புக் கோரிக்கைகளைக் கூட தீர்வுக்கு அடிப்படையாக பேச மறுக்கின்றனர். தந்திரமாக தட்டிக் கழிக்கின்றனர். இத்தனைக்கு பின்பும் திம்புக் கோரிக்கைகளை முன்வைக்க தவறும் அமைப்புகள் தலைமைகள் திட்டமிட்டு தமிழீழப் போராட்டத்தை மக்களை

www.tamilarangam.net

திசை திருப்ப முயல்பவர்களே, இவர்களுக்கு பணம் வழங்கும் முதலாளிகளின், அமைப்புக்களின், நாடுகளின், அய்நா சபையின் தந்திரமான கட்டளைகளை நிறைவேற்றும் தமிழ்க்கைக் கூலிகளே. இத்தலைமைகளில் சில நேரடியாகவும் மறைமுகமாகவும் சிறீலங்கா அரசின் மோசடி அதிகாரப் பரவல் திட்டத்தை மூன்று மந்திரக் கோல்கள் மூலம் தமிழீழ மக்களின் தலையில் கட்டமுனையும் இனத்துரோகிகளாகும்.

சிறீலங்காவிலும், தமிழீழப் பகுதிகளிலும் மூலதனமிடவும், சுரண்டவும் அதற்கான முன்னேற்பாடுகளை தமிழீழப் பகுதியில் செய்ய முயலும் நாடுகள், சர்வதேச நிறுவனங்கள், தங்களின் நிதி வழங்கும் சமூக சேவை நிறுவனங்களின் மூலமாக யுத்த நிறுத்தம், அமைதி, சமாதானம் மூன்று மந்திரக் கோல்களை மட்டும் பேசும் திட்டத்தை முடுக்கிவிட்டுள்ளார்கள். ஸ்கண்டினேவிய நாடுகளிலும் இந்தியாவிலும் அகதிகள் மத்தியில் அகதிகள் மத்தியில் இது சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது.

1907-இல் தென்னாபிரிக்க அரசு அங்கே வாழ்ந்த இந்தியர்களை இரண்டாம் தர குடிமக்களுக்கும் கீழாக நடத்தியதுடன் "இந்தியர்கள் எல்லாரும் தங்களின் கைரேகைகளை அரசிடம் பதிவு செய்ய வேண்டும்; எங்கு சென்றாலும் அரசின் அடையாளப் பத்திரத்தை எடுத்து செல்ல வேண்டும்" என சட்டம் போட்டது. அப்போது அங்கிருந்த "மோகன் தாஸ் கரம் சந்த் காந்தி" இன்றைய மகாத்மா காந்தி அச்சட்டத்தை எதிர்த்தார். அரசு கைது செய்து சிறையில் அடைத்தது.

1997-இல் இந்தியாவில் தமிழ்நாட்டில் உள்ள தமிழீழ அகதிகள் அனைவரதும் கைரேகைகள் பொலிசில் பதிவு செய்யப்படுகிறது. சட்டம் இயற்றாமலேயே கொள்ளையர்களை, கொலைகாரர்களை அழைத்து செல்வது போல் அகதிகள் பொலிசு நிலையம் அழைத்து செல்லப்படுகின்றனர். ஒரு சில முகாம்களில் காந்திகள் அல்ல அகதி மக்கள் தமது எதிர்ப்பை தெரிவித்துள்ளனர். தமிழ்நாட்டிலுள்ள எல்லா தமிழீழத்தவர்களும் தங்களது முழுப்புகைப் படங்களுடன் பதிவு செய்யப்பட்ட அடையாள அட்டை வைத்திருக்க வேண்டும் என்ற சட்டம் 98-இல் இருந்து அமுலுக்கு வரத் தொடங்கியுள்ளது. அகதி அமைப்புக்களே! அகதிகள் ஆதரவுகாளர்களே! மனிதவுரிமை ஆர்வலர்களே! இந்தக் கொடுமைக்கும், மனிதவுரிமை மீறலுக்கும் எதிராகக் குரல் கொடுப்பீர்களா? தென்னாபிரிக்காவிலுள்ள (TESO) தமிழீழ ஆதரவு அமைப்பு எதிர்ப்பு தெரிவிக்குமா?

"யுத்த நிறுத்தம் வேண்டும்; சமாதானம் வேண்டும்; அமைதி வேண்டும்" இந்தியாவிலுள்ள அகதி முகாம்களில் இச்சுலோகங்கள் அகதி மக்களிடம் ஓதத் தொடங்கியுள்ளனர். அகதிகளை முகாம்கள் அளவிலும்; அடுத்த கட்டமாக மாவட்ட அளவிலும் ஒன்றிணைத்து அகதிகளை கூட்டவும், இறுதிக் கட்டமாக இச்சுலோகங்களுடன் "இந்தியரசு தலையிட வேண்டும், அய்நா சபை தலையிட வேண்டும்" என்பதையும் இணைக்கவுள்ளனர்; தமிழ்நாடு முழுவதும் உள்ள அகதிகளை ஒன்று திரட்டி மாபெரும் ஊர்வலமும், மனுக் கொடுப்பும் நடத்த தயாராகின்றனர். அகதி முகாம்களில் வேலை செய்யும் சீர்திருத்த அமைப்பகளும், அரசு சாரா நிறுவனங்களும் (NGO's) இவ் அமைப்புக்களிலும் உள்ள உண்மையான மக்கள் தொண்டர்களே! உங்கள் அகிம்சை வழி ஒன்று கூடல்களில் பிரச்சாரங்களில், உண்ணாவிரதங்களில், ஊர்வலங்களில், கருத்தரங்கு, மாநாடுகளில், மனுக்களில் தமிழீழத்தில் யுத்த நிறுத்தம், சமாதானம் அமைதி ஏற்பட தமிழீழ மக்களின் - அகதிகளின் அடிப்படைக் கோரிக்கையான "திம்புக் கோரிக்கைகள் தீர்க்கப்பட வேண்டும்" "அன்னியத் தலையீடுகள் வேண்டாம்" என்பதையும் முன்வைத்து செயற்படுங்கள்.

நசீர்.





கைரேகை பதிவு, சட்டவிரோத கைது, கீழ்த்தரமாக நடத்தும்
தமிழ்நாடு பொலீசின் நடவடிக்கைகளை எதிர்க்கும் தமிழீழ அகதிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சமாதானப் புறாக்கள்

சமாதான தேவதையை அதிகாலையில் சந்தித்தேன்.
வாடிய முகத்துடன்
உழவர்களின் அரிவாள்களிற்
குருதிபடிந்திருக்கக் கண்டதாய்ச் சொன்னாள்.
"உன் வெள்ளைப் புறாக்களை
அவர்களிடம் அனுப்புவாய்"
என ஆலோசனை சொன்னேன்.
அனுப்பினாள்.
உழவர்கள்
தங்களிடமிருந்த சொற்பத் தானியத்திற் பகுதியைப்
புறாக்களிடங் கொடுத்தார்கள்.
"உங்கள் அரிவாள்களில் எது இந்தக் குருதி?"
எனப் புறாக்கள் கேட்டன.
"எங்களது விளைச்சலைப் பறிக்க வந்த
ஏவலர்களது குருதிதான்" என்றார்கள்.
அது சரியா தவறா என விவாதித்தவாறு
புறாக்கள் மீண்டன.

சமாதான தேவதையை முற்பகலிற் சந்தித்தேன்.
முகவாட்டம் மாறாமல்
ஆதிவாசிகளின் கைக் கோடரிகளிற்
குருதி வழியக் கண்டதாய்ச் சொன்னாள்.
"உன் வெள்ளைப் புறாக்களை
அங்கேயும் அனுப்புவாய்"
என ஆலோசனை சொன்னேன்.
அனுப்பினாள்.
ஆதிவாசிகள்
கிண்டியெடுத்த கிழங்குகளைப்
புறாக்களுடன் பகிர்ந்தார்கள்.
"உங்கள் கோடரிகளில் வழிவது எவரது குருதி?"
எனப் புறாக்கள் கேட்டன.
"எங்களது மண்ணைப் பறிக்க வந்த
மூர்க்கர்களது குருதிதான்" என்றார்கள்.
அது நியாயமாக இல்லையா என்று தர்க்கித்தவாறு
புறாக்கள் மீண்டன.

சமாதான தேவதையை நண்பகலிற் சந்தித்தேன.
சோக மிகுதியுடன்
தொழிலாளர்களின் கருவிகளிற்
குருதி உறைந்திருக்கக் கண்டதாய்ச் சொன்னாள்.
"உன் வெள்ளைப் புறாக்களை
அவரிடத்தும் அனுப்புவாய்"
என ஆலோசனை சொன்னேன்.
அனுப்பினாள்.
தொழிலாளர்கள்
தங்கள் மதியஉணவுக்காய் வைத்திருந்த ரொட்டிகளிற்
புறாக்கட்கும் ஈந்தார்கள்.
"தொழிற்கருவிகளிலுங் குருதி ஏது?" எனப்
புறாக்கள் கேட்டன.
"எங்கள் உரிமைக்கான போராட்டத்தை
உடைக்க வந்த உலுத்தர்களது குருதிதான்"
என்றார்கள்.
கருத்து வேறுபாட்டுடன் புறாக்கள் மீண்டன.

சமாதான தேவதையை அந்தியிற் சந்தித்தேன்.
துயர் வழியும் முகத்துடன்
உலகமெல்லாம் போர் மூண்டு
மண்ணெல்லாம் குருதி பாய்ந்திருக்கக்
கண்டதாய்ச் சொன்னாள்.
"உன் வெள்ளைப் புறாக்களைப்
படையினரிடம் அனுப்புவாய்"
என ஆலோசனை சொன்னேன்.
அனுப்பினாள்.
புறாக்கள் வாய்திறக்கு முன்னமே
படையினர்.
தமது தானியங்கித் துப்பாக்கிகளை ஒருகணம் நிறுத்தி
"இது நமது தொழில்
எங்கள் எசமானர்களிடம் கேளுங்கள்" என்றார்கள்.
துவங்குகள் மீண்டும் இயங்கின.
புறாக்கள் போரின் எசமானர்களிடம் விரைந்தன.
நிலவுடைமையாளர்களுடனும் முதலாளிகளுடனும்
முதலீட்டாளர்களுடனும் ஆயுத வியாபாரிகளுடனும்
விருந்தோம்பிக்கொண்டிருந்த எசமானர்கள்
புறாக்கட்கும் மதுபானங்களை வழங்கினார்கள்.

சமாதான தேவதையை நள்ளிரவிற் சந்தித்தேன்.
அழுத முகத்துடன்
"என் புறாக்கள் இன்னும் வரவில்லை" என்றாள்.
"தேடிப் போவோம்" என்றேன்.
வெண்ணிலவை விளக்காக்கி
இரவு முழுவதும்
நாலு திசைகளிலும் நன்றாகத் தேடினோம்.
விடியும்வரை
சமாதான தேவதைக்குத் துணையாக நானிருந்தேன்.
விடியலில்
ஒரு சிறுவனுஞ் சிறுமியும்
தாங்கள் கண்டெடுத்த வெண்சிறகுகளைச்
சமாதான தேவதையிடம் நீட்டினார்கள்.
சுவர்களின் பின்னால்
எசமானர்களின் நாய்கள்
புறாக்களின் எலும்புகளைச் சுவைத்தன.

அக்காலைப் பொழுதில்
சமாதான தேவதை
என்னிடம் ஒரு போர்வாளைத் தந்தாள்.

— சிவசேகரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஏகாதிபத்தியங்களின் கெடுபிடிகள்

கடந்த சுமை இதழில் ஈராக் மீதான அமெரிக்காவின் கெடுபிடி பற்றிக் கூறியிருந்தோம். ஈராக் மக்கள் தமது எதிரிகளை தண்டிக்கும் உரிமையை அவர்களே கொண்டிருக்கின்றனர். இதன் காரணமாக எந்தச் சக்திகளும் சனநாயகத்திற்கு ஆதரவாக பாடுபடுவதாக மார்தட்டிக் கொள்ளத் தேவையில்லை. சனநாயகம் என்பது வாழ்கின்ற போதே அவற்றை அனுபவிக்கக் கூடியதாக அமைதல் வேண்டும். அதனை விடுத்து மத அடிப்படைவாதிகள் கூறுவது போல் இவ்வுலகில் கிடைக்காத அனைத்தும் விண்ணுலகில் கிடைக்கும் என காலந்தோறும் போதித்துக் கொண்டு இருப்பது போல் மக்கள் அழிந்த பிற்பாடு சனநாயகத்தை நிறைவேற்றுவது இவர்களின் தலையாய கடமையாகும். இவர்கள் சனநாயகம் என கூறுவது பணம் படைத்தவர்களின் வசதியின் பொருட்டும் அவர்களைப் பாதுகாக்கின்ற அரசின் பொருட்டும் அமைக்கப்படுகின்ற ஆட்சியையே. இதனை மறைத்து தொடர்புச் சாதனங்கள் பிரச்சாரம் செய்யலாம். ஆனால் இவைகளின் உண்மை தோற்றம் மக்களுக்கு தெளிவாக தெரிவதற்கு காலம் எடுக்கின்றது. இது எந்தக் காலத்திலும் போராட்டத்தை நடத்துகின்ற மக்களிடத்தில் காணப்படுகின்ற வெளிப்பாடே.

பிரச்சாரங்களுக்கு மத்தியில் தமது படையின் பலத்தினையும் அதன் வெற்றியையும் கணக்கில் எடுத்துக் கொண்ட ஏகாதிபத்தியம் தனது தோல்வியைத் தான் கணக்கில் வரவாக கொள்ள முடிந்தது. யுத்தம் நடந்து கொண்டு இருந்த போதும், நடந்த பிற்பாடும் தமது கட்டுப்பாட்டினுள் இருந்த தொடர்புச் சாதனங்கள் மூலமாக தமது வெற்றியை பறைசாற்ற முடிந்தது. ஆனால் இன்று வெளிவரும் முடிவுகளோ அவர்கள் அன்று குறிப்பிட்டவற்றிற்கு மாறாகவே வருகின்றது. இவற்றில் தமது படையினர்களிடையே ஏற்பட்ட அதிருப்தி என்பதும் கவனிக்க வேண்டியதாகும். வளைகுடா யுத்தத்தில் கலந்து கொண்ட படையினர்கள் யுத்தத்தின் பிந்திய காலத்தில் பல நோய் நொடிகளுக்கு ஆளாகியுள்ளனர். யுத்தத்திற்கு அனுப்பப்படும் முன்னர் பல வகையான தடுப்பு மருந்துகள் செலுத்தப்பட்டது. இதனால் பிற்பட்ட காலத்தில் பல பக்க விழைவுகளை படையினரிடம் ஏற்பட்டுள்ளது. பலிக்கடாவாக்கப்பட்ட இந்தக் கூலிப் படையினர் இன்று தமது எஜமானர்களுக்கு எதிராக கருத்துக் கூறும் அளவிற்கு வந்துள்ளனர். அதிருப்தியடைந்த முன்னாள் படையினர் தமது பதக்கங்களை திரும்பி ஒப்படைக்கவுள்ளனர். இவர்கள் தமக்கு சலுகை வழங்கப்பட வேண்






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டும் என கோரிக்கை விடுகின்றனர். எந்த விதமான பரிசோதனை செய்யப்படாத தடுப்பு மருந்துகளை தமக்கு செலுத்தியதால் தமது உடல் நிலையில் தற்பொழுது தாக்கம் ஏற்பட்டுள்ளதாக வும், தாம் பரிசோதனைக்கு பலியாகிவிட்டதாக வும் அவர்களின் பேச்சாளர் (Tony Flint) ரோணி தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆகாயத் தாக்குதல்களால் வெற்றிகரமாக தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டதாக முன்னர் பறை சாற்றப்பட்டது. இவைகள் அமெரிக்க (CIA) உளவு துறையின் கணிப்பில் 90 (Scud) ஏவுகணைகளை யும், 2500 பீரங்கிகளையும் அழித்ததாகக் கூறினர். ஆனால் 90 ஏவுகணைகளில் எதையும் உருப்படி யாக அழிக்கவில்லை எனவும் 2500 தாங்ககளில் 10 வீதமானவைகளே ஆகாயத் தாக்குதல்களால் அழிக்கப்பட்டதாகவும் மிகுதி ஈராக்கியப் படை கள் அவற்றை விட்டு விட்டு வெளியேறிய பின்னர் அழிக்கப்பட்டது என தற்போதைய ஆய்வு வெளியீடுகள் தெரிவிக்கின்றன. 90 ஏவுக ணைகள் அல்ல அதன் பற்றிகள், தாங்கிகள் என்பனவே யோர்தானுக்குச் செல்லும் வழியில் தாக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. தாமே என்ன செய்வது என்பது தெரியாது பரிதவித்த மேற்கு லமே அழிவில் குதுகலித்து இதுதான் இன்றைய உலகம். இந்த உலகம் வெற்றி எனக் கொண்டா டிய நிகழ்வினை இன்று அவர்களே அது தோல்வி என தமது வாயால் அறிவிக்க வேண் டிய மௌன நிலைக்கு அவர்களைக் கொண்டு வந்துவிட்டுள்ளது.

இன்னுமொரு அறிக்கையான அமெரிக்க கொங்கிரசின் தணிக்கைக் குழுவினால் (Pentagon) பென்ரகனின் எச்சரிக்கையையும் மீறி வெளிவந் துள்ளது. (General Accounting Office) இவ்வறிக்கை யில் Operation Desert Storm இல் பாவிக்கப்பட்ட M - 16 யுத்த விமானமானது தயாரிப்பாளர்கள் சொன்னதற்கு மாறாக தாக்குதல்கள் மேகம், தூசி, புகை, வெதுவெதுப்புத் தன்மை ஆகியவற்றால் தடைப்பட்டது எனக் கூறுகின்றது.

ஆனால் இவர்களால் அகதிகள் பதுங்கியி ருந்த பதுங்கு குழிகள் தாக்கப்பட்டது, பெரும் கட்டிடங்கள், பாலங்கள், பொதுவிடங்கள் அழிக் கப்பட்டது. ஆனால் அவர்கள் நினைத்தபடி எந்தவித வெற்றியையும் பெற்றுக் கொடுக்க வில்லை. ஆனால் ஈராக்கிய மக்களுக்கோ எல் லையில்லாத் தொல்லையை இன்றுவரை ஏற்ப டுத்தியுள்ளார். பிடல் காஸ்ரோ சொன்னார் ''ஏகா திபத்தியங்கள் இந்த யுத்தத்தை நடத்த முயற்சிப் பது தமது ஆயுதங்களின் பலத்தை சோதித்துப் பார்க்கத்தான் எனவும், ஈராக் ஏகாதிபத்தியங்க ளின் சோதனைப் பீடம்'' எனக் கூறினார். அவர் சொன்னது தான் இன்று நிறைவேறியுள்ளது. யுத்தத்தை பாதுகாப்புச் சபையில் கியூபா எதிர்த் தது குறிப்பிடத்தக்கது.

இன்று அவர்களின் கூட்டணியே யுத்தம் என்ற எண்ணத்தை ஏற்கத் தயாராக இல்லாத நிலையைக் காணமுடியும். வட ஆப்பிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கான பொரு ளாதார மாநாடு கட்டாரில் (Qatar) இடம் பெற்றது அதற்கு சவூதி அரேபியாவும், எகிப்தும் தனது பிரதிநிதிகளை அனுப்பி வைக்கவில்லை. அத்து டன் எந்தக் குவைத்துக்காக இவ்வளவு ஆர்ப்பாட் டம் நடைபெற்றதோ அந்தக் குவைத் நாடே விருப்பமின்றி ஒரு கீழ்நிலை அதிகாரியை பிரதி நிதியாக அனுப்பி வைத்தது.

இஸ்ரேலுக்கு எதிராக ஐ.நா. சபையில் பலஸ்தீனத்தில் இருந்து வெளியேறவேண்டும், குடியேற்றத்தை தடுத்து நிறுத்தும் படியும், லெப னான், சிரியாவின் பிரதேசங்களை விட்டு வெளி யேறும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கின் றது. ஆனாலும் ஈராக்கிற்கு எதிராக என்றதும் முன்னுக்கு நிற்கின்ற அமெரிக்காவின் நிலைமீது இயல்பாகவே சந்தேகம் ஏற்படும். இந்த நம்பிக் கையீனத்தின் மூலமாக ஆக்கபூர்மான எதிர்ப் பைத் தெரிவித்துக் கொள்வார்கள் எனக் கொள்ள முடியாது.

இவற்றில் இருந்து அவர்களின் நண்பர்கள் அமெரிக்காவின் அரசியலில் நம்பிக்கை இல்லா ததாக காட்டிக் கொண்டாலும் அவர்கள் எப்ப வும் ஸ்திரமான நிலைப்பாட்டைக் கொள்வார் கள் எனக் கொள்ள முடியாது. ஏனெனில் உலகப் பொலிசானது பயமுறுத்தி காரியம் சாதிக்கும் என்பது தெரிந்ததே. இதற்கு இவர்கள் பணிந்து போவார்கள் என்பதை எப்பொதும் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

இன்று பல மாற்றங்கள் சர்வதேசத்தில் இடம் பெற்று வந்துள்ளது. இருந்தும் அமெரிக் காவின் பிடி என்பது பலமாகத் தான் இருக்கின் றது. இன்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் புதிய தலைவர் ஈராக்கின் மீதான தடையை அகற்றும் வேலைகளை மேற்கொள்ளப் போவ தாக கூறியுள்ளார். அத்துடன் ஈராக்கும் 6 மாதங்க ளுக்குள் அய்நா பரிசோதகர்கள் தமது வேலையை முடித்துவிட்டு வெளியேறுவதுடன், தடையை அகற்றும் படியும் கேட்டிருக்கின்றது.

ஐ.நா.வின் செயலாளரும் தடையை சற்று தளர்த்த ஆதரவு தெரிவித்துள்ளார்.

மீண்டும் இவ்வாண்டு மூடி இருந்த அமெ ரிக்காவின் ஈராக் மீதான யுத்தம், வல்லரசுகளுக்கு இடையில் நடந்த இராஜதந்திரப் போட்டியில் அய்நா செயலர் - ஈராக் அதிபர் ஒப்பந்தத்தால், ஈராக்கின் 9 நிலைகள் மீதான ஆயுதப்பரிசோ தனை நடவடிக்கையுடன் திசை திரும்பியுள்ளது. அய்நா சபை என்பது அமெரிக்காவின் வல்லரசுக ளின் நலன் காக்கும் சர்வதேச அமைப்பு என்பது தெளிவாகியுள்ளது.

— இளங்கோ

www.tamilarangam.net

# யார் இந்த போல்பொட்?

## POLPOT?

சுரண்டும் வர்க்கங்களுக்கும், அரசுகளுக்கும், வல்லரசுகளுக்கும் எதிராக, மக்களின், தேசத்தின் பக்கம் நின்று போராடும் போராளிகளை, இயக்கங்களை அரசுகளும், அனைத்து தொடர்புச் சாதனங்களும் பயங்கரவாதிகள், கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள், தீவிரவாதிகள் என சித்தரிப்பது வரலாறு முழுவதும் நடந்து வருவதுதான்.

சித்திரை மாதம் முழுவதும் உலகம் முழுவதும் தொடர்புச் சாதனங்கள் எல்லாவற்றிலும் ஏதோவொரு அளவில் 'கெமரூஷ்' இயக்கத்தினதும் அதன் செயலர் போல்பொட்டினதும் செய்திகள் வெளிவந்தன. அவர் கொம்யூனிஸ்டா? பயங்கரவாதியா? என சில சர்வதேச பத்திரிகைகள் விவாதம் கூட நடத்தின. கடந்த ஆண்டில் இருந்து அமெரிக்காவும், ஐ.நா. சபையும் Hunsen தலைமையிலான கம்போடிய அரசும் போல்பொட் மீதும் கெமரூஷ் இயக்கத் தலைமை மீதும் 2 மில்லியன் மக்களை 1975-80-க்கும் இடையில் படுகொலை செய்தார்கள் எனக் குற்றம் சாட்டி சர்வதேச நீதிமன்றத்திடம் போல்பொட்டை ஒப்படைக்க வேண்டும் என்ற சதித் திட்டத்தை - பிரச்சாரத்தை அரங்கேற்றி வந்தனர். 1975-இல் இந்தோனேசியாவில் 10 இலட்ச பொதுவுடைமையாளர்களை கொலை செய்த கிழக்கு திமோர் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்கிட்ட சுகாட்டோ அரசை ரூவாண்டாவில் 1995-இல் 4 மில்லியன் மக்கள் படுகொலை செய்யப்பட்டதை கைக்கட்டிப் பார்த்துக் கொண்டிருந்த அய்நா சபையும், அதன் மனிதவுரிமை அமைப்பும், இன்று கெமரூஷ் இயக்கத்தை கண்டிக்கிறது.



The body of Pol Pot lies in a hut near the Thai-Cambodia border on April 16. (AP)

கெம்ரூஷ் இயக்கத்துள்ளும் தலைமையில் இயக்கத்தின் அரசியல் வழி, போராட்ட மார்க்கம் தொடர்பாக கருத்து மோதல்கள் இருந்து வந்ததையும் கொம்ரூஷ் தலைவர்கள் சிலர் Bankkok இல் அரசியல் தஞ்சம் கோரி வந்ததாக கூறப்பட்ட செய்திகளும் போல்பொட் இறுதி நாட்களில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டதாக வெளிவந்த செய்திகளிலும் உண்மை இருப்பதாக காணப்படுகிறது. போல்பொட்டின் சித்திரை 15 மரணத்தின் பின் இயக்க தலைமையை எடுத்துக் கொண்ட ஜெனரல் KHEMNGUN சித்திரை 22-இல் கம்போடிய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த 3 அம்சத் திட்டத்தை முன்வைத்துள்ளார்.

(1. யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவது, 2. யாருக்கும் வெற்றியும் இல்லை தோல்வியும் இல்லை என்பதை ஒத்துக் கொள்வது, 3. யூலை தேர்தல் வரை இடைக்கால அரசு, (தேர்தலை அய்நாசபை பார்வையிட வேண்டும்.) கூடவே "கெமரூஷ்" இயக்கத்தின் பெயரை "தேசிய ஒற்றுமைக் கட்சி" (NSP) என மாற்றியுள்ளதுடன் போல்பொட்டிற்கு அடுத்த நிலையில் இருந்த TAMOK, NOUNCHEA போன்றவர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். விடுதலை இயக்கங்களின் தலைமைக்குள் நடக்கும் கருத்துப் போராட்டங்களை, தலைமை அதிகாரத்துக்கான மோதல்களை எதிரிகள் மறைமுகமாகவும், வாய்ப்புக் கிடைத்தால் நேரடியாகவும் பயன்படுத்திக் கொள்வதும் வரலாற்றில் நடந்து வந்திருப்பதே.

பங்குனி 97-இல் NORODOM - RANARIDDH நாட்டை விட்டு ஓடி சீனாவில் தஞ்சம் புகுந்ததும் அரச தலைமைப் பொறுப்பைக் கைப்பற்றிய HUNSEN அரசு கெமரூஷ் இயக்கத்தின் மீது இராணுவ நடவடிக்கையை முடுக்கிவிட்டது. வடகம்போடியாவின் டான்கிறேக் மலைப்பகுதியில் நிலை கொண்டிருந்த TAMOK, KHIEG SAMPEN தலைமையிலான கெமரூஷ் போராளிகள் கடும் சண்டைக்குப் பின் பின்வாங்கினர். தாய்லாந்து எல்லையில் உள்ள 'அலோங் வெங்'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(ALONG VENG) காட்டுப் பகுதிதான் கெமரூஷின் பிரதானமான, இறுதிவரை நின்று பிடிக்கும் தளமாக இருந்து வருகின்றது. போல் பொட்டின் தலைமறைவு வாழ்விலும் சாவிலும் 'அலோங் வெங்' நீங்காத இடம்பெற்று நிற்கிறது.

போல்பொட்டின் உண்மைப் பெயர் 'SALOTHSAR' 1925-இல் கம்போடியாவின் KOMPONG THOM மாகாணத்தில் ஒரு விவசாய குடும்பத்தில் பிறந்த இவர் தனது பள்ளிப் படிப்பை முடித்த பின் அரச செலவிலேயே 1949-இல் பிரான்ஸ்சில் வானொலி தொழில்நுட்பக் கல்வி பயிலச் சென்றார். பாரீசில் தங்கி இருக்கும் போது சோசலிசக் கருத்துக்களைக் கற்றதுடன். சீனப் புரட்சிக்கு ஆதரவான நடவடிக்கை களிலும் ஈடுபட்டார். 1960-இல் மீண்டும் கம்போடியா திரும்பிய போல்பொட் இடதுசாரி இயக்கத்தை உருவாக்கி செயற்பட்டார். 1970-இல் KING NORODOM SIHANOUK இன் அரசை இராணுவ ஜெனரல் LONNOL எதிர்க் கிளர்ச்சி நடத்தி தூக்கியெறிந்தார். கெமரூஷு சும் இதற்கு ஆதரவாக இருந்து துணை புரிந்தது. வியட்னாமுக்கு எதிரான அமெரிக்காவின் ஆக்கிர மிப்பு யுத்தத்திற்கு ஜெனரல் LONNOL அரசு நேரடியாக வும் மறைமுகமாகவும் உதவியது. இதை கெமரூஷ் இயக்கம் எதிர்த்தது. 1975 சித்திரை 17-இல் 'நாம் பென்' நகரை Red KHMER ROUGE கைப்பற்றியது. 1978 வரை போல்பொட் தலைமையிலான கெமரூஷ் இயக்கத்தின் கட்டுப்பாட்டில் 'நாம்பென்' இருந்தது. மன்னர்களும் ஜெனரல் LONNOL இன் படைகளும் ஆளும் வர்க்க ஆதரவாளர்களும் அழித்தொழிக்கப்பட் டனர். 1979-இல் மீண்டும் எதிரிப் படைகள் 'நாம் பென்னை' கைப்பற்றி கெமரூஷ் இயக்கம் மீண்டும் தாய்லாந்து எல்லைக்கு பின்வாங்கியது. கடந்த 18 வருடங்களாக தலைமறைாக இருந்து கொண்டு கம்போடிய ஆளும் வர்க்கத்திற்கும் அரசுக்கும் வல்லர சுகளுக்கும் எதிராக தனது மரணம் வரை 73 வயது வரை போராடிக் கொண்டிருந்த போல்பொட்டும் அவர் தலைமையிலான கெமரூஷ் இயக்கமும் விடுத லைப் போராட்ட வரலாற்றில் நிலைத்து நிற்கும்.

போல்பொட்டின் மேல், கெம்ரூஷ் இயக்கம் மீதும் கம்போடிய ஆளும் வர்க்கமும் அரசும் வல்லரசு களும் தொடர்பு சாதனங்களும் கட்டவிழ்த்து விட் டுள்ள 2 மில்லியன் மக்களின் உயிரைக் குடித்த பேய், கொலைகாரன், கொலைகார இயக்கம் என்ற பிரச்சா ரத்தை போல்பொட்டின் - கெமரூஷின் வரலாறு தெரிந்தவர்கள் நம்பப் போவதில்லை. போல்பொட் டின் மனைவி கூறுவது போல் "ஒரு போல்பொட் இறந்து விட்டார்; கம்போடிய மண்ணில் இருந்து; இன்னும் 100 போல்பொட்கள் உருவாகிக் கொண்டே இருப்பார்கள்."

கெமரூஷ் மீதும் போல்பொட் மீதும் மக்கள் விரோதிகள் கட்டவிழ்த்து விடும் பொய்ப் பிரச்சா ரத்தை நாம் எதிர்த்து அம்பலப்படுத்தும் அதேவேளை கெமரூஷ் இயக்கத்தினதும் அதன் செயலர் என்ற முறையில் போல்பொட்டினதும் அரசியல் ரீதியான, அமைப்பு ரீதியான தவறுகளை, பலவீனங்களை கவனத்தில் கொள்வதும், புரட்சிகர மாற்று முறை களை முன் வைத்து செயற்படுவதிலும் பின்னிற்க கூடாது. (குறிப்பாக: உள்நாட்டு ஆளும் வர்க்கங்க ளுக்கு இடையிலான முரண்பாட்டை கையாள்வது, அய்க்கிய முன்னணி, தேசிய முதலாளித்துவ சக்திகள் பற்றிய கணிப்பீடு, தேசிய விடுதலை இயக்கத்தில் தொழிலாளி வர்க்கப் பாதையை இரகசியப்படுத்தி யது போன்றவை.)

தமிழரசன்



# தமிழகத்தில் தவிக்கும் தமிழீழ அகதிகள்

பெரம்பலூர் அருகே உள்ள துறைமங்கலம் யூனியன் அலுவலகம் பின்புறம் அமைந்துள்ளது இலங்கை அகதிகள் முகாம். இம்முகாமில் கடந்த 1990-ம் ஆண்டு 167 குடும்பங்கள் இலங்கையிலிருந்து வந்து அகதிகளாக தங்கியுள்ளனர்.

இதில் 47 குடும்பங்கள் கடந்த சில ஆண்டுக ளுக்கு முன்பு வேறு முகாமுக்கும், சிலர் இலங்கைக் கும் திரும்பி சென்று விட்டனர். மீதமுள்ள 120 குடும்பங்கள் இந்த முகாமில் தங்கி வருகின்றன.

இந்த 120 குடும்பத்திற்கு 6 லைன் வீடுகள் அரசால் கட்டிக் கொடுக்கப்பட்டு அதில் ஒரு லைனில் 20 குடும்பம் வீதம் தங்கி வருகின்றனர். இந்த குடியிருப்புகள் ஆஸ்பெஸ்டாஸ் சீட் போன்ற டார் அட்டைகளால் வேயப்பட்ட வீடுகள் ஆகும்.

இந்த தார் அட்டைகள் குறிப்பாக 2 வருடம் தான் தாங்குமாம், வருடம் ஆனதால் எல்லா வீடுக ளும் கரையான் பிடித்து மிகவும் உக்கி எப்போது விழும் என்ற நிலையில் உள்ளது.

கடந்த 8 மாதத்திற்கு முன்பு பெரம்பலூரில் பெய்த கடும் மழையில் ஒரு லைன் குடியிருப்புகள் (20 வீடுகள்) இடிந்து தரைமட்டமாகிப் போனது.

அதேபோல் கடந்த 6 மாதத்திற்கு முன்பு மற் றொரு லைன் (20 வீடுகள்) மழையில் இடிந்து தரைமட்டமாகிப் போனது.

இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளி டம் அகதிகள் மனுகொடுத்தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் இல்லை.

www.tamilarangam.net

கடந்த 8 மாதத்திற்கு முன்பு குடந்தையில் உள்ள ஒரு தொண்டு நிறுவனத்திடம் இந்த அதிகள் வீடுகளை செப்பனிடக் கோரி மனுகொடுத்தனர். அதை ஏற்றுக் கொண்ட அந்த தொண்டு நிறுவனம் 60 வீடுகளை (3 லைன்) இலவசமாக செப்பனிட்டுக் கொடுத்துச் சென்றது.

ஆனால், இடிந்து தரைமட்டமாகிப் போய்விட்ட 40 வீடுகளை மாவட்ட நிர்வாகம் சீர் செய்யாமல் விட்டுவிட்டது.

இதனால் அந்த 40 வீடுகளில் தங்கியிருந்த அகதிகள் அவர்களாகவே சிறு சிறு குடிசைகளை மண்சுவர் வைத்து எழுப்பி அதில் குடியிருந்து வருகின்றனர்.

இந்த முகாமுக்கு கடந்த சில மாதங்களாகவே மின்சார வசதி இல்லை. பல தடவை மின்வாரியத்தில் புகார் கொடுத்தும் எந்த அதிகாரியும் மின் வசதி செய்து தர முன்வரவில்லை.

பெண்களையும், குழந்தைகளையும் வைத்துக் கொண்டு இருட்டில் வாழ்ந்து வருகின்றனர். சொந்த நாட்டில் வாழவழியின்றி தமிழ்நாட்டில் அகதிகளாக வாழ வந்த ஈழத்தமிழர்களை இந்த நாட்டிலும் அகதிகளாக தவிக்க விடுகின்றனர் அதிகாரிகள்.

# சிறப்பு முகாமில் இருந்து பாலச்சந்திரன் விடுதலை

தமிழீழத் தமிழரான திரு. பாலச்சந்திரன் எட்டு ஆண்டுகளாக தடா கைதியாக தமிழகச் சிறைகளிலும் பின்பு சிறப்பு முகாம்களிலும் மாறி மாறி அடைக்கப்பட்டு கடந்த 30.4.98 அன்று மதுரை மேலூர் சிறப்பு முகாமில் இருந்து விடுதலை செய்து சென்னை வழியாக சிங்கப்பூர் செல்ல உளவுத்துறை (தமிழக அரசு) அவரை அனுமதித்துள்ளது.

1990-ல் கனடாவில் இருக்கும் தனது சகோதரனிடம் செல்வதற்காக கடவுச் சீட்டின் மூலம் இலங்கையில் இருந்து தமிழகம் வந்த பாலச்சந்திரன் முறையாக தமிழக சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு சென்னை வளசரவாக்கம் காவல் நிலையத்தில் தனது பெயரை பதிவு செய்தும் வைத்திருந்தார்.

1990-இல் தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சிக் காலம். தி.மு.க. அரசைக் கலைப்பதற்காக இந்திய உளவுத் துறை தி.மு.க.வை விடுதலைப் புலிகளுடன் இணைத்து பல சதித் திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருந்தது. விடுதலைப் புலிகளுடன் தி.மு.க.வுக்கு தொடர்பு இருப்பதாக தமிழக மக்களை நம்ப வைக்க தமிழீழ தமிழர்களையே இந்த உளவு நிறுவனங்கள் பயன்படுத்தி வந்தனர். அதற்கு பாலச்சந்திரரையும் பயன்படுத்த முயற்சி செய்தனர் கியூ பிரிவு போலீசார். அவர் இச்சதித் திட்டத்திற்கு ஒத்துழைக்க மறுத்த போது மறைமுகமாக பல நெருக்கடிகளைக் கொடுத்தனர். அதன்பின் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது.

இதனால் பாலச்சந்திரனை பழி வாங்கும் நோக்கத்துடன் 1988-இல் நடந்த கத்திபாரா நேருசிலை, கொடைக்கானல் தொலைக்காட்சி நிலையக் குண்டு வெடிப்பு சம்பவங்களுடன் தொடர்புபடுத்தி வழக்கு பதிவு செய்து வேலூர் சிறையில் அடைத்தது இந்திய உளவுத் துறையான கியூவும், ஐ.பியும். 1988-இல் இச்சம்பவங்கள் தமிழகத்தில் நடக்கும் போது அவர் சொந்த ஊரான தமிழீழத்தின் வடமராட்சி பகுதியில் உள்ள தனது கிராமத்தில் இருந்தார். இந்திய இராணுவம் தமிழீழத்தில் ஆக்கிரமிப்பு செய்த காலம் அது.

வேலூர் சிறையில் இருக்கும் போது பாலச்சந்திரன் தன்மேல் போடப்பட்டுள்ள பொய் வழக்குகளை திரும்பப் பெறுமாறு பல தடவை உண்ணாவிரதப் போராட்டம் என பல முயற்சிகளைச் செய்தார். தடா கைதிகளை பார்ப்பதற்கு உறவினர்களோ, நண்பர்களோ அனுமதிக்கப்படுவதுமில்லை. அதுவும் தமிழீழத்தவர் என்றால் கேட்கவே வேண்டாம். அவர்களின் வழக்கறிஞர்கள் மட்டுமே அதுவும் பல கெடுபிடிகளுக்கு மத்தியில் மட்டுமே பார்க்க அனுமதி உண்டு. 1991-1995 வரையான ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் தமிழீழத்தவர் சம்பந்தப்பட்ட எந்த வழக்குகளுமே நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல அனுமதிக்கப்படவில்லை. எல்லா வழக்குகளும் வேண்டுமென்றே ஒத்தி வைக்கப்பட்டது. தமிழரின் வாழ்வுரிமைக்கான அனைத்து சனநாயக உரிமைகளும் மறுக்கப்பட்ட காலம்.

1996-க்குப் பின் தி.மு.க. ஆட்சி வந்தபின் சில கெடுபிடிகள் தளர்த்தப்பட்டது. பல வழக்குகளில் சம்பந்தப்பட்ட தமிழீழத்தவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். சிறைகளில் இருந்து சிறப்பு முகாமுக்கு மாற்றப்பட்டனர். பாலச் சந்திரனும் வெடிகுண்டு வழக்கில் 17.02.97 அன்று நீதி மன்றத்தினால் நிரபராதி என தீர்ப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். ஆனால் கியூவும், ஐ.பியும் அவரை விடுதலை செய்யாமல் சேலம் சிறையிலும் பின்பு மதுரை மாவட்டத்தில் உள்ள மேலூர் சிறப்பு முகாமிலும் அடைத்து வைத்து அவர் தனது சொந்த செலவில் சிங்கப்பூர் செல்ல அனுமதி கேட்டும் மறுக்கப்பட்டது. வேறு வழியின்றி அவர் காலவரையறையற்ற உண்ணாவிரதத்தை 2.2.98 முதல் ஆரம்பித்தார். தமிழக அரசுக்கும் தனது நிலையை விளக்கி எழுதினார். 'தமிழர் சக்தி' 5 பிப்ரவரி 98 இதழிலும் வெளியானது. இவர் கைது செய்யப்பட்டதை எதிர்த்து நக்கீரன்,

ஒடுக்கப்பட்டோர் தமிழகம், புதிய ஜனநாயகம், அகதியின் குரல், தேசபக்தன் போன்ற பத்திரிகைகளி லும் செய்திகள் வெளியிடப்பட்டன. அவருடைய தொடர்ச்சியான சிறைப் போராட்டங்களும் பத்திரி கைகளின் ஆதரவும் அவரை விடுதலை செய்ய வைத்துள்ளது. பாலச்சந்திரன் சார்பாக அவருக்கு ஆதரவு அளித்த பத்திரிகைகளுக்கும், நண்பர்களுக் கும், தமிழின உணர்வாளர்களுக்கும், சனநாயக சக்திக ளுக்கும் தேசபக்தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கி றது.

இந்திய விரிவாதிக்க அரசும் அதன் உளவுத்துறை களும் இலங்கையில் தமது மூக்கை நுழைப்பதற்கு பல வழிகளிலும் முயற்சி செய்து வருவதும் அதற்கு தமிழீழப் போராளிகளை பகடைக் காய்களாகப் பயன்படுத்தி வருகின்றது. தமிழகத்தில் தி.மு.க. ஆட்சியை கலைப்பதற்கும் தமிழீழப் போராட்டத்தை யும், போராளிகளையும் கொச்சைப்படுத்தி திட்ட மிட்ட சதி வழக்குகளில் கைது செய்வதும் நடந்து வருபவைதான். இந்த வழக்குகளில் நீதிமன்றத்தின் தீர்ப்புக்களால் உளவுத்துறை அம்பலப்பட்டுபோன நிகழ்ச்சிகள் அதிகம்.

நீதிமன்றத்தில் பாலச்சந்திரன் 14 பக்க தனது வாக்கு மூலத்தில் 7 ஆண்டுகள் சிறையில் தான்பட்ட துயரங்களை உருக்கமாக விளக்கியுள்ளார்.

"எனக்கும் சக அகதிகளக்கும் இழைக்கப்படும் கொடுமைகள் யாவும் அரசுக்குத் தெரிந்ததே!, அரசின் உத்தரவுப்படியே அதிகாரிகளினால் நடத்தப்படுகி றது. இவ்வளவு, திமிராகவும் பொறுப்பற்ற முறையி லும் சட்ட விரோதமாகவும் இவ்வதிகாரிகள் நடந்து கொள்வதற்கு அரசே பொறுப்பாகும். எனவே இந்த அட்டூழியங்களுக்கு இன்று இல்லாடிவிலும் என்றா வது ஒரு நாள் அரசு விடை சொல்லியாக வேண்டும்!

— சோபா

# மே தினம் - 98

ஆலைச் சங்குகள்
ஒலித்து - ஆண்டுகள்
பல ஆயிற்று
செல் அடியும்
ஹெலி ஓசையும்
வாழ்வாயிற்று...

புது வருடத்திற்கு
தமிழீழம் - என்றவர்
புறமுதுகிட்டுக்
கைகோர்த்தனர் - எதிரியிடம்
உள்ளூராட்சியிலும்
பாராளுமன்றத்திலும்
தேடுகின்றனர் - ஈழத்தை
இம்
முன்னாள் போராளிகள்.

பொங்கலுக்கும்
தை பூசத்திற்கும்
புது அரிசி விளையும்
எங்கள் நிலம்
கண்ணி வெடிகளும்
வெற்றுத் தோட்டாக்களும்
விளையும் பூமியாயிற்று...

என் தாத்தா - மாமா
விளைத்த நிலம்
தரிசாய் கிடக்கிறது.
வானம் பார்த்த பூமி
விமானம் பார்த்த பூமியானது...

அதிகாலை
வெள்ளி முளைக்க
கட்டு மரம் - பிடித்துக்
கடல் சென்ற காலமும்
கனவாயிற்று...

பாளை சீவும்
பழைய கத்தி பரணுக்குள்..
இன்று புதிய ரகம்
சீன, ரசிய, அமெரிக்கத்
தயாரிப்புக்கள்
பாளை சீவி
பனை வளர்க்க அல்ல
தலை சீவி
எம் சந்ததி அழிக்க

வன்னிக் காட்டில்
பாம்புக்கடிக்கு
உற்றாரைப்
பலி கொடுத்து
நானோ அகதியாய்
அந்நிய மண்ணில்...

வெந்த புண்ணில்
வேல் பாய்ச்சும்
சங்கதிகள் ஆயிரம்...

எம் வளம் அழிக்கும்
வல்லூறுகளின்
கொட்டம் - இன்னும்
எத்தனை நாள்

சமாதானம் பேசும்
யுத்த வியாபாரிகளின்
அரசியல் பொதியும்
அமைதிப் பேச்சும்
யாருக்கு?

எத்தனை நாள் பார்த்திருப்போம்
எம் வளம் இன்னொருவன்
கொண்டு செல்ல...

எம் உரிமை வேண்டி
அகதி வாழ்வு முடித்திட
ஆலைகளைத் திறந்திட
எம் நிலத்தை - நாம்
உழவு செய்ய
எம் பனையை - எமக்கே
சொந்தமாக்கிட

வாருங்கள் தோழர்களே!
ஏர் பிடித்து
எழுதுகோல் எடுத்து
எம் தேசத்தை
மீட்டிடுவோம்.
அந்நியரை
துரோகிகளை
அடித்துத் துரத்திட
உழைக்கும் மக்கள்
உறுதி கொள்ளோம்
மேதினத்தினத்தில்

- சோபா

www.tamilarangam.net

# "A" திரைப்படங்கள் - "A" கதைப் புத்தகங்களின் தாக்கம்

'ஆசைக்கு இணங்காத மனைவி கொலை', 'கள்ளக் காதலியுடன் கணவன் ஓடியதால் குழந்தைகளை கிணற்றில் வீசிவிட்டு பெண் தற்கொலை', 'சீர்காழியில் நான்கு வயது பெண் குழந்தையிடம் ஐம்பது வயது ஆசிரியர் பாலியல் பலாத்காரம்', 'கன்னியாகுமரியில் ஒன்பது வயது அகதிப் பெண் குழந்தையை பாலியல் உறவுக்கு ஈடுபடுத்தி கொலை செய்து எரியூட்டிய வாலிபர்கள் கைது', 'பிரேமானந்தா, கரிஸ்மேட்டிக், ஜான் ஜோசப் போன்ற செக்ஸ் சாமியார்களின் பாலியல் பலாத்காரம்' போன்ற செய்திகளைத் தான் இப்போது தொடர்ந்து தினசரி செய்திப் பத்திரிகைகளில் காணக் கூடியதாக உள்ளது. செய்திகளை வெறுமனே படிப்பதோடு நின்று விடுகின்றோம் ஆனால் நாளுக்கு நாள் இதன் பயங்கர முகம் பெரியதாகிக் கொண்டு வருகின்றது. குடும்பம், பாலியல் உறவுமுறை என்கின்ற தலைமையிலான அமைப்பு சிதைந்து சிக்கலாகி பிண்ணிப் பிணைந்து நிற்கின்ற போக்குகளுக்கு மாறிவிட்டது. சுருக்கமாகச் சொல்லப் போனால் பாலியல் உறவுதான் உலகைச் சுற்றிக் கொண்டிருக்கின்றது என்பது போல் ஆகின்றது. இதற்கு பெரும்பாலான துணையாக நிற்பது A படங்கள் மற்றும் A புத்தகங்களே! இரண்டுமே சமூகத்தைச் சீரழித்து, ஆண் பெண் பிரிவினையை விசாலமாக்கி வருகின்ற காரணிகளாக விளங்குகின்றது.

வீதியில் செல்கின்றோம் நிர்வாண படப் போஸ்டர்கள், அங்கங்கே ஒட்டப்பட்ட நிலையில் இருக்கின்றன. இயல்பாக பணம் பண்ணுவதற்காக எடுக்கப்பட்ட காட்சி என்று சொல்லலாம். பார்க்கின்ற மனம் அப்படியே ஒருகனம் உணர்ச்சியின் உந்துதலால் தடுமாறி நிற்கும். அந்தப் படத்தை யாருக்கும் தெரியாமல் பார்த்து விட எச்சில் ஊறும். அந்த இருட்டறைக்குள் இருக்க ஒரு இடம் தடவிப் போய் உட்கார்ந்து விட்டால், படம் ஓடுகின்றது. இருட்டுக்குள் அமர்ந்திருக்கும் அத்தனை இருட்டு விழிகளும் திரையில் அந்த பெண்ணின் நிர்வாணத்தை மானசீகமாக கற்பழித்துக் கொண்டிருக்கும். அங்கு அடுத்தவீட்டு பெண்டாட்டியிடம் உடலுறவு கொள்ளுதல், வேலைக்காரியிடம், வேலைக்காரனிடம், சுற்றுலா, பார்க்குகளுக்கு காதலி(?)யை கூட்டிவந்து பாலியல் உறவு கொள்ளுதல் இவைகள்தான் பெரிய சிந்தனையாக அங்கிருந்து பார்க்கின்றவர்களுக்கு கொடுக்கப்பட்டு வருகின்றது. (அந்த பெண்ணுக்கு பின்னால் உள்ள பலாத்கார வடிவங்கள் யார் கண்ணுக்கும், சிந்தனைக்கும் தோன்ற வாய்ப்பில்லை) இதில் என்ன வேடிக்கையென்றால் 'எய்ட்ஸ் எச்சரிக்கை' ரீதியில் வெளிவரும் A ப்படங்களும் செக்ஸ் காட்சிகளை விற்பனை செய்து விட்டு ஒரு எயிட்ஸ் நோயாளியை கடைசியில் காட்டுவதற்காக இருப்பதுபோல் பாவனை செய்து விடுகின்றது. ஆனாலும் 'எய்ட்ஸ்' என்ற 'ஒரு தெய்வம்' வந்ததால் மட்டுமே கொஞ்சம் பூமி நிதானமாக சுற்றுகிறது என்று சொல்லலாம். இந்த Aத்திரைப் படங்களை, Aக் கதைப் புத்தகங்களை பெரிதும் ரசித்து, சுவைத்துக் கொண்டிருப்பதில் 75% பிள்ளைகளைப் பெற்ற ஆண்களும், வயதுகள் நரைத்திருக்கும், கல்லூரி இளைஞர்கள், கடும் உழைப்பாளர்கள் என யாரும் இதற்கு தப்பவில்லை. எல்லோரும் இதற்குள் மாட்டிக் கொண்டு விட்டார்கள். (பெண்கள் சமூகத்தின் கட்டுமானங்கள் மற்றும் ஆணாதிக்கங்களால் அவைகளை பார்க்க முடியாமல் இருக்கலாம். பெண்கள் மத்தியிலும் மாற்றம் நடக்கிறது).

ஆனால் A புத்தகங்களை, A திரைப்படங்களை பார்ப்பதால் சமூகத்தில் பல்வேறு கட்டங்களில் பாதிப்புகள் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. அதுவும் குறிப்பாக வீட்டில் உள்ள பெண்கள் மீது சந்தேகம் எழுகின்றது. ஆணாதிக்க முகங்களைக் கொண்டு அவளை வீட்டுக்குள்ளே வைத்து பூட்டிவிட துடிக்கின்றார்கள். பெண் விடுதலை, பெண்களின் முன்னேற்றம் பற்றி பேசினால் அதற்கு எதிரிகளாக மாறிவிடுகின்றார்கள். வாழ்நிலை நெருக்கடி எதிராக நிற்கிறது.

ஒரு ஆண் வேலைத்தளங்களில் மிகவும் கஷ்டப்பட்டு பிரயாசைப்பட்டு வீட்டுக்கு வந்தால் அவன் மனைவியாக உள்ளவளிடம் அன்பாக பேசி, ஆறுதலாக ஒரு அரவணைப்பை பெறுவது நன்றாக இருந்த காலம் மாறிவிட்டது. பெண்ணை வெறும் உடலுறவுக்கான போகப் பொருளாகவே சிந்தனையில் நினைத்துக் கொள்ளத் தூண்டுகின்றது. இதன் விளைவு ஒரு தாய்மையான, ஆறுதலான பாரப் பகிர்வுகளை பெற முடியாமல் அங்கும் குழம்பிக் கிடக்கின்றான். அன்பான உறவுகளையே பிரித்து தனிமைப்படுத்தி சித்திரவதைக்குள்ளாக்கி வருவ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தைத்தான் பத்திரிகைகளின் செய்திகளின் வடிவங்களில் பார்க்கின்றோம்.

A படம் பார்த்துவிட்டு வெளியில் வந்தவரிடம் கேட்டேன். இந்தப் படத்தால் என்ன அய்யா பிரயோசனம்? இப்படிப் போய் கேட்டிட்டிங்க. எவ்வளவு விசயங்களைச் சொல்லுது இந்தப் படம். அதையெல்லாம் ஏன் நீங்க அப்படிப் பார்க்கறீங்க? ''ஒரு கலைக் கண்ணோட்டத்தோட பார்த்தால் ஒன்னும் தப்பில்லீங்க'' என்று முடித்துக் கொண்டு நடையைக் கட்டிவிட்டார். எனக்கோ அந்த கலைக் கண்ணோட்டம் என்பது என்னவென்று புரியாமல் கிடந்தேன். இன்னும் சிலர் மனிதர்களில் பலர் இன்னும் பாலியல் உறவு கொள்வதைப் பற்றி தெரியாமல் உள்ளனர். அவர்களுக்காகத்தான் இது எடுக்கப்படுகிறது என்று அதனை தக்க வைத்துக் கொள்ள பேசுகின்றார்கள். அப்படியானால் மிருகங்கள் எல்லாம் பாலியல் உறவு கொள்ளத் தெரியாமல் தான் குட்டிகளை ஈனுகின்றதா? என்ற கேள்வியை அவர்களிடம் கேட்கின்றேன். பாலியல் கல்வி வேறு. பாலியல் வெறியர்களை உருவாக்கும் கதையும், படமும் வேறு என்பதைப் புரிய வேண்டும்.



உணர்ச்சிப் பூர்வமான செயல்வடிவங்களை மட்டுமே இதன் மூலம் பெறக் கூடியதாகிறது. ஒரு பாலியல் உறவு பற்றிய சிந்தனை மாற்றமே சமூகத்தின் ஆரோக்கியமான மாற்றமாக மாறக் கூடியதாக உள்ளது. ஆனால் வக்கிர மனிதனை வெறும் வக்கிரமான மோக உணர்வுடன் அலைய விட்டிருப்பதைத்தான் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. அது அவனுடைய வாழ்க்கையில் பல்வேறு வடிவங்களில் தாக்கத்தைக் கொடுத்து வருகின்றது.

வேலைத் தளங்களில் குறிப்பாக கூலித் தொழிலாளிகள் மத்தியில் மூச்சுக்கு முந்நூறு தடவை கெட்ட வார்த்தைகள் பேசப்படுகின்றன. பெரும்பாலும் அந்தக் கெட்ட வார்த்தைகள் பாலியலுறுப்புகள் சம்பந்தப்பட்டதாகவே அமைந்துவிடுகின்றது. சிறிய குழந்தைத் தொழிலாளிகளிடம் அவன் / அவள் பெயர் சொல்லி பெரும்பாலும் அழைப்பதில்லை. பாலியலுறுப்புகளின் பெயர்களைச் சொல்லியே கூப்பிடுவது நடந்து வருகின்றது. அந்த மொட்டுக்கள் நாளை பெரியவர்களானால் எப்படியிருக்கும் என்று சிந்தித்துப் பார்த்தால் மிக கொடூரமானதாக இருக்கும். ''இளமையில் கல் சிலையில் எழுத்து'', ''ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?'' போன்ற பழமொழிகளின் கருத்துக்களை மறுத்து விட முடியுமா? அங்கு மட்டுமல்ல வீடுகளில் கணவன், மனைவி சண்டைகள் நடக்கிறது. பெரும்பாலும் சண்டைக்கு பயன்படுத்துகின்ற மரபுச் சொற்களைப் போல, பாலியல் உறுப்புகளைக் கொண்டே திட்டிப் பேசுகின்றனர். அதை குழந்தைகள் மனதில் கற்றுக் கொடுக்க வேண்டியதில்லை. அது பேசக்கூடிய வார்த்தைகள், ஏட்டில் எழுதக்கூடாத வார்த்தைகளாக போய் விட்டன.

இன்றைய காதல், காமம், சோகம், மோகம், கல்யாணக் கோலம் எல்லாமே இதன் மீதே முழு ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. ஆண், ஆணுடன் உடலுறவு. பெண்கள் லெஸ்பியன் முறை போன்றவைகள் இன்று சமூகத்தின் முக்கிய விவாதங்களாக அலசப்பட்டு வருகின்றது. அது ஒரு உறவுத் தேவை பற்றிய பிரச்சினை என்று கருதினாலும், மனித உணர்வுகளில் மிக மிக நுண்ணிய உணர்வோடு சம்பந்தப்பட்ட காமம் இன்று சமூகத்தின் இயக்கத்தை ஒருபுறம் குழப்பிக் கொண்டே வுருகின்றது. தனிப்பட்ட ஆண் / பெண் பிரச்சினையாக தொடங்குகின்ற இந்த நிகழ்வு அதன் தாக்கம், இழப்பு சமூகத்தின் சீரழிவுச் சிந்தனையோடு முடிந்து விடுகின்ற ஒன்றல்ல. குறிப்பாக இது பெண்கள் மீதான ஒடுக்குமுறைக்கு பெரும்பங்கு வகித்துக் கொண்டு வருகின்றது. ஆண் - பெண் உறவில், குடும்ப உறவில் சீரழிவை - சிதைவை ஊக்குவிக்கிறது.

A திரைப்படங்கள், A கதைப்படப் புத்தகங்களை ரசித்து விட்டு வெளியில் வந்தால் பார்க்கின்ற பெண்கள் அனைவரையும் அந்தக் கலைக் கண்ணோட்டத்துடன் தான் பார்க்க வேண்டியிருக்கிறது. அதே நிர்வாணம், அதே பகுதிகள் இவைகளைத்தான் கண் தேடுகின்றது. பெண்ணைப் பார்த்தவுடன் ''சூப்பர் சரக்கு'', அல்லது அது ''அயிட்ட''மாக இருக்குமோ என்ற எண்ணமும், ஒரு பெண் சமூகத்தில் மிக நன்றாக எல்லாருடனும் பழகினாலும், அன்போடு உறவு கொண்டாலும் அதைப் புரிந்து கொள்ளச் சிந்தனையை பயன்படுத்துவதில்லை. ''அவளை எப்படியாவது...'' என்று தான் பெரும்பாலான ஆண்கள் பேசிக் கொண்டிருக்கின்றார்கள். விபச்சாரிகளாக வலம் வருகின்ற பெண்களுக்கு வேண்டுமானால் இது பிரச்சனையாக இருக்காது, பெண்ணை அவள் மனதுக்குள் இருக்கும் உணர்வுகளை, பகிர்வுகளை புரிந்து கொள்ளாத சமூகம் சீரழிந்து போகும் என்பது இயற்கையான விதிதான். வெளியில் ''மாதரை இழிவு செய்வாரை வெட்டி வீழ்த்துவோம்'' என்று வீராப்பு பேசுகின்ற அதே வேளை அவளுக்கு நம்பிக்கை கொடுக்கக்கூடிய எந்த நிகழ்வுகளும் செய்வதில்லை. நம்பிக்கை, மோசடி, இழப்பு இவைகள் தான் இன்றைய பெண்களில் தேங்கி நிற்கின்றது. அநேகமான காதல் தோல்விகள் கூட இப்படித்தான் நிகழ்கின்றது. குடும்பத்தில் பிரச்

www.tamilarangam.net

சனை, சமூகத்தில் பிரச்சனை எல்லாவற்றிலும் பாதிக்கப்பட்டு நிற்பது பெண்கள் தான். பெண்கள் விழிப்புணர்வு அடைவதும், எழுச்சிப் போராட்டங்களும் ஒரு நல்ல மாற்றத்திற்கான அறிகுறிகள் தான். ஆனால் ஆண்கள் பலரை இழுத்து வைத்து A படங்களும், A சிந்தனைகளும் திணித்து வருவது எந்த வகையில் சமூகம் நியாயமாக ஒழுங்காக இயங்க முடியும்? ஒருபுறம் பெண்கள் முன்னேற்றத்தை பேசுகின்ற அதே நேரம் அதனை நசுக்கும் செயல்களையும் நிறுத்தப் பழக வேண்டும். நாட்டிற்கு புதிய புதிய கண்டுபிடிப்புகள் தேசத்தை பாதுகாப்பதற்கான பொறுப்புக்கள் நிச்சயம் ஒவ்வொரு மனிதனுக்கும் தேவையான ஒன்றாகும். ஆனால் அது போன்று எதுவும் சமுதாயத்தில் பரவ விடாமல் ஏதோ தடுத்துக் கொண்டேயிருக்கின்றது.

இன்று புலம் பெயர்ந்து அகதிகளாக அந்நிய நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற தமிழீழ அகதிகள் மத்தியில் அகதிகளின் வாழ்வியல் முறைகளில் பாலியல் கலாச்சாரம் பெரும் தாக்கத்தை செலுத்தி வருகின்றது. குடும்பமாக, உறவினர்களுடன் சொந்த தாயகத்தில் இருக்கும் போது குடும்ப கட்டுமானங்களூடாக கட்டுப்படுத்தப்பட்ட பாலியல் உணர்வுகள் அகதிகளான தேசத்தில் அவை கட்டுமீறிப்போய் அதன் சீரழிவுக் கலாச்சாரத்துள் மாட்டிக் கொள்கின்றனர்.

தமிழகத்தின் முகாம்களில் A கதைப் புத்தகங்களின் ஆதிக்கம் அதிகமாக உள்ளது. இதனால் குடும்பத்தில் சிக்கல்களும், பிரச்சனைகளும் பூதாகரமாக எழுந்துள்ளதுடன் வெட்டு, குத்து என்று கொலைகள் வரை நடந்து வருகின்றது. காவல் துறை பதிவேடுகளில் 50 சதவீதம் பதிவு விசாரணைகளில் கணவன் - மனைவி - கள்ளத் தொடர்பு ஆகியவைகளே உள்ளன. மேலும் இளம் வயதினர் தங்கள் பாலியல் உணர்வுகளைக் கட்டுப்படுத்த, நெறிப்படுத்த வழிவகையில்லாததால், இளவயது திருமணம் புற்றீசலைப் போல் நடந்து கொண்டிருக்கின்றது. வாழ்க்கை, அதன் கசப்புணர்வுகள் ஒரு பயங்கரமான, தற்கொலை செய்து கொள்ளக்கூடிய அளவுக்கு முடிவுகள் நிகழ்கின்றன. திருமணமாகமலேயே கர்பிணிகளாய் மாறி நிற்கின்ற பெண்கள், திருமணம் செய்ய மறுக்கின்ற ஆண்கள் இதனால் வாழ்வே சூனியமாய் பெற்று விட்ட நிலையில் அநேக பெண்கள் முகாம்களுக்குள் வாழ்வைத் தொலைத்து தொடர்ந்த வண்ணமுள்ளார்கள். இதற்கு முகாம்களின் வீட்டு அமைப்புகளும் காரணங்களாக உள்ளன. பெண்கள் மலசலம் கழிக்கப் போகின்ற இடங்களில் (முட்புதர்கள், பற்றைகள்தான் தமிழகத்தில் பெரும்பாலான அகதி முகாம்களின் மலசலக் கூடங்கள்) ஆண்களின் தொல்லைகளை நாளுக்கு நாள் சந்தித்த வண்ணமுள்ளார்கள்.

தாங்கள் படித்த A புத்தகங்களில் படங்களில் கூறப்பட்ட பெண்களாகத்தான் எல்லாப் பெண்களும் சமூகத்தில் இருப்பார்கள் என்று எண்ணிக் கொண்டே அதன்படி தன் பாலியல் உணர்வுகளை நடைமுறைப்படுத்த முயற்சித்து அதனால் தோல்வியடைந்து, மானமிழந்து போகின்ற இளைஞர்கள், யுவதிகள் ஒரு கட்டத்தில் மனநோயாளிகளாக மாறி ஆண்களின் உள்ளாடைகளை பெண்களும், பெண்களின் உள்ளாடைகளை ஆண்களும் திருடுவதும், ஒழிப்பதுமாக அதன் வெளிப்பாடுகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. அது மட்டுமின்றி பத்திரிகைகளில் வருகின்ற பெண்களின் கவர்ச்சிப் படங்களை வெட்டி எடுத்துக் கொண்டு முட்புதர்கள் பக்கம் ஓடுவதும் அவனை/அவளை துரத்திப் பிடித்து கொண்டு வருவதும் நடக்கிறது. இப்படிப் பாதிக்கப்பட்டு நிற்பவர்கள் பெரும்பாலும் 16 வயதுக் குட்பட்ட இளைஞர்களும், யுவதிகளுமாவார். இந்தத் தாக்கம் வெறுமனே முகாம்களுக்குள்ளே முடிந்து விடுவதல்ல. சமூகத்தில் **"அகதிப் பெண்கள் மீது விபச்சாரப் பட்டங்கள்"**. இலகுவாக போட்டு விடுகின்றனர். வேலைத் தளங்களில் அகதிப் பெண்ணென்றால் அப்படித்தான் இருப்பார்கள் என்ற எண்ணத்தில் கைபோட்டு வசமாக அடிவாங்கிக் கொண்ட கதைகளும் நிறையவே நடந்துள்ளன.

இதேபோன்று வெளிநாடுகளில் வாழ்கின்ற அகதிக்குடும்பங்களிலும் இதன் தாக்கம் பெரிது பண்ணப்பட்டு வருகின்றது. அங்கு பார்க்கின்ற வீடியோ படங்கள் A பேச்சுக்கள் அது சார்ந்ததாகவேயுள்ளன. இதேமாதிரி குடும்ப உறவுகளில் பிரச்சனைகள் பூதாகரமாக எழுந்து அடி, உதை, சிறை என ஒரு இயல்பான வேகத்துடன் நடந்து முடிந்து விடுகின்றது. ஈழத்திலிருந்து செல்கின்ற பெண்கள் மீதான பாலியல் கொடுமை பிரயாண ஏற்பாட்டு முகவர்களில் தொடங்கி கணவன் வரை செல்கிறது.

கணவன், மனைவி, காதல், இளவயது உணர்ச்சி மாற்றம் என பாலியல் கொடுமை தாக்கம் செலுத்தாத பகுதிகளே இல்லை எனும் அளவுக்கு போக்குகள் அமைந்து விட்டன. இதன் எதிர்காலத் தாக்கம் எவ்வளவு பயங்கரத் தோற்றத்துடன் இருக்கப் போகின்றது என்பதைப் புரிந்து கொண்டு இதன் மீது அக்கறையுள்ளவர்கள் இதற்கெதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்வது சமூகக் கடமையின் அம்சமாகும். அகதி முகாம்களிலுள்ள இளைஞர்கள் யுவதிகள் மத்தியில் விழிப்புணர்வு இயக்கத்தை தொட்ங்க வேண்டியது அவ்வவ் முகாம்களிலுள்ள மக்கள் நலனில் அக்கறையுள்ளவர்களின் கடமையாகும். அதை எல்லா முகாம்களுக்கும், சமூகத்துக்கும் விரிவுபடுத்தி செயற்படுவோம்.

— சதீஸ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அய்ரோப்பிய பயணத்தால் அல்லலுறும் தமிழ் மக்கள்

## — சுவிஸிலிருந்து ராஜலிங்கம் —

ஏறக்குறைய ஐந்து இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் அய்ரோப்பிய நாடுகளில் தங்கியுள்ளார்கள். இவர்களைத் தவிர்த்து நூறுக்கு குறையாதோர் நாளாந்தம் வந்து கொண்டிருக்கிறார்கள். மாஸ்கோ, உக்ரைன், போலந்து, கம்போடியா, சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, இந்தியா உட்பட பல்வேறு நாடுகளில் பல நூறு பேர் வரையில் தமது பயணத்தின் பாதி வழியில் தரித்து நிற்கின்றார்கள். கொழும்பு விடுதிகளிலும், உறவினர் வீடுகளிலும் மேலும் நூற்றுக் கணக்கானோர் தமது விமானப் பயணத்தை எதிர்பார்த்த நிலையில் உள்ளார்கள். அய்ரோப்பிய நாடுகளுக்கு சென்று விடும் நோக்கத்துடன் இன்னும் பலநூறு வடக்கு கிழக்கு பிரதேசங்களில் முயன்று கொண்டிருக்கிறார்கள். எப்படியாவது அய்ரோப்பிய நாடொன்றுக்கு சென்று விட வேண்டும் என்ற எண்ண அலைகளுடன் பலர் யுத்த பூமியான வடக்கு - கிழக்கில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு அய்ரோப்பிய நாடுகளுக்கு பயணம் மேற்கொள்பவர்களின் எண்ணங்கள் வெவ்வேறாக இருப்பினும் கூட இந்தப் பயணத்துக்கான காரணம் ஒன்றாகவே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு - கிழக்கில் இடம் பெற்று வரும் தொடர் யுத்தம், தொழில் வாய்ப்பின்மை, உணவுப் பஞ்சம், அன்றாடம் நடக்கும் ராணுவ கெடுபிடிகள், உயிருக்கு உத்திரவாதமற்ற நிலைமை. இப்படி பல அம்சங்கள் வடக்கு - கிழக்கு மக்கள் அய்ரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்கு முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன.

அய்ரோப்பிய நாடுகளுக்கு சென்றுவிட்டால் உயிர் பாதுகாப்பு மட்டுமின்றி பொருளாதார ரீதியாகவும் முன்னுக்கு வந்து விடலாம் என்ற எண்ணங்களுடனேயே தமிழ் மக்கள் இந்தப் பயணத்தை மேற்கொள்கின்றார்கள்.

பல சிரமங்களுக்கு மத்தியில் கொழும்பை வந்தடையும் இவர்கள் விடுதிகளிலோ, உறவினர் வீடுகளிலோ தங்கியுள்ளார்கள். ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபாடற்றவர்களாக இவர்கள் இருப்பினும் கூட தமிழர் என்ற ஒரே காரணத்தால் இராணுவ, பொலிஸ் அச்சுறுத்தல்களுக்கும், கெடுபிடிகளுக்கும் நாளாந்தம் உள்ளாக்கப்படுவது கவலைக்குரியது.

இவ்வாறான கெடுபிடிகளுக்கு மத்தியிலும் வெளிநாட்டு பயண முகவர்களுடன் நேரடியாகவோ, வெளிநாடுகளில் வாழும் தமது உறவினர்கள் மூலமாகவோ தொடர்பு கொள்கின்றார்கள்.

அய்ரோப்பிய நாடுகளுக்கான பயணச் செலவாக ஐந்து இலட்சம் ரூபாய் வரை பெறப்படுகின்றது. கனடா பயணமெனில் இது இரண்டு மடங்காக பெறப்படுகின்றது. பத்து இலட்சம்.

ஒரு நபரை பொறுப்பேற்கும் பயண முகவர் ஒரு வாரம் அல்லது இரண்டு வாரத்தில் குறிப்பிட்ட அய்ரோப்பிய நாட்டுக்கு அனுப்பி வைப்பதாக வாக்குறுதி அளித்தே பொறுப்பேற்கின்றார். அத்துடன் பயணப் பணத்தில் பாதித் தொகை முற்பணமாகவும் பெறப்படுகின்றது. பணத்தை எண்ணிக் கொடுத்தவர்கள் பயண தவணைக் காலம் காற்றோடு காற்றாக போன நிலையில் மாதக் கணக்கில் காத்துக் கிடப்பதும், கொடுக்கப்பட்ட பணம் பயண முகவர்களால் ஏப்பமிடப்பட்ட நிலையில் வேதனையில் ஏங்கிக் கிடப்பதும் சர்வ சாதாரணம்.

ஏதோ ஒரு வகையில் விமானம் ஏற்றப்படுபவர்களில் சிலரைத் தவிர, பொரும்பாலானோர் மாஸ்கோ, உக்ரைன், போலந்து, சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, கம்போடியா, இந்தியா ஆகிய ஏதாவது ஒரு மாற்று நாட்டில் இறக்கி விடப்படுகின்றார்கள்.

மாற்று நாடொன்றுக்கு கொண்டு செல்லப்படுபவர்கள் விடுதிகளிலோ, வீடுகளிலோ தங்க வைக்கப்படுகின்றார்கள். எண்ணிக்கைக்கு அதிகமானோரை ஒரே அறையில் தங்க வைப்பதுடன்; ஆண்கள் தங்கும் அறையிலேயே பெண்களையும் தங்க வைக்கும் பொறுப்பற்ற நிகழ்வுகளும் நடப்பதாக சம்பவத்துக்கு உள்ளானோர் கூறுவதை கேட்கக் கூடியதாக உள்ளது. சில பயண முகவர்கள் பயணப் பெண்களை பாலியல் ரீதியான செயல்களுக்கும் உட்படுத்துவதெல்லாம் காதில் விழுந்தவை உண்மை.

நான் ஒல்லாந்து நாட்டில் இருந்த வேளை அந்நாட்டு தலைவநகர் ஆம்ஸ்ட்டாம் நகரில் ஒரு நாள் ஒரு நபர் ஒரு பெண்ணின் தோளில் கையை கோர்த்த வண்ணம் மிகவும் ஜாலியாக வந்து கொண்டிருந்தார். நடுத்தர வயதான அந்த நபர் எனக்கு மிகவும் பரிச்சயமானவர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அவர் சென்னையில் வெளிநாட்டு முகவராக இருப்பவர். மது, மாது என்று பலவகை தீயப் பழக்கங்களும் கொண்டவர் என்பதுடன்; இவைகளால் அழிந்தவரும் கூட.

மாதங்கள் பல கடந்த பின்பு சுவிட்சர்லாந்து பேர்ண் நகரில் ஒரு நாள் அந்தப் பெண்ணை நான் காண நேர்ந்தது. அந்தப் பெண்ணுடன் வேறோர் இளைஞர். என்னைக் கண்டதும் அந்தப் பெண்ணின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முகத்தில் அசடு வழிந்ததை காணக் கூடியாக இருந்தது. அந்த இளைஞர் அந்தப் பெண்ணின் கணவன். அந்த இளைஞரை திருமணம் செய்வதற்காகவே அந்தப் பெண் ஒல்லாந்து நாட்டுக் கூடாக சுவிட்சர்லாந்து வந்தவர். அந்தப் பெண்ணை அழைத்து வந்த பயண முகவர்தான் ஒல்லாந்து நாட்டில் சந்தித்த அந்த நடுத்தர வயது நபர் என்பது குறிப்பிடத்தக்கது.

பயணத்தின் பாதி வழியில் மாற்று நாடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்கள் மாதக் கணக்காக மட்டுமல்லாது வருடக் கணக்காக கூட தமது பயணம் முழுமையாகச் சாத்தியப்படாத நிலையில் விரக்தியின் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். மாஸ்கோ போன்ற பெரும் நகரில் பல தமிழ் இளைஞர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகி, பெண்களுடன் தகாத உறவை கொண்டவர்களாக மாற்றமடைந்தள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. அத்துடன் மாற்று நாடுகளில் தங்குவதற்கான விசா இல்லாத நிலையில் அந்நாடுகளின் காவல் துறையினரால் பலகெடுபிடிகளுக்கு உள்ளாக்கப்படுவதும், சிறையில் அடைக்கப்படுவதும் அன்றாடம் நிகழும் நிகழ்வுகளாக அமைந்துள்ளன.

ஒரு நபரை பொறுப்பேற்கும் பொழுது குறிப்பிட்ட நாட்டில், குறிப்பிட்ட தவணையில் கொண்டு சேர்ப்பதாகவே பயண முகவர்களால் வாக்குறுதி அளிக்கப்படுகின்றது. இருப்பினும் பயண முகவர்களால் மாற்றுநாடுகளில் தங்க வைக்கப்படுபவர்களை பாதுகாப்பற்ற நடைப்பயணம், பாதுகாப்பற்ற வாகனப் பயணங்கள் மேற்கொள்ளச் செய்வதால் ஏற்பட்டுள்ள உயிர்ப் பலிகள் பலரும் அறிந்ததே.

மட்டுவிலைச் சேர்ந்த ஒரு பெண் வயது ஐம்பதுக்கு மேல், ஜெனிவாவிலுள்ள தனது மகளிடம் போய் சேர்வதற்காக பயண முகவரால் கொழும்பில் விமானம் ஏற்றப்பட்டார். இப்பெண் மாஸ்கோவில் இறக்கப்பட்டதுடன்; பாதுகாப்பான உடை, சப்பாத்து என்பன அற்ற நிலையில் எல்லையை கடப்பதற்காக பனிப்பாறைகளுக் கூடாக கால் நடையாக கூட்டிச் செல்லப்பட்டார். பனியின் தாக்கத்துக்கு உள்ளான அப்பெண் பனிப்பாறையின் மீதே துடி துடித்து இறந்து போன மனதை உருக்கும் வேதனை சம்பவம் அண்மையில் நடந்தொன்றாகும். இப்படி எத்தனை, எத்தனை மரணங்கள். மரணத்துக்கு பயந்து சொந்த மண்ணை விட்டு வந்தவர்கள். இப்படி மரணத்துக்கு உள்ளாவது பயண முகவர்களின் பொறுப்பற்ற தன்மைகளே அன்றி வேறு எதுவாக இருக்க முடியும்?

இவ்வாறான பல தடைகளிலிருந்து விடுபட்டு ஏதோ ஒரு வகையில் ஒரு அய்ரோப்பிய நாட்டுக்குள் காலடி எடுத்து வைக்கின்றார்கள். இப்படி வந்தவர்கள் அந்நாட்டு அரசாங்கத்தால் கடுமையான விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றார்கள்.

அய்ரோப்பிய நாடுகளைப் பொறுத்தமட்டில் வெளிநாட்டார் வருகை பெரும் பிரச்சினையாக பார்க்கப்படுகின்றது. அகதிகளாக வருபவர்களை தங்க வைப்பதிலும் பார்க்க அவர்களை திருப்பி அனுப்பி வைப்பதிலேயே முக்கிய கவனம் செலுத்தப்படுகின்றது. இதற்கு அய்ரோப்பிய நாடுகளில் தங்கியுள்ள வெளிநாட்டவர்களின் பல செயல்பாடுகள் காரணங்களாக அமைந்துள்ளன.

விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் பலரின் அகதி அந்தஸ்துக்கான கோரிக்கை நிராகரிக்கப்படுவதுடன், ஒரு அய்ரோப்பிய நாட்டில் அகதி அந்தஸ்து கோரியவர் இன்னொரு அய்ரோப்பிய நாட்டில் அகதி அந்தஸ்து கோர முடியாத நிலைமையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுவிட்சர்லாந்து தவிர ஏனைய அய்ரோப்பிய நாடுகளான ஒல்லாந்து, டென்மார்க்க, நோர்வே, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகள் அய்ரோப்பிய கூட்டமைப்பு என்ற கூட்டுக்குள் அடங்குபவைகளாகும். இந்நாடுகளில் ஏதாவது ஒன்றில் அகதி அந்தஸ்து கோருபரின் பெயர்கள் மட்டுமின்றி அவர்கள் கைரேகை அடையாளங்களும் கம்பியூட்டர் மூலம் பதிவு செய்யப்படுகின்றன. இந்நிலையில் இவைகளில் ஏதாவது ஒரு நாட்டில் அகதி அந்தஸ்து கோரி தமது பெயர் கைரேகை அடையாளங்கள் பதிவு செய்யப்பட்டவர்கள் தமக்கு அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட நிலையிலும் கூட்டமைப்பில் உள்ள மற்றொரு நாட்டுக்கு சென்று அகதி அந்தஸ்து கோர முடியாது. அப்படி அவர்கள் கோரும் பட்சத்தில் கம்பியூட்டர் மூலம் அவர்களின் தகவல்கள் பெறப்பட்டு முன்னைய நாட்டிற்கே திருப்பி அனுப்பி வைக்கப்படுகின்றார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு தங்குமிட வசதி, சாப்பாடு, கைச் செலவுக்கு சிறிய ளவு பணம் என்பன கொடுக்கப்படுகிறது. இவர்கள் எந்த நேரத்திலும் மீண்டும் இலங்கைக்கே திருப்பி அனுப்பப்படலாம் என்ற நிலைமையே நிலவுகின்றது.

இவைகளிலிருந்து விடுபட்டு அகதி அந்தஸ்து ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள் தமது நாட்டில் தங்குவதற்கு அனுமதி அளிக்கப்படுகின்றது. இவர்களுக்கு தங்குமிட வசதி, சாப்பாட்டுக்கான பணம் என்பன வழங்கப்படுகின்றது.

கட்டுரையின் ஆரம்பத்தில் அய்ரோப்பிய நாடுகளுக்கு வருவதற்கான காரணம் ஒன்றாக இருப்பினும் கூட நோக்கங்கள் வெவ்வேறானவை என்று குறிப்பிட்டிருந்தேன். பெருந்தொகையான பணத்தை உழைத்து சுகமான வாழ்வு வாழலாம் என்பதே அதுவாகும்.

பல இலட்சம் பேர் வேலை இல்லாதோர் பட்டியலில் இன்று அய்ரோப்பிய நாடுகளில் உள்ளார்கள். அத்துடன் புதிதாக வருபவர்களுக்கு தொழில் செய்வதற்கான அனுமதியும் மறுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் வருவதற்குப் பெறப்பட்ட கடன் ஊரில் வட்டியாய் பெருகும் நிலையில், சொந்தப் பணமெனில் அதனை மீளப் பெற முடியாத நிலையில் வருடக் கணக்காக முகாம்களில் முடங்கிப் போய்க் கிடப்பவர்களும், விரக்தியால் போதைப் பொருள்களுக்கு அடிமையானவர்களும் அய்ரோப்பிய பயணத்தின் இறுதி அத்தியாயமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

நன்றி

- சுவிஸ் இராஜலிங்கம் -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திம்புவில் ஒரு இராணுவக் கூட்டு நடவடிக்கை ஆலோசனை



ULFA செயலர் அனுப் சேத்தியா, சட்ட விரோதமாக வங்காளதேசில் தங்கியதாக சேக்கசீனா அரசால் கைது செய்யப்பட்டு டாக்கா மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்தியரசு தன்னிடம் கைய ளிக்க கோரியுள்ளது. மணிப்பூர் இயக்க தலைவர்களில் ஒருவரான KYKL ஒகன்சிங்கும் கைது செய்யப்பட்டுள் ளார்.

இந்தியா ஒரு பல தேசிய இனங்களை உள்ளடக் கிய நாடு. சில தேசிய இனங்கள் தங்களின் சமூக பொருளாதார உரிமைகளுக்காகவும் அரசியல், பண் பாட்டு, பிரதேச தனித்துவ உரிமைகளுக்காகவும் போராடிக் கொண்டிருக்கின்றன. ஜார்க்ண்ட், சதீஸ் காட், கூர்க்லாந்து, போடோலாந்து, நாகலாந்து, மிசோரம், திரிபுரா, அசாம், மணிப்பூர் என வடகிழக் கிலும் பஞ்சாப், காஷ்மீர், என வடக்கிலும் தமிழ்நாடு கர்நாடகம், தெலுங்கானா என ஏனைய பகுதிகளிலும் தேசிய இன உரிமைக்கான போராட்டங்கள் சிறிதும் - பெரிதுமாக நடந்து வருகின்றன.

இப்போராட்டங்களில் பல மிக பிரபல்யமானது தாகவும் ஆயுதம் ஏந்திய போராட்டங்களாகவும் வட கிழக்கு போராட்டங்கள் உலகளவில் தெரிகின்றன. இந்தியரசு, நாகலாந்து, போடோலாந்தில் ஆயுத குழுக்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி கொண்டிருக் கின்றது. யுத்த நிறுத்தமும் செய்யப்பட்டுள்ளது. நாகலாந்தில் (NUC) நாகலாந்து அயக்கிய கவுன்சில், நாகலாந்து சோசலிச தேசிய கவுன்சில் (NSCN) இது இரண்டு பிரிவாக உள்ளது. NSCN (I.M.) இசாக் - மூவியா என்ற தலைவர்களாலும் NSCN (K) கப்லாந் என்ற தலைவரின் கீழும் உள்ளன. NSCN (IM) அமைப்புடன் இந்தியரசு யுத்த நிறுத்த ஒப்நத்தமும் பேச்சு வார்த்தையும் நடத்திக் கொண்டிருக்கின்றது. அசாமில் உள்ள போடோ இயக்கங்கள் சிலவற்றை யும் பேச்சு வார்த்தை நடத்த இந்தியரசு அழைத்துள் ளது. புதிய BJP தலைமையிலான இந்தியரசு வடகி ழக்கு மாநிலங்களில் உள்ள இயக்கங்களுடன் நிபந் தனை அந்த பேச்சு வார்த்தை நடத்த அழைப்பு விட்டுள்ளது. அசாமில் அசாம் அய்க்கிய விடுதலை முன்னணி (ULFA) போடோ மக்கள் மத்தியில் போடோலாந்து புலிப்படை, போடோலாந்து தேசிய விடுதலை முன்னணி (BNLF), போடோ தேசிய சனநாயக முன்னணி (BNDF), மணிப்பூரில் மணிப்பூர் தேசிய விடுதலை முன்னணி (MNLF) மணிப்பூர் மாணவர் அமைப்பு, திரிபுராவில் அனைத்து திரிபுரா சனநாயக முன்னணி (ATDF) அனைத்து திரிபுரா விடுதலைப் புலிப்படை (ATTF) திரிபுரா தேசிய விடுதலை முன்னணி (NLFT) போன்ற அமைப்புகள் உள்ளன.

இத்தேசிய விடுதலை இயக்கங்கள் தம் சொந்த மாநிலங்களிலும் அன்டை மாநிலங்களிலும், அண்டை நாடுகளிலும் இயங்குகின்றன. தமிழீழ விடுதலை இயக்கங்களுக்கு இந்தியரசு எல்லா வகை யிலும் உதவியது போலவும், இயக்கங்கள் பின் தளமாக இயங்கியது போல் காஸ்மீர், பஞ்சாப், இயக்கங்கள் பாக்கிஸ்தானிலும் வடகிழக்கு மாநில இயக்கங்கள் பர்மா, வங்களாதேஷ், பூட்டானிலும் பின் தளமாக இயங்கி வருகின்றன. அவ்வரசுகளும் அனுமதித்து வந்துள்ளன. வடகிழக்கு தேசிய விடு தலை இயக்கங்களின் ஆயுதப் போராட்ட நடவடிக் கைகள் மாநிலங்களில் பலம் பெற்றுள்ள தால் இந்தியர சும் பாதுகாப்புப் படைகளும் போராளி இயக்கங்களு டன் கடுமையான சண்டைகளை நடத்திக் கொண்டி ருக்கின்றது.

அசாம், திரிபுரா, நாகாலாந்து, மணிப்பூர் மாநி லங்களின் சிவில் சமூக நிறுவனங்களின் கட்டுப்பாடு போராளி இயக்கங்களின் கைகளுக்கு மாறிக் கொண்டி ருக்கின்றது. இந்தியரசு தனது தரைப் படைகளின் 2/3 பகுதியினரை இந்தியா முழுவதும் நடக்கும் தேசிய இன விடுதலைப் போராட்ட பகுதிகளில் பயன்படுத்த வேண்டிய நிலையில் உள்ளது. அசாமில் மட்டும் 42 கோடி ரூபாய் கடந்த 20 மாதங்களில் செலவழிக்கப்பட்டுள்ளது. போலீசு, எல்லைப் பாது காப்பு படைக்கு நவீன ஆயுதம், தொலைத் தொடர்பு சாதனம், போக்குவரத்து வாகன வசதிகளை கூட்ட வேண்டியுள்ளது என்கிறது இராணுவத்துறை. ULFA இயக்கத்தினரை தேடி அழிக்க இராணுவம், கனரக பீரங்கி செல்தாக்குதல், துப்பாக்கி பொருத்திய உலங்கு வானூர்திகளையும் (Helihopters) பயன்படுத்தி வருகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வங்களா தேசில் 'அவாமிலீக்' அரசு இந்திய அரசுடனான நல்லுறவைப் பேணத் தொடங்கிய பின் வங்காளத்தில் இருந்த வட கிழக்கு மாநில இயக்கங்க ளின் முகாம்கள் மீது இராணுவ நடவடிக்கை எடுத்து வருகிறது. பூட்டான் எல்லையில் ULFA, BNLF, BNDF இயக்கங்களின் இராணுவ முகாம்கள் உள்ளன. அவற்றை வெளியேற்றும் படியும் அல்லது பூட்டான் இராணுவத்துடன் இந்திய இராணுவம் கூட்டு இரா ணுவ நடவடிக்கைகளை நடத்தி அழிக்கவும் 'திம்பு வில்' பூட்டான் அதிகாரிகளுடன் இந்தியரசு பேச்சு வார்த்தை நடத்தியுள்ளது.

அதே வேளை NSCN (K) இயக்கம் வடகிழக்கு மாநிலங்களில் உள்ள 6 தேசிய இன விடுதலை இயக்கங்களை ஒன்று கூட்டியுள்ளது. ஒவ்வொரு இயக்கங்களும் பரஸ்பரம் மற்றவர்களுக்கு உதவுவது என்ற அடிப்படையில் 6 இயக்கங்களின் கூட்டு முன்னணியை (IBRF) என்ற பெயரில் உருவாக்கி உள்ளனர்.

திம்புப் பேச்சு வார்த்தை தமிழீழப் போராட்டத் தில் ஒரு திருப்புமுனை. திம்பு இராணுவ நடவ டிக்கை - வடகிழக்கின் தேசிய விடுதலைப் போராட் டத்தில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்துமா? - மரியா

# வட அயர்லாந்து ஒப்பந்தம் தமிழீழத்துக்கு முன் உதாரணமா?

அயர்லாந்து (அயரிஸ் - தேசிய இனம்) பிரிட்ட னில் இருந்து பிரிந்து தனியரசு அமைப்பதற்கான போராட்டம் நடத்தி வந்ததை நாம் எல்லோரும் அறிவோம். தமிழீழத் தேசிய இனம் இலங்கையில் பிரிந்து செல்வதா? வேண்டாமா? என்ற தர்க்கங்கள் நடந்தபோது இங்கிலாந்தில் இருந்து அயர்லாந்து பிரிவதை கா. மார்க்ஸ் முன்னர் ஏற்கவில்லை. பின்னர் ஏற்றார் என்றும், முதலாளித்துவ கட்டமைப்பிலேயே ஒரு தேசிய இனம் அமைதியாக பிரிந்து செல்ல முடியும் என்பது சுவிடனில் இருந்த நோர்வே பிரிந்ததையும் உ+ம் காட்டி தமிழீழ இயக்கத் தலை மைகள் பேசியது நன்றாகத் தெரியும். இவ்வாறு தேசிய இனப் பிரச்சனையை குறிப்பிட்ட தேசிய இனத்தின் வரலாற்று ரீதியிலான வளர்ச்சியை, போராட்டத்தை, காலம், நாடு, குறிப்பான சூழ்நி லைமை இவ்றைக் கணக்கில் கொண்டு ஆராய்வதற் கும், அணுகுவதற்கும் பொதுக் கோட்பாடுகளை பிரயோகிக்கப்பதற்குப் பதிலாக சூத்திரங்களில் மட் டும் தொங்கிக் கொண்டு ஏன் "தனித்தமிழீழம்," "அய்க்கிய இலங்கை" என தர்க்கத்தினையும், தர்க்கித் துக் கொண்டிருப்பதையும் காண முடியும். எமது நாட்டின் சூழ்நிலைகள் சர்வதேச சூழ்நிலைகள், தேசிய இன விடுதலைக்கான சமுதாயமாற்ற வர்க்க வழிமுறை இவற்றின் மூலமாக தமது முடிவுகளை நிறுவுவதற்குப் பதிலாக, வரலாற்று ரீதியான சில எடுகோள்களை கொண்டு மட்டும் தீர்ப்பை எழுதிய தவறுகளைப் புரிந்தாக வேண்டும்.

1994-இல் ஒரு போர் நிறுத்தத்தையும், பின்னர் 1997-இல் இருந்து IRA செய்த போர் நிறுத்தத்தை தொடர்ந்து இன்று அயர்லாந்து (பெரிய வெள்ளி) ஒப்பந்தம் நடந்திருப்பதைச் சுட்டிக்காட்டி தமிழீழப் பிரச்சனையும் அப்படித் தீர்க்கப்பட வேண்டும் என பலர் குரல் எழுப்புகின்றனர். சிறீலங்கா அரசும், சில தமிழ் இயக்கங்களும் கூட அயர்லாந்து ஒப்பந்தம் நடந்திருப்பதை முன்னுதாரணமாக காட்டுகின்றன. ஏப்ரல் 10-ல் நடத்த பெல்பாஸ்ட் ஒப்பந்தம் May 22-இல் கருத்துக் கணிப்புடன் June-இல் இருந்து பிரிட்டன் கட்டுப்பாட்டுக்குட்பட்ட முறையில் "வட அயர்லாந்து மாகாணச் சட்டமன்றம்" தனியாக இயங்க வுள்ளது. அயர்லாந்து விடுதலைப் போராட்டத்தின் முக்கிய இயக்கமான IRAயும், அரசியல் அங்கமான "சின்பெயின்" மற்றும் 8 கட்சிகள் இதில் கையெழுத் திட்டுள்ளன. 30 ஆண்டுகாலப் போராட்டத்தில் 3600 மக்களை இழந்த அய்க்கிய அயர்லாந்து போராட்டம் கத்தோலிக்க மதத்தவர்களும், புரட்டஸ்தாந்து மதத்த வர்களும் மோதிக் கொண்ட கட்டத்தூடாக வளர்ந்த போராட்டம் இன்று வட அயர்லாந்துக்கு மட்டும் ஒரு மாகாண சட்டமன்றம் என்ற ஒப்பந்தத்தில் வந்து நிற்கிறது. IRA இயக்கத்தின் பெரும்பான்மை இவ் ஒப்பந்தத்தை அங்கீகரித்துள்ள போதும் ஒப்பந்தத்தை IRAஇன் முக்கிய தலைவர்களில் ஒருவரும் அவர் தலைமையிலான குழுவும் நிகாகரித்துள்ளதை கவனத் தில் கொள்ள வேண்டும். "அய்க்கியம் விளைவோர்கட் சி" ஒப்பந்தத்தை ஏனோதானோ என்ற முறையில் நிகாகரித்தபோதும், வட அயர்லாந்திலுள்ள அய்க்கி யம் விளைவோர் கட்சியின் தலைவர்களால் வட அயர்லாந்திலுள்ள புரட்டஸ்தாந்து மதக்காரர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். சின்பெயினின் தலைவரான 'ஜெரிஅடம்ஸ்'' தற்போது வட அயர்லாந்துக்கான சட்டமன்றத்தையும், ஒப்பந்தத்தையும் ஏற்றுள்ளோம் இது ஒரு படிகல், நமது இறுதி இலக்கு அய்க்கிய அயர்லாந்தே'' என்கிறார்.

பாலஸ்தீன மக்களின் 50 ஆண்டு போராட்டம் 1993 May ஒஸ்லோ ஒப்பந்தத்தின் வாயிலாக ஒரு கட்டத்தை அடைந்தது. ஒப்பந்தப்படி 1999 May யுடன் பாலஸ்தீனம் ஒரு அரசாக அறிவிக்கப்படும் என்கி றார். PLO தலைவர் ''யாசர் அரபாத்'' மேற்குக் கரை, காசாவில் இருந்து இஸ்ரேலியப் படைகள் பின்வாங் குவது பற்றிய பிரச்சனை பூதாகரமாக வெடித்துள்ளது. மே மாதத்தில் அமெரிக்க அதிபர் முன்யாசர் அரபாத் தும், நெதன்யாகுவும் சந்திக்க இருந்த உயர்நிலைச் சந்திப்பும், மேற்கு ஆசியாவின் அமைதி தொடர்பாக இருவரும் கைச்சாத்திட இருந்த ஒப்பந்தமும் - இஸ்ரேலின் நிகாரிப்பில் காலவரையறையின்றி தள் ளிப்போடப்பட்டுள்ளது. அமெரிக்காவின் முதல் பெண்மணி ''கில்லாரி கிளிண்டன்'' பாலஸ்தீனம் ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்கிறார். ஆப்கானின் பெரிய ஞாயிறு ஒப்பந்தப் பேச்சுக்கள் தோற்று யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. வங்களா தேஷ்ல 25 ஆண்டுகள் நடந்த சிட்டகாங் போராட்டம் சாந்திவாகினியுடன் நடந்த 97 மார்கழி ஒப்பந்தத்துடன் ஒரு கட்டத்தை அடைந்தது. இன்று ஒப்பந்தத்தை எதிர்த்து BNP கட்சியும், பேகம் கலிதாவும் நீண்ட பயணக் கிளர்ச்சி நடத்துகிறார்கள்.

தென்னாபிரிக்கா, அங்கோலா, எரித்திரியா ஒப்பந்தங்களுக்கு என்ன நடத்து கொண்டிருக்கிறது? ஒடுக்கும் தேசிய இனவெறி அரசுகளும் வல்லரசுகளும் கையாளும் தந்திரம் முதலில் தேசிய இனவிடுதலை இயக்கங்களை நசுக்குவது. போராடும் தேசிய இனங்களுக்குள் உள்ள மத, இன, பிரதேச வேறுபாடுகளை ஊக்குவிப்பதும் இத்தன்மை கொண்ட இயக்கங்களை பயன்படுத்தி மோத விடுவதும், குறிப்பிட்ட கட்டத்துக்கப்பால் யுத்தத்தின் மூலம் மக்களுக்குள் ஏற்படும் மன உளச்சல்களை, அழிவுகளை, அவநம்பிக்கைகளை காட்டி, அய்.நா. சபை மற்றும் துணை நிறுவனங்களின், அகதிகள் அமைப்பு, மனித வுரிமை அமைப்பு, குழந்தை நல அமைப்பு, சுகாதார அமைப்புகள் மூலம் அமைதிக்கான பிரச்சாரத்தை முன் தள்ளுவதும்; இன ஒடுக்குமுறை அரசு தனது ஒடுக்குமுறை யுத்தத்தை தொடர்ந்து "பயங்கரவாதிகள்" மேல் நடத்துவதாகக் கூறி போராளிகளை நசுக்குகிறது. அரசியல் தீர்வு எனக் கூறி இன ஒடுக்குமுறையின் சில வடிவங்களை தடுக்கும் வகையிலும், நிலவும் முதலாளித்துவ சுரண்டல் அமைப்பு முறையை கட்டிக் காக்கக் கூடிய விதத்தில் அதிகாரப் பரவல் வடிவங்களை ஏற்படுத்துகின்றது. அந்த வகையில் ஒரு அரசியல் தீர்வுத் திட்டத்தை முன் வைக்கின்ற நாடகத்தை அரங்கேற்றும். இன ஒடுக்குமுறை அரசுகள் ஒரு கையில் அரசியல் மோசடித் தீர்வையும், மறுகையில் யுத்தத்தை வைத்துக் கொண்டே தேசிய இன ஒடுக்குமுறை யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கும்.

குறிப்பிட்ட நாட்டின் உள்நாட்டு நிலமை, பிராந்திய நிலமை, சர்வதேச நிலமை இவற்றைப் பொறுத்து தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும், ஆயுதப் போராட்ட இயக்கங்களுக்கு ஆதரவளித்து தனி நாடாக்கிக் கொடுக்க பிராந்திய விரிவாதிக்க அரசும் வல்லரசுகளும் சில சமயங்களில் உதவுவார்கள். உதாரணம் 1970-இல் பங்களாதேஷ் தனி நாடாக்கியது. அல்லது சர்வதேச சூழ்நிலை மாற்றங்களைப் பொறுத்து அமைதிப் பேச்சு ஒப்பந்தம் மூலமாகக் கூட தனியரசு அமைக்கப்படலாம். உதாரணம்:- பாலஸ்தீனம் இவ்வாறு தனி நாடாக ஆக்கப்பட்டாலும், தனி நாடாகாது அதிகாரப் பரவல் முறையுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டாலும், நிலவும் முதலாளித்துவ சுரண்டல் முறையையும், வல்லரசிய ஆதிக்க முறையையும், அனுமதிக்கக் கூடிய அரசியல் இராணுவத் தீர்வுகளை ஒப்பந்தங்களையே ஒடுக்கும் இனவெறி அரசுகளும், வல்லரசுகளும் அனுமதித்துக் கொண்டிருக்கின்றன. செய்து கொண்டிருக்கின்றன.

இன்றைய நவகாலனிய உலக வல்லரசு அமைப்பு முறையை, முதலாளித்துவ சுரண்டல் சமூக அமைப்பைத் தூக்கியெறியாமல் தேசிய இனங்களுக்கு விடுதலை இல்லை. சுதந்திரமான தேசிய அரசாக இருக்க முடியாது என்பதை அங்கீகரிக்காத இயக்கங்களும், அங்கீகரித்தாலும் நடைமுறையில் மக்களை அணிதிரட்டி இன ஒடுக்குமுறை அரசுகளை, வல்லரசுகளை எதிர்த்துப் போராடுவதில் தொடர்ந்து தோல்வி காணும் குட்டி முதலாளித்துவ வழிமுறை இயக்கங்களால் குறிப்பிட்ட காலத்தின் பின் தவிர்க்க முடியாதபடி சர்வதேச நிர்பந்தங்களாலும், உள்நாட்டு - உள்இயக்க திசை விலகல்களாலும் அரசு முன் வைக்கும் மோசடி அரசியல் தீர்வை, தமது அரசியல் இராணுவ பலத்தைப் பொறுத்து அரசியல் பேரம்பேசி ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டிய நிலைக்கு வந்து விடுகின்றன.

வட அயர்லாந்து ஒப்பந்தம் பற்றி பிரிட்டிஸ் பிரதமர், 'பிளேயர்' மற்றும் 'ஜெரி அடம்ஸின்' கூற்றைக் கவனியுங்கள் "மிகச் சிறப்பான அரசியல் சமரசத்தை, அமைதியை முன்னிறுத்துவது "பெல் பாஸ்ட் ஒப்பந்தம்" என்கின்றனர்.

நேற்று முன்தினம் நெல்சன் மண்டேலா தென்னாபிரிக்க ஒப்பந்தம்; நேற்று யாசிர் அரபாத் பாலஸ்தீன ஒப்பந்தம்; இன்று ஜெரி ஆடம்ஸ் - அயர்லாந்து ஒப்பந்தம்; நாளை.... தமிழீழ ஒப்பந்தம் நடக்கலாம்!?

ஒவ்வொரு தேசிய இன விடுதலைப் போராட்டங்களிலும் இரத்தம் சிந்திய போராளிகளின், உழைக்கும் மக்களின் கனவு என்பது; தமது தேசிய இனமும், தேசமும் விடுதலையடையும் போது முதலாளித்துவச் சுரண்டலும், வல்லரசிய ஆதிக்க சமூக அமைப்பும் தூக்கயெறியப்படும்; எந்த அந்நியர்களின் ஆதிக்கமுமில்லாத, ஒருவனை ஒருவன் சுரண்டாத அடிமை செய்யாத ஒரு சமத்துவ சமூக அமைப்பையும், சனநாயக அரசையும், தமது தலைமுறையாவது அடைவார்கள் என்ற நம்பிக்கையில் மடிந்தார்கள்.

30 ஆண்டுகளில் 3600 மக்களை இழந்த அயர்லாந்துப் போராட்டம், ஒப்பந்தத்தை - அமைதியை கண்டிக்கிறது. 25 ஆண்டுகளில் 55000 தமிழ் மக்களை இழந்த தமிழீழத்துக்கு ஒப்பந்தமும் - அமைதியும் உடனடியாக வேண்டும் என எல்லாரும் கூச்சலிடுகின்றார்கள். 55,000 மக்களின் 5000-க்கு மேலான போராளிகளின் தியாகங்கள், கனவுகள் எவ்வளவு வலிமையானது திம்புக் கோரிக்கைகளைக் கூட கைவிட்டு 1987-இல் நடந்த இலங்கை - இந்திய ஒப்பந்தம் துரோகத்துடன் முடிந்த போது புலிகளும், புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகளும் ஒப்பந்தத்தை நிராகரித்தனர். துரோகத்தை மீறி தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை தொடர்கின்றனர். போராட்டத்தின் பிரதான சக்தியான புலிகள் சந்திரிகா அரசு முன் வைத்த அரசியல் தீர்வு திட்டத்துக்கு பதிலாக நேற்று வரை தமிழீழ மக்களின் சார்பாக எந்த திட்டத்தை முன் வைக்காது இருந்து வந்தனர். (திம்பு கோரிக்கை புலிகளுக்கு தெரியாதது அல்ல)

1997 மாவீரர் நினைவு தினத்தில் புலிகளின் தலைவர் பிரபாகரன் திம்பு கோரிக்கைகளே பேச்சு வார்த்தைக்கான அடிப்படை என உறுதியேற்றுள்ளார். நல்லது, வரவேற்க வேண்டியது, திம்புக் கோரிக்கை பேச்சு வார்த்தை அமைதிக்கான அடிப்படை திம்புக் கோரிக்கைகளில் பேரம் பேசுவதற்கு விட்டுக்

www.tamilarangam.net

கொடுப்பதற்கு எதுவும் இல்லை. மேலும் முசுலிம் மக்களுக்கான "சுயாட்சி அலகு" என்பது சேர்க்கப்பட வேண்டியுள்ளது. திம்புக் கோரிக்கைகளை அங்கீகரிக் காத ஏற்றுக் கொள்ளாத எந்த ஒப்பந்தங்களையும், அமைதிக்கான ஏமாற்றுகளையும் உண்மையான புலிக ளும் புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகளும் என்றைக்கும் நிராகரிக்கவே செய்வார்கள். தமிழீழ போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்பார்கள். உல கில் நடக்கும் ஒப்பந்தங்களை காட்டி தற்காலிக அமைதிக்கான ஒப்பந்தம் வேண்டும் எனக் கோருப வர்களே; சந்திரிகா அரசின் அரசியல் தீர்வு திட்டத் தின் அநியாயத்தையும், திம்புக் கோரிக்கைகளின் நியாயத் தன்மையையும் உங்களால் புரிந்து கொள்ள முடியாதா?

— சுரேஷ்

# தேசபக்த மக்கள் இராணுவம் இல்லாமல் தேசிய விடுதலையா?

தமிழீழ மக்களின் தேசிய விடுதலை ஒரு 'பலாத்காரப் புரட்சி வழி முறையால் மட்டுமே தீர்க்கப்பட முடியும் என்ற அரசியல் நிலைப்பாட் டிற்கு வந்தது முதல், ஆயுதப் போராட்டம் முனைப் புப் பெற்ற போராட்டமாக வளர்ந்து, இன்று தேசிய விடுதலைக்கான யுத்தமாக நடந்து கொண்டிருக்கிறது. பல இயக்கங்கள் ஆயுதப் போராட்டத்தைத் தொடக்கி நடத்தி வந்தன. தனி இயக்கச் சர்வாதிகாரத்துக்கான போட்டியில் புலிகளின் இராணுவம் வென்றதுடன், சிறீலங்கா அரசுக்கு எதிராக தீர்மானகரமாக அயுதப் போராட்டத்தையும் நடத்தி வருகிறது. மற்றய இயக் கங்கள் புலிகளின் தடை விதிப்பு அழித்தொழிப்புக்கு முகங் கொடுக்கக் கூடியளவுக்கு பலமான இராணுவ அமைப்பை அல்லது இராணுவச் செயற்பாட்டைக் கொண்டிருக்கவில்லை. ஆயுத சக்தி, அழித்தொழிப்பு யுக்திகளிலும் பற்றாக்குறையும் - பலவீனமும் இருந் தது. அவை அழித்தொழிப்பை முகங்கொடுக்க முடி யாத நிலையில் பின்வாங்கின, சிதைந்தன.

1987-ல் இவ்வியக்கங்களில் பெரும்பாலானவை 'இந்திய - இலங்கை ஒப்பந்தத்துடன்' அரசியல் ரீதியாகவும் சமரச நிலைப்பாட்டை எடுத்து சரண் அடைந்தன. போராட்டத்துக்கும், தாங்கள் முன் வைத்த இலட்சியத்துக்கும் துரோகம் இழைத்தன. புலிகளை அழிக்காமல் போராட்டத்தை சரியான பாதையில் முன்னேடுக்க முடியாது என்பதால் சமரச ஒப்பந்தத்தை ஏற்றதாகக் கூறும் துரோகத் தலைமைக ளும் உண்டு. ஆனால் புலிகள் தங்களின் தனி இயக்க சர்வாதிகார அழித்தொழித்தலை அரசியல் ரீதியாகவும் நியாயப்படுத்த 87-ன் பின் வழி பிறந்தது. சமரசம் அடைந்த இயக்கத் தலைமைகள் தங்களிடம் மீதமாக இருந்த ஆயுதங்களையும் போராளிகளையும் இந்திய இராணுவத்துடன் சேர்ந்து நின்று (புலி அழிப்பு யுத்த நாயகர்களாக, ஆக்கிரமிப்பு இராணுவத்தின் கைக் கூலிகளாக) செயற்பட்டன. 1991-இல் பின்னர் இத்து ரோகத் தலைமைகள் சிறீலங்கா இராணுவத்துடன் சேர்ந்து நின்று (புலி அழிப்பு யுத்தத்தையும், தமிழீழத் தேசிய ஒடுக்குமுறை யுத்தத்தின் கைக் கூலிகளாகவும்) செயற்பட்டு வருகின்றன.

தமிழீழத்துக்காக புலிகளின் இராணுவமும், போர் முறையும் சிறீலங்கா அரசுக்கு எதிரான தேசிய விடுதலை யுத்தத்திலும், தமிழீழ தனி இயக்க சர்வாதி காரத்துக்காக சக இயக்கங்களை அழித்தொழித்து பலவீனப்படுத்துவதிலும் பெரும் வெற்றிகளை சாதித்து வருவது உண்மைதான். மற்றைய இயக்கங்கள் அரசியல் ரீதியாகவே இந்திய - சிறீலங்கா அரசுடன் சமரச நிலைப்பாட்டை ஏற்படுத்தித் துரோகமிழைத்த தற்கு புலிகளின் இராணுவ அழித்தொழிப்பு ஒரு போதும் நேரடிக் காரணமாக இருக்க முடியாது. இது இத்தலைமைகளின் அரசியல் துரோக நிலைப்பாடா கும். அரசியல் துரோக நிலைப்பாடு ஆயுத இயக்கங்க ளான இவர்களை எதிரி இராணுவத்துடன் கூட்டு வைத்து யுத்தத்திலும் துரோகம் இழைக்க வைத்துள் ளது. TULF துரோக அரசியல் கட்சி ஆனால் இராணு வத்துடன் கூட்டு வைக்க வேண்டிய அவசியம் அதற்கு இல்லை. புலிகள் எவ்வாறு சிறீலங்கா இராணுவத்துக்கு எதிராகப் போர் புரிந்து கொண்டே சக இயக்கங்களை அழிப்பதிலும் தேர்ச்சி பெற்றார் களோ அதற்குப் பதிலாக மற்றைய இயக்கங்கள் சிறீலங்கா இராணுவத்துக்கு எதிராகப் போர் புரிந்து கொண்டே, குறைந்த பட்சம் அரசியல் ரீதியாக எதிரிகளுடன் சமரசப்படாது இருந்து கொண்டு, புலிக ளின் தனி இயக்கச் சர்வாதிகார அழித்தொழிப்பை தற்காப்பு என்ற மட்டத்திலாவது எதிர்த்து நின்றிக்க வேண்டும். இதுதான் சரியான அரசியல் - இராணுவ மார்க்கமாக இருந்திருக்க முடியும். உலகின் தேசிய இன விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டம் என்ற மட்டத்திற்கு வளர்ந்து யுத்தம் நடந்து கொண்டி ருக்கிற ஒவ்வொரு பகுதிகளிலும் மேற்கண்டதொரு நிலைமையை முன்கூட்டி உணர்ந்து தம்மைத் தயார்ப டுத்த வேண்டிய நிலைமையில் தேசபக்த புரட்சிகர சனநாயக சக்திகள் உள்ளனர். அரசுக்கு எதிரான யுத்தத்தில் போர்த் திறனை பெற்ற புலிகள் சக இயக்க அழிப்பிலும் அத்தகைய இராணுவத் திறமைகளை மிகக் கச்சிதமாகவே வெளிப்படுத்தினர், அழித்தனர், அரசுக்கு எதிராக போர் புரியாத மற்றைய இயக்க இராணுவம், அரசியல் ரீதியில் எதிரியிடம் சமரசப்ப டாவிட்டாலும் கூட, புலிகளின் அழித்தொழிப்பை எதிர் கொள்ளும் தற்காப்பு இராணுவ ஆற்றல் கூட மிக மிகப் பலவீனமானதாகவும் நின்று பிடிக்க முடியாததாகவுமே இருக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேசபக்த புரட்சிகர சனநாயக அரசியல் வழியை, அமைப்பை முன்வைக்கும் பலர் இராணுவ மூலோபாயம் - தந்திரோபாயம், இராணுவக் கட்டமைப்பு பற்றி வலியுறுத்தினாலும் (சிலர் இதைக் கூட நிராகரிக்கின்றனர்) நடைமுறையில் தமிழீழச் சூழ்நிலைமையில் எவ்வாறு இதைக் காரிய சாத்தியமாக்குவது என்ற கேள்வி தொடங்கியதும். பதிலாக புலிகளின் இராணுவச் செயற்பாடுகள் சிலவற்றை நிராகரித்தாலும் அடிப்படையில் புலிகளின் இராணுவ மார்க்கமே முன்வைக்கப்படுகிறது. போராளிகளை உருவாக்குவதைப் பயிற்சி கொடுத்தல், பராமரித்தல், ஆயுதச் சேகரிப்பு, பணச் சேகரிப்பு, தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு, போர் முனைச் செயற்பாடு, இராணுவத் தலைமை - கீழ் அணிப் போராளிகள் உறவு, மனோவியல் தயாரிப்பு, தியாக மனப்பான்மை, தண்டனைமுறை, இறுக்கமான ஒழுங்கமைவான இராணுவ அமைப்புமுறை, போர்க்கள வெற்றியை, நின்று பிடிக்கும் ஆற்றலை பட்டியல் இட்டு காட்டி இராணுவம் என்றால் அப்படித்தான் இருக்க வேண்டும் என்கின்றனர். ''முதலாளித்துவ இராணுவம்'' - ''சோசலிச இராணுவம், மக்கள் இராணுவம், விடுதலை இராணுவம்'' என்று வேறுபாடு அரசியல் நோக்கம் மற்றும் பெயரில்தான் உள்ளதே தவிர இராணுவக் கட்டமைப்பு முறை, செயற்பாட்டுமுறை, இராணுவத்தின் உள்ளியங்கு முறை என்பன இரண்டு வகை இராணுவத்துக்கும் வேறுபாடு கிடையாது. ஒரே முறைதான் என்ற குட்டி முதலாளியப் பார்வை (EPRLF, PLOT, TELO போன்ற இயக்கங்களின் 1984-ல்களியே தர்க்கிக்கப்பட்டன.) பலாத்காரப் புரட்சி இராணுவக் கட்டமைப்பு மார்க்கம் அன்றும் முன்வைக்கப்பட்டது.

புலிகள் இன்றுள்ள நிலைக்கு வளர எத்தனை வருடம், எத்தனை போர் நடவடிக்கைகள், எத்தனை இழப்புகள் தேவைப்பட்டது. புலிப்படை இராணுவக் கட்டமைப்பின் தோற்றம், வளர்ச்சி, மாற்றம் சமகால நிலை பற்றிக் கூட ஒழுங்கான ஆய்வுப் பார்வை இன்றி புலிகளின் இராணுவக் கட்டமைப்பு முறையிலும், போர் திறமைகளிலும் மயங்கி விடுகின்றனர். இம்மயக்கத்தின் வெளிப்பாடு இரண்டு வகை. ஒன்று புரட்சிர சனநாயக அரசியல் வழியை முன்னிறுத்தும் அதே வேளை தேசபக்த இராணுவத்தை கட்டுவதில் புலியின் இராணுவ மார்க்கத்தை - வழியை இங்கும் பொருத்த முற்படுவது. இரண்டு புரட்சிகர சனநாயக அரசியல் வழியை முன்னிறுத்தினாலும், விரும்பினாலும் புலியினால் செய்ய முடியாததை நாம் செய்ய முடியுமா? புலியின் அழித்தொழிப்பை எவ்வாறு எதிர்த்து நின்று பிடிப்பது? புலிகள் அழியும் வரை - சமரசப்படும் வரை பொறுத்திருந்து இராணுவத்தை கட்டும் வழியை பொருத்த முற்படுவது.

தமிழீழப் போராட்டத்தின் திசைவழியை யுத்தமும், யுத்தத்தின் பிரதான ஒரே சக்தியான புலிகளும் தீர்மானித்துக் கொண்டிருக்கிற நிலைமையில், புலிகள் மற்றும் துரோக இயக்கங்களின் இராணுவத்தை விட்டு வெளியேறிவர்களில், இத்தலைமைகளின் அரசியல் - இராணுவ வழியை நிராகரித்துள்ளவர்கள், NLFT, PLFT, TMPP அமைப்பு பின்னணியில் வந்தவர்கள் இன்று ஒரு தேசபக்த புரட்சிகர சனநாயக இயக்கத்தின் தேவையைப் புரிந்து முன்னிறுத்துகின்றனர். தமிழீழப் போராட்டத்தை மேலும் வளர்த்து முன்னெடுப்பதற்கான அரசியல் வழியை முன்வைப்பதுடன், பலாத்காரப் புரட்சி வழிமுறையால்தான் தமிழீழத் தேசிய விடுதலையை வெல்ல முடியும் என்பதில் உறுதியாக நின்று தேசபக்த மக்கள் இராணுவத்தை கட்டுவதற்கான இராணுவ மூலோபாயம் - தந்திரோபாயத்தையும் முன்வைக்க வேண்டியுள்ளது.

1995-ல் ''சூரியஒளி'' இராணுவ நடவடிக்கை மூலம் புலிகளின் 5 ஆண்டு காலக் கட்டுப்பாட்டு பகுதியான யாழ்ப்பாணத்தை கைப்பற்றிய சிறீலங்கா இராணுவம், 96-ல் ''எடிபல'' இராணுவ நடவடிக்கையால் மன்னார் - வவுனியா பாதையை தனது கட்டுக்குள் கொண்டு வந்த இராணுவம், 97 May 13-ல் யாழ் - வவுனியா 80 Km பிரதான சாலையை கட்டுக்குள் கொண்டு வரத் தொடக்கிய ''ஜெயசிக்குறு'' 2 மாதம், 6 மாதம், 98 சுதந்திர தினம் என கால எல்லைகளை அறிவித்த போதும், இன்றுவரை முன்னேறுவதும் - பின் வாங்குவதும் கட்டுக்குள் கொண்டு வருவதும் - கையிழப்பதும் நடக்கிறது. 97-ல் ஆனையிறவு - கிளிநொச்சி பாதையை கட்டுக்குள் கொண்டு வர நடத்திய ''சத்தியஜெய'' இராணுவ




பெப்ரவரி 03ற்கு முன்னர் படையினர் நிலைகொண்டிருந்த இடங்கள்.

www.tamilarangam.net

நடவடிக்கையின் 10,000 இராணுவம், 'ஜெயசிக்குறு' இன் 2,000 என மூன்று டிவிசன் படையைக் கொண்டும் சிறீலங்கா அரசு 7 வருட யுத்தத்தில் வெற்றி பெற முடியாது சிக்கித் தவிக்கிறது. 'சத்தியஜெய' துருப்புக்கள் மீது 97 முற்பகுதியில் பரந்தனில் ஒரு ஊடறுப்பு தாக்குதலை நடத்தி வெற்றி கொண்ட புலிகள், 98 மாசியில் அரசின் போலிச் சுதந்திர விழாவுக்கு பதிலடியாக 'ஜெயசிக்குறு' துருப்புகள் மீது பரந்தனில் மீண்டும் ஊடறுப்பு தாக்குதல் நடத்தியது. கிளிநொச்சி சமர் மூலம் கிளிநொச்சியின் மையப்பகுதியை கட்டுக்குள் கொண்டு வந்து, போர்க் கொடியும் புலிக்கொடியும் ஏற்றினர்.

''ஜெயசிக்குறு'' ஓர் ஆண்டு நிறைவை ஒட்டி புலிகள் நடத்திய பரந்தன் - கிளிநொச்சி ஊடறுப்புத் தாக்குதலில், புலிகள் கிளிநொச்சியை கைப்பற்றினர். இராணுவம் கரடிப் போக்குக்குப் பின் வாங்கியது.

யாழ் தோல்வியின் பின் புலிகளின் இராணுவக் கட்டமைப்பு, செயல்பற்றி கேள்வி எழுப்பிய, நம்பிக் கையிழந்த பலர் இப்போது புலிகளின் வன்னியுத்த செயற்பாடு மற்றும் 'ஜெயசிக்குறு' படைகளின் இழப்பு தோல்வி, 'வெற்றி நிச்சயம்' இன்மை, குறிப்பாக புலிகளின் முல்லைத்தீவு முகாம் மீதான இராணுவ வெற்றிக்குபின் புலிகளின் புதிய படைப் பிரிவுத் தோற்றம் டாங்கி எதிர்ப்பு அணி, பீரங்கி படைப்பிரிவு, பிரபாகரனின் நேரடிக் கட்டுப்பாட்டிலுள்ள சிறுத்தைப் படை அணி. இவை யுத்தத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள். கொரில்லாப் படை புதிய வடிவத்துடன், கிரமமான படை வடிவ போர்த் தயாரிப்புக்களிலும் - யுத்தப் பிரயோகங்களிலும் ஈடுபட்டு வருவது புலிகளின் இராணுவச் செயற்பாட்டில் ஒரு புத்துயிர்ப்பை வெளிப்படுத்துவது உண்மை. ஆனால் புலிகளின் இந்த வெற்றிகள் - முன்னேற்றங்களை கண்டும் - காட்டியும் புலிகள் தங்களது அரசியல் - இராணுவத் தவறுகளை எல்லா நிலையிலும் திருந்தி விட்டார்கள், புலிகளின் இராணுவச் செயல்பாடும், கட்டமைப்பும் முன்னணிப் படை யுத்த முறையில் இருந்து மக்கள் யுத்த முறைக்கு மாறிக் கொண்டிருக்கிறது என்பது தவறாகும். குறிப்பிட்ட ஒரு போர் முனையின், ஒரு இராணுவ நடவடிக்கையின், ஒரு பகுதிச் சமரின் வெற்றி தோல்விகளை, ஒட்டு மொத்த தமிழீழத் தேசிய விடுதலை யுத்தத்தின் வளர்ச்சியுடன் இணைத்துப் பார்க்க வேண்டும், ஒரு காலப் பகுதியில் நடக்கும் போர்முனை வெற்றிகளும் - படை வடிவமாறுதல்களும் - பெருக்கங்களும் மட்டும் புலிகளின் அரசியல் வழியையும், இராணுவ மூலோபாயத்தையும் மாற்றி விட முடியாது. இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தத்தில் 3 ஆண்டுகள் புலிகள் வன்னிப் பெரு நிலப்பரப்பில் நின்று பிடித்த போது, புலிகளின் இராணுவக் கட்டமைப்புகளோ, இன்று சிறீலங்காப் படைகளை எதிர்த்து நிற்கும் போது புலிகளின் இராணுவக் கட்டமைப்பு வளர்ச்சி வேறு, அன்றைய போர் அனுபவங்கள், அத்தனையும் கற்கையில் வன்னிப் பெரு நிலப்பரப்பை பிளக்கும், யாழ் கட்டுப் பாட்டு பகுதியுடன் தரை வழித் தொடர்பை ஏற்படுத்தும். எதிரியின் 'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கையை இன்னும் ஓர் ஆண்டு காலம் புலிகள் எதிர்த்து நிற்க முடியும், புலிகளின் தலைமை எந்தளவுக்கு தனது தவறுகளை திருத்தியும், அனுபவங்களை செழுமைப்படுத்தியும் யுத்தத்தில் ஊன்றி நிற்கிறதோ அந்தளவுக்கு தேசிய விடுதலை யுத்தம் வளரும். இதை தேசபக்த புரட்சிகர சனநாயக சக்திகள் ஆதரிக்க வேண்டும் ஊக்குவிக்க வேண்டும். அதேவேளை புலிகளின் இராணுவக் கட்டமைப்பு முன்னணிப் படை யுத்த முறை செயற்பாட்டுக்கும், தேசபக்த மக்கள் இராணுவக் கட்டமைப்பு, மக்கள் யுத்தச் செயற்பாட்டுக்குமான அடிப்படையான வேறுபாட்டையும், எதிரியின் கட்டுப்பாட்டு பகுதியும் நமது கட்டுப்பாட்டுப் பகுதியிலும், எதிரிக்கும் நமக்கும் இடையில் போட்டா போட்டி நடக்கும் பகுதிகளிலும் 'முன்னணிப் படை யுத்தமுறை' 'மக்கள் யுத்த முறையயை'ப் பின்பற்றும் இரண்டு விதமான சக்திகளும் தமது அரசியல் இராணுவச் செயற்பாடுகளை எதிரிக்கு எதிராக கட்டவிழ்த்து விடுவதில் கொரில்லாப் போராட்டத்திலும், வெகுசனப் போராட்டத்திலும் வெளிப்படக் கூடிய துல்லியமான வேறுபாடுகளையும் நாம் தொடர்ந்து கிரகிக்கவும் நாட்டு நிலைமையைப் புரிந்து கொள்ளவும் வேண்டும். இராணுவக் கோட்பாட்டு ரீதியிலும், செயல்முறையிலும் இவ்வேறுபாடுகளை தெளிவாகப் புரியவும் தொடர்ந்து யுத்தச் செயற்பாட்டில் இதை அடையாளம் காணத் தவறும் பட்சத்தில் மக்கள் யுத்தமுறை தேசபக்த மக்கள் இராணுவம், நீண்டகால மக்கள் யுத்தம் என்ற சுலோகங்கள் வார்த்தைகளில் மட்டும் நம்மிடம் இருக்கும். உண்மையான இராணுவச் செயற்பாடு மக்கள் யுத்த முறையாக இருக்காது. முன்னணிப் படை யுத்த முறைக் கோட்பாடும் செயற்பாடும், 'மக்கள் யுத்தம், 'தேசபக்த இராணுவம்' என்ற பெயரில் நம்மை இயக்கத் தொடங்கி விடும். தமிழீழத்தில் மக்கள் யுத்தமுறை இராணுவச் செயற்பாட்டில் அனுபவமோ, நடைமுறை இயக்கக் கூறுகளோ இல்லாத நிலையில் புலிகளின் முன்னணிப் படை யுத்த முறையே தேசிய விடுதலை யுத்தத்தில் தீர்மானகரமான பங்களிப்பு செய்கையில் தோல்வியும் - வெற்றியும் கண்முன் தெரிகையில் மக்கள் யுத்த முறை பற்றிய இராணுவக் கோட்பாட்டுப் பலயீனமும், நடைமுறையில் இராணுவச் செயற்பாடுகளில் ஏற்படும் தோல்விகள், கேள்விகளுக்கு பதில் இல்லாத நிலை மீண்டும் நம்மை முன்னணிப்படை யுத்த முறைக்குள் இழுத்துச் செல்லும் சூழலே நிலவுகிறது. தேசபக்கத மக்கள் இராணுவத்தை அதற்கான கூறுகளை கட்டி வளர்க்க முனையும் புரட்சிகர சனநாயக சக்திகள் நீண்டகால மக்கள் யுத்தக் கோட்பாட்டை தெளிவாக புரிந்து கொள்வதுடன் இன்றைய தமிழீழ யுத்தச் சூழ்நிலைமையுடன் அதனைப் பொருத்தி தேசபக்த இராணுவக் கூறுகளை உருவாக்குவதிலும் தேர்ச்சி பெற வேண்டும்.

— நசீர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேசிய விடுதலை யுத்தம் - ஒரு பார்வை

நன்றி—நவசகாப்தம்

1995 சித்திரை 19-ல் யுத்த நிறுத்தம் உடைந்தது. புலிகளின் யுத்த வரலாற்றில், முதன் முதலாக தோற்றுவிக்கப்பட்ட கடற்புலிகள், திருகோணமலை துறைமுகத்தில் கடற்படை கப்பல்களை தகர்த்தனர், பேச்சு வார்த்தை ஊடாக புலிகளின் பங்கு வகித்தல் மூலம் யாழை சீரமைக்கும் எல்லா நடவடிக்கைகளும் அரசால் நிறுத்தப்பட்டது. அமுலுக்கு வர இருந்த பொருளாதார தடை, மீன் பிடித்தடை நீக்கம், வந்தது - போனது. அரசுக்கும் - புலிகளுக்கும் இடையிலான மோதல்கள் வேகமடைந்தன. அரசு யாழ்மீது பகுதி வாரியான இராணுவ நடவடிக்கையை தொடக்கியது. "புலிகளை போர் வெறியர்கள்" என்றது. ஒப்பறேசன் "முன்னேறிப்பாய்தல்" - "சூரிய ஒளி" மூலம் வலிகாமத்தையும், யாழ் நகரையும் கைப்பற்றியது. புலிகள் தென்மாராட்சிக்கும் பெருநிலப்பரப்புக்கும் பின் வாங்கினர். இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்தனர். 95 மார்கழி வரை புலிக் கொடி பறந்த யாழ் கோட்டையில், சிங்கக் கொடியை ஏற்றியது சிறிலங்கா இராணுவம். அரசும், இன மதவாதிகளும் கூடிக் கொண்டாடினர்.

1996 சித்திரை 19-ல் ஒரு வருடப் போரின் நினைவு. புலிகளின் கடற்படை கரும்புலிகளின் ஓராண்டு நிறைவு. அரசுக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்ய 12.04.96-இல் கடற்புலிகளின் கொழும்பு துறைமுக தாக்குதல் பெருந்தால்வியில் முடிந்தது. (துறைமுகத்தில் இஸ்ரேலில் இருந்து வாங்கப்பட்ட குண்டு வீச்சு விமானம் கப்பலில் இருந்தது. புலிகளுக்கு முன் கூட்டி தெரியுமா?) அரசு படைகள் 19-இல் தென்மாராட்சி மீதும், கிளாலியை கைப்பற்றும் 'சூரிய ஒளி 2' தொடக்கியது. புலிகள் சூரிய ஒளி 1-க்கு காட்டியளவு எதிர்ப்பு கூட காட்டது பின் வாங்கினர். அரசு படைகள் தொடர்ந்து வடமாராட்சி மீது தாக்குதலிலும், கைப்பற்றிய பகுதிகளில் தேடுதல் வேட்டையிலும் இறங்கியுள்ளனர்.

புலிகளுக்கு பொது மன்னிப்பு அளிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சரண் அடைபவர்கள் முதலில் ஆயுதங்களை கீழே போட வேண்டும். 13 வருட யுத்த வாழ்வை துறக்க வேண்டும். பாதுகாப்பு படையின் சிறப்பு முகாம்களில் சில மாதங்கள் இருத்தல், கைத்தொழில் கல்வி பயிற்சிகளுக்கு அரசு ஊக்குவிக்கும் (மார்கழி 95-க்கு பின் 40-க்கும் மேலான புலிகள் சரண் அடைந்துள்ளதாகவும் அவர்கள் இப்போது யாழில் அரசு படை மேற்கொள்ளும் "சல்லடை போடும் தேடுதலில்" ஆள்காட்டிகளாக பயன்படுத்தப்படுவதாகவும் கூறப்படுகிறது. சிறீலங்கா அரசு நேரடியாகவும், அரசு சாரா நிறுவனங்கள் (NGO) மூலமும் யாழை மறுசீரமைக்க - புனரமைக்க தொடங்கியுள்ளது. பொருளாதார தடைகள் ஓரளவு நீக்கப்பட்டுள்ளது. 23 பஸ்களை (இ.போ.ச) யாழில் இயக்குகிறது. யாழ் பொது மருத்துவமனை 40 டொக்ரர்களின் உதவியுடன் இயக்கப்படுகிறது.

1995 சூரிய ஒளி 1 நடவடிக்கையின் போது யாழை விட்டு வெளியேறிய இலட்சக்கணக்கான அகதிகளையும், யாழை விட்டு செல்ல ஊக்குவிக்கப்பட்ட - அழைத்து செல்லப்பட்ட ஆயிரக்கணக்கான அகதிகளை காட்டி புலிகள், அரசு இராணுவ ரீதியில் யாழை வென்றது, அரசியல் ரீதியில் தோற்றது. மக்கள் எல்லாம் புலிகளின் பக்கம் இருப்பதாக பிரச்சாரப்படுத்தினர்.

1996 - சூரிய ஒளி 2-க்கு பின் அகதிகளாக சென்ற மக்களில் ஒரு பகுதி மீண்டும் தமது வாழ்விடங்களுக்கு திரும்பத் தொடங்கியுள்ளனர். (இதை தடுத்த புலிகளுக்கும் - மக்களுக்கும் கைகலப்பும் நடந்துள்ளது.) அகதிகள் தங்கியுள்ள இடங்களில் உணவு, இருப்பிட வசதி, மருத்துவம் போன்ற அடிப்படை தேவைகள் தீர்க்கப்படாததால் "உணவு இல்லை என்றாலும் பச்சை தண்ணீர் குடித்து விட்டு சொந்த வீட்டில் உறங்கலாம்" அகதிகளின் இந்த உளதிருப்தி விரைவாக யாழ் போக தூண்டுகிறது. அரசாங்கம் தனது இராணுவ நடவடிக்கையின் அழிவுகளை மறைக்கவும், புலிகள் வேறு - மக்கள் வேறு, மக்கள் அரசு பக்கம் இருப்பதாக காட்டவும் புலிகளை அரசியல் ரீதியாகவும் தோற்கடித்து விட்டோம் எனப் பிரச்சாரப்படுத்துகிறது.அகதிகள் யாழ் திரும்ப பல உதவித் திட்டங்களை அறிவித்துள்ளது. அரசு யாழில் சிவில் சமூக கட்டுப்பாட்டை தனதாக்குவதே உடனடி வேலையாக செய்கிறது. பழைய அரசுப் பணியாளர்களை (5 ஆண்டுகளாக புலிகளின் சிவில் சமூக நிறுவனங்களில் வேலை செய்து கொண்டு அரசிடம் சம்பளம் வாங்கியவர்களை விமானம் மூலம் யாழ் கொண்டு வருகிறது.) முதல் கட்டமாக வவுனியாவில் அகதி நிலையில் இருந்த 100 பேரை தூக்கி வந்து நிறுத்தியுள்ளது. அரசும் சரி, புலிகளும் சரி தங்களின் உண்மையான தோல்விகளை மறைக்க தாங்கள் தாங்களே வெற்றி பெற்றதாக உலகுக்கு காட்ட மக்களை மந்தைகளாக பாவிக்கின்றனர்.

புலிகள் தங்களின் பின்வாங்குதலுக்காக தந்திரோபாயமாக சில ஆயிரம் மக்களை கூட்டிச் சென்றிருந்தால், மீண்டும் யாழ் திரும்ப தயாரான மக்களை தடுத்திருக்கக்கூடாது. யாழில் மக்கள் பரந்து வாழ்வதே எதிரிக்கு எதிராக கொரில்லாக்கள் இயங்க நிபந்தனையாகவுள்ளது. 95-96 ஓர் ஆண்டில் எத்தனை மாற்றம், ஏமாற்றம்.

தமிழீழ மக்களின் தேசிய விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் யுத்தமாக மாறியது முதல், எதிரியின் தேசிய இன ஒடுக்கு முறையுத்தம் அதற்கு எதிரான நமது தேசிய இன விடுதலை யுத்தம் 15

www.tamilarangam.net

ஆண்டுகள் நடந்து கொண்டிருக்கிறது. இவ்விடுதலை யுத்தம் 1987கள் வரை U.N.P. தலைமையிலான அரசுக்கும், படைகளுக்கும் எதிராக பிரதானமாக 5 போராளி இயக்கங்களின் இராணுவ நடவடிக்கைகள் அங்கிய விடுதலை யுத்தமாக இருந்தது. 1987 - 1990-க்கு இடைப்பட்ட காலம் இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக புலிகள் தலைமை தாங்கிய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தமாகவும், 91-94-ல் மீண்டும் U.N.P. அரசுக்கும், பின்னர் 95 முதல் இன்று வரை S.L.F.P. தலைமையிலான மக்கள் கூட்டணிக்கும், சிறீலங்கா படைகளுக்கும் எதிரான தேசிய விடுதலை யுத்தமாகவும் நடக்கிறது. மூன்று தனித்தன்மை வாய்ந்த கட்டங்களை தமிழீழ தேசிய விடுதலை யுத்தம் சந்தித்துள்ளது. கடைசி இரண்டு கட்டங்களிலும் புலிகள் மட்டுமே யுத்தத்தின் தனிச் சக்தியாகவுள்ளனர்.

யாழ் தேசிய விடுதலை யுத்தத்தின் வளர்ச்சியில் கடந்த 5 ஆண்டுகளாக புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியாக, எதிரியை முடமாக்கல் நிலைக்கு தள்ளிய பிரதேசமாக இருந்தது. எதிரியின் 'ஒப்பறேசன் தண்டர் போல்,' 'முன்னேறிப் பாய்தல்,' 'சூரிய ஒளி' இராணுவ நடவடிக்கைக்கு பின் யாழ் மீண்டும் அரசின் கட்டுப்பாட்டு பகுதியாக மாறியுள்ளது. புலிகளை தற்காப்பு கட்டத்துக்கு தள்ளிய பிரதேசமாகியுள்ளது. புலிகள் எதிரிக்கு எதிராக 'புலிப்பாய்ச்சல், 'தவளைப்பாய்ச்சல்' மீண்டும் தாக்கும் இராணுவ நடவடிக்கைகள் மூலம் எதிரியை ஓரளவு நிலை குலையச் செய்தனர். இறுதியில் புலிகளே தமது கட்டுப்பாட்டு பகுதியை விட்டு பின் வாங்கியுள்ளனர் என்பதே உண்மை.

அரசு தனது இராணுவ வெற்றிக்கு இராணுவத்தின் போர்த்திறமையையும் கூடவே, தமிழ் மக்கள் புலிப்பயங்கரவாதத்தை நிராகரித்து அமைதியை - அரசியல் தீர்வை விரும்புகிறார்கள் என்கிறது. இனவாதப் படைகளின் இராணுவ வெறியை மெச்சுவதுடன் ஊக்குவிக்கிறது. தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு எனக் கூறி மோசடி அதிகார பரவலாக்க திட்டத்துள் புலிகளைக் கூட மூழ்கடிக்க முயலும் சர்வதேச பிரச்சாரத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளது.

இராணுவதளபதி ஜெரி.டி. சில்வாவுக்கு அடுத்து 14-வது இராணுவ தளபதியாக இம்மாதம் பொறுப்பு ஏற்றுள்ள ஜெனரல் றோகான் தலுவத்தை "புலிகளை பலவீனமடையச் செய்து அரசியல் தீர்வுக்கு அழைத்து வருவதே எமது நோக்கம், படைத்தளபதி என்ற முறையில் நான் ஒரு பக்க கடமையை நிறைவேற்றுவேன்" என கூறியுள்ளார்.

புலிகள் பலவீனப்பட்டுள்ளதை கண்டு ஒரு புறம் உள்ளூர குதுகலிக்கின்ற தமிழ்த்துரோக தலைமைகள் மறுபக்கம் புலிகள் மேலும் மேலும் பலவீனப்பட்டால் அரசு தங்கைளக் கூட கண்டு கொள்ளாது போய் விடுமோ என்ற அச்சத்தில் புலிகள் வரையறுக்கப்பட்டு பலவீனப்பட வேண்டும் எனவும் அவர்களையும் அரசியல் பேச்சில் கலக்க வைக்க வேண்டும் என்றும் கருகின்றன. அரசு தன்னால் முடிந்த வரை புலிகளை பலவீனப்படுத்துவதுடன் "மோசடி தீர்வு திட்டத்துள்" புலிகளையும் கலக்க வைத்து தேசிய இனப்பிரச்சனையை 87-களில் திசை திருப்பியது போன்று 97-களில் முழுவதுமாக திசை திருப்ப முயல்கின்றது.

புலிகள் தங்கள் பின் வாங்கலுக்கு, தோல்விக்கு காரணமாக, அரசு படைகளை எதிர்த்து நின்று பிடிக்காததற்கு காரணமாக, மீண்டும் யாழை கைப்பற்ற தேவையாக கனரக ஆயுதங்கள் (Artillery) வேண்டும். அதற்கு பணம் வேண்டும். போர் புரிய மனிதபலம் வேண்டும் என்று மட்டும் முன் வைக்கின்றனர்.

இன்று வரையிலான தேசிய விடுதலை யுத்தத்தில் புலிகளின் யுத்த பங்களிப்பே பிரதானமானதும் தொடர்ச்சியானதும் ஆகும். இனியும் எவ்வளவு தூரம்? எவ்வளவு காலம்? தமது யுத்த பங்களிப்பை தொடர்வர்? மீண்டும் யாழைப் பிடிப்பார்களா? இல்லையா? கிளிநொச்சியை மையமாக கொண்டு "தென் தமிழீழத்தை" உருவாக்குவார்களா? முல்லை தீவில் தமிழீழ வைப்பகததை (வங்கியை) தொடக்கி விட்டார்களே!

தமிழீழ தேசம் சுதந்திரம் அடைய வேண்டும், மக்கள் விடுதலை பெற வேண்டும். தேசிய விடுதலைப் போராட்டமும், போரும் முன்னேற வேண்டும். இதற்கு தடையாகவுள்ள அரசியல் - இராணுவத் தடைகளை, பலவீனங்களை கண்டு பிடித்து களைய விரும்புபவர்கள் முகங் கொடுக்க வேண்டிய கேள்வி? யாழ்ப்பாணத்தை புலிகள் இழந்ததற்கான அடிப்படையான அரசியல் சார் இராணுவக் காரணிகள் என்ன? தேசிய விடுதலை யுத்தம் மூலோபாய ரீதியாக எந்த கட்டத்தில் இருக்கிறது? தேசிய விடுதலை யுத்தம் வளர்ந்துள்ளதா? வீழ்ச்சி நிலையில் உள்ளதா? என்பதே மையமான பிரச்சினை. யுத்தம் வளர வேண்டும். இந்த யுத்தத்துக்காக இது நாள் வரை சிந்திய ரத்தமும், எல்லா இழப்புகளும் வீண்போகக் கூடாது தேசிய விடுதலையும், யுத்தமும் காட்டிக் கொடுக்கப்படுவதை, திசை திருப்பப்படுவதை அனுமதிக்கக் கூடாது என விரும்பும் உண்மையான தமிழீழ தேசபக்தர்கள் புரட்சியாள்கள், சனநாயகவாதிகள், ஆதரவாளர்கள் எல்லாரும் சிந்திக்க வேண்டிய தருணம் இதுதான்.

## தமிழீழத் தேசிய விடுதலை யுத்தம் மூலோபாய ரீதியில் எந்தக் கட்டத்திலுள்ளது. யாழ் தோல்வி யுத்தத்தின் வளர்ச்சியா? தேக்கமா?

தமிழீழ தேசிய விடுதலைப் போர், வழமையாக பலராலும் 1ம், 2ம், 3ம், 4ம் கட்ட ஈழப் போர் என எழுதப்படுகிறது. தேசிய விடுதலை யுத்தம் இராணுவ அர்த்தத்தில் எந்த கட்டம் என்பதை புரிய வேண்டுமானால் முதலில் தேசிய விடுதலை யுத்தத்தின் மூலோபாய ரீதியான மூன்று கட்டங்களை பார்ப்போம்.

1. எதிரியின் மூலோபாய ரீதியான தாக்குதலும், எமது மூலோபாய ரீதியான தற்காப்புக் கால கட்டம்.
2. எதிரியின் மூலோபாய ரீதியான பாதுகாப்பினதும், எமது எதிர் தாக்குதலுக்கான தயாரிப்பின் கால கட்டம்.

www.tamilarangam.net

3. எமது மூலோபாய ரீதியான எதிர்த் தாக்குதலின தும், எதிரியின் மூலோபாய ரீதியான பின் வாங்கு தல் கால கட்டம்.

(நீண் கால யுத்தம் - மா.சே.துங்)

தமிழீழ மக்களின் தேசிய விடுதலை யுத்தமா னது. தமிழீழப் பகுதியை ஒரு முழுமையான யுத்த நிலைமையாக எடுப்பதில் இருந்து உருவாகிறது... இதிலிருந்து தான் இராணுவ மூலோபாயம் வகுக்கப் பட வேண்டும். ஒரு முழுமையான யுத்த நிலைமை பற்றிய விஞ்ஞானமே இராணுவ ரீதியான மூலோபா யமாகும். 1984-கள் வரை சிறீலங்கா அரசுப்படைகள் (எதிரி) மூலோபாய ரீதியான தாக்குதலிலும், புலிகள் உட்பட போராளி இயக்கங்கள் எல்லாம் மூலோபாய ரீதியான தற்காப்பு நிலையும் என்ற முதலாவது கட்டத்தில் தேசிய விடுதலை யுத்தம் இருந்தது.

போராளிகள் தற்காப்பு நிலையில் இருந்து கொண்டே எதிரி மீது தந்திரோபாய ரீதியான தாக்கு தல்களையும், போர் நடவடிக்கைகளும் செய்தனர். எதிரி தனது மூலோபாய ரீதியான தாக்குதல் நிலை யில் இருந்து தேடுதல் வேட்டைகளை, சுற்றி வளைப் புக்களை நடத்தினான், காத்திருந்து சில போர் நடவடிக்கைகளை கூட செய்தான் ஆனால் போராளிக ளின் மேலோங்கிய தற்பாதுகாப்பு நடவடிக்கைகளும், தந்திரோபாயமான பரந்தளவிலான கொரில்லா தாக்கு தல்களும், பொலிஸ் நிலையங்கள் மேலான தாக்கு தல் வெற்றிகளும் வளர்ந்தது, சில தாக்குதல்கள் தோல்வி கண்ட போதும், போராளிகளின் இராணுவச் செயல்பாடுகள் கையோங்கி இருந்தது. இனக் கலவ ரங்களால், சிறைப்படுகொலைகளால், எதிரியின் இரா ணுவ நடவடிக்கைகளால் உள்நாட்டிலும் - வெளிநாட் டிலும் போராளிகளின் பக்க பலம் வளர்ந்து கொண்டி ருந்தது. போராளிகளின் தொடர்ச்சியான கொரில்லாத் தாக்குதல்களால் எதிரி தனது எல்லா அன்றாட நடவடிக்கைகளிலும் அச்சத்துடன் வாழ நிர்ப்பந்திக் கப்பட்டான். (பொலிசு நிலையம், இராணுவ முகாம், ரெயில் போக்குவரத்து, நடமாட்டத்தில், உணவு குடிநீர் போக்குவரத்தில்... என கொரில்லா தாக்கு தலை முகங்கொண்டான். தவிர்க்க முடியாது பின் வாங்குவதிலும், தற்காப்பு நடவடிக்கையிலும் இறங் கினான் முதல் கட்டத்தில் யுத்தத்தில் ஏற்பட்ட இவ்எதிர் மறை வளர்ச்சி 1985-இல் தமிழீழ விடுதலை யுத்தம், மூலோபாய ரீதியாக இரண்டாவது கட்டத் துள் காலடி எடுத்து வைத்தது.

எதிரி மூலோபாய ரீதியான பாதுகாப்பிற்கும், போராளிகள் எதிர் தாக்குதலுக்கான தயாரிப்பின் கால கட்டத்துள் நுழைந்தனர். முதலாவது கட்டத்தில் எதிரிக்கு எதிராக செய்த இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டிருந்தது. அதே வேளை 85-களில் போராளி இயக்கங்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல், இயக்க உள்மோதல், இந்தியாவின் இரா ணுவ ஊக்குவிப்பில் இந்திராகாந்தி இறப்புக்கு பின் ஏற்பட்ட மாற்றம். மற்ற இயக்கங்கள் மேல் புலிக ளின் தடைவிதிப்பு. இவை போராளிகள் மத்தியில், உள்நாட்டு - வெளிநாட்டு மக்கள் மத்தியில் ஏற்படுத் திய தாக்கம், அனைத்தாலும் போராளிகளின் இரா ணுவ ரீதியான ஒட்டு மொத்த பலத்தில் ஏற்பட்ட சிதறல்களும் - வீழ்ச்சிகளும் (போராளி இயக்கங்கள், எதிரிக்கு எதிராக கூட்டு இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டதில்லை) யுத்தத்தின் வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தியது. ஆனால் இவற்றுக்கு மத்தியிலும் யாழில் எதிரி பெரிய முகாம்களை விட்டு வெளியில் வந்து நடமாடுவதை தடுப்பதில் எல்லாப் போராளி இயக்கங்களும் தமது கொரில்லாப் போர் முறையின் முழுச் சக்தியையும் பயன்படுத்தினார்கள்.

இராணுவ ரீதியில் நோக்குகையில் விடுதலை யுத்தத்துக்கு இரண்டு வடிவங்கள் உண்டு ஒன்று கொரில்லா யுத்தம். இரண்டாவது கிரமமான யுத்தம். இந்த இரண்டும் ஏக காலத்தில் உருவாகி வளர்வ தில்லை. நீண்ட கால மக்கள் யுத்த பாதையின் ஆரம்ப வடிவம் கொரில்லா யுத்தம். ஆரம்ப வடிவமான கொரில்லா யுத்தம் தொடக்கத்தில் பிரதான போராட்ட வடிவமாகவும் இருக்கிறது. இது படிப்படி யாக வளர்ந்து கிரமமான யுத்தமாக மாற்றமடைய வேண்டும், கிரமமான யுத்தம் போராட்டத்தின் யுத்தத் தின் பிரதான வடிவமாக மாறிய பின்னரும் கொரில்லா யுத்தம் அதன் துணை அம்சமாக தொடர்ந்து நீடிக்கும். இத்தகைய மற்றும் யுத்தத்தின் மூலோபாய ரீதியான வளர்ச்சிக் கட்டங்களுடன் பிரிக்க முடியாதபடி ஒன்றை ஒன்று சார்ந்து யுத்தம் வளர்கின்றது. விடுதலை யுத்தத்தின் இந்த இரண்டு வடிவங்களும், இரண்டு விதமான படைவடிவங் களை, ஆயுத வகைப்படுத்தல், படை வியூகங்கள் (Formation) யுத்த நடத்தைகள் என இன்ன பிற வேறுபா டுகளை கொண்டது.

தமிழீழப் போராளிகள் கொரில்லா யுத்த முறை யிலிருந்து கிரமமான யுத்த முறைக்கு வளரவில்லை. அல்லது அதன் ஆரம்ப வடிவங்களை மட்டும் தொட்டிருந்தனர். மூலோபாய ரீதியான எதிர் தாக்குத லுக்கான நமது தயாரிப்புக்கான 2-வது கட்டத்திலும், சிறு இராணுவ முகாம்கள், பெரிய பொலிஸ் நிலை யங்கள் மீது போராளிகள் தாக்குதல்களை நடத்தினர். கிழக்கிலும், வடக்கின் எல்லை மாவட்டங்களிலும் கொரில்லா தாக்குதல்களை தற்காப்பில் இருந்து கொண்டு நடத்தினர். சிலதில் வென்றனர். எதிரி தான் தாக்குதல் கட்டத்தில் இருந்த போது உருவாக்கிய மினி முகாம்களை, பொலிஸ் நிலையங்களை தந்தி ரோபாய ரீதியாக பின் வாங்கினான். பெரிய இரா ணுவ முகாம்கள், பொலிஸ் நிலையங்களுடன் அவற்றை இணைத்தான். போராளிகள் எதிரி மூலோ பாய ரீதியாக பின் வாங்க தொடங்கி விட்டதாக கருதினர். தாங்கள் மூன்றாவது, கட்டத்தில் இருப்ப தாக பெருமிதப்பட்டனர். அதனால் தான் வரும் "தீபவாளிக்கு" வரும் "தைப் பொங்கலுக்கு" தமிழீழம் கிடைத்து விடும் என பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

இப்பெரிய இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலையங்கள் மீது தொடுத்த தாக்குதல்கள் எதுவும் வெற்றி பெறவில்லை என்பதும், சிறு அளவிலான தாக்கங்களை எதிரிக்கு ஏற்படுத்தினர் என்பதும் உண்மை. எதிரி தனது பெரிய முகாம்களின் கண்கா ணிப்பு பகுதியை சுருக்கி கொண்டான். ஒரு கிரம மான யுத்த முறைக்கு வளராமல், கிரமமானயுத்த

www.tamilarangam.net

முறையில் யுத்த பயிற்சி இல்லாமல் இப்பெரிய முகாம்கள் மீதான தாக்குதலில் வெற்றி பெற முடியாது. போராளிகள் கிரமமான யுத்த வடிவப் பயிற்சி கூட இல்லாமல் இருந்தனர். போராளிகள் யுத்த கல்வி ஊடாகவும், தோல்விகளின் அனுபவத்தின் வழியாகவும் கிரமமான யுத்த முறையின் தேவையை புரிந்து கொண்டனர் ஆனால் அவர்களது சொந்த வர்க்க அரசியல் அமைப்பு பலவீனங்கள் இவ்யுத்த முறைக்கு வளர அனுமதிக்கவில்லை - அவகாசம் கொடுக்கவில்லை.

பதிலுக்கு கொரில்லா யுத்த வடிவத்துள் நின்றபடியே, கொரில்லா யுத்த முறையில் புதுப்புது தாக்குதல் முறைகளை, நவீன ஆயுதங்களை தேடி ஓடச் செய்தனர். காவல் அரண்களை தாக்க தற்கொலைப் போராளிகள், வெடி நிரப்பிய லொறிகளை ஓட்டிச் சென்று மோத விடுவது. பெருந்சேதத்தை விளைவித்து கொரில்லா தாக்குதல் அணி உள்புகுவது என எதிரிக்கு எதிராக தமது இராணுவ நடவடிக்கைள் எதிர்த் தாக்குதலுக்கான தயாரிப்பு கட்டத்தில் இருந்து கொண்டு தந்திரோபாய ரீதியான தாக்குதல்களுடன் நிறுத்திக் கொண்டனர். போராளிகளின் தாக்குதல்கள் எல்லாம் எதிரியை மேலும் பலமான தற்காப்புக்குள் தள்ளிய போதும் எதிரியை சீர்குலைக்கவும், நிர்மூலமாக்கவும் முடியவில்லை. நாட்டை, யாழை, யார் ஆழ்வது என்ற போட்டியில் ஒரு இயக்கம் மற்ற இயக்கத்தை எப்படி அழிப்பது. காட்டிக் கொடுப்பது என துடித்தனர். புலிகள் எதிரிக்கு எதிரான தமது இராணுவ நடவடிக்கைகளை செய்து கொண்டே, மற்ற இயக்கங்களை முழுவதுமாக தடை செய்ததுடன், 1987 தையில் யாழ் மீதான சிவில் சமூக கட்டுப்பாடு புலிகளின் கட்டுக்குள் வருவதாக அறிவித்தனர்.

கொரில்லா யுத்தத்தின் நோக்கமும், அதன் சக்தியும் எதிரியின் சுதந்திரமான நடமாட்டங்களை கட்டுப்படுத்துவதும், எதிரிக்கு கிலியை ஏற்படுத்துவதும், நடமாட்டத்திலுள்ள (வாகனம், நடை, ரோந்துப்பட்கு) சிறுபடைப்பிரிவுகளை (செக்சன், பிளட்டூன்) சீர்குலைத்து அழிப்பதும் ஆகும். கிரமமான யுத்த முறையால் மட்டுமே நடமாட்டத்திலுள்ள பெரிய படைப்பிரிவுகளை, எதிரியின் முகாம்களை எதிர் தாக்குதல் மூலம் அழித்தொழிக்கவும், நிர்மூலமாக்கி துரத்தவும், வேண்டுமானால் நமது கட்டுப்பாட்டுள் தற்காலிகமாகவோ - நிரந்தரமாகவோ அவ்முகாம்களை வைத்திருக்கவும் முடியும்.

போராளி இயக்கங்களின இராணுவ ரீதியான பலவீனம், மற்றும் அரசியல் அமைப்பு பலவீனங்களை எதிரி சரியாக ஆய்வு செய்தான் புலிகள் எல்லா இயக்கங்களையும் தடை செய்த வேளை (எதிரி செய்ய வேண்டிய வேலைகளை புலிகளே செய்தனர்) எதிரி மூலோபாய ரீதியான பாதுகாப்பு நிலையில் இருந்தபடி, கிழக்கை தனது சுதந்திரமான - எச்சரிக்கையுடன் கூடிய நடமாட்ட பகுதியாக மாற்றுவதில் வெற்றி கண்டான். வடக்கில் எல்லை புறத்தில் தந்தரோபாய ரீதியாக தாக்கவும் - தேவையானால் பின்வாங்கவும் செய்தான். போர் நடவடிக்கைகளிலும் கூட இறங்கினான். 87-களின் தொடக்கத்தில் பாதுகாப்பில் இருந்து கொண்டு எதிரியின் எதிர் தாக்குதல் தொடங்கியது. முகாமை விட்டு வெளியே வரும் நடவடிக்கைகள் வெற்றியளிப்பதை பார்த்தான். விமானக் குண்டு வீச்சு, பீரங்கி தாக்குதல், செல் தாக்குதல் மூலம் பெரும் அழிவு இன்றி தரைப்படை முன்னேற முடியும் என்று கணிப்பு செய்தான். இலக்கற்ற மற்றும் இலக்குதவறும் குண்டு வீச்சால் மக்கள் பெருமளவு பா்திக்கப்பட்டாலும் குறுகிய கால இராணுவ நடவடிக்கை மூலம் போராளிகளை துரத்திச் செல்ல முடிவு செய்தான். "ஒப்பறேசன் லிபறேசன்" வடமாராட்சி மீது தொடங்கியது. புலிகளின் கழுத்தை நெறிக்கும் அளவுக்கு எதிரி முன்னேறினான்.

இராணுவ நடவடிக்கைக்கு எதிரான கண்டனக் குரல்கள் உலகளவில் வலுவடைவந்தது. இந்தியாவின் இலங்கை மீதான தலையீட்டுக் கொள்கைக்கு, (தமிழீழ மக்களுக்கு உதவுது என்ற பெயரில்) கடைசிச் சந்தர்ப்பம் என்பதால் இந்திய விமானப்படையின் "ஒப்பறேசன் பூ மாலை" உணவுப் பொட்டல போடுகையுடன் யுத்தத்தின் மொத்த அரசியல் இராணுவ நிலமையும் மாறியது. தமிழீழ தேசிய விடுதலை யுத்தம் மூலோபாய ரீதியாக இரண்டாவது கட்டத்துள் நுழைந்தது. 85, 86 இரண்டு ஆண்டுகளில் மீண்டும் முதலாவது கட்டத்துக்கு திரும்பியது. போராளிகள் மூலோபாய ரீதியான தற்காப்பு கட்டத்துக்கும் எதிரி மூலோபாய ரீதியான தாக்குதல் கட்டத்துக்கும் மீண்டும் வந்தனர். இந்தியத் தலையீடு மொத்த யுத்த சூழ்நிலையிலும் பெரிய மாற்றத்தை உண்டு பண்ணியது.

## இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தம்

1983 கறுப்பு யூலை நாட்டில் ஏற்படுத்திய மாற்றங்கள் போல் 1987 யூலை இந்திய - இலங்கை ஒப்பந்தம், இந்திய ஆக்கிரமிப்பு படை வருகை, (IPKF) போராளிகளின் ஆயுத ஒப்படைப்பு, இடைக்கால அரசு உருவாக்கம் என பல நடந்தேறியது. இடைக்கால அரசு அதிகாரம், ஆயுத ஒப்படைப்பு இவற்றில் எழுந்த முரண்பாட்டால் இந்திய படைக்கும் புலிகளுக்கும் இடையில் யுத்தம் தொடங்கியது.

தமிழீழ மக்கள் தமது தேசிய விடுதலைக்காக நடத்திக் கொண்டிருந்த யுத்தம் மூலோபாய ரீதியில் வளர்ந்ததா? வீழ்ந்ததா என்பதோ, அல்லது புலிகளின் அழிவை இந்தியரசின் தலையீடு தானே காப்பாற்றியது என்பதல்ல இங்கு பிரச்சினை. தமிழீழ தேசிய விடுதலை யுத்தம் வளர்வதும் - தேய்வதும், மீண்டும் வளர்வதும், ஏன் ஒரு வேளை யுத்தம் கைவிடப்பட்டு அரசுடன் சமரசம் அடைவதும் அல்லது இறுதி வெற்றி வரை யுத்தம் தொடர்வதும் தேசிய இன விடுதலை யுத்தத்துக்கு தலைமை தாங்கும் வர்க்கங்களின் அரசியல் இராணுவ கொள்கைகளை பொறுத்த விடயம். அது நம்மவர்களால் மட்டுமே தீர்மானிக்கப்பட வேண்டும்.

தேசிய இனப் பிரச்சினைக்கு முழுமையான அரசியல் தீர்வை முன் வைக்காத, திம்புக் கோரிக்கைகளை கூட ஏற்காத, போராளி இயக்கங்களை மதிக்காத இந்திய - இலங்கை அரசுகள் செய்து கொண்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒப்பந்தத்தை அமுல்படுத்தும் பொறுப்பு இந்திய இராணுவம் எடுத்துக் கொண்டது.

தமிழீழ மக்கள் எந்த அரசியல் கோரிக்கைகளுக் காக போராடுகிறார்களோ, எதை அடைய யுத்தம் செய்கிறார்களோ, அவற்றை ஏற்காது மதிப்பளிக்காது. துரோகம் செய்யும் அரசியல் - இராணுவத் தீர்வுகளை (போராளிகளில் பெரும் பகுதி ஏற்றுக் கொண்டா லும்) ஒப்பந்தங்களை நிராகரிக்கின்ற உரிமை தமிழீழ மக்களுக்கு, அவர்களது நலன்களுக்காக போராடுகின்ற இயக்கங்களுக்கு உண்டு. அதையும் மீறி ஏமாற்று அரசியல் தீர்வை, ஒப்பந்தத்தை பலாத்கார ரீதியில் அமுல்படுத்த வருகின்ற எந்த இராணுவத்தையும் (அன்று துரோக இயக்க இராணுவத்தையும், நாளை புலிகளாக இருந்தாலும் கூட) எதிர்த்து போரிடுவதும் தமிழீழ மக்களின் முழு அரசியல் உரிமையே". இந்திய இராணுவத்துக்கு எதிரான யுத்தம் என்பது அடிப்படை யில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கு எதிரான தமிழீழ மக்களின் அரசியல் யுத்தமேயாகும்.

தமிழீழ தேசிய விடுதலை யுத்தத்தை நசுக்கு கின்ற ஒரு மூன்றாவது நாட்டின் இராணுவத்துக்கு எதிரான யுத்தமாக மாறியது. இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தம். கூடவே அவ்வொப்பந்தம் சிறீலங்கா மக்களின் தேசத்தின் உரிமைகளுக்கும் எதிராக இருந் தது. ஆனால் இந்தியப் படைகள் நேரடியாக சிறீலங் காவில் இறங்காததால் அதில் கைச்சாத்திட்ட சிறீ லங்கா அரசுக்கும் படைகளுக்கும் எதிரான சிங்களமக் களின் போராட்டம் J.V.P. யால் தலைமை தாங்கப்பட் டது. இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு போராட்டம், யுத்தம் இலங்கை மக்களின் கூட்டு போராட்டமாக யுத்தமாக மாற வேண்டியிருந்தது. இந்திய இலங்கைப் படைகளுக்கு எதிரான யுத்தமாக மாறியிருக்க வேண் டும். மாற்றப்பட்டிருக்க வேண்டும். புலிகளும் J.V.P.யும் அவர்களின் குட்டி முதலாளிய அரசியலும் இராணுவ மூலோபாயமும் யுத்த முறையும் அவ்வாறு மாற விடவில்லை. மாறவும் அனுமதிக்காது.

இந்திய ஆக்கிரமிப்பு யுத்தத்துக்கு எதிரான தமிழீழ மக்களின் ஆக்கிரமிப்பு எதிர்ப்பு தேசிய விடுதலை யுத்தம். 1987-கள் வரை சிறீலங்கா அரசுக்கு எதிரான தேசிய விடுதலை யுத்த சூழ்நிலைமைகளில் இருந்த கீழ்வருமாறு வேறுபட்டிருந்தது.

- தேசிய இன ஒடுக்குமுறை யுத்தம் ஒரு உள்நாட்டு யுத்தமாக இருந்தது.

  இந்திய ஆக்கிரமிப்பு யுத்தம் ஒரு அன்னிய நாட் டின் தலையீட்டு யுத்தம்.

- உள்நாட்டு தமிழ்ப் 'பயங்கரவாதத்துக்கு' எதிரானது என இன ஒடுக்குமுறை யுத்தத்தை சிறீலங்கா அரசு கூறியது.

  இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவது, தமி ழர்களுக்கு உதவுவது எனக் கூறி 'சமாதானப்படை என்ற பெயரில் இந்தியரசு ஆக்கிரமிப்பு யுத்தத்தை நடத்த வேண்டியிருந்தது.

- சிறீலங்கா அரசுக்கும் - படைகளுக்கும் எதிரான உணர்வு, தமிழீழ மக்களிடம் நீண்ட காலமாக, பரவலான எதிர்பாக இருந்து வந்தது.

  இந்தியரசு - படைகள் மேல் தமிழ் மக்கள் மத்தியில் நீண்ட காலமாக பரவலான நம்பிக்கை தமிழ்த் தலைமைகளால் ஊட்டப்பட்டிருந்தது இயக் கங்களுக்கு இந்தியா இராணுவப் பயிற்சி, பின் தள உதவி, பணம் என பலவும் செய்து வந்தது. இந்தியப் படைகள் சமாதானமுகமூடி என்பதால் என்பதால், தொடக்கத்தில் தமக்கு எதிராக மக்க ளின் உணர்வுகள் வேகமாக வளரவிடாது பார்க்க வேண்டியிருந்தது.

- சிறீலங்காப் படைகளுக்கு தமிழீழத்தின் தரை - கடல் - ஆகாய வழியிலான யுத்த அனுபவம் இருந்தது.

  இந்தியப் படைகளுக்கு இங்கு பிரதானமாக தரை கடல் வழியிலான யுத்த நடவடிக்கைகள் முதல் அனுபவமாக இருந்தது. சிறீலங்கா இராணுவத்து டன் கூட்டு நேரடி இராணுவ நடவடிக்கை இருக்க வில்லை.

- சிறீலங்கா படைகள் பெருமளவு தெற்குக்கு மாற்றப்பட்டிருந்தது. இராணுவ தலைமைக்கு J.V.P. யை நசுக்கவது பிரதான வேலையாக இருந்தது. இந்தியப் படைகளின் நுழைவுக்கும், இராணுவ நடவடிக்கைக்கும் எதிராக சிறீலங்காவிலும், தமிழீ ழத்திலும் வெகுசன கொந்தளிப்பு போராட்டங்கள் வளர்ந்தது. தமிழ் நாட்டிலும், அய்ரோப்பிய நாடுக ளிலும் இந்தியப் படை பின் வாங்கக் கோரும் போராட்டங்கள், எதிர்ப்புப் போராட்டங்கள் தொடக்கத்திலேயே உருவாகின.

- இந்தியப் படைகள் பஞ்சாப், காஷ்மீர், அசாம், நாகலாந்து, திரிபுரா எனப் பல தேசிய இன விடுதலை இயக்கங்களுக்கு எதிராக யுத்தம் புரிந்த அனுபவம் இருந்தது. பாகிஸ்தான், சீனாவுடன் எல்லை யுத்தங்களை நடத்திய அனுபவமும் இருந் தது. தெற்காசியாவில் அன்னிய நாட்டில் நுழைந்து தேசிய இன விடுதலை இயக்கத்தை ஒடுக்க யுத்தம் புரிவது முதல் அனுபவம்.

- அய்நா சமாதானப் படையில், இந்திய இராணுவம் பங்கு வகிக்கிறது. இந்தியப் படைகள் மட்டும் தனியாக 'சமாதானப் படையாக' வேடமிட்டு தெற்காசியாவில் செயல்படுவது முதல் முறை. இத்தகைய யுத்த சூழ்நிலைமையின் வேறுபாடுகள் சிறீலங்கா இராணுவத்தை விட, இந்திய இராணு வம் (எதிரி) தனது மூலோபாய ரீதியான தாக்குதல் கால கட்டத்தில் கூட, புலிகள் மேல் யுத்த ரீதியாக ஈவிரக்கமற்று, யுத்த வினையாற்றுவதற்கு எல்லைப் படுத்தும் அம்சங்களாக இருந்தன. புலிகளின் பக்கம் இவ்வம்சங்கள் மூலோபாய ரீதியான தற்காப்பில் இருந்தும், இந்திய இராணுவத்தின் மேல் கொரில்லா யுத்த முறையை சிறப்பாக பிரயோகிக்க வாய்ப்பளித்தது. முக்கியமான பாதக அம்சம் ஒன் றும் இருந்தது. சிறீலங்காப் படைகளை எதிர்த்து யுத்தம் புரிகையில் தமிழீழ மக்களின் பக்கம் இருந்து எதிரிக்கு சேவகம் செய்யும் ஒரு துரோக காக்கை வன்னியப் படைக் கூட்டம் இருக்கவில்லை. இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தத்தில் Telo, Plot, EPRLF, Epdp, Endlf, Tulf என்பனகாக்கை வன்னிய கூட்டமாக

www.tamilarangam.net

செயல்பட்டனர். இந்திய இராணுவத்துக்கு எல்லா நிலைகளிலும் உதவினர் - இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு தேசிய விடுதலை யுத்தத்தில், துரோகிகளாக செயற்பட்டன இத்தலைமைகள்.

புலிகளுக்கும் - இந்திய இராணுவத்துக்கும் இடையில் யுத்தம் தொடங்கிய பின்னர் யாழ்ப்பாணத்தை கைப்பற்ற இந்திய இராணுவம் "ஒப்பரேசன் பவான்" நடவடிக்கையை தொடங்கியது. (சூரிய ஒளி - 1-ல் சிறீலங்கா இராணுவம் 'பவான்' இராணுவ நடவடிக்கையில் கடைப்பிடித்த படை முன்னேறுதல் வியூகத்தையே பின்பற்றியது). புலிகள் அப்போதும் தமது தலைமையை, பின்வாங்குதலை பெரு நிலப்பரப்பை நோக்கியே நகர்த்தினர். வவுனியாவும், கிளிநொச்சியும், முல்லைத்தீவும் வட எல்லைப்புற காடுகளும் புலிகளின் பிரதான இராணுவ செயற்படுகளமாக மாறியது. புலிகள் எதிரிக்கு எதிராகப் பல எதிர் தாக்குதல்களையும், போர் நடவடிக்கைகளையும் செய்தனர். கண்ணிவெடித் தாக்குதல்களை மிகச் சுச்சிதமாக நடத்தினர். எதிரியை அசைய வைக்கும் கொரில்லாயுத்த முறையை பயன்படுத்தி (அலைந்து திரியும் கொரில்லா நடவடிக்கையில் புலிகளுக்கு தேர்ச்சியுண்டு) எதிரியை சிறுமுகாம்களில் இருந்து வெளியே கொண்டு வந்து தாக்கினர். அதே போல் நடமாட்டத்தில் இருந்த சிறுபடைப் பிரிவுகள் மீது (செக்சன், பிளட்டூன்) பலபக்க கொரில்லா தாக்குதல்களை நடத்தி வியூகங்களை விட்டு வெளியே வந்த இராணுவத்தை அழித்தனர். இராணுவத்தை பிணைக் கைதிகளாக பிடித்தனர் பீரங்கி வண்டிகளை, கவசவாகனங்களை தற்கொலைப் போராளிகள் மூலம் தகர்த்தனர். புலிகளின் பெண் பிரிவு கொரில்லாப் படைகளும் இவ்யுத்த நடவடிக்கைகளில் சிறப்பான பங்கு வகித்தனர். எதிரி யாழ் நகரை பிடிக்க நிறைய அழிவுகளை சுமக்க நேர்ந்தது. கண்ணி வெடியில் சிக்கி இறந்தவர்கள், கை, கால் இழந்து ஊனமானவர்கள் பெரும் எண்ணிக்கையை தொட்டது. நிறைய நாட்களின் பின் யாழ் எதிரியின் கைவசமானது.

இந்தக் கால கட்டத்திலும் புலிகளால் கிரமமான யுத்த முறைக்கு முன்னேற முடியவில்லை. சிறீலங்கா படைகளால் கழுத்து நெரிக்கப்படும் நிலைக்கு தள்ளப்பட்ட புலிகள் அவ்வளவு விரைவாக வளர்வது கடினமானதும் கூட. இந்திய ஆக்கிரமிப்பு படைக்கு எதிராக நடந்த எழுச்சிகரமான வெகுசன போராட்டங்கள், (தீலிபனின், அன்னை பூபதியின் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம்) கொரில்லா யுத்த முறையைக் கொண்டே தினமும் எதிரிக்கு எதிராக நடத்திய தாக்குதல்களும், எதிரியின் அழிவுகளும் புலிகளை உச்சி குளிர செய்து கொண்டிருந்தது. எதிரி இராணுவ ரீதியிலும் - அரசியல் ரீதியிலும் எவ்வாறு செயல்படுவது என்பதில் குழம்பிக் கொண்டிருந்தான்.

மூலோபாய ரீதியான தாக்குதல் கட்டத்தில் இருந்தபடி தேடுதல் நடவடிக்கையிலும், போர் நடவடிக்கையிலும், சுற்றி வளைப்புக்கான முன்னேறுதலிலும், எதிர் தாக்குதல்களிலும் எதிரி முதலில் இருந்த வேகத்தை குறைத்தான். மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கையில் நின்றான். தந்திரோபாய ரீதியான தற்காப்பு நடவடிக்கையில் அதிக கவனம் செலுத்தினான். புலிகளின் 'எதிரியை அசைய வைக்கும்.' 'உள் இழுத்து செல்லும்' கொரில்லா நடவடிக்கைக்கு பலியாவதை திட்டமிட்டு நிறுத்தினான். தனது முகாம்கள் மீதான புலிகளின் தாக்குதலுக்கு மட்டும் உறுதியாக பதிலடி கொடுத்தான். அரசியல், மனோவியல் காரணங்களை முன்னிட்டு சமாதான படைக்குள் முதல் கட்டமாக முன்னிலை பெற்றிருந்த தமிழ் நாட்டு இராணுவப் படைப்பிரிவுகளை, தமிழ் பேசத் தெரிந்தவர்களை, நடமாட்ட படைகளில் - வெகுசன தொடர்பு அலுவலகம், தொலைத் தொடர்பு, ஆயுதக் கிடங்குப் பொறுப்பு, போக்குவரத்து பிரிவு இவற்றில் இருந்து தந்திரமாக நிறுத்தி முகாமுக்குள் பணியாற்ற வைத்தான். யுத்த முனைகளில் அவ்விடங்களுக்கு பஞ்சாப், கூர்க்கா றெஜிமெண்டை முன் தள்ளினான். புலிகளும் அதற்கு மேல் முகாம்களை தாக்கி அழிக்கும் அளவுக்கு வளரவில்லை. எதிரியின் கண்களுக்கு இப்போ புலிகளும் மக்களும் ஒன்றாக தெரியத் தொடங்கினர். இராணுவ காடைத் தளங்கள் அத்தனையும் அரங்கேற்றம் பெற்றது.

புலிகள், எதிரிக்கு சேவகம் செய்து கொண்டிருந்த துரோக இயக்க படைகளையும், அவர்களின் தற்காலிக - நிரந்தர முகாம்களையும் தாக்குவதில், அழித்தொழிப்பதில் யாழுக்கு வெளியே மும்முரமாக ஈடுபட்டனர். புலிகளின் புதிய கொரில்லாப் படையினர்களின் யுத்த பயிற்சியாகவும் இவை இருந்தது. துரோகிகளின் இராணுவக் கூட்டான 'மூன்று நட்சத்திர' '3 STAR' செயல்பாடுகள் மேல் குறி வைத்து புலிகள் தாக்குதல்களை, தேடுதல் வேட்டைகளை செய்தனர். இதில் துரோக இயக்கங்களின் உறுப்பினர்களது, படையினரது உற்றார், உறவினர், நண்பர்கள், உணவு கொடுத்தவர்கள் என பலர் கடும் சித்திரவதைக்கும் - அழித்தொழிப்புக்கும் உள்ளாகினர் (இதே போல் இத்துரோக இயக்கங்கள் கையோங்கியிருந்த காலங்களில், இடங்களில் அதே போன்று பதில் நடவடிக்கைகள் செய்தனர்) பல அப்பாவிகள் இரண்டு பக்கத்தாலும் பலியாக்கப்பட்டனர். இயக்கங்கள் மேல் மக்களுக்கு வெறுப்பும் வளர்ந்தது. துரோக இயக்கங்களின் சிறிய - பெரிய முகாம்கள் மீதான புலிகளின் தாக்குதல் வெற்றிக்கு, வவுனியாவில் 'முயல் குத்தி' பகுதியிலிருந்த PLOT இயக்க பிரதான இராணுவ முகாம் மீதான தாக்குதல் உதாரணமாக பார்க்கப்படுகிறது.

எதிரியின் 'ஒப்பரேசன் பவான்' இராணுவ நடவடிக்கை வெற்றிக்கு பின் புலிகள் பெருமளவில் காட்டுப்பகுதியை தளமாக்கினர். மூலோபாய ரீதியான தற்காப்பு கட்டத்தின் தோல்வியாக யாழ் தோல்வி இருக்கவில்லை புலிகள் செயற்படா கொரில்லாயுத்த முறைக்கு பின் வாங்கவில்லை. மனிதபலமும், ஆயுதமும் தொடர்ந்து கிடைத்தது. இந்திய ஆக்கிரமிப்பு யுத்தத்துக்கு எதிரான வெகுசன கிளர்ச்சி மனித பலத்தை வழங்கியது. துரோக இயக்க படைகள் மீதான வெற்றிகள், எதிரி மீதான கொரில்லாத் தாக்குதலில் கைப்பற்றப்பட்டவை என நேரடியாகவும் - மறைமுகமாகவும் இந்தியாவின் ஆயுதங்கள், வெடி பொருள்கள், தொலைத் தொடர்புச் சாதனங்கள் - மற்றும் இராணுவ உபகரணங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிடைத்தது. சிறீலங்கா அரசாங்கம் கோடிக் கணக்கில் (10 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.) ஆயுதங்களை அள்ளி கொடுத்தது. இந்திய சார்பு இயக்கங்கள் (துரோக படைகள்) மீதான புலிகளின் இராணுவ தாக்குதலுக்கு சிறீலங்கா இராணுவம் நேரடியான உதவிகளைக் கூடச் செய்தது. இன்று சிறீலங்கா அரசுக்கு எதிராக புலிகளுக்கு மனித பலம், ஆயுத உதவி அள்ளி வழங்கும் அரசியல் - இராணுவ சூழ்நிலமை சாதகமாக இல்லை என்பது கவனிக்கத் தக்கது.

போராளி இயக்கங்களுக்கு இடையிலான அரசியல், அமைப்பு முரண்பாட்டை, பிளவுகளை, பழைய ஆயுத மோதல்களை மறக்க முடியாத யுத்த பிளவுகளாக மாற்றியதிலும், போராளிகளின் ஒட்டு மொத்த இராணுவ - அரசியல் பலத்தை சிதைக்கும், மக்களை நம்பிக்கை இழக்க வைக்கும் மாபெரும் நூரநோக்கமுள்ள அரசியல் - இராணுவ யுக்தியை இந்தியரசும், சிறீலங்கா அரசும் திட்டமிட்டு செய்தன. தமிழ்த் துரோக தலைமைகளின் உதவியை, சில சமயங்களில் புலிகளையும் இந்த சதிதிட்டத்துக்கு எதிரி கச்சிதமாக பயன்படுத்தினான்.

அதே வேளை இந்தியரசுக்கும் - புலிகளுக்கும் இடையிலான முரண்பாட்டையும், தமிழீழ மக்களுக்கும் - சிறீலங்கா மக்களுக்கும் இடையில் ஏற்படக் கூடிய, இரண்டு அரசுகளுக்கும் எதிரான போராட்ட அய்க்கியத்தை - யுத்த ரீதியான கூட்டை தற்காலிகமாக வேனும் தடுத்து விட்டதில் சிறீலங்கா அரசு. இந்திய அரசை விட திறமையாக நடந்து கொண்டது இதற்கு புலிகளின் தலைமையை நன்றாக சரியான தருணத்தில் யுத்த ரீதியிலும் பயன்படுத்தி கொண்டது. சிறீலங்கா மக்களுக்கு இந்திய எதிர்ப்பாளனாக பிரேமதாச அரசு நடித்தது. மக்களின் இந்திய விரிவாக்க எதிர்ப்பை அரசு எதிர்ப்பை, ஆயுதப் போராட்டமாக மாற்றிய JVP இன் தலைமையை கழுத்தை நெரித்து கொன்றது, புலிகளுடன் ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்த கூட்டை இரகசியமாக நிதி, ஆயுதம் வழங்கி கட்டி காத்தது. இலங்கை மக்களுக்கு கூட இந்திய எதிர்ப்பாளனாக சிறீலங்கா அரசு நடித்து காட்ட முடிந்தது.

இந்திய ஆக்கிரமிப்பு படையின் பின் வாங்கலை பின்வருவன விரைவுபடுத்தியது.

1. இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தத்தை புலிகள் தொடர்ந்தும் நடத்தியது தமிழ்த் துரோகப் படைகளை முன்னால் நிறுத்தி, பின்னால் இருந்து ஆக்கிரமிப்பு யுத்தத்தை நடத்துவதில் ஏற்பட்ட தோல்வி.
2. சிறீலங்காவிலும் இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு வெகுசன போராட்டங்கள் வளர்ந்தது. இதனால் சிறீலங்கா அரசு கூட இந்தியப் படை பின் வாங்க கால வரம்பு விதித்தது.
3. தமிழ் நாட்டிலும் உலகளவிலும் இந்தியப் படை பின் வாங்க கோரிய வெகுசனப் போராட்ட வளர்ச்சி.
4. புலிகளுக்கும் - சிறீலங்கா அரசுக்கும் இடையில் ஏற்பட்ட அரசியல் இராணுவ ஒத்துழைப்பு கூட்டு.
5. இந்திய இராணுவத்தின் வரலாற்றில் குறுகிய காலத்தில் சந்தித்த பெருமளவு படையினரின் உடல் - ஊன இழப்பும், அழிவும்.
6. உலகளவில் இந்திய இராணுவத்துக்கும் - அரசுக்கும் ஏற்பட்ட அவமானம்.
7. இந்திய மத்திய அரசு தலைமையில் ஏற்பட்ட மாற்றம், மாநில அரசின் நிர்ப்பந்தம்.

இவை எல்லாம் சேர்ந்து இந்திய இராணுவத்தை தமிழீழத்தை விட்டு படிப்படியாக பின் வாங்க வைத்தது. IPKF -ஆல் துரோக தலைமைகளின் உதவியுடன் துப்பாக்கி முனையில் நடந்த தேர்தலும், பொம்மை அரசும், அதனால் உருவாக்கப்பட்ட "தமிழ்த்தேசிய மீட்புப்படையும்" நின்று பிடிக்க முடியவில்லை. புலிகளின் உக்கிரமான அழித்தொழிப்புக்கு முகங் கொடுக்க முடியாத நிலையில், சிறீலங்கா படைகளும் புலிகளுக்கு உதவிக் கொண்டிருந்ததால், "19-அம்ச கோரிக்கைகளை" "மீண்டும் தமிழீழத்தை" திருகோணமலையில் அறிவித்தனர். வரதராஜ பெருமாளும், துரோக படைகளின் தலைமைகளும், பாது காவலர்களும் மீண்டும், ஒரு துரோகப் படை தயாரிப்புக்காக இந்தியப் படைகளுடன் இந்தியாவுக்கு பின் வாங்கினர்.

இங்கும் புலிகள், வடக்கு - கிழக்குமாகான "தற்காலிக அரசை" நிலைகுலையச் செய்வதற்கும், துரோக இயக்கங்களை இந்தியாவுக்கு ஓட விரட்டியதிலும், சிறீலங்கா அரசின் உதவியை இராணுவ ரீதியில் பயன்படுத்தினர். இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தத்தை நடத்தவும், துரோக தமிழ்ப் படைகளை அழிக்கவும் புலிகள் சிறீலங்கா அரசுடன் செய்திருந்த அரசியல் இராணுவக் கூட்டு உலகின் மிகச் சிறந்த இராஜதந்திரமாக, அய்க்கிய முன்னணி நடைமுறையாக பார்ப்பவர்களே!

இன்று சிறீலங்கா அரசு, புலிகளை தமிழீழ மக்களின் போராட்டத்தை போரை நசுக்க, அதே தமிழீழ துரோக இயக்க படைகளையும், இந்தியாவின் அரசியல் இராணுவ உதவிகளையும் எப்படி பயன்படுத்துகிறது? புலிகளை விட சிறீலங்கா அரசு மிகச் சிறந்த உலக இராஜ தந்திரி - அய்க்கிய முன்னணி நடைமுறையாளன் என ஏற்றுக் கொள்வோமா?

இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தத்தை தமிழீழத்தில் மேலும் வளர்த்தெடுப்பதிலும், துரோக தமிழ் தலைமைகளை திட்டமிட்டு அன்னியப்படுத்தி தேவையான போது அழித்தும், அவ் இயக்கங்களில் இருந்த ஆயிரக் கணக்கான போராளிகளை தேசிய விடுதலை யுத்தத்தின் பக்கம் வென்று எடுப்பதிலும், துரோகிகளை தேடும் வேட்டையில் அப்பாவி மக்கள் மீது நடந்து கொண்ட முறையிலும் புலிகள் இழைத்த தவறுகள் கொஞ்ச நஞ்சமல்ல. இந்திய ஆக்கிரமிப்புக்கும், சிறீலங்கா அரசுக்கும் எதிராக, பொது எதிரிக்கு எதிராக சிறீலங்காவின் மக்கள் போராட்டங்களை திட்டமிட்டு நீண்டகால நோக்கில் ஆதரவளிப்பதற்கும் அவற்றுடன் ஒன்றுபடுவதற்கும் எதிராகப் புலிகளின் தலைமை நடந்து கொண்ட அரசியல் இராணுவ தவறும் சிறியதல்லவே. இவற்றுக்கு காரணம் புலிக

லின் குட்டி முதலாளித்துவர்க்க அரசியலும், குறுகிய கால இராணுவ வெற்றி கண்ணோட்டமுமே தான்.

புலிகள் அன்று இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தத்தை இறுதி வரை நடத்தினார்கள். கொரில்லா யுத்தத்தில் அன்று தமக்கு தெரிந்த அத்தனை திறமைகளையும் பயன்படுத்தி யுத்தத்தின் மூலம் இந்திய ஆக்கிரமிப்பாளனை தமிழீழ மக்களுக்கு அடையாளம் காட்டினர்.

யாழ்ப்பாணத்தை மீண்டும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான இராணுவ ரீதியான இராஜதந்திரங்களை புலிகள் கடைப்பிடித்தனர். மூலோபாய ரீதியாக தற்காப்பு கட்டத்தில் இருந்த கொண்டே IPKF இன் பின் வாங்குதலையும், சிறீலங்கா இராணுவத்தின் எல்லைப்படுத்தப்பட்ட சக்தியையும் சரியாக பயன்படுத்தி யாழ்ப்பாணத்தை எதிரி முடமாக்கப்பட்ட பிரதேசமாக மாற்றினர். புலிகளின் இந்த இராணுவ தந்திரத்தை அதற்காக அரசுடன் ஓராண்டு நடத்திய பேச்சு வார்த்தையை, தேனிலவை மெச்சுவோமாக.

இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு தேசிய விடுதலை யுத்தம் மூலோபாய ரீதியாக எதிரி தனது முதலாவது கட்டத்தில் இருந்தபடியே நாட்டைவிட்டு பின் வாங்கினான். புலிகளும் தமது மூலோபாய ரீதியான முதலாவது கட்டத்தில் இருந்தபடியே எதிரியை பின் வாங்க வைத்ததுடன், யாழில் மட்டும் சிறீலங்காப் படைகளை முகாமுக்குள் நேரடியாக முடமாக்கி தமது கட்டுப்பாட்டு பிரதேசமாக, எதிரி முடமாக்கப்பட்ட பிரதேசமாக மாற்றினர். இத்தகைய ஒரு அரசியல் - இராணுவ யுத்த நிலைமை விதிவிலக்காக நடக்கக் கூடியதே என்பதற்கு இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான புலிகளின் யுத்தம் ஒரு எடுத்துக் காட்டு.

## தேசிய விடுதலை யுத்தம் இரண்டாவது தடவையாக மூலோபாய ரீதியான இரண்டாவது கட்டத்திற்குள்

IPKF முழுவதும் பின் வாங்கியது. யாழ்ப்பாணத்தின் அதே பழமை இராணுவ - கடற்படை முகாம்களில் சிறீலங்கா படைகள் மிக குறைந்த எண்ணிக்கையில் இருந்தன. புலிகள் இராணுவ முகாம்களை அழித்து தமது கட்டுக்குள் கொண்டு வருமளவுக்கு இராணுவ பலத்தை பெற்றிருக்கவில்லை. ஆனால் முகாம்களுக்குள் இருந்த இராணுவம் வெளியே வரவிடாதபடி தாக்கும் - தடுக்கும் முறையில் பாதுகாப்பு அரண்களை, கண்ணி வெடிகளை, கண்காணிப்பு நிலைகளை உரிய இடங்களில் ஏற்படுத்தினர். யாழில் இராணுவத்தை முகாமுள் முடக்கும் தயாரிப்புக்களை விரைவு படுத்தினர்.

எதிரியும் புலிகளின் இந்த தயாரிப்புக்களை அறிந்தான். எதிரி தெற்கில் இருந்த படைகளை உடனடியாக யாழுக்கு மாற்ற முடியாத நிலைமை, J.V.P தலைமை அழிக்கப்பட்டபின் பதிலடியாக J.V.P கொடுக்க கூடிய அதிர்ச்சி நடவடிக்கைகளை சமாளிக்கவும் - J.V.P யை பூண்டோடு அழிக்கவும் தயார் நிலையில் இருக்க வேண்டியிருந்தது. கூடவே புலிகளுடன் நடத்திவந்த பேச்சு வார்த்தையை பயன்படுத்தி இராணுவ தயாரிப்பை மேலும் செய்ய வேண்டிய தேவை. 'புலிகளைப் போல்' அரசுக்கும் தேவைப்பட்டது. எதிரி கிழக்கில் தனது கட்டுப்பாட்டை பேணிக் கொள்வதும், வடக்கில் தற்காலிகமாக முடங்கிகிடப்பதும் ஒரே வழியானது.

புலிகள் வடக்கைப் போல் கிழக்கிலும் கொரில்லாக்களின் சுதந்திர நடமாட்டத்தை உருவாக்க முயன்றனர். எதிரியின் படைகள் வடக்குக்கு மாற்றப்படுவதை தடுக்கவும், கிழக்கில் தன்னைப் பலப்படுத்த எதிரி உருவாக்கி வந்த பொலிஸ் நிலையங்கள், கிழக்கில் மிச்ச மீதமிருந்த தமிழ்த் துரோக படைகளுடன் எதிரி ஏற்படுத்த தொடங்கிய உறவுகள், புலிகளை வேகமாக இயங்கத் தூண்டியது.

யாழ்ப்பாணத்தில் எதிரி படைகளை பலப்படுத்துவதற்கு முன், எதிரி முகாமை விட்டு வெளியில் வருவதை தடுப்பதற்கான தயாரிப்புக்களில் முன்னிலை பெற்ற புலிகள், அம்பாறை பொலிஸ் நிலைய தாக்குதலுடன் 91 யூனில் மீண்டும் யுத்தம் உருவானது. தமது முன் திட்டப்படி கிழக்கில் நூற்றுக்கணக்கான பொலிசாரை புலிகள் பிணைக் கைதிகள் ஆக்கினர். கிழக்கிலும், வடக்கின் எல்லைப் புறங்களிலும் தொடர்ச்சியான கொரில்லா தாக்குதல்களை, தந்திரோபாயமான போர் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். யாழில் இராணுவம் முகாமை விட்டு வெளியே வந்தால் என்ன நடக்கும் என அச்சுறுத்தும் இராணுவ முன் செய்கைகளை வெளிப்படுத்தினர்.

1987-ல் மூலோபாய ரீதியாக யுத்தத்தில் முன்னேறி முதல் கட்டத்தை அடைந்த எதிரி IPKF வருகையால் ஏற்பட்ட மொத்த யுத்த சூழ்நிலை மாற்றங்களால், IPKF பின் வாங்கிய பின்னர் தனது நிலையை தக்க வைக்கும் தயாரிப்பில் ஏற்பட்ட தோல்வியால் மீண்டும் 91-ல் மூலோபாய ரீதியாக பாதுகாப்பு கட்டத்துக்கு இறங்க நேரிட்டது. 85-ல் எதிரி முகாமுக்குள் முடங்கிய முறைக்கும் இப்போது முடங்கிய முறையும் வேறுபட்டது. ஆனால் எதிரி சிறீலங்காவில் தோன்றிய ஆயுத எழுச்சியை மூலோபாய ரீதியாக முதல் கட்டத்திலேயே நசுக்கிவிட்ட வெற்றியும், புலிக்கும் இந்தியப் படைகளுக்கும் இடையில் மோதலை உருவாக்கியதிலும் வெற்றி பெற்றிருந்தான். அதே போல் புலிகள் 87-இல் மூலோபாய ரீதியாக முதலாவது கட்டத்துக்கு தாம் தள்ளப்பட்ட போதும், இந்திய ஆக்கிரமிப்பு படையை பின் வாங்க செய்த வெற்றியுடன், யாழில் மீண்டும் சிறீலங்கா படைகளை முடக்கிய வெற்றியும் பெற்றிருந்தனர்.

புலிகள் மூலோபாய ரீதியான எதிர் தாக்குதலுக்கான தயாரிப்பு கட்டத்தின் தொடக்கம் முதல் கிழக்கல், வட எல்லைப் புற பகுதிகளில் தந்திரோபாய ரீதியான தாக்குதல்களை இராணுவ முகாம்கள் மீது நடத்தினர். பொலிஸ் நிலையங்கள் மேலான போர் நடவடிக்கைகள் வெற்றியளித்தன. எதிரி அவற்றை மூட வேண்டியளவுக்கு பின் வாங்கினான் கிழக்கில் இருந்த முகாம்களை பாதுகாப்பது இராணுவத்தின் பெரிய வேலையாக இருந்தது. வடக்குக்கு இராணுவத்தை தொடர்ந்து அனுப்பினால் கிழக்கையும் புலிகளின் கைகளில் ஒப்படைப்பதற்கு சமன்

www.tamilarangam.net

ஆகிவிடும். இதனால் யாழை பலப்படுத்தும் வேலையை தற்காலிகமாக நிறுத்தினான். முகாமை விட்டு வெளியே செல்வதை தந்திரோபாயமான தற்காப்பாக அமுல்படுத்தினான்.

'புலிகளின் யாழ் இராச்சியம்' வடதமிழீழம் அறிவிக்கப்பட்டது. யாழின் சிவில் சமூக நிறுவன கட்டுப்பாடுகள் புலிகளிடம் வந்தது. நிதி, நீதி, பொலிசு, சட்டம், வரி, போக்குவரத்து, ஒலி, ஒளிபரப்பு, சொத்துக்கள் தேசியவுடமை (புலியுடமை) என புலிகளின் தனி இயக்க கட்டுப்பாடு உருவானது. பிரபாகரன் தேசியத்தலைவராக பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட்டார். புலிகளே தமிழீழ போராட்டத்தின் ஒரே இயக்கமாக காட்டப்பட்டது. வெளியுறவு செயலகங்கள் உருவாகின. தமிழீழ அரசு பற்றிய புலிகளின் பொருளாதார, அரசியல், பாதுகாப்பு கொள்கைகள், அரசமைப்பு சட்டங்கள் யாழ் இராச்சியத்தில் அமுலுக்கு வரத் தொடங்கியது. சிறீலங்கா அரசின் இனவாத சிவில் சமூக நிறுவன கட்டுமானத்தை, சீரழிந்த சட்ட அமுலாக்கலுடன் ஒப்பிடுகையில் (குடித்தடைச் சட்டம் பெண்களின் சுதந்திரமான நடமாட்ட பாதுகாப்பு...) புலிகளின் சட்ட அமுல் வடிவங்கள் ஒரு புறம் இன ஒடுக்குமுறையில் இருந்து விடுபட்ட சுதந்திரத்தையும், மறுபுறம் ஒரு இராணுவ சர்வாதிகார அமைப்பின் தோற்றத்தையும் வெளிப்படையாக மக்களுக்கு காட்டியது.

ஒரு விடுதலை யுத்தத்தில் மூலோபாய ரீதியான இரண்டாவது கட்டம் நீண்ட காலங்களை கொண்டது. நமது எதிர்த் தாக்குதலுக்கான தயாரிப்பு என்பது இராணுவம், பொருளாதாரம், அரசியல் என எல்லா வற்றிலும் தயாரிப்பை கோருவது. ஒரு அமைதியான கால கட்டமல்ல இது இராணுவ ரீதியில் தாக்குதல்களால், போர் நடவடிக்கைகளால், எதிரியை சில இடங்களில் நிர்மூலமாக்கும் இராணுவ நடவடிக்கைகளால் நிறைந்து காணப்படும் கட்டம், எதிரி முடக்கப்பட்ட பகுதிகளில் மூன்று துறைகளிலும் தயாரிப்பு வளர வேண்டும். எதிரிக்கும் நமக்கும் போட்டி நடக்கும் பகுதிகளில் தந்திரோபாய ரீதியான தாக்குதல்கள் வளர்வதும், எதிரியின் கட்டுப்பாட்டு பகுதியில் தற்காப்பு ரீதியான கொரில்லா தாக்குதல்கள் உருவாகி வளர வேண்டும். இதே போல் எதிரியும் தான் இரண்டாவது கட்டத்தில் தோற்றால் ஒரே வழி பின்வாங்குவது யுத்தத்தில் தோல்வியடைவது என்பதால் எதிரி மூலோபாய ரீதியான பாதுகாப்பில் நீண்ட காலம் இருந்து கொண்டு தனது பலவீனங்களை தவறுகளை மூன்று துறைகளிலும் தன்னை தயார்படுத்துவான். தான் முதலாவது கட்டத்துக்கு மீண்டும் திரும்புவதற்கு முழு அக்கறை எடுப்பான்.

"பழைய குருடி கதவைத் திறவடி" என்பது போல் 85-களில் யுத்தம் மூலோபாய ரீதியாக இரண்டாவது கட்டத்துள் நுழைந்த போதும் 91-இல் மீண்டும் யுத்தம் மூலோபாய ரீதியாக இரண்டாவது கட்டத்துள் நுழைந்த போதும் இருந்த இராணுவ - அரசியல் சூழ்நிலைமைகளை, இருபகுதியிலுமான இராணுவ சமனிலையை கணிப்பதில் புலிகள் தவறு இழைத்தனர். புலிகள் தங்களின் சிறப்பான யுத்த பங்களிப்பை நினைத்து சந்தோசம் அடைந்தது தவறில்லை. அதீதமாக தமது பலத்தை கணித்தனர். யாழ் மீதான தமது கட்டுப்பாட்டை யுத்தத்தின் முடிந்த முடிவாக கருதினர். யுத்தம் மூலோபாய ரீதியாக மூன்றாவது கட்டத்தில் இருப்பதாக நினைத்து செயல்பட்டனர். பிரச்சாரம் செய்தனர். யாழ் மீண்டும் தம் கையை விட்டு போகலாம் எதிரி கைக்கு என்பதை கனவிலும் ஏற்க மறுத்தனர். யுத்தத்தின் வளர்ச்சி - வீழ்ச்சி விதிகளை அறியாது இதுதான் 'இறுதியுத்தம்' என்றனர்.

### யாழ்ப்பாணம் ஒரு விடுதலைப் பிரதேசம் அல்ல, எதிரி முடமாக்கப்பட்ட பிரதேசம், புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசம்

யாழ்ப்பாணம் ஒரு விடுதலைப் பிரதேசமாக இருக்க வேண்டின், யாழுக்குள் உள்ள எதிரியின் முகாம்கள் சிறியதே பெரியதோ எதிரி நிர்மூலமாக்கப்பட்டு முகாம்கள் நமது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். அல்லது நிரந்தரமாக அழிக்கப்பட வேண்டும். தரை, கடல் என புவி அமைப்பை பொறுத்து விடுதலைப் பிரதேசத்துள் எதிரி நுழைவதற்கு இயற்கையாகவே கடினமான பகுதிகளில் எமக்கு சாதகமான செயற்கையான பாதுகாப்பு மற்றும் எதிர்த் தாக்குதல் தயாரிப்பு நிலைகளை கொண்ட பகுதியில் எமக்கும் எதிரிக்கும் இடையிலான எல்லைச் சாவடி இருக்க வேண்டும். ஒரு வேளை எதிரி தனது வாழ்வா - சாவா போரில் எவ்வளவு இழப்பை சந்தித்தும் உள்ளே நுழைய தயாரானால் அவனது நுழைவை தடுக்கவும், முன்னேறுதலை நிறுத்தவும் இயற்கையான, செயற்கையான வலுவான இராணுவ எதிர் தாக்குதல் அரண்கள் நம்மிடம் இருக்க வேண்டும். நமது ஆயுதங்கள், படை வடிவங்கள், வியூகங்கள் (கனரக ஆயுதங்கள் உட்பட) எதிரி நுழைக்கூடிய வழிகளில் எப்போதும் தயார் நிலையில் இருக்க வேண்டும். தேவைப்படின் உதவிப்படைகள் வந்து சேர வழி இருக்க வேண்டும். விடுதலைப் பிரதேச மக்கள் குறித்த வயது எல்லைக்கு மேல் எல்லாரும் ஆயுதப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

மக்களின் ஆயுதப் படைகள் கட்டப்பட்டிருக்க வேண்டும். எதிரிக்கு எதிராக தேவைப்படும் பொழுது மக்கள் உணர்வு பூர்வமாக அல்லது அழைப்பின் பேரில் மக்களின் ஆயுதப் படைகளில் போர் புரிய தயாராக இருக்க வேண்டும். விடுதலைப் பிரதேசத்துள் எதிரி நுழைந்தால் மக்கள் தமது சொந்த மண்ணும் வாழ்வும் பறிபோவதாக உணர்ந்து போர் வீரர்கள் அளவுக்கு யுத்த முனையில் தேர்ச்சியுடன் பங்காற்ற முடியாவிட்டாலும், போர் வீரர்களின் ஒரு கையாக செயல்படுமளவுக்கு மக்கள் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். யாழ் மக்கள் விமானக் குண்டு வீச்சுக்கும், பீரங்கி குண்டு தாக்குதலிலும் தம்மை தற்காத்து கொள்ள பதுங்கு குழிகளை அமைப்பதிலும், எச்சரிக்கையுடன் பதுங்கி கொள்வதற்கும் புலிகளால் பயிற்சி அளிக்கப்பட்டிருந்தனர். மற்றப்படி யுத்தத்தின் பார்வையாளர்களாகவே இருக்க பயிற்றுவிக்கப்பட்டனர். "புலிகள் விடமாட்டார்கள். பார்த்துக் கொள்வார்கள்" உணவும், பணமும், கொடுக்கவும், பாதுகாப்பு அரண்களுக்கு பனங்குத்தி வெட்டி அடுக்கவும், மண் மூட்டை அடிக்கவும், மாவீரர் கல்லறை

www.tamilarangam.net

கள் கட்டவும் ஆன கடமைகளே மக்களுக்கு சொல்லிக் கொடுக்கப்பட்டது. ஆகக் கூடியது எதிரியின் தாக்குதலை கண்டதும் அகதிகளாக வெளியேற வைத்து சர்வதேச அபிப்பிராயத்தை ஆதரவை தேடுவது புலிகளின் வேலையாக இருந்தது.

விடுதலைப் பிரதேச மக்களுக்கு தொடர்ச்சியான இராணுவ - அரசியல் விழிப்புணர்ச்சிப் பயிற்சிகள், பள்ளிகள் நடத்த வேண்டும். பொருளியல் வாழ்நிலைமையில் எதிரியின் பொருளாதார தடைகளைத் தாங்கி கொள்ளவும், சுய உற்பத்தியிலும் கவனம் செலுத்த வேண்டும். புலிகள் இதில் ஓரளவு வெற்றி பெற்றார்கள். ஆனால் கடத்தல் பொருள்களின் விலையை கட்டுக்குள் வைத்திருப்பதில், பணக்காரர்கள் மட்டுமல்ல ஏழைகளும் வாங்கும் ஏற்பாட்டை செய்யவில்லை. வெளிநாட்டு பணம் உள்ளவர்களால் தாக்கு பிடிக்க முடிந்தது. மொத்தத்தில் பொருளியல் வாழ்நிலையில் இருந்து வந்த ஏற்றதாழ்வு, சமூக சமத்துவம் இன்மை (புலிகளாக மாறுவதில் பார்க்கப்படவில்லையே தவிர மற்றைய) அனைத்து சமூக நடவடிக்கையிலும் தொடர்ந்தது. இந்த பொருளியல் ஏற்ற தாழ்வை நீக்க, சமூக, சமத்துவத்தை ஏற்படுத்த விடுதலைப் பிரதேச அரசு திட்டமிட்டு செயல்பட வேண்டும். அப்போது தான் எதிரியின் கட்டுப்பாட்டு பகுதியிலுள்ள தமிழ் மக்கள், தம்மை விட சிறந்ததான சுதந்திரமான உரிமைகளை வாழ்க்கையை அனைத்து நிலைகளிலும், விடுதலைப் பிரதேச மக்கள் அனுபவிப்பதை பார்ப்பார்கள். யாழில் இருந்த பெரும்பான்மை மக்களின் மனநிலை என்னவாக இருந்தது? யாழுக்கு வெளியே வாழும் தமிழர்களின் வாழ்க்கை மேலானது எனக் கருதினார்கள். புலிகளின் எல்லைச் சாவடியை தாண்டி போய் வர முடியாதா? என்ற ஏக்கம் இருந்தது. விடுதலைப் பிரதேசத்தின் குணாம்சங்களில் எவற்றை எல்லாம் புலிகளின் யாழ் இராச்சியத்தில் காண முடிந்தது சிந்தியுங்கள்.

விடுதலை யுத்தத்தில் இராணுவ ரீதியில் ஒரு விடுதலைப் பிரதேசம் எப்படி இருக்க வேண்டும். அரசியல் பொருளியல் அரசமைப்பு ரீதியில் எப்படி இருக்க வேண்டும். யாழ்ப்பாணம் ஒரு உ+ம் என கொள்ள முடியாது. மூன்று புறமும் கடல், சிறுபகுதி நிலத்தொடர்பு யாழ் ஒரு பெரிய குடாநாடு. நட்ட நடுவில் வடக்கின் முப்படைகளுக்கும் தலைமையகமான மிகப் பெரிய பலாலி இராணுவ முகாம் உள் இருக்க, காரை நகர் கடற்படை முகாம், ஆணையிறவு, பூனநகரி, ஊர்க்காவத்துறை இராணுவ முகாம், குடாவை சுற்றியிருக்க, யாழின் சிவில் சமூக நிறுவனங்களின் கட்டுப்பாட்டை மட்டும் பார்த்து விடுதலைப் பிரதேசம் என புலிகளும் - மற்றவர்களும் பிரச்சாரப்படுத்தினர். தவறான யுத்த கணிப்பீட்டில் இருந்தனர்.

யாழ் எதிரியை முடமாக்கிய பிரதேசம் என்பதே உண்மை எதிரி எப்ப வேண்டுமானாலும் தன்னை பாதுகாப்பு கட்டத்தில் தயாரித்துக் கொண்டு வெளியே வருவான் என்பது பல தடவை நிரூபிக்கப் பட்டுள்ளது. ஒப்பறேசன் லிபறேசன், பவான், முன்னேறிப்பாய்தல், சூரிய ஒளி 1-2, என எல்லாவற்றிலும், யாழை கைப்பற்றும் இராணுவ வியூகத்தை தீர்மானிக்கும் தொடக்க புள்ளியாக பலாலி இராணுவ முகாம் இருக்கிறது. நாலாபுறமும் படைகள் முன்னேற முடியும். எதிரியை தடுத்து நிறுத்த இயற்கையான பூகோள அமைப்பு, செயற்கை தடைகளுக்கு தயாரிப்பு எங்கும் இல்லை. யாழ்ப்பாணத்தை துண்டு துண்டாக எதிரி கைப்பற்றவும், கடற்கரையோர முகாம்களில் இருந்தும் பலாலி முகாமின் மையத்தில் இருந்தும் நம்மை சுற்றி வளைக்க இவை எதிரிக்கு அனுகூலமாக இருக்கிறது.

பலாலி முகாம் அழிக்கப்பட்டாலும், யாழ்ப்பாணத்தை ஒரு விடுதலைப் பிரதேசமாக மாற்றுவது காரிய சாத்தியமா என்பதும், ஒரு வேளை விடுதலைப் பிரதேசமாக மாற்றப்பட்டாலும் நீண்ட கால யுத்த நோக்கில், யாழின் பூகோள நிலைமையும், சமூக பொருளாதார அரசியல் காரணிகளும் எத்தனை வருடங்களுக்கு விடுதலைப் பிரதேசமாக நீடித்து நிற்க அனுமதிக்கும்? தேசிய விடுதலை யுத்தத்தில் யாழ்ப்பாணத்தை தான் மீண்டும் மீண்டும் முதல் நிலை விடுதலைப் பிரதேசமாக பார்க்க வேண்டுமா? எதிரி முடமாக்கப்பட்ட பிரதேசத்தை எப்படி விடுதலைப் பிரதேசமாக்க முடியும். அதற்கான இராணுவ வழிகள் என்ன என்பது பற்றியும், இராணுவ மூலோபாயத்தை வகுப்பதில் அக்கறையுள்ளவர்கள் சிந்திக்கவும் ஆராயவும் வேண்டிய வேளையிது. சிந்தியுங்கள்.

எதிரி மிகப் பொறுமையாக மூலோபாய ரீதியான பாதுகாப்பு கட்டத்தில் இருந்தான். புலிகளைப் பற்றி நன்றாக படித்தான். இராணுவ அரசியல் ரீதியில் தன்னை தயார்படுத்தினான். புலிகளுடன் முரண்பட்டவர்களை மெது மெதுவாக இரண்டு முறையிலும் தனது நண்பர்களாக்கினான். சிறீலங்காவின் நிலைமைகளை சீரமைத்தான். இராணுவத்தை தெற்கிலிருந்து வடக்க, கிழக்குக்கு படைப் பகுப்பு செய்தான், கிழக்கில் துரோக தமிழ்த் தலைமைகளின் உதவியுடன் தனது இராணுவ நடவடிக்கைகளை புலிகள் மேல் முடுக்கினான். அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களை தனது கட்டுப்பாடுகள் புலிகளின் பாரிய எதிர்ப்பின்றி கொண்டு வந்தான். EPDP, EPRLR, TELO போன்ற இயக்கங்களின் அரசியல் அரசு நிர்வாக பங்களிப்புக்களை ஊக்குவித்து புலிகளுக்கும் மக்களுக்கும் இடையிலான 'இன உணர்வு உறவுகளை' பலவீனமடையச் செய்தான். இதே போல் PLOT TELO உதவியுடன் வவுனியா மன்னார் மாவட்டங்களின் நகர்ப்புற கட்டுப்பாட்டை புலிகளிடம் இருந்து விடுவித்தான்.

தேசிய விடுதலை யுத்தத்தில் எதிரிக்கு 91-க்கு பின் கிடைத்த மிகப் பெரிய சாதகமான அம்சம் மூலோபாய ரீதியாக வீழ்ந்த தன்னை, தமிழர்களை கொண்டே தமிழர்களை அழிக்கும் போராட்டத்தை, பலவீனப்படுத்தும் நடவடிக்கைகள் மூலம் மீண்டும் மூலோபாய ரீதியாக தான் எழுந்திருக்க முயன்றான். அதற்கு "புலிகளே தமது பிரதான எதிரி" என்ற முடிவுக்கு வந்த எல்லாத் தமிழர்களையும், இயக்கங்களையும் எதிரி பயன்படுத்தினான். புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த தீவுப் பகுதிகளை மீண்டும் ஆக்கிரமிக்கும் இராணுவ நடவடிக்கையை, Amphibious தாக்குதல் நடத்தினான். வெற்றியடைந்தான் மிகத் தந்திரமாக துரோக குழுக்களில் ஒன்றான இராணுவ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரீதியில் எதிரியுடன் முழுக்க ஒத்துழைத்த EPDP இன் கைகளில் தீவுப்பகுதியின் சிவில் சமூக கட்டுப் பாட்டை ஒப்படைத்தான். இராணுவ கட்டுப்பாட்டை தனது தலைமையில் கூட்டாக செய்தான். புலிகளிடம் இருந்து நிலத்தை கைப்பற்றுவது தனது சிங்கள ஆட்சி அதிகாரத்துக்கு அல்ல "தேசிய நீரோட்டத்தில் உள்ள நல்ல தமிழர்களின் கைகளில் ஒப்படைக்கவே" என உள்நாட்டிலும் - வெளிநாட்டிலும் பிரச்சாரம் செய்தான். புலிகளை அரசியல் ரீதியில் மக்களிடம் இருந்து அன்னியப்படுத்தும் வேலையில் அரசியல் தந்திரோபாயமாக தமிழ்த் துரோக குழுக்களை பயன் படுத்தி செய்தான். யாழ்ப்பாணத்துக்கு வெளியே புலிகளை இராணுவ ரீதியாக செயற்படா நிலைக்கு தள்ளும் - பலவீனப்படுத்தும் வேலையை எதிரி தானே செய்தான். தீவுப்பகுதியின் தோல்வி புலிகளை மூலோபாயரீதியான தோல்விக்கு தள்ளவில்லை. ஆனால் எதிரி மூலோபாய ரீதியான பாதுகாப்பு கட்டத்தில் இருந்து தந்திரோபாய ரீதியாக நடத்திய தாக்குதலின் வெற்றியாக அமைந்தது.

புலிகள் எதிர் தாக்குதலுக்கான தயாரிப்பு கட்டத் தில் யாழில் சொந்த இராணுவ தொழில் நுட்பவியலா ளர்களை கொண்டு கைக்குண்டுகளும், தோட்டாக்க ளும், சிறிய மோட்டார்களும் தயாரித்தனர். துப்பாக்கி களை பழுது பார்த்தனர். இவற்றில் தொழில் நுட்பம் வளர்க்கப்பட்டது. இராணுவ மருத்துவமனை, இரா ணுவ தலைமையகம், தொலைத்தொடர்பு தலைமைய கம் நிலத்தின் மேலும், பாதாளத்திலும் அமைத்தனர். இரகசிய இராணுவ கிட்டங்கிகளை ஏற்படுத்தி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்தனர். இராணுவ பயிற்சி பள்ளிகளை அமைத்தனர்.

உள்நாட்டு மூலவளங்களை பயன்படுத்தி பொரு ளாதார திட்டங்களை ஊக்குவித்தனர். எதிரியின் பொருளாதார தடையை ஓரளவு தாக்கு பிடிக்கும் அளவுக்கு முயற்சித்தனர். 'தமிழீழ பொருண்மிய கழகம்' குறிப்பிடத்தக்க சாதனைகளை செய்தது. அரசியல் பண்பாட்டு ரீதியில் எல்லாம் 'புலிகளின் குரலே', யுத்தமே வாழ்க்கை எனவும் போதிக்கப்பட் டது. மாற்றுக் கருத்துக்கள் துப்பாக்கி முனையில் தடை செய்யப்பட்டது. எதிரியை எதிர்த்து நிற்கும் உரிமை புலியைத் தவிர யாருக்கும் இல்லை என்ற சட்டம் எழுதப்படாது அமுல்படுத்தப்பட்டது. பல புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகள் சிறை வைக்கப் பட்டனர். சிறைத்துறை வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். தமிழ்நாட்டு சினிமாவும், சீரழிவுக் கலாச்சார புத்தகங்களும் தடை செய்யப்பட்டது.

ஆனால் தனி ஒரு மனிதனின், ஒரு சிறு கூட்டத்தின் வீரசாகசங்களை காட்டும், எந்தப் பெரிய எதிரிகளையும் நவீன ஆயுதங்களை கொண்டு ஒருவன் தோற்கடிக்கும் 'ராம்போ', ஜாக்சிசன் படங்கள் ஓட புலிகளே ஊக்குவித்தனர். இறந்த போராளிகளுக்கு கட்டப்பட்ட கல்லறைகள் சுதந்திரம் அடைந்த நாட் டில் செய்யப்பட்டிருப்பதைக் காட்டிலும், அழகு கூட்டும் பராமரிக்கும் வேலைகள் செய்யப்பட்டன. தமிழீழ வங்கியும், நாணயங்களும் புழக்கத்துக்கு கொண்டு வர முயற்சிகள் நடந்தன.

யுத்த ரீதியில் 'யாழ்' ஒரு இராணுவம் முடக்கப் பட்ட பிரதேசம் என புரிய, ஏற்க்க மறுத்தனர். விடுதலைப் பிரதேசமாக வட தென் வியட்னாம் போல், யாழை விடுதலை அடைந்த 'வட தமிழீழமாக' கருதினர். இது ஒரு மாயையில் புலிகள் செய்ததல்ல. யாழுக்குள் உள்ள இராணுவ கடற்படை முகாம்கள் பலப்படுத்தப்பட்டு வருவதை, தீவுப் பகுதி தம் கையை விட்டு போனதை கண்டார்கள். கிழக்கில் தாம் செயற்படா தற்காப்பு நிலையில் இருப்பதையும், எதிரியின் கட்டுப்பாடு மேலோங்கி வருவதையும், வடக்கின் எல்லைப் பிரதேசங்களில் கொரில்லாக்கள் தந்திரோபாயரீதியான சில தாக்குதல்களிலும், மிகக் குறைந்தளவான போர் நடவடிக்கையிலும் மட்டுமே ஈடுபட்டு வருவதையும், யாழில் எதிரி முகாம்கள் மீது வெற்றியளிக்கும் நிர்மூலமாக்கும் எந்த தாக்குதல் களையும் நடத்த முடியவில்லை என ஒட்டு மொத்த யுத்த சூழ்நிலைமையையும் புலிகள் கண்ணாரக் கண்டனர். எதிரி எப்போது வேண்டுமானாலும் யாழைத் தாக்குவான் என்பதையும் தெரிந்திருந்தனர் புலிகள். அதனால் தான் இறுதி யுத்தம் வரப் போகிறது. தயாரிப்புக்கு 'பவுனும், பணமும்' வசூலிக்கும் இயக் கத்தை நடத்தினர்.

85-களைப் போல் அன்றி இம்முறை யுத்தம் மூலோபாய ரீதியாக இரண்டாவது கட்டத்துள் நுழைந்து இரண்டு மூன்று வருடங்களை தாண்டிய போதும் இராணுவ ரீதியாக யுத்தம் வளர்ந்து செல்வ தற்கான தயாரிப்புகள், திட்டமிட்ட எதிர் தாக்குதல்க ளும், தந்திரோபாயரீதியான தாக்குதல்களும், போர் நடவடிக்கைகளும் அதற்கான படைவடிவ, ஆயுத நிலை வளர்ச்சிகளும் நடக்கவில்லை. ஒரு சில வெற்றி கண்ட, தோல்வியடைந்த பெரிய இராணுவ நடவடிக்கைகள் தான் நடந்தன. அவை எதுவும் எதிரியை மூலோபாயரீதியாக பலவீனப்படுத்த வில்லை. எதிரிக்கு தனது பலவீனங்களை கற்றுக் கொடுக்கும் தாக்குதல்களாகவே எதிர் மறையில் இருந்தன. எதிரியை தொடர்ந்தும் முடமாக்கல் நிலை யில் வைத்திருக்க முடியும் எனவும், எதிரி தங்களை அங்கீகரித்து பேச்சு வார்த்தைக்கு கீழிறங்குவதே ஒரே வழி எனவும் புலிகள் தவறாக கணித்தனர்.

விடுதலை யுத்தத்தின் இரண்டு வடிவங்களான கொரில்லா யுத்த முறை, கிரமமான யுத்த முறையில், கொரில்லா யுத்த முறையைக் கொண்டு யாழில் எதிரியை முகாமுள் முடமாக்க முடிந்தது உண் மையே. ஆனால் கிரமமான யுத்த முறைக்கு தம்மை வளர்க்க தவறினால் கிரமமான யுத்த முறையில் தேர்ச்சி பெற முடியாவிட்டால் எதிரியை தொடர்ந் தும் முடமாக்கல் நிலையில் வைத்திருக்க கூட முடியாது போகும். யாழில் எதிரியை முடமாக்கல் நிலையில் நீட்டிக்கவும், நாம் கிரமமான யுத்த முறைக்கு வளரவும் வேண்டியிருந்தது. கிழக்கில் எதிரியின் நிம்மதியான வாழ்வை கெடுக்க நாம் தற்காப்பில் இருந்து கொண்டு தந்திரோபாயமான கொரில்லா தாக்குதல்களை, போர் நடவடிக்கைகளை செய்ய வேண்டும். பெரு நிலப்பரப்பில் எதிரிக்கு ஓய்வு கொடுக்காமல் தந்திரோபாயமான தாக்குதல் களை வளர்க்க வேண்டும். இதன் மூலம் எதிரி

www.tamilarangam.net

முடமாக்கப்பட்ட பிரதேசத்தில் இராணுவத்தின் பலத்தை அதிகரிக்க முடியாதபடி செய்ய வேண்டும். யாழில் மேலும் எதிரியை பலவீனப்படுத்த பின்புற மாக கிழக்கிலும், பெருநிலப்பரப்பிலும் புலிகளின் இராணுவ நடவடிக்கைகள் வளர்க்கப்பட்டிருக்க வேண்டும். பெரு நிலப்பரப்பில் கூட எதிரியை முடமாக்கும் ஒரு பிரதேசத்தை வளர்க்க முயன்றிருக்க வேண்டும்.

கிரமமான யுத்தத்தின் இரண்டு முனைகளான நடமாட்ட யுத்த முறை, ஸ்தான யுத்த முறைக்கு வளர்வது மூலோபாயரீதியான இரண்டாவது கட்டத்தில் உள்ள நமக்கு மிக அடிப்படையாகவுள்ளது. யாழின் யுத்த சூழ்நிலைமையும், புவி அமைப்பும் இதுவரை நடமாட்ட யுத்தத்திற்கான வாய்ப்புக்களை மட்டுப்படுத்தியுள்ளது. எதிரி பெரிய இராணுவ - கடற்படை முகாமுக்குள் முடமாக்கப்பட்டிருந்தும், யாழில் உள்ள முகாமுகளுக்கு இடையிலும், யாழுக்கு வெளியேயான முகாமுகளுடனான தொடர்பிலும், படைப்பரிமாற்றம், ஆயுத பரிமாற்றம் மற்றும் அன்றாட தேவைகளுக்கான போக்குவரத்துக்கு வான் வெளி, கடல்வழி போக்குவரத்தை எதிரி பயன்படுத்தினான். தரைப் போக்குவரத்தை நிறுத்தினான். (ஆனால் கிழக்கிலும், பெரு நிலப்பரப்பிலும் நடமாட்ட யுத்தத்துக்கான வாய்ப்புகள் நிறைய உண்டு) எதிரி 5 ஆண்டுகள் முகாமுக்குள் முடங்கி கிடக்கையில் நாம் ஸ்தான யுத்த முறைக்கு வளர்ந்திருக்க வேண்டும். அப்போது மட்டுமே எதிரியின் முகாம்கள் மீது வெற்றியளிக்கும் திட்டமிட்ட தாக்குதல்களை நடத்த முடியும். எதிரியை நிர்மூலமாக்கி முகாமை கைப்பற்றி வைத்திருக்கவோ - அழிக்கவோ முடியும். புலிகளின் ஆனையிறவு முகாம் மீதான தாக்குதல் தோல்வியும், பூனகரி முகாம் தாக்குதல் வெற்றியும், ஸ்தான யுத்தத்தின் தொடக்க வடிவங்கள். ஆனால் அவை ஸ்தான யுத்தத்திற்கான நிரந்தரப்படை வடிவத்துடன் நடத்தப்பட்டவை அல்ல. படை நிலைப் பிரிப்பிலும், ஆயுத வகைப்படுத்தல் முறையில், தொலைத்தொடர்பு, போக்குவரத்து முறையில், படை வியூகத்தில் பல கொரில்லாக் குழுக்களின் சேர்க்கையாக தேர்ந்தெடுத்த கூட்டு வடிவமாக நடத்தப்பட்டது. யாழ் கோட்டை மீதான வெற்றி புலிகளின் ஸ்தான யுத்தத்தின் வெற்றியாக பார்க்கப்படுகிறது. யாழ் கோட்டைச் சமரில் எதிரி தந்திரோபாயமாக பின் வாங்கிய பின்னும், எதிரி உள்ளே இருப்பதாக நினைத்து புலிகள் தாக்கிக் கொண்டிருந்ததை கவனத்தில் கொண்டு பார்ப்பது நல்லது. மண்டைத்தீவு முகாம் மீதான தாக்குதல் ஒரு ஸ்தான யுத்தமுறை தாக்குதல் அல்ல Amphibious தாக்குதல் வெற்றியாகும். தீவுப்பகுதியை புலிகளிடம் இருந்து எதிரி கைப்பற்றியது கிரமமான - யுத்த முறைக்கு Amphibious தாக்குதல் முறையை பயன்படுத்தியதாகும்.

புலிகள் பெரு நிலப்பரப்பில் நடமாட்ட யுத்தத்தை தொடக்கி வளர்த்திருக்க வேண்டும். அதற்கான வாய்ப்புக்களை எதிரி வழங்கிக் கொண்டிருந்தான். புலிகள் கொரில்லா யுத்த முறையுடன் நிறுத்திக் கொண்டனர். அல்லது கொரில்லாக் குழுக்களின் கூட்டு யுத்த நடவடிக்கைகளுடன் திருப்தி அடைந்தனர். ஒரு முகாம் மீதான தாக்குதலில் கூட்டு கொரில்லா யுத்த முறை வடிவத்தையும், அவ்வேளை எதிரிக்கு உதவ வரும் அக்கம் பக்க படைகளை தனித்தனியாக கொரில்லா குழுக்கள் மூலம் எதிர் பார்த்த பாதையில் கிடைக்கும் எதிரியை மட்டும் தாக்கி அழிப்பதும் - தடுத்து நிறுத்துவதும் ஆன முறையை கையாண்டனர். யாழ் தமது கட்டுப்பாட்டில் இருந்த போது, புலிகள் இங்கு ஸ்தான யுத்த முறைக்கு வளர்வதிலும், பெரு நிலப்பரப்பில் நடமாட்ட யுத்த முறைக்கு வளர்வதிலும் மொத்தத்தில் கிரமமான யுத்தத்திற்கு தம்மை தயாரிப்பதில் கவனம் செலுத்தி இருந்தால், எதிரி தனது பலத்தை எங்கும் ஸ்திரப்படுத்திக் கொள்ள விடாது தடுத்திருக்கலாம். பெரு நிலப்பரப்பில் கொரில்லா யுத்த முறையை கொண்டே எதிரியை முடமாக்கல் நிலைக்கு தள்ளுவதில் கூட முன்னுரிமை கொடுக்க தவறிய புலிகளால், நடமாட்ட யுத்த முறைக்கு வளர்வது காரிய சாத்தியமற்றதே. கிழக்கில் புகையிரதப் பாதைப் பாதுகாப்பு, நெடுஞ்சாலைப் பாதுகாப்பு மற்றும் தேடுதல் வேட்டையில் ஈடுபடும் எதிரியின் செக்சன், பிளட்டூன்கள் மீது மட்டகளப்பில் இன்றுவரை புலிகளின் கொரில்லா தாக்குதல் வெற்றியளித்து வருகிறது. இதை நடமாட்ட யுத்த முறையின் வெற்றியாக பார்ப்பது மிகத் தவறாகும். இது நடமாட்டத்திலுள்ள எதிரியின் சிறு படைப்பிரிவுகள் மீது நடமாட்டத்திலுள்ள கொரில்லாக்களின் தாக்குதல்களாக, வெற்றிகளாக மட்டுமே பார்க்க வேண்டும். வெலிஓயா தாக்குதலின் மிகப் பெரிய தோல்வி. ஆனையிறவு தோல்வி தொடக்க நிலையிருந்த ஸ்தான யுத்த முறையில் நடத்தப்பட்ட தாக்குதல்களின் தோல்வியாகும். இவை புலிகளை மூலோபாய ரீதியான எதிர் தாக்குதலுக்கான தயாரிப்பு கட்டத்தின் தோல்வியாக மாற்றிவிடவில்லை. அதே போன்று யாழ் கோட்டை, பூனகரி, மண்டைத்தீவு வெற்றிகள் எதிரியை மூலோபாய ரீதியாக பின் வாங்கும் 3-வது கட்டத்துக்கு தள்ளி விடவும் இல்லை.

இந்தத் தோல்விகள், வெற்றிகளின் படிப்பனைகளை கொண்டு, யாழ் மீதான கட்டுப்பாட்டை தக்க வைப்பதற்கான தேவையை இராணுவ ரீதியில் புரிந்து, கொரில்லா யுத்த வடிவத்திலிருந்து கிரமமான யுத்த வடிவத்துக்கு வளர்வதிலும், ஸ்தான யுத்த முறையை செழுமைப்படுத்தி வளர்ப்பதிலும், நடமாட்ட யுத்த முறையை உருவாக்குவதிலும் முன்னுரிமை கொடுப்பதற்கு பதில் குண்டான் சட்டிக்குள் குதிரை ஓட்டுவதில் அதிக அக்கறை காட்டினர். கொரில்லா யுத்த வடிவத்துள் புதிய புதிய யுக்திகளை உருவாக்கினர்.

தீவுப்பகுதியின் தோல்வியும், கடற்படை உதவியுடன் இராணுவம் கடல் வழிமூலம் ஒரு பகுதியில் இருந்து மற்ற பகுதிக்கு வந்து Amphibious தாக்குதல் நடத்துவதையும் கண்டனர். எதிரியின் கடல்வழிப் போக்குவரத்தை தடுக்கவும், புலிகளின் வடக்குக்கும் - கிழக்குக்குமான தரைவழி - படகுவழி போக்குவரத்தை ஆனையிறவு முகாமும், பூனகரி முகாமும் தடுத்து வந்தது. இராஜீவ் கொலைக்கு பின் தமிழகத்துடனான கடல் போக்குவரத்தில் ஏற்பட்ட நெருக்கடிக

www.tamilarangam.net

ளாலும், கூடவே திருகோணமலை, கொழும்பு துறை முகங்கள் மீதான தாக்குதலுக்கு கடல் வழியின் சாதகமான வாய்ப்பையும் உணர்ந்து புலிகளின் தலைமை 94-ல் கடற்புலிகள் என்ற கொரில்லா அணியை உருவாக்கியது. 1983-களில் இருந்து தமிழ் நாட்டுக்குப் பயிற்சிக்கு செல்லும் போராளி இயக்கங் கள் படகுகளில் சிறந்த நீச்சல் வீரர்களை, வண்டி ஓட்டிகளை உருவாக்கி வைத்திருந்தனர். சிறீலங்கா கடற்படையை தவிர்க்க முடியாது சந்தித்தால் தாக்குவ தற்கும் - தப்புவதற்கும் படகுகளில் LMG யும் பொருத்தி வைத்திருப்பது வழக்கமாகவிருந்தது.

95-ல் யுத்த நிறுத்தத்தை உடைத்த, திருகோணம லைத் துறைமுக தாக்குதல், முன்னேறிப் பாய்தல், நடவடிக்கையில் புலிகளின் எதிர் நடவடிக்கையான 'புலிப்பாய்ச்சலின்' போது காங்கேசன் துறைமுகத்தில் 'எடித்தரா' ரடார் பொருத்திய கட்டளைக் கப்பலை மூழ்கடித்தது. முல்லைத் தீவு கடலில் கடற்படை கொண்டு வந்த பயணிகள் கப்பலை கடத்தியது, மற்றும் பல கடல் சமரில் கடற்படையினரையும், கடற்காவல் ரோந்து படகுகளையும் வெடிபொருள் நிரம்பி படகுகளில் சென்று மோதியும், நீரடி நீச்சல் அணியின் தற்கொலைத் தாக்குதல் மூலமும் எதிரியை கடலிலும் புலிகள் தாக்க தொடங்கினர். பூனகரி, மண்டைத்தீவு இராணுவ முகாம் தாக்குதலின் வெற்றி யில் கடற்புலிகளின் பங்கு குறிப்பிடத்தக்கது. இவை கடல்புலிகளின் கொரில்லாப் போர் வெற்றிகளாகும். யாழின் புவி அமைப்பும் நீண்ட நெடிய கடல்பகுதி யும், யுத்த நிலைமையும் எதிரிக்கு எதிராக கடலிலும் யுத்தத்தை நடத்த கோரியது. இதைப் புரிந்து கடலில் கொரில்லாப் போர் என்ற மட்டத்துக்கு வளர்த்தது புலிகளின் தலைமை.

எதிரியின் விமானப்படையானது யுத்தத்தில் வழங்கி வந்த பங்கை அறிவோம். தேசிய விடுதலை யுத்தத்தில் புலிகள் 95-ல் நடத்திய விமான எதிர்ப்பு ஏவுகளை தாக்குதல் யுத்தத்தின் போக்கை திசை திருப்பி விடும் என எதிர்பார்க்கும் அளவுக்கு இருந் தது. பலாலியில் புலிகளின் ஏவுகனை தாக்குதலால், படைகளை, ஆயுதங்களை மற்றும் இராணுவ சாதனங் களை, உணவை ஏற்றி இறக்கும் போக்குவரத்து அவ்ரோ விமானம் வீழ்த்தப்பட்டது.

'புவிப்பாய்ச்சலில்' F-7 ரக குண்டு வீச்சு விமா னம் வீழ்த்தப்பட்டது. எதிரி தற்காலிகமான தனது விமான போக்குவரத்தை நிறுத்தும் அளவுக்கு பாதிப்பை ஏற்படுத்தியது. கொழும்பு கடலில் 60 இராணுவத்துடன் கடலில் வீழ்ந்து ஒரு விமானம் மூழ்கியது. இதற்கு புலிகள் காரணமல்ல என்பது பின் தெரிந்தது. புலிகளின் குறுகிய தூர ஏவுகனைத் தாக்குதலைப் புரிந்து கொண்டு எதிரி விமானம் இறங்கும், ஏறும் முறைகளில் மாற்றம் செய்தான் உயரப் பறந்தான். தனது இராணுவ நடவடிக்கையில் புலிகளின் முகாம்களை தனித்து அடையாளம் கண்டு தாக்க முடியாத நிலையில் உத்தேசமான குண்டு வீச்சுக்களை பரவலாக நடத்தினான். அழிவுகளை அதிகரித்தான். புலிகளிடம் இருப்பதாக கருதப்படும் கிளைடர் இலகுரக விமானம் இதுவரை பயன்படுத் தப்படவில்லை. சூரிய ஒளி 1,2-ல் எதிரியின் விமா னப்படை தாக்குதலை புலிகளால் தடுத்துவிட முடிய வில்லை.

ஒரு கட்டம் வரை தரையிலும், கடலிலும், வானிலும் கூட கொரில்லா யுத்த முறையை கொண்டு எதிரியை அவனின் சிறிய படைப்பிரிவுகளை அழிக்க வும், நிலைகுலையச் செய்யவும், தற்காலிகமாக பின் வாங்கச் செய்யவும் முடியும். ஒரு கட்டத்துக்கு அப்பால் எதிரியின் கிரமமான படைப் பிரிவுகளை எதிர் கொள்ளவும், எதிர் தாக்குதல் நடத்தவும், குறைந்தது நமது பிரதேசத்தை பாதுகாக்கவும், எதி ரியை விரட்டியடிக்கவும், அழிக்கவும் நாமும் கிரம மான யுத்த வடிவத்துக்கு வளர வேண்டும். நடமாட்ட - ஸ்தான யுத்த முறையில் தேர்ச்சி பெற்று வளர வேண்டியது யுத்த விதியாகும்.

புலிகள் கிரமமான யுத்த வடிவத்துக்கு வளர்வ தற்கு பதில் கொரில்லா யுத்த வடிவத்துள் நின்று கொண்டனர். கொரில்லாப் போரில் நவீன, மிக நவீன ஆயுதங்களை, வெடி பொருள்களை பயன்படுத்தினர். கொரில்லாப் போர் முறையில் அரிதாக பயன்படுத்தப் படும் (சுற்றி வளைப்பை உடைக்கவும், எதிர்த் தாக்குதலிலும்) தற்கொலைத் தாக்குதல் செயலை, புலிகள் தற்கொலைத் தாக்குதல் படைப்பிரிவாகவே தரையிலும் - கடலிலும் மாற்றினர். 'கரும் புலிகள்' வடக்கு கிழக்கில் எதிரிக்கு எதிராகவும், தெற்கில் அரசியல் தலைவர்கள் மற்றும் இராணுவ தலைமைய கம், கொலன்னா எரிபொருள் நிலையம், துறைமுகம், மத்திய வங்கித் தாக்குதல்கள் கரும்புலிகளின் தற் கொலை கொரில்லா நடவடிக்கைகளே. ''எல்லாளன் படை'' பொருளாதார ரீதியில் எதிரிக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்யும் படை, அன்னிய நாட்டு தூதரங் களுக்கு, முதலீடுகளுக்கு எச்சரிக்கை விடுவது, அண் மையில் தேயிலையில் விசம் கலந்த செய்தியை வெளியிட்டது. (தம்பாப்பிள்ளை மகேஷ்வரன் பாணி) புலிகள் தற்கொலைக் கரும்புலிகளை வளர்த்த னர். ஏன் புலி இயக்க உறுப்பினர்களை உள்நாட்டில் எதிரிப்படையோ, உளவுப் பிரிவோ, வெளிநாடுகளில் பொலிசாரே கையால் பிடித்தால் கூட விசம் தின்று தற்கொலை (தாக்குதல் அல்ல) செய்யும் படையாக வளர்த்தனர். இவை எல்லாம் உலகளவில் கொரில்லா வடிவப் போர் முறைக்குள் புலிகளால் அறிமுகப்ப டுத்தப்பட்ட, வளர்க்கப்பட்ட புது விசயங்கள். இவற் றைப் பார்க்கும் சிலர் கொரில்லா யுத்த வரலாற்றில் புலிகளின் கொரில்லாப் போர் தான். அதி உயர்ந்த வடிவம் என்றும் சேகுவரா, பிடல்காஸ்ரோ, டெஜி ரெப்ரே வரிசையில் நவீன கொரில்லா யுத்த தத்துவ படைப்பாளன் பிரபாகரன் எனவும் கூறுகின்றனர். டெஜிரெப்ரே தத்துவத்தின் வாரிசு என்பதுதான் உண்மையாகும். தமிழீழ தேசிய விடுதலை யுத்தத்தில், கொரில்லாப் போர் என்றால் ''தற்கொலைப் போராளிக ளின் போர்'' என உலகுக்கு காட்டிய தவறை செய்துள்ளனர்.

தேசிய விடுதலை யுத்தத்தில் புலிகள் மூலோபா யரீதியான எதிர் தாக்குதலுக்கான தயாரிப்புக் கட்டத் தில் செய்ய வேண்டிய முக்கியமான இராணுவக் கடமையான கிரமமான வடிவத்தில் வளராது விட்ட னர். கிரமமான யுத்தத்தில் வளர்வதற்கு தேர்ச்சி

www.tamilarangam.net

பெறுவதற்கு யாழில் 5 ஆண்டுகள் கிடைத்த அளப்ப ரிய வாய்ப்பை, விழலுக்கு இறைத்த உதிரமாக கை தவற விட்டனர். புலிகளின் தலைமை அரசியல் ரீதியில் இந்த கட்டத்தில் இழைத்த தவறுகளும் முக்கியமானவை. எதிரிக்கு எதிரான போராட்ட சக்திகளை (துரோகிகளை அல்ல) தேடி அழித்தனர். சிறைப்படுத்தினர். துரோக இயக்கங்களின் கீழ் அணிப் போராளிகளை வென்றெடுக்க சிறிதும் அக் கறை காட்டவில்லை. தம்முடனும் - துரோக இயக் கங்களுடனும் அரசியல் ரீதியில் முரண்பட்டவர்களை யாழுக்கும் - நாட்டுக்கும் வெளியே நிற்க்க வைத்த னர். புலிகள் இயக்கத்துள் நடந்த உள் மோதல்கள் சொந்த அணிகளை பலவீனப்படுத்தியது. 20 வயதுக்கு மேற்பட்டவர்கள் புலிகளில் சேர முன் வரவில்லை. பள்ளிச் சிறுவர்களின் படையை உருவாக்க வேண்டிய நிலை. யாழ் இராச்சியத்தில் புலிகளின் அரசியல், சமூக - பொருளாதார, அரசமைப்பு நடவடிக்கைகள், பாஸ் வழங்கும், பிள்ளைகளை பிணை கொடுக்கும், உரிமையாளர் யாழில் இல்லாத வீடுகளை தேசிய மயமாக்கும் திட்டங்கள், குற்றங்களுக்கான தண் டனை முறைகள், புலிகளுக்கும் மக்களுக்கும் இடை யிலான முரண்பாட்டை கூர்மைப்படுத்தியது. 92-ல் இஸ்லாமிய மக்கள் யாழிலும், மன்னாரிலும் இருந்து விரட்டியடித்தது. ஆயிரக்கணக்கான மக்களை அகதிக ளாக்கியது. சிங்கள அப்பாவி மக்கள் மீதான (குடி யேற்ற திட்ட சிங்கள காடையர்கள் மீது நடத்தப்பட் டவை அல்ல) எல்லையோர வெறித்தன தாக்குதல்க ளும் புலிகள் மேல் வெறுப்பை ஏற்படுத்தியது. உலகளவில் புலிகளை தமிழ் இனவாத மதவாத சக்தியாக பார்க்கப்பட வைத்துள்ளது. இராஜீவ் கொலை, பத்மநாபா கொலைகளின் பின் தமிழகத் தின் ஆதரவு கேள்விக்குறியானது? புலிகளின் நட மாட்டத்துக்கு நெருக்கடியையும் ஏற்படுத்தியது. இங்கு தடை செய்யப்படாத புலி இயக்கம் இந்தியா வில் தடை செய்யப்பட்டது.

புலிகளின் அரசியல் - இராணுவத் தவறுகள் எல்லாம் சிலர் கூறுவது போல், தமிழீழப் போராட் டத்தை திசை திருப்ப புலிகள் திட்டமிட்டு ஏகாதிபத் திய ஆலோசனையில் உதவியில் செய்யும் தவறுகள் அல்ல என்பதில் தெளிவாக நாம் இருக்க வேண்டும். தேசிய இன விடுதலைப் போரில் புலிகளின் முதலாளி வர்க்க அரசியலும், குறுகிய கண்ணோட்டம் கொண்ட சுத்த இராணுவ மூலோபாய, தந்திரோபாய வழியும் முன்னணிப்படை யுத்த முறையும் தான் இத்தவறுக ளுக்கான அடிப்படைகளாகும்.

சிறீலங்கா அரசு புலிகளால் பாதிக்கப்பட்ட, புலிகளுடன் முரண்பட்ட எல்லா உள்நாட்டு வெளி நாட்டு துரும்புகளையும், புலிகளின் மீதான், யாழ் மீதான தாக்குதலுக்கு துப்பாக்கிளாக, குண்டுகளாக மாற்றியது. விரட்டப்பட்ட இஸ்லாமிய மக்கள் மத்தியில் 'மதத் தீவிரவாத ஜிகாத்படை' வளர உதவியது. தாக்கப்பட்ட - படக்கூடிய சிங்களக் கிராமங்களில் ஆயுதம் தாங்கிய குண்டர்படைகளை உருவாக்கி வளர்த்தான். கிழக்கிலும், வவுனியாவிலும் வேலை வாய்ப்பு திட்டத்தில் தமிழர்களையும் பொலி சில் சேர்த்தான். திருமலை, வவுனியாவை புனரமைத் தான். இங்கு தமிழர் ஆட்சி நடப்பதாக உலகுக்கு காட்டினான். இப்பகுதிகள் எல்லாம் புலிகளால் மீண்டும் தாக்கப்படலாம் என்பதையும் கணக்கில் கொண்டு தான் மூலோபாயரீதியான தாக்குதல் கட்டத் துக்கு யுத்தத்தில் திரும்புவதற்கான, தந்திரோபாயரீதி யான நடவடிக்கைகளாக மட்டுமே செய்தான். புலி களை மக்களின் மனங்களிலிருந்து தனிமைப்படுத்துவ தில், இராணுவரீதியாக தன்னை தயாரிப்பதில் மிகத் தீவிரமாக வேலை செய்தான். 'மக்களின் குரல்' ஒலிபரப்பை எதிரி நடத்தினான்.

எதிரியின் யுத்த தயாரிப்பு வளர்ச்சி சில குறிப்பு கள். 83-ல் எதிரி 70,000 படையினரை மூன்று டிவிசனில் பிரித்து வைத்திருந்தான். 5 இன்பன்ரி ரெஜிமெண்ட்டும், 10 பிரிகேட்டுக்களும், 4 வகை கனரக ஆயுதம் கொண்ட 4 கனரகரெஜிமெண்ட்டும், 30 டாங்குகள் கொண்ட 1 ஆர் மெட்ரெஜிமெண்ட்டும் இருந்தது. சிறிய வகை ஆயுதங்கள், வெடி பொருள் கள் BE 11 - 212 ரக உலங்கு வானூர்திகள் இஸ்ரேலிடமும், TAAS கொம்பனி மூலம் பயன்படுத் தப்பட்ட ஆயுதங்களும் வாங்கி வந்தான். இராணுவ உயர் அதிகாரிகள் பயிற்சி 1970-களில் முதலில் இஸ்ரேலில் தொடங்கியது. 80-களுக்கு பின் (Mosad) மொசாட் நேரடியாக கொழும்பில் பயிற்சி அளிக்கி றது. சீனாவிடம் இருந்து கனரக ஆயுதங்கள், 2 படைகாவும் விரைவுக் கப்பல்கள், 43 கரையோர ரோந்து படகுகள் வாங்கியதுடன் கடற்படை 3000 பேரை கொண்டிருந்தது. 16 km தூரம் செல்லும் 85 mm ரக கனரக ஆயுதங்களும் இருந்தது.

1993-ல் எதிரி 90,000 படையினரை கொண்டிருக் கிறான் புதிதாக ''நடமாடும் வான் வெளி பிரிகேட் டை'' உருவாக்கியுள்ளான். 200 டாங்குகள் கொண்ட 3 ஆர்மெட்ரெஜி மெண்ட்டையும், 3000 கடற்படையி னரையும் கொண்டுள்ளான். 91-இல் மூன்று விரைவு சாங்காய் தாக்குதல் கப்பல்களை, 35 mm, 25 mm முறையே இரண்டு ஆயுத படகுகள், விமானப் படையில் முதன்முதலாக சேர்க்கப்பட்ட F-7B ஜெட் வானூர்தியும், Y-8 போக்குவரத்து விமானமும் 27 km தூரம் செல்லும் 130 mm 59-1 ரக கனரக ஆயுதமும் சீனாவிடம் வாங்கினான். Antonov - 32 விமானம் உக்கிரேனிடமும், Famia - 58 A ரக புக்காரா விமானம் 4-ம் ஆர்ஜென்டின தயாரிப்பும் வாங்கினான். தற் போது M 18 போக்குவரத்து உலங்கு வானூர்திகளை, ஏவுகனைத் தாக்குதலில் தப்பக்கூடிய கவசதகடு பொருந்திய 7.62 mm மெசின்கன் உள்ள உலங்கு வானூர்தியும், 20 mm ஆயுதம் பொருந்திய 2 உலங்கு வானூர்திகளும், அய்ரோப்பிய நாடுகளில் வாங்க முயற்சி நடக்கிறது. காட்டுக்குள் புலிகளை தேடி அழிப்பதற்கு விமானப்படையின் வளர்ச்சி அவசியம் என்கிறார் புதிய தளபதி. BMP இன்பன்ரி சண்டை வாகனங்களை, ரோந்து படகுகள், சண்டைக்கான உலங்கு வானூர்தி, போக்குவரத்து விமானச் செலவு கள் உட்பட 400 மில்லியன் அமெரிக்க டொலர் இராணுவ செலவாக மாறியுள்ளது 95-ல்.

புலிகளிடம் எத்தனை பிரிகேட் அதன் பெயர் வடிவத்தில் அல்ல, ஆயுத பிரிப்பு, பயிற்சி நிலையில் இருக்கின்றன என்பது தெளிவாக இல்லை. 10



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆயிரம் வரையில் மொத்த வீரர்கள் இருக்கலாம் எனவும், பிரான்சில் இருந்து வாங்கப்பட்ட 3 கிளைடர் இலகுரக விமானங்களும், இந்தியாவின் பினாகி டெக்னோஜிஸ்ட் தயாரிப்பு கிளைடர் விமானங்கள் சிலதும் இருக்கலாம் எனவும் கருதப்படுகிறது. 15 தொன் முதல் 18 தொன் வரை வெடி பொருள்கள் இருக்கலாம் என IRA இன் இராணுவ பலத்தை கணிப்பிட்ட ஒரு இராணுவ ஆய்வு நிறுவனம் இத்தகவல்களையும் தெரிவித்துள்ளது.

எதிரி ஆயுதங்களை பலப்படுத்த முடிந்தளவுக்கு படைவீரர் பலத்தை பெருக்க முடியவில்லை. கடந்த 5 ஆண்டுகளில் 3,500 பேர் இராணுவத்தை விட்டு ஓடியுள்ளனர். 25,000 படையினரை சேர்க்கும் நீண்ட கால திட்டமும், சூரிய ஒளிக்கு பின் 10,000 பேரை சேர்க்கும் குறுகிய கால திட்டமும் வெற்றியளிக்க வில்லை. இராணுவத்துக்கு முக்கியமாக போர் முனையில் இருப்பவர்களுக்கு சம்பள உயர்வுடன் பல சலுகைகளை எதிரி அறிவித்துள்ளான். நாட்டில் 20% வேலையில்லாப் பிரச்சினை இருக்கையில் ஏன் இராணுவத்துக்கு ஆட்கள் கிடைக்கவில்லை என ஆய்வு செய்கிறான். இராணுவத்தில் சேர இருந்த தகுதிகளை எல்லா நிலையிலும் குறைத்துள்ளான் பல புதிய ஊக்குவிப்பு திட்டங்களை உருவாக்குகிறான்.



## தேசிய விடுதலை யுத்தம் இரண்டாவது தடவையாக மூலோபாய ரீதியான முதலாவது கட்டத்துள்

புலிகள் யாழை தக்க வைக்கவும், எதிரி யாழை கைப்பற்றவும் ஆன யுத்த தயாரிப்பால், இராணுவ ரீதியில் தயாராகி விட்ட எதிரி அரசியல் ரீதியில் தன்னை மேலும் பலப்படுத்தவும், புலிகள் இராணுவ ரீதியிலும் அரசியல் ரீதியிலும் தம்மை பலப்படுத்தவும் வேண்டியிருந்தது. சந்திரிகா அரசின் வருகையும் - புலிகளுக்கு கூட சந்திரிகா மேல் இருந்த மயக்கமான பார்வையும் ஒரு தற்காலிக யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தியது. புலிகள் தமது பலம் பற்றிய மிகையான கணிப்பீட்டாலும், சர்வதேச நிலவரத்தையும், எதிரியின் பலத்தை புரிந்து கொள்ளாமலும் சந்திரிகா எந்த நிலைக்கும் கீழ் இறங்குவார் எனக் கணித்தனர். ஆனால் சிறீலங்கா இனவாத ஆளும் வர்க்கமும், ஏகாதிபத்தியங்களும் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிக்க, அரசின் படைகளை ஒரு கையாகவும், சந்திரிகாவின் அரசியல் தலைமையை உள்நாட்டிலும் - வெளிநாட்டிலும் புலிகளை அரசியல் ரீதியில் தனிமைப்படுத்துவதற்கான மறுகையாகவும் பயன்படுத்தின. புலிகளை யுத்த நிறுத்த மீறல் நிர்ப்பந்தத்துக்கு சாதுரியமாக தள்ளியதன் மூலம் எதிரி தனது அரசியல் இராணுவ இராஜதந்திரத்தில் முன்னிலைக்கு வந்தான்.

யுத்த நிறுத்த மீறலை புலி செய்தவுடன் நாட்டின் அமைதிக்கும், மக்களின் சமாதான வாழ்வுக்கும், அரசு, தான் தடையாக இருந்து வந்ததை மறைத்து நாட்டின் முழு துன்பங்களுக்கும், மக்களின் துயரங்களுக்கும், தமிழ்ப் பயங்கரவாதம், புலிகள் தான் காரணம் என தொடர்பு சாதன யுத்தத்தை, மனோவியல் யுத்தத்தை முடுக்கி விட்டான்.

35,000 படையினரை யாழுக்கு கொண்டு வந்து 'முன்னேறிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கையை தொடக்கினான். இது புலிகளின் உண்மையான யுத்த பலத்தை பரிசோதிப்பதாகவும், யாழை கைப்பற்றும் முழு இராணுவ திட்டத்துக்கு முன் பரிசோதனைப் பகுதிகள் மேலான தாக்குதலாகவும் இருந்தது. அளவெட்டியிலும், சண்டிலிப்பாயிலும் புலிகளின் மீள எதிர் தாக்குதல் (Counter attack) புலிப்பாய்ச்சல் நடவடிக்கையின் சேதமும், துருப்புக்களுடன் வீழ்த்தப்பட்ட ஆவ்ரோ விமானதாக்குதல், அளவெட்டியில் புக்கார குண்டு வீச்சு விமானம் வீழ்த்தப்பட்டது. 'எடிக்தரா' காங்கேசனில் மூழ்கடிக்கப்பட்டது. எதிரிக்கு குறிப்பிடத்தக்க அளவு சேதங்களை ஏற்படுத்தியது. ஆனால் இவை எதுவும் எதிரி தனது மூலோபாய ரீதியான பாதுகாப்பு கட்டத்தில் இருந்தபடி, யாழை கூறு போட்டு கைப்பற்ற தொடங்கிய முன்னேறும் நடவடிக்கையை தந்தரோபாய ரீதியாகக் கூட பின் வாங்க வைக்கவில்லை. கிரமமான படை முன்னேற்றத்தை புலிகளால் தடுத்து நிறுத்த முடியாது என்பதை யுத்தத்தின் மூலம் எதிரி புரிந்தான். தனது இழப்பை குறைப்பதற்கான விரைவான முன்னேறுதலுக்கு பதிலாக படிப்படியாக முன்னேற முடிவு செய்தான். அதன்படியே நடந்தான்.

புலிகள் எதிரியைப் போல கிழக்கின், பெருநிலப்பரப்பின் போராளிகளை யாழுக்கு கொண்டு வந்தனர். யாழை இழப்பது புலிகளுக்கு இராணுவ ரீதியில் பெரிய தோல்வி என்பதுடன் மானப் பிரச்சனையாகவும் பார்த்தார்கள். எதிரி யாழ் முழுவதையும் கைப்பற்ற ஒரு மூர்க்கத்தனமான யுத்தத்தை கட்ட விழ்த்து விடமாட்டான். அல்லது தாங்கள் தடுத்து நிறுத்துவோம், கொரில்லா யுத்த முறையின் பரிசோதிக்கப்படாத எல்லா யுக்திகளையும் பயன்படுத்த நினைத்தனர். தெற்கின் மீதான பொருளாதார நிலை தாக்குதல், சிங்கள மக்கள் மீதான தாக்குதல், கிழக்கில் தொடுக்கப்படும் கொரில்லாத் தாக்குதல்கள், சர்வதேச ரீதியில் எழும் கண்டனங்களை கொண்டு எதிரிக்கு கடிவாளம் போட முடியும் என தவறாக புலிகள் முடிவு செய்தனர்.

எதிரி யாழ் மீது படைக்குவிப்பை நடத்தும் போதும், அதை மட்டுப்படுத்த - தடுக்க கிழக்கிலும், பெருநிலப்பரப்பிலும் வாய்ப்பு இருந்தால் தெற்கிலும் கூடுதலான அக்கறையுடன் பொலிசு நிலையங்கள், இராணுவ முகாம்கள், பொருளாதார நிலைகள் மீது தந்திரோபாயரீதியான தாக்குதல்களை, போர் நடவடிக்கைகளை புலிகள் நடத்தி இருக்க வேண்டும். அவை முழுவதும் வெற்றி பெறாவிட்டாலும் அத்தகைய நடவடிக்கையை உக்கிரப்படுத்தியிருக்க வேண்டும். மாறாக எதிரி போல் தாமும் யாழில் படைக் குவிப்பு செய்தனர். இப்போது யாழை இழந்த பின் யாழில் உள்ள இராணுவம் பின் வாங்க வேண்டும். முகாமுள் முடங்க வேண்டும் என கிழக்கில் எதிரி மீதான தாக்குதல்களை தொடர்ந்து நடத்துகின்றனர். யுத்தத்தை நிறுத்தவும், பேச்சு வார்த்தைக்கு வரவும் வேண்டுமானால் யாழில் இராணுவம் பின் வாங்க வேண்டும் என்கின்றனர் புலிகள். எதிரி அவ்வளவு முட்டாளாக இல்லை.

www.tamilarangam.net

சூரிய ஒளி - 1 இராணுவ நடவடிக்கை புலிகளின் பிரதான இராணுவ முகாம்களை, தலைமையகங் களை, தொலைத் தொடர்பு ஒலி - ஒளிபரப்பு நிலையங்களை, ஆயுதத் தொழிற்சாலை, இராணுவ மருத்துவமனை என நமது யுத்த பலத்தின் அடிப் படை நிலைகளை குறி வைத்தான். அவை அமைந் துள்ள பகுதிகளை முதலில் கைப்பற்றும் தாக்குதல் வியூகத்தை தேர்ந்தெடுத்தான். தான் எவ்வளவு விலை கொடுத்தாலும் மக்களுக்கு, சொத்துகளுக்கு அழிவை ஏற்படுத்தியும் யாழ் நகரை கைப்பற்றுவது என்ற முடிவுடன் யுத்தத்தை தொடக்கினான்.

புலிகள் புதைத்து வைத்திருந்த கண்ணி வெடி களை, செயற்கை தடைகளை, இயற்கையான சிறு தடைகளை பயன்படுத்தினர். பாதுகாப்பு அரண்களில் இருந்து எதிர் தாக்குதல் நடத்தினர். எதிரி ஒவ்வொரு அடிகளையும் ஒரு மகசீன் குண்டுகளை சுடுவதன் மூலம் முன்னேறச் செய்தனர். புலிகளால் எதிரியின் வான்வழித் தாக்குதலை, பீரங்கி குண்டுத் தாக்குதலை சமாளிக்க முடியவில்லை. எதிரியின் தரைப்படை முன்னேற்றத்தை தடுக்க முடியவில்லை. புலிகளுக்கு முன் இரண்டு வழிகளே இருந்தது. ஒன்று எதிரியுடன் மூர்க்கத்தனமாக மோதி அழிவதும் அழிப்பதும் ஆனால் எதிரியின் முன்னேறுதலை தடுக்க முடியாது. இரண்டு பின் வாங்குவது அதற்கான கால அவகாசத்தை பெற எதிரியின் முன்னேற்றத்தை காலதாமதப்படுத்துவது, அதற்குரிய போர் முனைகளில் மட்டும் எதிர் தாக்குதல் நடத்துவது, கண்ணிவெடிகளை, செயற்கை தடை களை ஏற்படுத்துவது, முதலாவது வழியை தேர்ந்தெ டுக்கிற அளவுக்கு புலிகள் முட்டாள்கள் அல்ல. இரண்டாவது வழியை அமுல்படுத்தினர். மானப் பிரச்சினையை மறைக்க, ''வீழ்ந்தாலும் மீசையில் மண் படவில்லை'' என்பது போல் "மக்கள் இல்லாத மண்ணை எதிரி கைப்பற்றினான்" எனக் காட்டவும் நினைத்தனர். தமது பின் வாங்குதலை சாதுரியமாக நடைமுறைப்படுத்தவும் யுத்த பீதியில் இயல்பாக வெளியேறிக் கொண்டிருந்த இலட்சக்கணக்கான அக திகளை ஊக்குவித்தனர். சில ஆயிரம் மக்களை திட்டமிட்டு கூட்டியும் சென்றனர். யாழ்ப்பாணம் எதிரியின் கைகளுக்கு எதிரி எதிர்பார்த்தை விட குறைந்த இழப்புகளுடன் கை மாறியது.

ஒரு யுத்தத்தில் தனி ஒரு சண்டையோ, தனி ஒரு பகுதி கை மாறுவதோ கூட மூலோபாயரீதியாக மாற்றத்தை கொண்டு வருவதுண்டு. யாழின் இழப்பு தமிழீழ தேசிய விடுதலை யுத்தம் மீண்டும் மூலோபாய ரீதியாக முதலாவது கட்டத்துக்கு திரும்ப வைத்துள் ளது. எதிரி மூலோபாய ரீதியான தாக்குதல் கட்டத்துக்கு முன்னேறியுள்ளான். புலிகள் மூலோபாய ரீதியான தற்காப்பு கட்டத்துக்குப் பின் வாங்கியுள்ளனர்.

இராணுவ ஆய்வாளர்கள் கூறுவது போல் இந்த 15 ஆண்டு கால யுத்தம் எதைக் கற்றுத் தந்துள்ளது என்றால் "புலிகளை முற்று முழுதாக அரசால் அழிக்க வும் முடியாது. புலிகளால் அரசை முற்று முழுதாக தோற்கடிக்கவும் முடியாது. இது புலிகளுக்கும் அரசுக் கும் கூட நன்றாகத் தெரியும்" இதனால் தான் இந்திய தேசியப் பாதுகாப்புக் கல்லூரியில் தேர்ச்சி பெற்ற புதிய 14-வது தளபதி றோகான் தலுவத்த "புலிகளை பலவீனமடையச் செய்து அரசியல் பேச்சில் கலக்க செய்வதே படையின் கடமை. அரசியல் தீர்வுதான் இறுதியானது" என்கிறார். எதிரிகளின் பார்வை அப்ப டித்தான் இருக்க முடியும். புலிகளைப் பொறுத்த வரை 95-ல் அரசுடன் பேரம் பேசுவதற்கு இருந்த சக்தியையும் இழந்துள்ளனர். மூலோபாயரீதியாக யுத் தத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம் எதிரியை பலப்படுத்தி யுள்ளது. அரசு ஒரு மோசடி அரசியல் தீர்வு திட் டத்தை முன் வைத்துள்ளது. புலிகள் தமது அரசியல் தீர்வு, பேச்சுக்கான அடிப்படையை தெளிவாக அறி விக்காதுள்ளனர். இப்போதும் புலிகளுக்கு முன் இரண்டு வழிதான் உள்ளது. இன்றுள்ள பலத்தை பேணிக் கொண்டு அரசின் மோசடித் திட்டத்தில் சில மாற்றங்களை கோரி பெறுவதுடன் தேசிய விடுதலை யுத்தத்தை கை கழுவி விடுவது, இரண்டு குறைந்த பட்சமாக 'திம்பு கோரிக்கைகளை' அரசியல் தீர்வுக்கு - பேச்சுக்கு முன்னனிறுத்துவதும், முடிந்தளவு தமது இராணுவ அரசியல் தவறுகளை திருத்தியும், பலவீனங் களை பலப்படுத்தியும் மூலோபாயரீதியான தற்காப்பு கட்டத்தில் இருந்து யுத்தத்தில் முன்னேற முயல்வது.

இதில் எதைச் செய்வது? எப்படிச் செய்வது? என்பதை புலிகளின் தலைமையும், தமிழீழ முதலாளி வர்க்கமும் தீர்மானிப்பார்கள். இரண்டாவதை செய் தால் பெரும்பான்மை தமிழீழ மக்களின் அரசியல் கோரிக்கையின் பக்கம் நிற்பார்கள். தேசிய விடுதலை யுத்தத்தில் இதுவரை சிந்திய உதிரத்துக்கு தமிழீழ தாகத்துக்கு உண்மையாக இருப்பார்கள். அதே வேளை புலிப்படையை கொண்டு, தற்கொலைக் கொரில்லாப் போர் முறையை கொண்டு எதிரிப் படைகளை உயர்ந்த பட்சமாகக் கொஞ்ச காலம் முகாமுக்குள் முடங்க வைக்கலாம், பயமுறுத்தலாம், பொருளாதார நிலைகளை தாக்குவது, அரசியல் தலைவர்களை அழிப்பதன் மூலம் அரசை ஆட்டங்கா ணச் செய்யலாம். அதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. புலிகள் இதை நடைமுறையில் நிரூபித்தி ருக்கிறார்கள். ஆனால் தமிழீழ தேசிய விடுதலை யுத்தத்தில் மூலோபாயரீதியான வளர்ச்சிக் கட்டங் களை எட்டுவது - தக்க வைப்பது, மேலும் அடுத்த கட்டம் வளர்வது. எதிரி முடமாக்கப்பட்ட பிரதேசங் களை - விடுதலைப் பிரதேசமாக வளர்ப்பது. தேசிய விடுதலை யுத்தத்தில், புரட்சிகர உள்நாட்டு யுத்தத்தில் இறுதியாக எதிரிப் படைகளை முற்று முழுதாக துடைத்தொழித்து தேசம் சுதந்திரம் அடைவதை, மக்கள் விடுதலை அடைவதை இந்த தற்கொலைப் போர் முறையால், முன்னணிப் படை யுத்த முறையால் சாதிக்க முடியவே முடியாது. இதற்கும் புலிகள் உதார ணமாக இருப்பார்கள்.

தெற்காசியாவிலுள்ள தேசிய இன விடுதலை இயக்கங்கள் சிலவும், மார்க்சிய - லெனினிய கட்சிகள் சிலவும் 95-க்கு முன் இராணுவ ரீதியில் புலிகளிடம் இருந்து கற்றுக் கொள்வது பற்றி நிறைய பேசியும், எழுதியும் வந்துள்ளன. இப்போதும் பேசப் படுகிறது. புலிகளின் குட்டி முதலாளிவர்க்க அரசிய லும் அது ஊடறுத்து வெளி வந்த இராணுவ மூலோபாயமும், இராணுவ அமைப்புக் கட்டமைப் பும், போர் முறைகளும், (இரணுவ தொழில் நுட்ப



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வளர்ச்சிகளை விட்டு விட்டு) அது தமிழீழ தேசிய விடுதலைப் போரில் சந்தித்த வெற்றிகள், தோல்விகள், தேக்கம் என்பது புலிகள் சொல்வது போல் மனித பலப் பிரச்சனையோ, துரோக இயக்க நடத்தைகளோ, நிதிப்பற்றாக்குறையோ, நவீன ரக, கனரக ஆயுதப் பிரச்சனைகளோ அல்ல. தேசிய இனப் பிரச்சனையில் முதலாளி வர்க்க அரசியலின் முன்னணிப் படை யுத்த முறையின், தேக்கமாகும் என்பதை புலிகளின் யுத்த அனுபவத்தில் இருந்தாவது எல்லோரும் கற்றுக் கொள்ள வேண்டும்.

தமிழீழ தேசிய விடுதலை யுத்தம் சந்தித்துள்ள தேக்கத்தை உடைக்கவும், போராட்டத்தை மேலும் வளர்க்கவும் வேண்டின். தொழிலாளி வர்க்க சித்தாந்த பாதையில், கொம்யூனிஸ்ட் கட்சி தலைமையில், மக்கள் யுத்த முறையில் போராட்டம் முன்னேடுக்கப் பட வேண்டும். இதைப் புரிந்துள்ளவர்கள், நடைமுறைப்படுத்தப்படுத்த உழைப்பவர்கள், போராட்டத்தின் அரசியல் மூலோபாயத்தை வகுப்பதுடன், ''நீண்ட கால மக்கள் யுத்த பாதையில் ஆயுதப் பேராட்டத்தை முன்னேடுப்போம்''என எழுதுவது, பேசுவதுடன் நிற்காது. இராணுவ மூலோபாயத்தை வகுப்பதில், நடைமுறையில் அமுல்படுத்துவதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். இதைச் செய்ய அரசியல் சார் இராணுவக் கல்விக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். (இராணுவ தொழில் நுட்பக் கல்வி வேறு அரசியல் சார் இராணுவக் கல்வி வேறு)

போராட்டத்தில் முன்னேறிய அரசியல் திட்டத்தை கொண்டிருந்த NLFT, T.M.P.P. PLFT அமைப்புக்கள் கூட, மக்கள் யுத்த கண்ணோட்டம் கொண்ட இராணுவ மூலோபாயத்தை முன் வைப்பதிலும், மக்கள் இராணுவத்தை கட்டுவதிலும் கூட நமக்கு முன்னுதாரணங்களை கொண்டில்லை. கட்சி கட்டுவது, படை கட்டுவது பற்றிய அங்கும் இங்குமான சில தர்க்கங்களே இருந்தன. குட்டி முதலாளித்துவ இயக்கங்களின் இராணுவ அராஜகங்களை பார்த்து படையை கட்டுவதை நினைத்து பயந்தது ஒரு புறம். அல்லது புரட்சிகர அரசியல் திட்டம் இருப்பதால், அதைப் புரிந்து கொண்டவர்களின் தலைமையில் படைகளை கட்டினால் அது மக்கள் இராணுவமாக இயங்கும் என நினைத்து தயாரிப்புகளும் செய்யப்பட்டது நடைமுறையில் வெற்றி பெறவில்லை.

இன்று நம்மிடம் கட்சியும் இல்லை. படையும் இல்லை, கிழக்கிலும் வடக்கிலும் நமது அரசியலை முன் வைத்து செயல்பட முடியாதளவுக்கு சிறீலங்கா அரசை விட புலிகளும், துரோக இயக்கங்களும் முதலில் தடை விதிக்கிறார்கள். கைது செய்து சிறையில் தள்ளுகின்றனர். கொலை கூடச் செய்கின்றனர். நாம் அரசியல் ரீதியாக, இராணுவ ரீதியாக பிரதான எதிரியான சிறீலங்கா அரசை, வல்லரசுகளைத்தான் குறி வைக்கிறோம் என்பது நமது சரியான பார்வை, அதுதான் நமது பலம். ஆனால் கிழக்கிலும் - வடக்கிலும் தலைமறைவாக வாழ்கிறோம் அல்லது நாட்டுக்கு வெளியே இருக்கும் நிலை, நாட்டில் யுத்தம் பிரதான நிகழ்ச்சி நிரலாவுள்ளது. சுத்த இராணுவ இயக்கங்களின் இராணுவ சர்வாதிகாரம் உள்ளூரில் தலை விரித்தாடுகிற சூழ்நிலை. நாம் தற்காப்புக்கு கூட (எல்லா முறையிலும்) தயாரான நிலை இன்றி இயங்க முடியாதுள்ளது. சிதறுண்டுள்ள கட்சி நிலைச் சக்திகளை அய்க்கியப்படுத்துவது முதல் வேலையாகவுள்ளது. வெகுசன இயக்கங்களை கட்ட வேண்டியுள்ளது. வெகுசனங்கள் மத்தியில் நமது அரசியல் செல்லாமல் மக்கள் யுத்த முறையிலான கொரில்லாப் படைக் கூறுகளைக் கூட கட்டி வளர்க்க முடியாது. அறைக்குள் மட்டுமே விவாதிப்பவர்களின் தலைமறைவில் உள்ளவர்களின் கட்சியாக மட்டுமே இயங்க முடியும். (கட்சி இரகசியமாக இருப்பது, இயங்குவது வேறு - தலைமறைவிலுள்ளவர்களின் கட்சியாக மட்டுமே இருப்பது வேறு என்பதைப் புரிந்து கொள்வோம்.)

யுத்தம் பிரதான நிகழ்ச்சி நிரலாக இருக்கையில், கொம்யூனிசக் கட்சி ஒன்று இல்லாத நிலையில், கட்சி கட்டி விட்டு படையை கட்டுவோம் என்பதும், படையை கட்டுவதே கட்சியை கட்டுவதுதான் என்பதும் எதிர் எதிரான வாதங்களேயாகும். அலை ஓய்ந்த பின் நீந்தக் கற்றுக் கொள்வோம் என்ற வாதத்தில் தற்காப்புக்கு கூட தயாராக மறுப்பதும், நடுக்கடலிலும் நீந்த கற்றுக் கொள்ளலாம் என்ற துணிச்சல் வழியில் சென்று அழிவதும் கட்சியையும் படையையும் கட்டுவதற்கான சரியான வழிகள் அல்ல. எதிரிகள் பலவீனமான பகுதிகளில் வெளிப்படையாக நமது அரசியலை மக்களிடம் முன் கொண்டு செல்வோம். பலமான பகுதிகளில் இரகசியமாக மக்களிடம் கொண்டு செல்வோம். வெகுசனங்களை அணி திரட்டுவோம். அதற்கு தடையாக நம்மை அழிக்கவரும் எதிரிகளை எல்லாப் பகுதிகளிலும் தன்னையும் கொல்ல வந்த பசுவையும் (புலியையும்) கூட கொல்லாம் என்கிறளவுக்கு தற்காப்பு தயாரிப்புக்களுடன் இயங்குவோம். அதற்கு உதவக்கூடிய முறையில் வெகுசன இயக்க, அய்க்கிய முன்னணி வேலையகளில் கவனம் செலுத்துவோம். கட்சியை கட்டுவதே அடிப்படை வேலையும் பிரதான வேலையும், பிரதான எதிரிக்கு எதிராக மூலோபாய ரீதியான தற்காப்புக் கட்டத்துள் இருந்து கொண்டு கொரில்லா யுத்த கூறுகளை கட்டி வளர்க்க வேண்டியது நமது கடமையாகும்.

அரசியல் - இராணுவ விவகார அர்த்தத்தில் பார்த்தால் யுத்தம் இருவகைப்படும் ஒன்று ''முன்னணிப்படை யுத்தமுறை'', மற்றையது ''மக்கள் யுத்தமுறை'' இரு யுத்த முறையும் யுத்தத்தின் இரு வடிவங்களான கொரில்லா யுத்தத்தையும், கிரமமான யுத்தத்தையும் ஏற்கின்றனர். இதில் இவர்களிடையே வேறுபாடு இல்லை. வேறுபாடு இதைவிடப் பாரதூரமானது. மக்கள் யுத்தத்திற்கான ஒரு மிகத்தரமான எடுத்துக் காட்டாக இன்று உலகப் புரட்சியாளர்கள் அனைவராலும் முரண்பாடின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டது சீன யுத்தமும், வியட்நாம் யுத்தமுமாகும். அதிலும் குறிப்பாக வியட்நாம் யுத்தமாகும். இதன் படிப்பினைகளை வைத்துக் கொண்டும், தமிழீழப் போராளிகளின் படிப்பினைகளை வைத்துக் கொண்டும் இவ் இரு யுத்த முறையையும் ஒப்பிடுவோம்.

— திலீபன்

www.tamilarangam.net

| மக்கள் யுத்த முறை | "முன்னணிப்படை" யுத்தமுறை |
|---|---|
| 1. கட்சிதான் முன்னணிப்படை; அரசியல் அர்த்தத்தில் இராணுவம் ஒரு முன்னணிப் படை அல்ல. அது ஒரு கருவி, கட்சியின் கருவி மாத்திரமேயாகும். கட்சியும் கூட பாட்டாளி வர்க்க சித்தாந்தத்தால் ஆயுத பாணியானது. ஆகவே அது முழு மக்களின் முன்னணிப்படையல்ல. அரசியல் அர்த்தத்தில் அது பாட்டாளி வர்க்க முன்னணிப்படை. இவ்வித அரசியல் முன்னணிப்படை மக்களில் இருந்து பிரிந்ததொன்றல்ல. சித்தாந்த வளர்ச்சியிலும், நடைமுறைச் செயற்பாட்டிலும் இது மக்களை விட உயர்வானதொன்று. ஆனால் மக்களை விட மேலானதொன்றல்ல. இது ஸ்தாபன ரீதியாக மக்களுடன் பின்னிப் பிணைக்கப்பட்ட ஒரு அரசியல் தலைமையாகும். | 1. மக்களுக்காக, மக்களின் நலன்களை நிறைவேற்றும் நோக்கம் கொண்ட பல தனிநபர்களின் கூட்டு, மக்களில் இருந்து பிரிந்து, தனித்து, மக்களின் மேல் இருக்கும் ஒரு கூட்டம். மக்கள் சொந்தப் பலம் இல்லாதவர்கள் என்று கருதுவார்கள். ஆகவே அனைத்தும் மேலிருந்து தான் செய்யப்பட வேண்டும் என்று கருதுவார்கள். இதனால் தம்மேல் மாத்திரமே இவர்களுக்கும் நம்பிக்கை. தமது இராணுவ பலத்தின் அதிகரிப்புக்கு ஒப்ப மக்கள் மேல் செலுத்தும் ஆணையும் அதிகரிக்கும். |
| 2. இராணுவம் அரசியல் கட்சியின் தலைமையில் இருக்க வேண்டும் | 2. அரசியல் கட்சியின் தலைமையை நிராகரிப்பது மாத்திரமல்ல; தானும் ஒரு அரசியல் தலைவனாக இருப்பதைக் கூட நிராகரிக்கின்றது. |
| 3. கட்சிக்கும் இராணுவத்துக்கும் இடையேயான இணைவு பிரிக்க முடியாத ஒரு முழுமையாகவுள்ளது. அமைப்பு ரீதியாக இது ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. | 3. இராணுவத்தின் சில அரசியலாளர்கள் இருப்பார்கள். இராணுவத்திற்கு அரசியல் ஆலோசனை வழங்குவதும் இதன் செய்கைகளை அரசியல் ரீதியில் நியாயப்படுத்துவதுமே இவர்கள் கடமையாகும். மன்னர் மண்டப ஆஸ்தான கவிஞர்களைப் போல் இருப்பார்கள். |
| 4. அரசியல் போராட்டத்தின் ஒரு கட்டமே ஆயுதப் போராட்டம். அத்துடன் அதன் ஒரு வெளிப்பாடுமாகும். அது மாத்திரமல்ல ஒரு தற்காலிக வடிவம். ''யுத்தம் என்பது இரத்தம் சிந்தும் அரசியல். அரசியல் என்பது இரத்தம் சிந்தாத யுத்தம்'' என்று கூறுவார்கள். | 4. யுத்தம் ஒரு நிரந்தர வடிவம். அது ஒரு தனிவிசேட வடிவம். |
| 5. அரசியல் போராட்டத்தையும் ஆயுதப் போராட்டத்தையும் இணைப்பதிலும், பொருளாதாரப் போராட்டத்தையும் ஆயுதப் போராட்டத்தையும் இணைப்பதிலும் வல்லமை. | 5. இதுபற்றி நாட்டமேயில்லை. ஆயுதப் போராட்டமே அனைத்தும். |
| 6. தமது தாய்பூமியை இராணுவ ஆக்கிரமிப்புச் செய்துள்ள அந்நிய எதிரிக்கு எதிராக நாட்டின் முழு மக்களையும், தனி ஒரு மனிதன் போல் ஐக்கியமுறச் செய்வதிலேயே நாட்டம் அதிகம். இதுவே வெற்றிக்கு அடிப்படையான உத்திரவாதம். தாமே அதற்கான வழியை அமைப்பவர்களாகவும் முன்னோடிகளாகவும் இருப்பதில் ஆழ்ந்த கவனம். | 6. ஐக்கிய உணர்வேயில்லை. ஏனையவர்களோ, மக்களோ ஸ்தாபனப்படுத்துவது கண்டு அச்சம். தமது ஸ்தாபனம் மாத்திரம்தான் செயல்பட வேண்டும் என்பதே ஒவ்வொருவரினதும் கருத்தாகும். |
| 7. மக்களை ஸ்தாபனப்படுத்துவதன் மூலமே அரசியல், இராணுவம், பொருளாதாரம் ஆகிய மூன்று போராட்டங்களும் ஒன்றிணைக்கப்படுகின்றன. இந்நிகழ்ச்சியால் கிரமமான சேனைதான் சார்ந்து நிற்பதற்கான பலமான அடித்தளத்தைப் பெறுகின்றது. மக்கள் இராணுவ ரீதியிலும் ஸ்தாபனப்படுகிறார்கள். இதனால் கிரமமான சேனை தனக்கென்றோர் ஆயுத பாணியான சகாவையும் பெற்றுக் கொள்கிறது. | 7. ''ஆயுதம் ஏந்திய முன்னணிப் படையினரே அனைத்தும் இராணுவ நடவடிக்கைகளே, தமது படையின் நலனுக்காக பொருளாதார உற்பத்தியில் ஈடுபடுவார்கள். தாம் மாக்களிடம் இருந்து பொருளாதாரம் பெறுவதற்காக மக்களை அணி திரட்டுவார்கள். அதே போல் தமது நிரந்தர படைக்கு இராணுவம் சேவகம் செய்வதற்காக சிலருக்கு ஆயுதம் வழங்கி அணி திரட்டுவார்கள். அத்துலத் முதலியால் அமைக்கப்பட்ட குடிப்படைகளுக்கும் நிரந்தர இராணுவத்திற்கும், உள்ள உறவை இங்கு உவமானம் கூறுவதில் எந்தவித தவறும் இல்லை. |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

8. மக்களை சார்ந்திருத்தலால் கொரில்லா யுத்தம் கிரமமான யுத்தமாக படிப்படியாக வளர்ச்சியுறும். மூலோபாய ரீதியான ஸ்தல யுத்தம் என்ற மட்டத்திற்கு இது வளரும். அதே நேரத்தில் கொரில்லா யுத்தத்தை கிரமமான யுத்தத்தின் துணைவனாக இணைப்பதில் ஆற்றலும் இருக்கும்.

8. மக்களை சார்ந்திராததால் இராணுவ செயற்படுதிறன் எல்லைப்படுத்தப்பட்டது. குறிப்பிட்ட கட்ட இராணுவ திறனுக்கு அப்பால் வளர்ச்சி பெற முடியாதது. கொரில்லா யுத்தத்தை கிரமமான யுத்தம் என்ற கூட்டத்திற்கு வளர்த்தெடுக்கும் தன்மையில்லை. இதனால் கொரில்லா யுத்த வடிவை தாண்ட முடியாது. அல்லலுறுவார். தமது இராணுவ திறனை அதிகரிப்பதற்காக கொரில்லா சேனையை நவீன கருவிகளாலும், நவீன போர் யுக்திகளினாலும், நிறைக்க முற்படுவர். ஒரு குறிப்பிட்ட எல்லைக்கப்பால் கொரில்லா சேனையால் இதை உள்வாங்குவதற்கான எல்லைகள் எதையும் கொண்டிராததாகும். இவ்யுத்தமுறையை பின்பற்றும் மற்றோர் பிரிவினர் கொரில்லா யுத்தத்தை நிராகரித்து கிரமமான யுத்த முறையை மாத்திரம் பின்பற்றுவர். இவர்கள் தமது கிரமமான சேனையை தமது மக்களைச் சார்ந்து உருவாக்காதபடியால் அது கருச்சிதைவுறும், அல்லது முட்டையை விட்டு வெளிவந்த கணமே அழிக்கப்பட்டு விடும். இப்பிரிவினர் கொரில்லா யுத்தப் பிரிவினர் நின்று பிடிக்கும் அளவிற்கு இவர்களால் நின்று பிடிக்க முடியாது.

9. தமது சொந்த நாட்டில் நடைபெறும் விடுதலைப் போராட்டத்தையும், தம்மை ஆக்கிரமித்துள்ள நாட்டு மக்களின் புரட்சிகர போராட்டங்களுடனும் நிறையவே தொடர்புகள் ஏற்படுத்துவார்கள்.

9. அந்த நோக்கு இல்லை. சிங்கள மக்கள் மத்தியில் புரட்சிகர இயக்கங்களின் வளர்ச்சிக்கு பாதகமான அரசியல் விளைவுகள் ஏற்படக்கூடிய முயற்சிகளில் தெரிந்திருந்தும் ஈடுபடுவர்.

10. வர்க்க அபிலாசைகளில் உழைக்கும் மக்கள் இவ் இராணுவத்தை தமது சொந்த இராணுவமாகவே காண்பார்கள். தேசிய அபிலாசைகளின் அடிப்படையிலும் மக்கள் இதனுடன் ஒரு அந்நியோன்ய தன்மையையே காண்பார்கள்.

10. வர்க்க அபிலாசைகளின் அடிப்படையில் மக்கள் இதற்கும் - முன்பிருந்த முதலாளித்துவ பொலீசாருக்கும் இடையே எந்த வேறுபாட்டையும் காண மாட்டார்கள். இவ் இராணுவத்தில் இருந்து மக்கள் அந்நியமாகியே நிற்பார்கள். தேசிய அபிலாசைகளின் அடிப்படையில் மக்கள் இந்த இராணுவத்துடன் ஒரு நல்லுறவைக் காண்பார்கள். ஆனால் அது அந்நியோன்ய உறவாக இருக்க மாட்டாது.

தமிழீழப் பிரதேசத்தில் பின்பற்றப்பட்டது ''முன்னணிப்படை'' யுத்தமுறையேயாகும். இதுவே மேலாதிக்கம் செலுத்தியது. LTTE இதன் கொரில்லா யுத்த பிரிவின் தலைமை அங்கம். PLOT இதன் கிரமமான யுத்த பிரிவின் தலைமையங்கம். எல்.டி.டி.ஈ.யின் யுத்த முறையே இன்று தீர்க்கமான யுத்த நடைமுறைச் செயற்பாடாக இருந்து வருகின்றது. PLOT இன் யுத்த முறை கருச்சிதைவு அடைந்துவிட்டது. ஏனைய போராளிக் குழுக்கள் இப்பிரிவில் ஏதோ ஒன்றையோ அல்லது ஓரளவு அப்பிரிவையும் ஓரளவு இப்பிரிவையும் சார்ந்ததேயாகும். எதுவுமே மக்கள் யுத்த பிரிவைச் சார்ந்தவையாக இருக்கவில்லை.

ஜீ. காந்தன்,
நவசகாப்தம் - 2.

★ ☆ ★

www.tamilarangam.net

# நோர்வேத் தேவாலயத்தில் இருந்து ஒரு குரல்



*கிளிநொச்சியில் இராணுவத்தால் கொலை செய்யப்பட்ட சகோ. FR. அருட்பாலன் அடிகளார். யேசுவின் தூதர்களுக்கே உயிர் உத்தரவாதம் இல்லை தமிழீழத்தில்...*

இலங்கையில் நடக்கும் யுத்தத்தால் நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிக்கப்பட்ட தமிழர்கள், தமது உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு பல லட்சங்களை ஏஜெண்டுகளிடம் தமது பிரயாணத்துக்காக கொடுத்து அய்ரோப்பா, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு அகதிகளாக புறப்பட்ட வண்ணம் உள்ளனர். புறப்படும் போது இவர்கள் இங்கு வந்தால் தமக்கு எல்லாம் கிடைத்து விடும் என்ற நம்பிக்கையிலும், கனவிலுமே புறப்படுகின்றனர். இவர்களில் சிலர் இங்கு வரும் வழியில் தமது உயிரையும் இழந்துள்ளனர்.

இவ்வாறு புறப்பட்டவர்கள் இங்கு வந்து சேர எவ்வளவு கஸ்டப்படுகின்றனர் என்பதை எழுத்தில் எழுதிவிட முடியாது. பல தடைகளையும், நாட்டு எல்லைகளையும், கடல்களை சிறு படகுகள் மூலம் தாண்டி ஒருவாறக இங்கு வந்தால் இந்நாடுகள் அரசியல் தஞ்சம் கொடுக்க மறுக்கின்றது. இவர்களின் அரசியல் தஞ்சம் மறுப்பிற்குக் காரணம் தற்போது இலங்கையில் தமிழர்கள் எந்த விதப் பிரச்சனையும் இன்றி வாழ முடியும் என்று வாய் கூசாமல் பொய் சொல்லி விடுகின்றது.

இன்று அய்ரோப்பிய நாடுகள் தமக்குள்ளேயே கூட்டுச் சேர்ந்து, வரும் அகதிகளை ஏதாவது ஒரு விதத்தில் மீண்டும் அவர்களது நாடுகளுக்கு அனுப்ப துடித்து வருகின்றன. இதில் நோர்வேயின் பங்கும் அவர்கள் எவ்வாறு இங்கு வரும் தமிழர்களையும் மற்றைய அகதிகளையும் கவனிக்கின்றனர் என்பதை தற்போது சற்று பார்ப்போம்.

அகதியாக ஒரு தமிழர் வருவாராயின் முதலில் அவர் இந்நாட்டுப் பொலீசிடம் நான் எந்த அரசியல் பின்னணி கொண்டவர் என்பதுடன், அவரது ஊர் எதுவேனவும் சரியாக வாக்கு மூலம் கொடுக்க வேண்டும். அப்போது பொலீசாரால் இங்கு வந்த தமிழரின் வீட்டு விலாசம் சரியாக கேட்கப்படுகின்றது. இதைக் கேட்டு அப்படியே இந்த அரசு போட்டு விடுவதில்லை மாறாக அவரின் நாட்டினால் உள்ள நோர்வே தூதரகம் மூலம் இவர் பற்றி விசாரித்தும் வருகின்றது. அங்கு இவர்கள் பற்றிய தகவல்களை சேகரித்து இவர்களின் அரசியல் தஞ்சம் மறுக்கப்படுகின்றது.

இவ்வாறு மறுத்து தமிழர்களையும், வெளிநாட்டவர்களையும் இரகசியமாகவும் - பகிரங்கமாகவும் அவர்களது நாடுகளுக்கு திருப்பி அனுப்புவதில் முதல் வரிசையில் நிற்கும் நாடுகளில் ஒன்று நோர்வே. இங்கு ஒரு வெளிநாட்டு அகதிக்கு அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்டால் அவர் மேன் முறையீடு செய்யலாம் அதுவும் மறுக்கப்படின் அவருக்கு குறிப்பிட்ட திகதிக்குள் நாட்டை விட்டு வெளியேறும்படி உத்தரவு அனுப்புவர் அதற்கும் வெளியேறாது இருப்பின் தாமே பலாத்காரமாக பிடித்து அனுப்புவார்கள். ஏன் தமிழர்களை தற்போது அனுப்புகின்றீர்கள் அங்கு நிலவரம் சுமூகமாக இல்லையே என்று யாராவது கேட்பின் இல்லை நல்ல சமூகமாக உள்ளது என்பார்கள். ஆனால் அன்று 10 பேர் குண்டு வெடிப்பால் இறந்திருப்பார்கள். இவ்வாறு ஈவீரக்கமற்ற நிலையிலும், மனிதாபிமானத்தை மதிக்காத நிலையில் இலங்கைத் தமிழரைத் திருப்பி அனுப்பி வருகின்றது.

www.tamilarangam.net

இவ்வாறு திருப்பி அனுப்புவதில் இருந்து தப்பிப்பதனால் ஒரே ஒர வழி தான் தற்போது நோர்வேயில் உண்டு கிறிஸ்தவ கோவிலுக்குள் தஞ்சம் புகுவது. இந்நிலையானது மனோவியல் ரீதியாகவும், உடல் நிலை ரீதியாகவும் மிகவும் கடினமான ஒரு விடயமாகும். கோவிலுக்குள் தஞ்சம் புகுந்தால் அவர்கள் வெளியில் வரமுடியாது அப்படி வருவார்களாயின் அவர்கள் போலீசால் கைது செய்யப்படுவார்கள். கோவிலுக்குள் தனிமையில் இருக்க வேண்டும். வெளியுலகத்துடன் தொடர்பற்ற நிலையில் இருத்தல் வேண்டும். (சிறையில் இருப்பது போன்று). இந்நிலையைக் கூட எமது தமிழ்ச் சகோதரர்கள் தாங்கி கோவிலிற்குள் இருந்து வருகின்றனர். இன்றைய நாட்டின் நிலவரம் காரணமாக இதைத் தாங்கிய வண்ணம் இருக்கும் இவர்களின் தொகை 10 பேர் இதில் ஒரு பெண், இரு குழந்தைகளும் அடங்குவர். இதில் துரம்சோ என்ற இடத்தில் இருக்கும் ஒருவர் 413 நாட்களாக (31.3.98 அன்றுடன்) கோவிலில் தஞ்சம் கொண்டிருக்கின்றார்.

இவர்கள் தஞ்சம் புகக்காரணமாக இருந்தது. நோர்வே தொழிலாளர் கட்சியாகும். இதுவே இவர்களின் அகதிக் கோரிக்கையை நிராகரித்தது. அப்போது எதிர் கட்சிகளாக இருந்த கிறிஸ்தவ மக்கள் கட்சியும், மற்றைய கட்சிகளும் இதை எதிர்த்து வந்தன, இவர்களுக்கு அகதி அந்தஸ்து வளங்கும்படியும் தேர்தல் பிரச்சாரக் காலத்தில் அரசுடன் ஒவ்வோரு தொலைக்காட்சி விவாதத்திலும் விவாதித்தன.

அக்காலத்தில் 97-ம் ஆண்டு இலை உதிர்காலத்தில் நடக்கவிருந்த தேர்தலை மையமாகக் கொண்டு வெளிநாட்டவர்களின் வாக்குகளை (வெளிநாட்டவராக இருந்த நோர்வே பிரஜா உரிமை பெற்றவர்கள்) தமது பக்கம் வெற்றி கொள்வதற்க தேர்தல் வாக்குறுதிகளை அள்ளி வீசியது இக்கட்சி. இதை அவதானித்து பலருக்கு இவர்களின் ஆட்சி வருமானால் நோர்வேயில் வெளிநாட்டவர்களுக்கான கெடுபிடி என்பது குறையும் என எதிர்பார்க்கப்பட்டது. பலர் எதிர்பார்த்தபடியே கிறிஸ்தவ மக்கள் கட்சியினர் தாம் செய்து கொண்ட கூட்டணி மூலம் ஆட்சியை அமைத்தனர். அமைத்ததும் எல்லோரையும் போல் இவர்களும் வாக்குறுதிகளை மறந்து மீண்டும் தமிழர்களையும், மற்றைய நாட்டவர்களையும் அவர்களின் நாடுகளுக்கு திருப்பி அனுப்பும் துரொகத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதில் வேடிக்கை என்னவென்றால் இதுவரை காலமும் மற்றைய கட்சிகள் ஆட்சி புரியும் போது செய்யாத ஒரு விடயத்தை இவர்கள் 'இறைவனின்' பெயரால் செய்துள்ளனர். அதாவது கிறிஸ்தவ கோவிலுக்குள்ளோ, அதன் மைதானத்துக்குள்ளோ சென்று தஞ்சம் கோரியவர்களை கைது செய்வதில்லை என்ற வழக்கத்தை மாற்றி 28.3.98 அன்று 17 வயதுடைய ஒரு ஈரானிய அகதியை கைது செய்துள்ளனர். கோவிலுக்குள் இருப்பவர்கள் ஒவ்வோரு நாளும் ஒரு குறிப்பிட்ட நிமிடங்கள் வெளியில் (கோவிலுக்கு சொந்தமான கோவில் வளவிற்குள் தான்) வந்து நிற்பதுண்டு அவ்வாறு வந்து நிற்கும் போது சிவில் உடையில் வந்த பொலீசார் அவரைக் கைது செய்து ஒருவருக்கும் தெரியாமல் உடனடியாக இந்நாட்டை விட்டு வெளியேற்றி விட்டனர். இதில் குறிப்பிடத்தக்க விடயம் அச்சிறுவன் முஸ்லீம் மதத்தில் இருந்து கிறிஸ்தவ மதத்திற்கு மாறியுள்ளான், இது ஈரானியச் சட்டப்படி குற்றமானது. இவை தெரிந்திருந்தும் இவ்வரசு அவனை வெளியேற்றி மகிழ்கிறது.

இவ்வாறான நிலையில் தமது வாழ்க்கையை தொலைத்துவிட்ட இவர்களின் அகதி வாழ்வு இவ்வரசின் நிலையில் இச்செய்கை மூலம் கேள்விக் குறிக்குள்ளாகியுள்ளது. எமது நாட்டில் நாம் அரச பயங்கர வாதத்திற்கும், மற்றைய இயக்கங்களுக்கும் பயந்த வாழ்க்கை வாழ வேண்டும் என்றால் இங்கும் அதற்கு குறைவில்லை.

இவ்வாறான நிலையில் இன்று இங்கு வரும் தமிழர்களின் நிலை உண்டு, இதை விட பலருக்கு அகதி விண்ணப்பம் மறுக்கப்பட்டு இரகசியமாக வாழ்கின்றனர். தமது நாட்டையும், அடையாளத்தையும் தொலைத்த நிலையில் மொழி, நிற, கலாச்சார வேறுபாடுள்ள ஒரு நாட்டில் வந்து துன்பப்படும் தமிழீழ அகதிகளின் வாழ்க்கை இலங்கையில் மட்டுமல்ல உலகம் முழுவதிலுமே கேள்விக் குறியாகத் தான் உள்ளது. — சார்லஸ்

# யாழ் உள்ளூராட்சித் தேர்தல்

நல்ல காலம் பிறந்தாச்சாம்
குடுகுடுப்பைக்காரர்கள்
குறி சொல்லுகின்றனர்.
இனியென்ன வேண்டும்
புகுந்து விளையாடு!
தமிழனே!
நீ தேடிய ஒளிவட்டமும்
அவாவிய நிமிர்ந்த வாழ்வும்
உனக்கினிக் கிட்டும்?
வாய்க்கால் வெட்டும்
மாநகர ஆட்சிக்கும்
நாய் பிடிக்கும்
நகரசபைக்கும்
சின்ன மதகு திருத்தும்
பிரதேச சபைக்கும் தானோ
இத்தனை விலை கொடுத்து
போராடினாய்?
ஊரையடித்து
உலை மூட்டி வாழ்ந்தவர்கள்
சங்கக் கடையுடைத்து
சாப்பிட்ட சாதுரியர்
தர்மகர்த்தா சபைத் தலைவர்
செயலாளர்,
சைக்கிள் களவெடுத்த
சமாதான நீதிவான்கள்
எல்லோரும் உனக்கு
இங்கே தலைவரென்றால்,
உள்ளே உனக்கெரியும்
உரிமைத்தீ என்னாகும்?
நேற்றுவரை கொழும்பிலிருந்து
கப்பலில் பெற்றோல் வந்தது.
சக்குப்பிடித்த குத்தரிசியும்
சாராயமும் வந்தது.
இன்று விமானத்தில்
தலைவர்கள் இறக்குமதியாகிறார்கள்!

நன்றி - வியாசன், வி.புலிகள்

www.tamilarangam.net

# 10-வது சார்க் மாநாடு

யூலைக் கடைசி வாரத்தில் 10-வது சார்க் (SAARC) மாநாடு கொழும்பில் நடந்து முடிந்துள்ளது. முதன் முதலாக தெற்காசிய நாடுகளுக்கு இடையிலான பொருளாதார உறவு பற்றிய விவகாரம் மாநாட்டின் பிரதான இலக்காகியது. தெற்காசிய நாடுகளுக்கு இடையிலான சுதந்திர வர்த்தக வலயம் (SAFTA) 2001-ம் ஆண்டுக்குள் நடைமுறைக்கு வரும் என மாநாட்டு கூட்டுப் பிரகடனம் கூறியுள்ளது. இந்தியாவும், பாகிஸ்தானும் மே மாதத்தில் அணுகுண்டுப் பரிசோதனை நடத்திய பின், பிராந்திய அளவிலும், சர்வதேச அளவிலும் இப்பரிசோதனைகளால் ஏற்பட்டுள்ள தாங்கல்கள் - எதிர்த்தாக்கங்களுக்கு மத்தியில் இந்திய - பாகிஸ்தானிய பிரதமர்களின் உயர்நிலைச் சந்திப்பும் முக்கிய இடத்தை பிடித்தது. வழமைபோல் சம்பிரதாயமாகவே முடிவடைந்தது. இந்தியப் பிரதமரை சிறீலங்காவிலுள்ள தமிழ்க் கட்சிகள் சந்திக்க எடுத்த முயற்சிகளும் தோற்றுப் போயின. சிறீலங்கா அரசின் யுத்த கொடுமைகளை சார்க் மாநாட்டு பிரதிநிதிகளுக்கு வெளிப்படுத்த எடுத்த முயற்சிகளும் வெற்றியளிக்கவிடாது சிறீலங்கா அரசு தடுத்து விட்டது. C.W.C. இன் தொண்டமான் மட்டும் இந்திய வம்சாவழித் தமிழர்களின் பிரதிநிதி என்ற வேடத்தில் இந்தியப் பிரதமரை சந்தித்துள்ளார்.

சார்க் கூட்டமைப்பு தனது ஒவ்வொரு மாநாட்டிலும் ஒரு விடயத்தில் அக்கறை காட்டுவது மரபு, 1986-இல் கர்நாடகாவின் பெங்களூரில் நடந்த மாநாட்டில் ராஜீவ், ஜெயவர்த்தனா சந்திப்புக்கு பின் தமிழீழ போராட்டத்தை போராளிகளை நசுக்கும் நடவடிக்கையில் இரு அரசுகளும் கூட்டுச் சேர்ந்து செயல்படத் தொடங்கின. வங்களாதேஷ்ல் நடந்த மாநாட்டில் பயங்கரவாதத்துக்கு எதிரான கூட்டுப் பிரகடனம் செய்யப்பட்டது. சார்க் நாடுகளில் உள்ள பயங்கரவாதத்துக்கு (?) எதிரான கூட்டு நடவடிக்கை உருவாக்கப் பட்டது. ஒவ்வொரு நாடும் மற்றைய சார்க் நாடுகளில் தேடப்படும் நபர்களை ஒப்படைக்க வேண்டும் என ஒப்பந்தம் செய்தன. அதாவது சார்க் நாடுகளின் ஆளும் வர்க்க அரசுக்கும், அதன் இன, மதவெறிக்கும், சுரண்டல் அமைப்புக்கும் எதிராக போராடும் மக்கள் இயக்கங்களை நசுக்குவதில், காட்டிக் கொடுப்பதில் சார்க் நாடுகள் பரஸ்பரம் ஒத்துழைக்க வேண்டும் என்பதாகும். இன்று வரை ஒவ்வொரு நாடும் மற்றய நாட்டுக்குள் தலையீடுவதை நிறுத்திக் கொள்ளவில்லை நேபாளத்தின் மக்கள் விடுதலை இயக்கம் ஒன்றில் தலைவர், இந்தியாவில் உள்ளார். இந்தியாவின் தேசிய இன விடுதலை இயக்க தலைவர்கள் வங்களாதேஷ்ல் உள்ளனர். குறித்த நாட்டு அரசுகள் கேட்டும், அத்தலைவர்கள் ஒப்படைக்கப்படவில்லை என ஒப்பந்தங்கள் பலன் இல்லை என அதிகார வர்க்கம் விசனப்படுகிறது.

உலகத்தை சுரண்டி அடக்கி ஒடுக்கும் ஏகாதிபத்தியங்களின், பொருளியல் அரசியல் நோக்கங்களுக்கு, I.M.F, W.B. W.T.O, U.N. என சர்வதேச நிறுவனங்கள் செயல்படுகின்றன. இரண்டாம் உலக யுத்தத்துக்கு பிந்திய ஏகாதிபத்தியங்களின் பொருளாதார அரசியல், அதிகார அமைப்பு கொள்கையும் - நடைமுறையும் தங்களின் பழைய காலனி நாடுகள் மீதும், உலகம் முழுவதும் நவ காலனிய முறையை அமுல்படுத்தி வருகின்றது. கடந்த 50 ஆண்டுகளில் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் பொருளாதார அரசியல் போக்கில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. சர்வதேச நிதி மூலதனம் ஏற்படுத்திய உலகமயமாதல் போக்கு தாராளமயத்தை, தனியார் மயமாவதை, கட்டமைப்பு மறுசீரமைப்பை ஏற்படுத்தி நவகாலனிய நாடுகளை தீவிரமான சமூக நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது.

அண்மையில் முடிவடைந்த தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பு (ASEAN) 2003-வது ஆண்டுக்குள் தென்கிழக்காசியாவை சுதந்திர வர்த்தக வலயமாக மாற்றி விட உறுதி எடுத்துள்ளது. தென்கிழக்காசியாவை உலுக்கிய பொருளாதாரச் சூறாவளி, தெற்காசியாவை உலுக்கவில்லை என சார்க் தலைவர்கள் திருப்திபட்டுள்ளனர். அதற்கான காலம் வெகு தூரத்தில் இல்லை என்பதை பொருளாதார நிலைமை காட்டுகிறது. சார்க் நாடுகளுக்கு இடையில் தொலைபேசி கட்டணக் குறைவு, விமான சேவை இலகுபடுத்தல் இறக்குமதி ஏற்றுமதி (EXIM) வரிகளை தளர்த்தல், என முழக்க முழக்க 10-வது மாநாடு பொருளாதார விடயங்களை விவாதித்து முடிவடைந்துள்ளது. ஆனால் 1 வாரத்துக்குள் இந்தியாவும், நேபாளமும் தொலைபேசி கட்டணத்தை குறைக்க முடியாது எனவும், பாகிஸ்தான் WTO வில் அனுமதிக்கப்பட்ட பொருள்களை மட்டும்தான் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்ய முடியும் எனவும், அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளன. வங்களாதேஷ்ல் எதிர்கட்சி இந்தியப் பொருள்களை பகிஸ்கரிக்கும் இறக்குமதியை எதிர்க்கும் பிரச்சாரத்தை நடத்துகிறது. நேபாள எதிர்க்கட்சிகள் இந்தியப் படைகள் கலபாணியில் இருந்து பின்வாங்க கோரி நாடு தழுவிய போராட்டத்தை நடத்தியுள்ளது. "சார்க் மக்கள் கூட்டமைப்பு" என்ற அமைப்பு சார்க் மாநாடு நடந்த அதே நாள்களில் கொழும்பில் 2 நாள் மாநாட்டை நடத்தியுள்ளது.

தெற்காசிய நாடுகளில் உள்ள தேசபக்த புரட்சிகர சனநாயக சக்திகள் சார்க் அமைப்பின் மக்கள் விரோத, தேச விரோத கொள்கைகளுக்கு எதிராக ஒன்றுபட வேண்டிய தேவையை 10-வது மாநாடு மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

— மரியா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## மீண்டும் 'ஒமர் முக்தார்' பார்க்கத்தவறாதீர்கள்

தமிழீழ போராளிகளில் 'ஒமர் முக்தார்' படத்தைப் பார்க்காதவர்கள் இருக்கமாட்டார்கள். படம் வெளிவந்த 1985-ஆம் ஆண்டில் போராளிகளுக்கும்-ஜெ.ஆர். தலைமையிலான ஶ்ரீலங்கா அரசுக்கும் திம்புவில் பேச்சுவார்த்தை நடந்தது. இன ஒடுக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் எதிரான மக்களின் போராட்டத்தின், வளர்ச்சியின் ஒரு கட்டத்தில் எதிரி தனது இராணுவ ஒடுக்குமுறை யுத்த நடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்தி போராடும் இயக்கங்களுடன் பேச்சுவார்த்தைக்கு வருவான். இது நேரடியாகவும் அல்லது வேறு நாடுகள் சர்வதேச நிறுவனங்கள் வழியாகவும் நடக்கலாம், இங்கே உள்ள முக்கிய கேள்வி பேச்சு வார்த்தை என்பதை ஒடுக்குமுறை அரசும் ஆளும் வர்க்கமும் என்ன நோக்கில் பயன்படுத்துகிறது என்பதும் போராடும் போராளிகள் என்ன நோக்கில் பயன்படுத்தவேண்டும் என்பதுதான். இதற்கு ஒமர் முக்தாரின் அனுபவம் நமக்கு ஒரு பெரிய படிப்பினையைத் தருகிறது.

முஸோலினியின் இராணுவத்தின் சதி நோக்கத்தை பாலைவனப் புரட்சியாளர்கள் புரிந்துகொள்ள முடியாததன் விளைவு இறுதியில் ஒமர் முக்தார் தூக்கிலிடப்படுவதில் முடிகிறது. எனவே எந்த அரசும் ஆளும் வர்க்கமும் இராணுவமும் போராடும் இயக்கங்களுடனான பேச்சுவார்த்தையை, பேச்சுவார்த்தைக் காலத்தை போராளிகளையும் போராட்டத்தையும் ஒடுக்குவதற்கும் சமரசப் படுத்துவதற்கான அரசியல் இராணுவ தயாரிப்புத் தந்திரமாகவே பயன்படுத்துகின்றன. அரசை எதிர்த்துப் போரிடும் இயக்கங்கள் மத்தியிலுள்ள அரசியல் நோக்கங்கள் இராணுவ நோக்கம் போர் முறைகளிலுள்ள வேறுபாடுகளை, இயக்க முரண்பாடுகளை அரசியல் இராணுவத் துறைகளில் ஆய்வு செய்த எதிரி போச்சுவார்த்தைக்கான தயார் நிலை மற்றும் பேச்சுவார்த்தைக்கான மாதிரித் திட்ட தயாரிப்பின்போதே போராட்டத்தை நசுக்க-பிளக்கக் கூடிய வகையில், அரசியல் இராணுவ அணிசேர்க்கை மாற்றத்தை உருவாக்கும் வகையில் போர் நிறுத்தத்தையும் பேச்சுவார்த்தையையும் நோக்குகிறான். அணுகுகிறான்.

1985-ல் திம்பு பேச்சுவார்த்தையின் போது எல்லா தமிழீழ இயக்கத் தலைமைகளும் இதைப் புரிந்துகொண்டிருந்தார்கள். அதனால்தான் வெகுசன இயக்க நடவடிக்கையிலும் முக்கியமாக தங்களின் இராணுவ முகாம்களிலும் 'ஒமர் முக்தர் படத்தை போட்டுக்காட்டி விளக்கமளித்தார்கள்'. ஜெ.ஆரின் திம்புப் பேச்சு நாடகத்தை மிகச் சிறப்பாக உள் நாட்டிலும் உலக அரங்கிலும் இராஜ தந்திர முறையில் தோலுரித்து தோற்கடித்தார்கள். அப்படியிருந்தும் இந்திய அரசு போராளி இயக்கத் தலைவர்களை வீட்டுக்காவலில் வைத்தது. தேடித்திரிந்தது. சில தலைமைகள் இந்திய அரசைக் கூட தலைசுற்றவைத்தன. பேச்சுவார்த்தை முறிந்த பின்னும் போராளிகள் தொடர்ந்த விடுதலை யுத்தத்திற்கு பெரும் மக்கள் ஆதரவு இருந்தது.

1987-ல் இரகசியப் பேச்சுவார்த்தைகள், இந்திய இலங்கை ஒப்பந்தம் மூலம் தமிழீழ போராளி இயக்கங்களையே பிளக்கவைக்கும் அரசியல் இராணுவ வெற்றியை எதிரிகள் செய்தார்கள். 85-ல் ஒமர் முக்தாரின் அனுபவத்தை பேசிய, திம்புவில் வெற்றிவாகைசூடிய இயக்கத் தலைமைகளில் புலிகள் தவிர மற்றைய நான்கும் தங்களின் அரசியல் இராணுவ அமைப்புத் தடுமாற்றங்களால் எதிரிகளின் இரைக்குப் பலியாகினர். ஒமர் முக்தார் 87-ல் இத்தலைமைகளைப் பார்த்து சிரித்தார். தான் பேச்சுவார்த்தையில் இழைத்த தவறு தன்னை மரணதண்டனைக்கு அழைத்துச் சென்றதையும், தமிழீழ தலைமைகள் பாராளுமன்ற

கதிரைகளுக்குச் சென்று எதிரியின் தேசிய நீரோட்டப் பாதையில் கரைந்து துரோகம் இழைத்ததையும் ஒப்பிட்டுப் பார்த்து மீண்டும் சிரித்தார். 80 வயது ஓமர் முக்தாரின் தவறுக்கும், 40 வயது தமிழீழத் தலைமைகளின் தவறுக்கும் துரோகத்திற்கும் ஆன வேறுபாட்டை அடிப்படையை நாம் புரிந்தாகவேண்டும்.

1987, 1991, 1994 பேச்சுவார்த்தைகளில் புலிகள் ஆரம்பத்தில் சிக்கினாலும் பின்னர் எதிரியின் தந்திரத்திற்கு பலியாகாது போராட்டத்துக்கும் துரோகம் செய்யாது எதிரியின் பேச்சுவார்த்தைச் சூழ்ச்சிகளை சில சமையங்களில் தந்திரமாகவும் சில சமயங்களில் மூர்க்கத்தனமாகவும் உடைத்துக் கொண்டனர். எதிரியைப் போல் தாங்களும் பேச்சுவார்த்தைக் காலத்தை பயன்படுத்தி தம்மைத் தயார் செய்துகொண்டு இன்றுவரை போரைத்தொடர்கிறார்கள். புலிகளின் சுத்த இராணுவ வாத முதலாளிவர்க்க அணுகுமுறை புலிகளை உள்நாட்டிலும் உலக அளவிலும் எதிரிக்கெதிரான அனைத்து சக்திகளையும் தம் பக்கம் அணி திரட்டத் தடுக்கிறது. யுத்தத்தில் ஊன்றி நிற்பதுடன் தோல்விகளை கற்பதுடன் சந்திரிகா அரசின் சமாதான முகமூடி, அரசியல் பொதி, பேச்சுவார்த்தை நாடகத்தை மீண்டும் தோலுரித்து தோற்கடிக்கக் கூடிய அரசியல் இராணுவ ராஜதந்திரமும் முதிற்சியும் போராளி இயக்கத் தலைமைக்குத் தேவைப்படுகிறது.

- தேவா

---

1985-ஆம் ஆண்டு ஏற்கனவே வெளிவந்த இப்படம் மீண்டும் வந்திருக்கிறது. பெரும் வெற்றிபெற்ற 'ஓமர் முக்தார்' அப்போதைய தயாரிப்புச் செலவுப்படி 30 மில்லியன் டாலர் செலவிலும் நான்கு ஆண்டுகால முயற்சியிலும் உருவானது. 70 வயதைத் தாண்டிவிட்ட ஓமர் முக்தார்தான் கதாநாயகன். கைத்தடியைப் பிடிக்கவேண்டிய வயதில் துப்பாக்கி ஏந்தி இருபதாண்டு காலம் லிபிய பாலைவனப் பகுதியில் சிங்கமாய் இருந்து சர்வாதிகாரி முஸோலினிக்கு சிம்மசொப்பனமாக இருந்தார்.

பாலைவனப் புரட்சியாளர்களையும் அவர்களின் தலைவர் ஓமர் முக்தாரையும் நசுக்க முஸோலினி 1929-ஆம் ஆண்டு கிரேஸியானி என்ற ராணுவத் தளபதியை நியமிக்கிறார். அவருடைய சாம, தான, பேத, தண்ட நடவடிக்கைகள் ஓமர் முக்தாரின் உரிமைப்போரின் முன் ஒடுங்கிப்போய் விடுகின்றன. எனவே, கிரேஸியானியின் கொடுங்கரம் பாலைவனப் பகுதி மக்களின்மீது பாய்கிறது. ஏகப்பட்ட தளவாடங்களுடன் தானே தலைமை ஏற்று நேரடியாக போரிடும் கிரேஸியானி ஓமர் முக்தாரின் யுத்த தந்திரத்தால் கலவரப்பட்டு தன் தோல்விகளை ஒப்புக்கொள்கிறான். பின்னர் ஒரு கட்டத்தில் ஓமர் முக்தாரின் யுக்திப்படியே திட்டமிட்டு அவரை சிறைப் பிடிக்கிறார். மரண தண்டனை விதிக்கப்படும் முக்தார் அவருடைய மக்கள் முன்னிலையிலேயே தூக்கிலடப்படுகிறார்.

வயதான ஆன்டனி க்வினுக்கு வாராது வந்து வாய்த்த வேடம் இது. அசத்துகிறார். அவருக்கு அடுத்தபடியாக நம் நினைவில் பதிவது கிரேஸினியாக வரும் ஆலிவர் ரீட். ஒரு காட்சியில் புரட்சியாளன் ஒருவனை சித்திரவதை செய்துகொண்டிருக்கும் ராணுவ அதிகாரியிடம் 'அவனை துன்புறுத்தவேண்டாம் என்கிறார். ஆச்சரியமாக பார்க்கும் அதிகாரியிடம் இவனுக்குத் தேனும் பழங்களும் இன்னும் எதுவேண்டுமானாலும் கொடுங்கள்' என்று ஆச்சரியத்தை அதிகமாக்கிவிட்டு கடைசியில் "நாளை காலை இவனை தூக்கிலிடுங்கள்" என்கிறார். மிரட்டலான நடிப்பு. பாதுகாப்பு முகாம்களில் பட்டினிச்சாவுகள் நிகழ்ந்துகொண்டிருந்தாலும் மக்கள் தங்கள் பங்குக்கு ஆளுக்கு ஒரு பிடி உணவுப் பொருட்கள் அளித்து புரட்சியாளர்களுக்கு உதவுவது நெஞ்சை நெகிழவைக்கிறது. குழந்தை கடும் நோயுற்ற நிலையில் அதன் தாய் தூக்கிலிடப்படுவது நெஞ்சைப் பிளக்கிறது.

"இத்தனை வருடங்களில் ஓமர் முக்தாரை நேரில் பார்க்கும் வாய்ப்பு நமக்குத்தான் கிடைத்திருக்கிறது" என்று முக்தாருடன் சமாதானம் பேசவரும் இத்தாலிய இராணுவ அதிகாரியே உவகையோடு கூறும்போது, முக்தாரின் மதிப்பு பன்படங்கு உயருகிறது. தூக்கிலிடப்படும் வேளையில் சாவில் விளிம்பில் நின்றுகொண்டு தன்னைப் பார்த்துச் சிரிக்கும் சிறுவனைப் பார்த்து அவர் புரியும் புன்னகை சாகா வரம் பெற்றது.

- வேணுஜி
நன்றி தினமணி

www.tamilarangam.net

★ 11,750 படையினரை இக்கோரக் கொலைகளை நிகழ்த்த அரசு பலி கொடுத்துள்ளது!

★ 3,25,000 – தமிழீழ, சிறீலங்கா பெண்கள் மத்திய கிழக்கில் வீட்டுப் பணிப் பெண்களாக வேலைக்கு, ஊதியத்திற்கு உத்தரவாதம் இல்லை. பாலியல் கொடுமைகள் மறுபக்கம்!

★ 30,000 – சிறுவர் – சிறுமியரை சுற்றுலாத்துறை விபச்சாரத்திற்கு பலியாக்கியுள்ளது..! INTERNET இல் விபச்சாரத்திற்கு விளம்பரம் செய்யப்படுகிறது.

★ 1,75,000 – தமிழீழ, சிறீலங்கா பெண்கள் விபச்சாரத் தொழிலுக்குள் தள்ளப்பட்டுள்ளனர்...!

★ 3,50,000 – இளைஞர்கள் வேலையற்றோர் பட்டியலில்....!

★ 1,00,000 – தொழிலாளர்கள் வீதிக்கு விரட்டப்பட்டுள்ளனர்...!

## போலிச் சுதந்திரத்திற்கு பொன்விழா ஒரு கேடா...?

★ மனித உரிமையாளர்களே! ஒடுக்கப்படும் சுரண்டப்படும் மக்களே! சிந்தியுங்கள்!

★ தமிழீழத் தேசிய சுதந்திரப் போராட்டத்திற்கு ஆதரவு தாருங்கள்!

★ தமிழீழ தேசபக்த, புரட்சிகர சனநாயக அரசியல் பாதையில் ஒன்றுபடுவோம்!

**PATRIOTIC VANGUARD'S ORGANIZATION OF THAMILEELAM (PVOT)**